# இரண்டாம் உலகத் தமிழ் மகாநாடு

## சித்த மருத்துவக் கருத்தரங்கு

## சிறப்புமலர்

# SECOND INTERNATIONAL CONFERENCE

# SEMINAR OF TAMIL STUDIES

# SI[illegible] MARUTHUVA SOUVENIR

406
இரண்

are f

Ayu
state

plac
anci
at o

for
for
the
Syst
the
also
was
the
Sem
upo
stat

this
In
Sen

dov
has
cor
Me
pra
Me
on

mo
Sid
res

the
hu
inc

# PREFACE

It gives me great pleasure to give an account of the Indian Systems of Medicine that are fostered in this state, prominence being given to Siddha System of Medicine.

It is needless to maintain that these three systems of Indian Medicine *viz.* Siddha, Ayurveda and Unani mainly owe their development to the wise and farsighted policies of this state Government and abundant interest evinced by my preceeding Health Ministries.

Historically speaking, there is special apporpriateness in Tamil Nad becoming the place for the growth, development and further progress to Siddha System of Medicine. The ancient history of Tamil Nad is bound up with history of Pandiyas and we are reminded at once of the classical Sangam age.

We have chosen the path of democracy because it affords the maximum oppurtunity for the growth of the individual for his or her participation in the affairs of the nation and for the protection of the human dignity. Now, it is opportune time and good augury that the second world Tamil Conference is being held in Tamil Nad this year so that the Siddha System of Medicine can play its role and its contribution to the world at large. Tamil Nad is the poineer state which gives a status and standard not only to Siddha system of Medicine but also to other systems of Medicine (Ayurveda and Unani). For a long time, Siddha Medicine was at its lowest ebb. The renaissance in this field has been lost sight of. It is therefore that the Second world Tamil Conference is a welcome one and it is a blessing to have a Siddha Seminar as a part and parcel of it. I hope and trust that this Seminar will throw much light upon and envisage the programme for the progress and development of this system in this state and to the World at large.

I will be failing in my duty if I do not thank the Chief Minister of this State for giving this opportunity to conduct the Siddha Seminar along with Second World Tamil Conference. In this connection I owe my thanks to the body of organisation of Second World Tamil Seminar for their kind co-operation to make it as successful as possible.

Siddha Medicine is one of the most valuable elements in India's rich heritage coming down from its ancient past During these many years, the world, especially western componant, has made tremendous progress in enlarging man's mastery over the forces of nature. But no corresponding advance has been made in the understanding and propagation of Siddha Medicine. It is now being realised for the past some years that the knowledge and techniques practised in Tamil Nad for countless generationss described generally as Siddha System of Medicine constitute India's priceless contribution for providing the man's mastery of Health on himself.

Siddha is concerned with the total development of the individual, physically, mentally, morally and spiritually. Now, with the growing need that it is felt for the development of Siddha Medicine in harmony with the highest healthy ideals we can give a vast scope for research in all its aspects.

It is the simplicity and inexpensiveness of the System which makes it specially suited for the economic and Social conditions in India. It has message for all mankind and for the human health. Will intelligent and capable scientists come forth to carry this message to every individual not only in India but also in every other part of the world.

S. J. Sadiq Pasha.
Chairman, Siddha Sub-Committee.

EVELYN R. LIBRARY 243
406

# CHEMISTRY OF SIDDHA MEDICINE

BY

N. ANANTHAPADMANABHAN, I.A.S.
*Secretary to Government, Public Health Department,*
Government of Madras.

It is impossible to realise the present position of any science without some knowledge of the history of its development. The serious Research student of Chemistry should acquaint himself with the outlines of its genesis and history. By way of introduction, a very brief historical note dealing with development of the chemistry of **Siddha Medicine** is dealt with here. The word *Khem* is the root-word of the word Chemistry. The *Khem* in pre-historic days meant the present day Tamil term *Civem* or *Shivm*. There is ample testimony in modern times to show that the term *Khem* was in vogue in Tamil literature in the palmy ages of antiquity. It was developed and practised by the races of Kumari Kandam (*i.e.* submerged land in Indian ocean). It has been proved in recent years that the knowledge of chemistry was known to the people called **Arivars (Siddhars)** of this submerged land who were responsible to compose **Nava Agamams** some 10,000 years ago.

In view of this, it can be claimed with reasonable pride that the chemistry of Siddha Medicine is the bed-rock of all sciences. Substances like oils, fats, sugar, starch, gums, resins, vinegar (kadi), spirit (Bodhai porul) etc. were well-known to siddhars; they were also acquainted with the process of making soaps from oil and fats; and the art of dyeing fabrics with Indigo. They were obtained directly or indirectly from plants or animals. To distinguish them from substances of mineral origin or those derived from the non-living sources, they were called Indriaporul (இந்திரியப்பொருள்—organic). More than 5,000 years ago, siddhars (like Sivan, Agathyar, Nandi etc.) recognised organic compounds as distinct from inorganic (Anindriaporul-அனிந்திரியப்பொருள்). Siddhars classified Inorganic substances like (1) Ulogam (Metals), (2) Padanangal (Non-metals - Poisonous drugs), (3) Upa rasam (Basic salts), (4) Salts, (5) Thiravagam (Acids) and (6) Jayaneer (Alkali) etc. They have classified the organic substances into (*i*) vegetable substances – plants (*ii*) animal substances – milk, honey, bile (Gorosanam), earthworm; snail, crabs, tortoise, cows urine etc.

The Siddhars also developed unique techniques to prepare parpams, sendurams etc. The metals were oxidised (parpams) by grinding them with selected plant juices and thereafter subjected to putam (Optimum temperature). When these processes were found tedious and cumbersome, they searched for a short-cut method. They prepared Thiravagams (acids) and Jayaneers (Alkali) in order to reduce the metal into their basic salts. To develop it still further, they found out the universal catalytic agent called Muppoo which not only shortened the process of preparation but also increased the potency of the drugs. With that they developed Rasavatham. The exponents of this science were Siddhars like Agathyar, Thirumoolar, Bogar, Rama Devar, Yugimuni, Yacob etc. This alchemy process had led to the finding of Karpa medicines (Rejuvination - longevity of body and life). The great achievement therefore of the Siddhar was to purify his body and sanctify his life and integrate the body and life into one with the Sivam and be rid of death and birth. Siddhars have left us in their works vast treasures of knowledge in Chemistry which have not been unearthed so far. It will be of immense help and great service done to the world, if scientists and scholars would come forward to probe and investigate the Chemistry of Siddha medicine, the greatest contribution of Tamilnad to the world.

EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE LIBRARY

# வாழ்க சித்த மருத்துவம்

டாக்டர் ஆ. சன்முகவேலன்,

(சித்த மருத்துவப் பேராசிரியர், தஞ்சை அரன்மனை சரசுவதிமகால்.)

அன்னை பராசக்தி நாடெங்கள் நாடே
ஆதிமருந்தளித்த மொழி யெங்கள் தமிழே

பொன்னொளிரும் பொதிகை எங்கள் சித்தர் மலையே
போற்று மிம்மலைக்கிணை வேறெங்கு மிலையே

பன்னரிய முப்பூ குருவெங்கள் மருந்தே
பார்மிசை ஏதுஇதுபோல் கற்ப மருந்தே.

மன்னு புகழ்ச்சித்தர் நூ லெங்கள் நூலே
மாநிலத்திது போலே நூலில்லை மேலே.

# "64 கலைகளும் — சித்த வைத்தியமும்"

டாக்டர் திரு. பொ. குருசிரோன்மனி, B.A., G.C.I.M., துணை முதல்வர்,
அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

மிகவும் தொன்மை வாய்ந்த உலக நாகரிகங்களில் "தமிழர் நாகரிகமும்" ஒன்று என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிவு. அந்த நாகரிகத்தின் அடிப்படையில் வந்த பண்டைத் தமிழர்கள், தங்கள் வாழ்வின் ஒவ்வொரு துறைகளுக்கும் முறையான இலக்கணங்கள் வகுத்திருந்ததோடு, அவைகளைப் பின் பற்றி வாழ்ந்தும் காட்டி வந்திருக்கிறார்கள். "காதலும் வீரமும் தம் இரு கண்கள்" என்று போற்றி வாழ்ந்த தமிழர்கள், தங்களுடைய காதல் வாழ்க்கையான இல்வாழ்க்கையை "அகத்துறை" என்றும், வாழ்க்கையின் பொதுவான பிற பகுதிகளுக்குப் "புறத்துறை" என்றும் பெயரிட்டு, இவ்விரு நிலைகளிலும் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளை எடுத்துக் காட்டும் வகையில் தங்கள் அனுபவங்களைச் சங்க இலக்கியங்களாகப் பாடி வைத்துள்ளனர்.

உலக நாடுகளெல்லாம் தங்கள் தங்கள் மொழிகளுக்கு மட்டும் இலக்கணம் வகுத்திருப்பது போல், தமிழர்களும் தங்கள் மொழிக்கு இலக்கணம் வகுத்ததோடு நிற்காமல், மனித வாழ்விற்கே இலக்கணம் வகுத்து வாழ்கின்ற பெருமையுடையவர்களாக இருக்கின்றனர். அவ்வாறு வகுத்த "அகத்துறை", "புறத்துறை" இலக்கணங்களே "பொருள் இலக்கணம்" என்ற பெயரில் இன்றும் நின்று நிலவி, தமிழர் நாகரிகத்தை உலகமெங்கும் பறைசாற்றி வருகின்றது என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு வாழ்விற்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள், தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியதும், ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியதுமான கல்வியினைத் தொகுத்து 64 கலைகளாகப் பிரித்து வைத்துள்ளனர். ஐம்பெருங் காப்பியங்கள் என்று போற்றப்படும் தமிழ்க் கருவூலங்களில் சங்ககாலம் தொட்டே இது பற்றிய சான்றுகள் இருந்ததென்பதை அடியிற்கண்ட மேற்கோள்களின் மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

1. "ஐயனுக் கமைந்த நீரார் அறுபத்து நால்வரம் பொன்"
   (சீவகசிந்தாமணி—காந்தருவதத்தையர் இலம்பகம்—பாடல் 667)
2. "எண்ணென் கிரட்டி இருங்கலை பயின்ற
   பண்ணியல் மடந்தையார் பயங்கெழு வீதி"
   (சிலப்பதிகாரம்—மதுரைக்காண்டம்—அழற்படுகாதை—வரி 138-139)
3. "எண்ணெண் கலையும் இசைந்துடன் போக"
   (சிலப்பதிகாரம்—புகார்க்காண்டம்—வேனிற்காதை—வரி 64)
4. "எண்ணெண் கலையோர் இருபெரு வீதியும்"
   (சிலப்பதிகாரம்—மதுரைக்காண்டம்—ஊர்காண்காதை—வரி 167)
5. "யாழ்முதலாக அறுபத்(து) ஒரு நான்(கு)
   ஏரிள மகளிர்க் கியற்கை"
   (பெருங்கதை—1-35-845)
6. "ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
   ஏயவுணர்விக்கும் என்அம்மை"—கம்பர்.

இவ்வாறான இலக்கியச் சான்றுகளின் வாயிலாக 64 கலைகளும் தமிழர் நாகரிக வளர்ச்சியின் சரித்திரத் தொடர்பைப் பெற்று நிற்பது விளங்குகிறது. அவற்றில் முக்கியமானது "தமிழ் மருத்துவமாகிய" "சித்தர் வைத்தியக்கலை" என்பது வெளிப்படை

மனித இனம் "ரூப–அரூப" நிலைகளில் பல முன்னேற்றங்களைச் சாதித்துக் கொண்டே வருகிறது. அப்படிப்பட்ட சாதனைகளின் உதவியால் தமிழர்கள் தங்களின் மிகப் பழமையான நாகரிகத்தை 64 கலைகளாக மலரச் செய்துள்ளனர் என்பது சரித்திர உண்மையாகும்.

தமிழர் நாகரிகம் 64 கலைகளாக விரிந்து மலர்ந்து, அதன் சுருக்கம் சித்தாந்தம் அல்லது முடிந்த முடிவாகவும்; தத்துவம் அல்லது இயல்புக் குணமாகவும், உண்மை நிலையாகவும், ஒருங்கிச் சுருங்கிச் சூத்திர ரூபத்தில் "மெய் ஞானமாக", அமைந்திருப்பதைக் காண்கிறோம். இந்த மெய் ஞானத்தை விஞ்ஞானம் விளக்குமே தவிர, மறுத்துரைப்பதில்லை. மெய்ஞானம் சுருக்கத்தில் வலுப்பெற்று இருக்கிறது. விஞ்ஞானம் பெருக்கத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது.

"அல்லலெல்லாம் நீங்கி அறிவை அறிவாலறிந்து
வல்லசித்தனென்றே மகிழ்வுற்றேன் மாங்குயிலே"

என்ற போக சித்தரின் வாக்கின்படி 'அறிவை அறிவால்' அறியும்போது 64 கலைகளில் தோற்றமும் பல சித்துக்களும் கைகூடி, "உலகத்தில் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை", என்ற பூரணத்துவத்தை அடைந்து பேரின்ப நிலையையும் அடைய முடிகிறது. இந்நிலை, 'தன்னைத் தான் அறிந்து, தலைவனையும் அறிந்த' நிலையாகும். இந்த ஆத்மசக்தியாகிய இயற்கை சக்தியின் வலுவைக்கொண்டு, "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெருநோக்குடன் இந்த 64 கலைகளையும் தமிழர் அமைத்து வாழ்க்கையில் துன்பத்தைப் போக்கி இன்பத்தை 'நிலைக்கச் செய்ய வேண்டுவனவற்றைச் செய்திருக்கின்றனர். ஆனால் செயற்கை சக்தியின் உதவி கொண்டு விஞ்ஞானம், 'தானே யலவான்' என்ற அடிப்படையில் பல கலைகளையும் வளர்த்து வருகிறது. மெய்ஞானம் ஆத்ம சக்தியாகிய இயற்கை சக்தியின் அடிக்கட்டில் என்றும் நிலைத்திருக்கக் கூடிய பண்புடன் சாதாரண மனிதனையும் சித்தனாக்கி அபூர்வமான 64 கலைகளை வளர்ககச் செய்கிறது. மனிதனை மனிதனை மதித்து, அவனிடமுள்ள தெய்வீக சக்தியை உணரச் செய்வதுடன் பேரின்ப நிலையில் ஈடுபடச் செய்து, ஆத்ம சக்தி பெற்று மானிட வர்க்கத்தின் ஒருமைப்பாட்டை விளக்கிச் சொல்லும் மாபெரும் இலக்குகளைக் கொண்டதுதான் 64 கலைகள் என்று துணிந்து கூறலாம்.

1, முதலிடம் பெறுங் கலைகள்: 1. ஆடல் (நிருத்தியம்) 2. பாடல் (கீதம்) 3. இசைக் கருவிகள் (வாத்தியம்) 4. வீணை–டமரு வாத்தியம் 5. ஓவியம் (சித்திரம் அல்லது ஆலோக்கியம்) 6. கவிதை (காவியக் கிரியை.)

2. கவிதைக்கு உதவும் அறிவுகள் 7. நிகண்டு (அபிதானகோசம்) 8. யாப்பு (சந்தஸ்) 9. அலங்கார சாஸ்திரம் (கிரியாகஜ்யம்).

இந்த நிலை சித்த மருத்துவத்திற்கும் 64 கலைகளின் சிலவற்றிற்கு உள்ள தொடர்பையும் இணைப்பையும் ஆராயும்போது வெளிப்படுகிறது. பெரும்பாலான இந்தியக் கலைகள் பழக்க வழக்கத்தினல் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குக் கர்ணபரம்பரையாகச் சொல்லியும், பழக்கியும் பரப்பப்பட்டிருப்பது வெளிப்படை. வர்மக்கலை போன்ற மிகவும் பலம் வாய்ந்த கலைகளைத் தன் சொந்த மகனுக்கும் எடுத்து விளக்காத நிலையில் இருப்பதின் காரணம், அவன் தக்க பண்பாட்டுடன் இருக்காமல் முன்கோபத்துடன் இருப்பதாக இருக்கலாம். ஆகவே அதற்குப் பொருத்தமான மாணுக்கனுக்குக் கொடுக்க வேண்டியதிருக்கிறது. இது ஒருபக்கமிருக்க தக்க மாணுக்கர் இருக்கலாம்; ஆனல் தகுதியுள்ள ஒரு குரு சுட்டிக் காட்ட முடியாத நிலையில் பல்வேறு சித்தர் கலைகள் மேற்கொண்டு பரவி அபிவிருத்தி அடையாமல் இருக்கலாம். ஆகவே நூல் அறிவாலும் செய்முறைப் பழக்கத்தினுலும் பொதுவாக 64 கலைகளும், குறிப்பாகச் சித்தர் கலையில் சிறப்பு இடம் பெற்ற சித்த மருத்துவக் கலையில் நிபுணத்துவம் பெற்ற உண்மைக் கலைஞர்கள் பெருகும்போது நாட்டின் பண்பாடும் நாட்டின் மதிப்பும் உயரும். பல கலைகளிலும் திறன்பட்டு சித்த மருத்துவக் கலையைக் கையாளும்போது அறன் திறனும் சிறப்பும் கூடிக் காணும். உதாரணமாக கரப்பயிற்சி செய்யும்போது யோக ஆசனங்களை அனுபவத்தில் தேர்ந்தவரிடம் கேட்டறிந்து

கையாள வேண்டும். யோக ஆசனங்களின் மூலமாய்ப் பல நாட்பட்ட நோய்கள் குண மாகும். உடற்தோற்றமும் மெருகுடன் காணப்படும். மன நிம்மதியும், சாந்தியும் அடை வதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன. கணையம். சிறுகுடல், பெருங்குடல் போன்ற பித்த தளத்தில் உள்ள அவயங்கள், மயிலாசனம், 'நௌலி, உட்டியானம்' என்ற யோகாசனங்கள் மனிதனை நன்கு வேலை செய்ய வைத்து, சீரணத்தைத் தூண்டி, மதுமேகம், பாண்டு, சோபை போன்ற நோய்களைக் குணப்படுத்துவதற்குப் பெரிதும் உபயோகப்படுகிறது. அத்துடன் சரப்பயிர்ச்சியில். மூச்சு வயப்படுவதால் மனம் அடங்கி. மனச்சாந்தி ஏற்பட்டு உயிரை உறுதிப்படுத்தவும் உதவுகிறது. இப்பயிறசிகள் செய்யும்போது உடல் தளர்ச்சி அடையாமலிருக்கும் வகையில் காய கல் முறையில் பல உயிர் மருந்துகளைச் சித்தர்கள் அமைத்துக் கொடுத்திருக்கின்றனர்.

உணவைப் பற்றி அறிவிக்கும் கலையை, நளன், பீமன் முதலியோர் கண்டறிந்த பாக முறைகளை அறிந்து அத்தகைய தத்துவத்தை மனத்தில் கொண்டு மருத்துவம் செய்யும் போது பல நன்மைகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

மனையடி சாத்திரம் நகர நிருமாணக்கலை முதலியவற்றில் கூறிய இலக்கணப்படி வீடுகளை அமைத்துக் கால ஒழுக்கங்களைக் கைப்பிடித்து வாழ்க்கை நடத்துவதால் நோய் வராமல் தடுத்துச் சுகவாழ்க்கை நடத்த வாய்ப்பிருக்கிறது. அத்துடன் தமிழரின் அகத் துறை இலக்கணப்படி நடந்தாலே சமூகமும சுகாதார நிலையும் நன்கு அமையுமென்பதில் ஐயமில்லை.

இரசவாதம், இரத்தினப் பரீட்சை, தாது வாதம், மிருகங்களைப் பற்றிய ஒலிக்குறி நூல், எறும்பு போன்ற ஊர்ந்து செல்லும் உயிர்ப் பொருள்களைப் பற்றிய அறிவு, போன்றவை, தாது, தாவர சங்கமப் பொருள்கலிருந்து உப்பு, உபரச, பாடாணங்களை எடுத்து மருந்துகள் செய்து வைத்தியத்திற்குத் தத்துவப் பொருத்தத்துடன் நல்ல பயன் உள்ள முறையில் உபயோகிக்க உதவும்.

கொக்கோகம் என்ற மன்மத லீலைக் கலையில் கண்டிருக்கும் அங்க இலக்கணக்கலை உதவி கொண்டு ஒருவரின் மனப்போக்கு, அவரது ஆயுள் நிலை போன்றவற்றை அறிந்து சித்த மருத்துவக்கலையைத் தக்கமுறையில் கையாள்வதற்கு உதவும்.

நாட்டியக்கலையின் உதவிகொண்டு உடம்பின் நற்தோற்றம், சுகநிலை, மன நிம்மதி முதலியவற்றை உண்டு பண்ணி நோயற்ற நிலையை ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது.

பூக்களைப் பற்றிய அறிவைப் பெற்றிருப்பதாலும், அவற்றுடன் ஏனைய வாசனைப் பொருள்களை உபயோகித்து, படுக்கை அமைத்தல் முதலிய பல அலங்காரங்களைச் சந்தர்ப் பத்திற்குத் தக்கவாறு செய்து கொள்ளும் அலங்காரக்கலை முதலியவற்றை அறிந்திருப்ப தாலும் சித்த மருத்துவத்தில் நஞ்சு விஞ்ஞானம் படிக்கும்போது சட்டத்திற்குப் புறனை தற்கொலை, பிறரைக் கொல்லுதல் போன்ற கெட்ட நோக்கங்களைக் கண்டுபிடிக்க மிகவும் உதவியாக இருக்கும். அத்துடன் பூக்களோம் பற்றிய அறிவைப் பெறும்போது பல்வேறு புல் பூண்டு மரம் செடி, கொடி இவைகளின் அறிவையும் நாம் பெறுவதால், சித்த மருத்து வத்திற்கேற்றபடி மூலிகைகளைக் கொண்டு நல்ல மருந்துகளைத் தயாரிப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

சங்கீதக் கலையில் மிருதங்கம், புல்லாங்குழல், வீணை அதாவது. தோல்கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவிகளால் உண்டாகும் இன்னிசையின் மூலம் சரத்தை லயப்படுத்தி மனதை ஓர் நிலைப்படுத்தவும், மனச் சாந்தியையும், நோய் அற்றநிலையை உண்டாக்கவும், வெகுவாக வாய்ப்புகள் இருக்கின்றன. பஞ்சபூத அம்சத்தில் ஆகாய அம்சத்தைக் கொண்டு காது என்ற பொறியின் புலன் அல்லது செயல், கேட்டலாகும் அச்செயலால் அடையும் பொருள் ஒலி அல்லது ஓசையாகும். ஆகவே சுர சுத்தமான இன் ஒலி அல்லது இன் ஓசையின் வாயிலாக, ஆகாய பூதத்தின் உதவிகொண்டு மற்ற நான்கு பூதங்களின்

அம்சங்களை லகிக்க வைத்து கிருட்டின பகவான் புல்லாங்குழல் இசையால் அண்டத்தில் உள்ள சரம், அசரப் பொருள் அத்தனையும் அசைவில்லாது செய்தால் என்றால், அது நடைமுறைக்குப் பொருத்தமான பஞ்சபூத தத்துவத்தில் அமைந்த தேய்வீக சங்கீதக் கலையைக் குறிக்கிறது. அந்தப் பஞ்ச பூதக்தத்துவ அமைப்பிலேயே சித்த வைத்தியர் கலையும் அமைந்திருக்கும் தொடர்பைக் காணும் போது, மற்றையக் கலைகளுக்கும் சித்த வைத்தியத்திற்கும் உள்ள இணைப்பு நன்கு விளங்குகிறது. இதேபோல் மற்ற எல்லாக் கலைகளுக்கும், ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பை மேற்கொண்டு ஆராய்ந்து அறிவதற்குரிய பல்வேறு வாய்ப்புகளை ஆராய்ச்சிகளின் மூலம் ஏற்படுத்த வேண்டியதிருக்கிறது. இந்த உயிர்க் கலைகளின் நிபுணத்துவம் அடைந்த பல கலைஞர்களை ஒன்று சேர்த்து, அவர்களைப் போற்றி ஆதரிக்கவேண்டும். அதன் மூலம் நாட்டின் பெருமை உயரும்.

சித்த வைத்தியக்கலை மற்ற கலைகளின் உதவியை எவ்வாறு பெற்று இயங்குகிறதென்பதைக் கவனித்தோம். அதேபோல் மற்றக் கலைகளும் இக்கலையின் உதவியை நாடுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்பது வெளிப்படை.

நமது முன்னோர்கள் மனித வாழ்க்கையை அகத்துறை புறத்துறை என்று இரண்டு பெரிய பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர் என்று கண்டோம். அந்த இலக்கணம் முற்றிலும் அமைந்த வாழ்க்கையைப் பூர்த்தி செய்யும் வகையில் 64 கலைகள் அமைந்திருககுதென்றால் மிகையாகாது. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய பேராசியர் டாக்டர் திரு. கால்டுவெல் அவர்கள் இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர் ஆகும். "கன்னடமும் களி தெலுங்கும்; கவின் மலையாளமும் துளுவம் உன்னிடத்தே தோன்றியது என்று தமிழ் மேதை மனோன்மணீயம் திரு. சுந்தரம் பிள்ளை கூறிய கூற்றை இலக்கண ஆராய்ச்சியின் வாயிலாக ஆராய்ந்து தமிழுக்கும் மற்ற மூன்று திராவுட மொழிகளுக்கும் உள்ள தொடர்பை நிரூபித்துக் காட்டிய பெருமை டாக்டர். கால்டுவெல் அவர்களையே சாரும். இவர் "கலை" என்ற வார்த்தை பற்றிக் குறிப்பிடும்போது கீழ்க்கண்ட இலக்கணத்தைக் கூறுகிறார். "கலா = (இசைக்கலை) ஒலி எழுப்பு அல்லது எண்ணு எனும் பொருள் உடைய "கல்" என்பதே இதன் மூலமாகக் கருதப்படுகிறது. இதே சொல்லைக் "கலை" எனும் வடிவில் தமிழ் வழங்குகிறது என்றாலும், அச்சொல்லால், இசைக்கலை முதலாம் எல்லாக் கலைகளையும் உணர்த்துகிறது. "கலை" அல்லது "கலா" என்ற சொல் பழம் பெருந்திராவிட மூலமாகிய "கல்" கற்று அறிதல், என்பதிலிருந்து பிறந்தது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. அம் மூலத்திலிருந்து தோன்றும் மற்றொரு சொல் "கல்வி." ஒன்றே போல் ஒலிக்கப் பெறுவனவாகிய, முற்றிலும் மாறுபடும் இரு வேறு சொற்கள், பிழைபடு நெறியால் ஒன்றாக மதிக்கப் பெற்றன என்பது உறுதியாகும் உறுதியாகுல் வகையில், சமஸ்கிருதத்தில் அச்சொல் குறிக்கும் பிற பொருள்கள், திராவிடச் சொல் உணர்த்தும் பொருள்களோடு முற்றும் தொடர்பற்றனவாய் உள்ளன." (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்-டாக்டர் கால்டுவேல்–பக்கம் 719).

"கலை" என்ற சொல்லுக்கு இரண்டு அங்கம் உண்டு. அவற்றில் ஒன்று கலையின் பயன் 'மற்றொன்று கலையின் அழகு.' தமிழர் நாகரிகம் அல்லது பண்பாட்டில் இவ்விண்டும் நன்கு பொலிவுதிருந்தது. ஆகவே பண்டைக் காலம் தொட்டு அரசர்களும், செல்வந்தர்களும் மற்றும் வாழ்க்கைச் சுவைகளில் ஈடுபட்ட பல்வேறு மககளும் இக்கலைகளைப் பயின்றிருந்தனர் என்று தெரிகிறது. எழுத்து, மொழி, இலக்கண அறிவு, தர்ம சாத்திரம், மந்திர சாத்திரம், சிற்பக்கலை, வீணை, நாடகம், வாட்டியம், இரசவாதம், வைத்தியம் சாத்திரம் போன்ற பல கலைகள் மனிதனின் அகத்துரை, வாழ்க்கையை அழகுபடுத்துவனவாக அமைந்தன. புறத்துறை வாழ்க்கைக்குப் பயன்படும் கலைகளில் உதாரணமாகத் தேர்கள் பற்றிய அறிவு, யானைகளைப் பற்றிய ஞானம், குதிரையைப் பற்றிய அறிவு, ஆயுதங்களைப் பற்றிய அறிவு, போர் முறைகளைப் பற்றிய அறிவு, மல் யுத்தம் போன்றவை, குறிப்பிடத் தககதாகும். 64 கலைகளில் பல் பெண்களுக்குச் சிறப்பாக உரியவையாக அமைந்திருக்

கின்றன. பூக்களைப் பற்றிய அறிவு, வீணை, தங்கம் பற்றிய அறிவு அலங்காரக்கலை, வசீகரம், சமையற் கலை, நாட்டியம் போன்றவை இவற்றில் குறிப்பிடத் தக்கன. "மணிமேகலை" என்னும் நூல் இது பற்றிக் குறிப்பிடும் போது

"வேத்தியல் பொதுவிய வென்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டும் தூக்குந் துனிவும்
பன்னியாழ்க் கரனமும் பாடைப் பாடலுந்
தன்னுமைக் கருவியுந் தாழ்தீங் குழலுங்
கந்துகக் கருத்து மடைநூற் செய்தியுஞ்
சுந்தர சுண்ணமுந் தூ நீ ராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமும்
காயக் கரணமும் கண்ணிய துணர்தலும்
கட்டுரை வகையுங் கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியும் மலர் ஆய்ந்து தொடுத்தலும்
கோலங் கோடலுங் கோவையின் கொப்புங்
காலக் கணிதமுங் கலைகளின் துனிவு
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
வோவியச் செந்நூல் உணர நூற் கிடைக்கையும் (மணி. 2. 18-31)

என்று குறித்திருக்கிறது.

இக் கலைகளின்மூலம் பண்டைப் பெண் மக்களுக்கு இவ்வாழ்க்கையை அழகுபடச் செய்வதற்கும் பயன்படச் செய்வதற்கும் என்னென்ன தெரியவேண்டுமோ அக் கலைகளில் தேர்ச்சி அடையவேண்டிய பெண் கல்வியைக் கொடுத்ததாகத் தெரிகிறது. இவ்வாறாக பல்வேறு நோக்குகளுடன் அமைந்த 64 கலைகளையும் உள்நாட்டில் பரப்புவதற்கு, அக் காலத்தில், முதல். இடை கடைச் சங்கங்களும், கோவில்களும் பெரிதும் உபயோகப்பட்டிருக்கின்றன. இதைப்போன்று வெளிநாட்டில் இக் கலைகளைப் பரப்புவதற்கு மன்னர்கள் முயற்சி எடுத்திருக்கின்றனர் என்று தெரிகிறது. அவர்களின் முக்கிய நோக்கம் கலைகளைப் பரப்புவதுதானே தவிர பித நாடுகளை அடக்கித் றங்கள் ஆட்சிக்குள் கொண்டுவரவேண்டு மென்பதில்லை என்பது நன்கு புலனுகிறது. 'திரைகடலோடியும் திரவியம் தேடும்' முயற்சி மிகுந்த தமிழ் மன்னர்களின் கப்பல் வாணிகம் கூர்ந்து விளங்கியகாலத்தில் ரோமாபுரியில் பாண்டிய நாட்டுத் தூதுவர்கள் இருந்துவந்தனர். ஆப்பிரிகாவில் எகிப்து, மடகாஸ்க்கர் முதலிய பகுதிகளில் இந்தியர்கள் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே குடியேறியிருந்தனர். இந்தியர் தாம் சென்ற இடங்களிலெல்லாம் தம் நாட்டுக் கலையையும் பண்பையும் படியச்செய்தனர். இலங்கை, சுமத்ரா, ஜாவா, பாலித்தீவி, போர்னியா, செலிபீஸ், பர்மா, சீயம், கம்போடியா முதலிய நாடுகளில் இந்தியப் பண்பாட்டுத் தொடர்பு மிகுந்து விளங்கியது. இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தியாவிலிருந்து தொலைவிலுள்ள இந்த நாடுகளுக்கு மக்களும் தூதுவர்களும் வாணிகர்களும், அரசர்களும் சென்று, கலை ஆட்சியை ஏற்படுத்தினர்; பண்டசாலைகளை நிறுவினர்; நாட்டை வளப்படுத்தினர்.

இந்திய நாகரீகம் முதன்முதலாக இலங்கையில்தான் பரவியது. இலங்கைத் தீவை இந்தியப் பண்பாட்டின் ஒரு பகுதியென்றே சொல்லலாம். இலங்கையின் பேரரசர் தேவாநம்பிய திஸ் என்பவர் இந்திய மன்னர் அசோகரின் காலத்தவரும் அவருக்கு நண்பருமாவார். இவரது காலத்தில் இலங்கையில் பௌத்த சமயம் பரவியது. அதனோடு இந்திய மொழி, இலக்கியம், கலைகள் ஆகியவையும் சென்றன. அனுராதபுரம், பொலனறுவை ஆகிய மாநகரங்கள் சிங்களக் கலைஞரும் இந்தியக் கலைஞரும் சேர்ந்து நிறுவப்பட்டவையே. இவைகளில் பெரும்பகுதி தென்னிந்தியக் கலையின் செல்வாக்கே யாகும். ஈசுரமுனிய, பொல

னறுவை ஆகிய இடங்களிலுள்ள சிற்பங்கள் பல்லவர்கள், சோழர்கள், காலத்திய கலை முறையை யொட்டிச் செய்யப்பட்டவை. சிகிரியச் சுவரோவியங்களில் அஜந்தா ஓவியக் கலை மரபு புலனுகின்றது. இலங்கையின் கலைத் தொழிலகளும் நடனங்களும் தென்னிந்தியக் கலையினை ஒத்திருக்கின்றன.

தென்னிந்திரா தன் பன்பாட்டைப் பல பகுதிகளில் பரப்பிவந்தது. பழங்காலத்திலேயே இதற்கும் ஆஸ்திரேலியாவுக்கும் தொடர்பிருந்தது. சிந்துப் பள்ளதாக்கு நாகரிகம் (கி.மு. 3000—கி.மு. 2000) ஓரளவு திராவிடர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. பர்மா. மலேயா, சுமத்ரா, ஜாவா ஆகிய இடங்களில் இந்தியர்களின் குடியேற்றத்தைப் பெரிப்ளுஸ் டாலமி எழுதிய நூலும் குறிப்பிடுகின்றன. கம்போடியாவிலும், ஜாவாவிலும் (கி.பி. 314 முதல்) சமஸ்கிருத சாசனங்கள் தென்னிந்திய (வேங்கி) கிரந்தி எழுத்துக்களில் எழுதப்பட்டன. இந்த கிரந்த எழுத்துக்கள் அமராவதி. நாகார்ஜுன்கொண்டா, மாமல்லபுரம் (கி.பி. 200—800) ஆகிய இடங்களிலிருந்து சென்ற கலைகளுடன் இந்தோனிசியாவுக்குச் சென்றன. தென்னிந்திய சிற்ப முறைகள் இந்தோசீனு, இந்தோனிசியா கோயில்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. திருமலைக் குன்றுகளில் உள்ள சோழருடைய சாசனங்கள் மேல் சொன்னவற்றிற்கு உறுதி கூறுகின்றன. அவ்வாறே தென் இந்தியர் கலைகளில் மிக முக்கியமான சித்தர் கலையையும், அதன் உயிராயிய சித்த மருத்துவத்தையும் போகர், யாகோபு போன்ற சித்தர்கள் சீனு, மெக்கா மெதீனு போன்ற அரபு நாடுகளுக்குச் சென்று பரப்பியதுடன், அங்குஇள மருத்துவ உண்மைகளையும் சேகரித்துவந்ததாகத் தெரிகிறது.

பசிபிக் நாகரிகம் என்பது இந்தியா முதல் அமெரிக்க வரையிலு முள்ள நாடுகனின் பல பன்பாடுகளையும் குறிக்கும். பசிபிக் சமுத்திரத்தின் மேற்குப்பகுதியில் பர்மா, சீயம். இந்தோ-சீனு, கிழக்கிந்தியத் தீவுகள், பிலிபின் தீவுகளும், பசிபிக்குன் கீழ் பகுதியில் வட, தென் அமெரிக்க நாடுகளும் இருக்கின்றன. இந் நாடுகளில காணும் சிறந்த சிற்பம், கல்வெட்டு. மண்பாண்ட வேலை அடையாளங்கள், வட கிழக்கு ஆசியாவில் காணப்படும். கற் கருவிகளுக்குள்ள மட்பாண்ட வகைகளுக்கும் ஒத்திருப்பதைக் காணலாம். ஆகவே வெளிப் படையாக வேறுபட்டதாகக் காணப்படும் மனித இனம் வாழ்விற்கு அடிப்படையான இந்தக் கலைகளின் வாயிலாக ஒருமைப்பாடுடன் திகழ்வது வெளிப்படையானதாகும்.

இந்த மனித இனத்தின் ஒருமைப்பாட்டை அசைக்க முடியாத தத்துவ ரீதியாக அமைத்துக் காட்டுவது தென் இந்திய சித்தர் கலை என்ருல் மிகையாகாது. மனித இனம் 96 தத்துவத்தில் அடிக்கட்டில் அமைந்த கோயில் ஆகும். சித்த வைத்தியக் கலையானது 96 தத்துவங்களாக விரிந்து, பின்பு செயல்படும்போது உயிர்த் தாதுக்களான 'வளி-அழல்-ஐயம் என்ற முக்குற்ற நிலையாகச் சுருங்கி, சூத்திர ரூபத்தில் அமைகிறது. இதைப் போன்றே மற்றைய 64 கலைகளும் விரிந்தும் சுருங்கியும் இயங்குகின்றன. அக்கோயிலில் உடல் தத்துவம், மனுதத்துவம், உயிர்த்தத்துவம் என்ற நிலைகள் 'ரூப-அரூப' நிலைகளின் மாற்றத்தில் இயங்குகிறது. உலகம் 'சக்தி-சிவன் அல்லது நாத-விந்து' இணைப்பில் இயங்குகிறது. பதி-பசு-பாசம் என்ற சுருக்கத்தில் தென் இந்திய மெய்ஞானம் அமைந்திருக்கிறது. கருத்தின் உறைவிடம் கலை; கலையின் பயன் இன்பம், பதியைப் பசுவுடன் சேர்ந்து பேரின்பமான நிலையை நுகரவிடாது தடுப்பது 'பாசம்' என்ற 'துன்பம்' அல்லது நோயாகும். இந்தத் துன்பத்தை நீக்கிப் பேரின்பத்தை ஆன்மா அடைவதற்கு சரப்பயிற்சி செய்து மனதைத் தன்னிலைப்படுத்தி, உயிர் மும்மலங்களாகிய ஆணவம், மாயை, கன்மம், ஆகியவற்றை நீக்க, இராசயோகம், செய்து முத்தியடைய இராச வைத்திய மாகிய சித்த வைத்தியக் கலையைக் கண்டனர், தென் இந்திய முதல்வர்களாகிய சித்தர்கள், காய கல்பம் செய்து, உடம்பை வலுப்படுத்தி முன் குறித்த சரப்பயிற்சிக்கு உதவி செய்ய, "முப்புவின் உதவி கொண்டு உயிர் மருந்தை முடிக்க 64 கலைகளில் ஒன்ருகிய வைத்தியக் கலையை அமைத்திருந்தனர். சித்தர்கள், அறிவை அறிவால் அறிந்து'. முடிவான ஞானத்தை அடைந்திருந்ததால், 64 கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாகவே நிகழ்ந்தனர்.

இக்கலைகளில் முக்கியமாக, இரசவாதம், வைத்தியசாஸ்திரம், சோதிடசாத்திரம், ஒலிக்குறி நூல். தாதுவாதம் போன்றவற்றிலும், பல சித்துக்களாகிய, ஆகாய பிரவேசம், ஆகாய கமணம், கூடுவிட்டுக் கூடு பாய்தல், திடீரென்று காணுமல் மறைதல், தீயைக்கட்டுதல், நீரைக்கட்டுதல், காற்றைக் கட்டுதல், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னதம்பம், கட்கத்தம்பம்; அவத்தைப் பிரயோகமாகிய, பல கலைகளையும் கொண்டது சித்தர் கலையாகும். இவற்றின் பண்புகளை நல்முறையில் பயன்படுத்துவதற்கும், இவற்றைப் பயன்படுத்தும் போது உடல் நிலைகெட்டு இக்கலைகள் சிந்திக்காமல் போகாதபடி பார்த்துக் கொள்ள சித்தர்கள் சித்த மருத்துவக்கலையை நமது பரம்பரைச் சொத்தாகவிட்டுச் சென்றனர். இக்கலைகளில் பலவற்றையும் பழக்கத்தில் கொண்டுவந்து, மேலும் மேலும் பல ஆராய்ச்சிக் குட்படுத்தாதலால் இக்காலத்தில் இவை கையாள முடியுமோ? என்ற ஐயப்பாடு ஏற்படுவதில் ஆச்சரியமில்லை. 64 கலைகளுக்குமே அடிப்படைத் தத்துவத்தில் ஒருமைப்பாடு இருப்பதால் சித்தவைத்தியம் மற்றக் கலைகளின் தொடர்பைக் கொண்டு இயங்கி, துன்பமாகிய நோயை நீக்கி, இன்பமாகிய கலையின் பயனைக் கொடுப்பதிலும் மனிதப்பண்பாடு அல்லது நாகரிகத்தை உயர்த்தி நாட்டின் மதிப்பை மேற்படுத்துவதிலும் மற்றக்கலைகளுடன் இணைந்து ஒருமைப்பாட்டுடன் செயல்படுகிறது.

"வாழ்க சித்தர் கலை! வளர்க தமிழ் மருத்துவக்கலை!!

# சித்தர்கள் சொன்ன காயகற்பம்

வி. பலராமய்யா

(பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை.)

மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்ருக இயங்கிச் சித்தம் தெளிந்தவர்கள். சித்தர்கள் தன்னலத்தைக் கருதி உள்ளொன்று புறமொன்று பேசுகிறவர்கள் எக்காலத்தும் சித்தியடைவது அசாத்தியம். மெஞ்ஞானம் அடைய வேண்டின் உயிர் வேண்டும். உயிர் வேண்டின் உடல் வேண்டும். ஆகவே உடலை விடாமல் மெஞ்ஞானம் அடையும்வரை அதைப் பாதுகாக்க வேண்டுமேன்றே சித்தர்கள் கருதினர். பதினெண் சித்தர்களில் ஒருவரான திருமூலர் இப்பொருளையே வலியுறுத்துகின்ருர். கீழ்க்கண்ட செய்யுளைக் கவனிக்கவும்.

"உடம்பார் அழியின்
உயிரார் அழிவார்
திடம்பட மெஞ்ஞானம்
சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும்
உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த்தேனே"

உலக ஞானம் எய்துவதற்கு அனுபவம் மிக முக்கியம். அனுபவமென்பது வயது முதிர முதிர வருகின்றதென்பதை நாம் கண்கூடாகக் காண்கிருேம். ஆகவே வயதை நீடிப்பதினல் அறிவு விளக்கம் ஏற்படுகிறதென்பதற்கு விளக்கம் வேறு தேவையில்லை.

சித்தர்கள் தத்துவப்படி மனிதனைப் பிறந்தபிறகு இறப்பது ஒரு கேலிக் கூத்து. "செத்தால் சிறியாரோ" என்கின்றனர். இறந்தவன் பிணமாகி விடுகிருன். பஞ்ச பூதங்களாகிய இவ்வுடல் இறந்தவுடன் அந்தந்தப் பூதங்கள் அதனதன் பூதங்களில் கலந்து விடுகிறதென்கின்றனர். இறந்தவன் பிறந்தேயாகவேண்டும். பிறப்பைத் தவிர்க்க வேண்டின் இறப்பைத் தவிர்க்க வேண்டும் என்கின்றனர்.

அப்படி இரவாமலிருக்கப் பல வழிகள் அம்மேலோர் அனுசரித்ததாகத் தெரியவில்லை. ஒழுக்கத்தினுல் மனதைத்தயும் காயத்தையும் ஒருங்கு சேர்த்தனர். பிரம்மரந்திரமென்னும் வெட்ட வெளியினின்று ஊறும் அமுரியென்ற அமுதத்தை உண்டனர். உடலுக்குத் தச தீட்சை பெற்றனர். அஷ்டமாசித்திகளைப் பெற்று பஞ்ச பூதங்களைத் தன் வயப்படுத்தினர். இந்த அமுரி என்ற கற்பத்தைப்பற்றி நான் இங்கு கூற முற்படவில்லை.

சாதாரணமாய் மனிதன் தன் உடலை ஒரு பிணியுமின்றிப் பல வருடங்கள் பாதுகாக்கக் கூடிய முறைகளையும் அம்மேலோர் சொல்லியுள்ளனர். அந்த முறைகளைக் கற்ப விதியென்றனர். "வாகுடனே காயமது யிருக்கவென்ருல் வரையாகக் கற்பமதை யுண்ண வேண்டும்" என்றனர்.

மனிதன் ஏன் இறக்கின்ருன். ஏன் மூப்பு அவனை அணுகுகிறது என்னும் கேள்வி ஒவ்வொரு அறிவாளியும் கேட்கக்கூடியது. ஆனல் மக்கள் விஞ்ஞானமென்ற மாயையில் உழன்று உண்மைப் பொருளை அடையும் மார்க்கங்களை நினையாதிருக்கின்றனர். பிறந்து சாகின்ருேமேவென்ற சிந்தனை சாதாரணமாக மக்களுக்கு வருவதில்லை. எந்த விஞ்ஞானமும் மூப்பு, சாக்காடுகளை ஒழிக்கும் மார்க்கத்தை எட்டிக்கூட பார்க்கவில்லை. மேனுட்டினரில் சில மேதாவிகள் புத்துடல்பெற குரங்கின் நரம்பை எடுத்து மனிதனுக்கு ஒட்டிப் பார்த்தனர்: பலனில்லை. ஆயினும் நம் நாட்டில் காயசித்தி பெற்ற மகான்கள் பலர் இருந்தனரென்றும், இன்னும் இருக்கின்றனரென்றும் பல நூல்கள் மூலமாகவும் பெரியோர்கள் மூலமாகவும் தெரியவருகிறது. ஆயினும் நம் நாட்டின் கலைகளை ஆராய்ச்சி செய்து அம் மேலோருரைத்தவைகளில் ஏதாவது உண்மையுள்ளதா இல்லையாவெனக் கண்டுகொள்ள நம் அரசியல் வாதிகளுக்கு நேரமோ, அக்கறையோ, ஒய்வோ இல்லை. அக்காலத்தில் தனிப்பட்ட சில அரசர்கள் மிக்க ஊக்கம்

காட்டியுள்ளனரென்று தெரிய வருகிறது. தஞ்சாவூர் சரபோஜி மன்னர் நம் கலைகளைப் பயன்படுத்தி மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று அரும்பாடு பட்டனரென்பதைத் தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலைக் கண்ணுற்றால் விளங்கும். ஆனால் அவர் காலத்திற்குப் பிறகு அவருடைய ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்யாமற் போயினர். மத்திய அரசு இந்த ஆராய்ச்சிக்காகப் பணவுதவி செய்து மருத்துவ நூல் ஆராய்ச்சி மாத்திரம் சரஸ்வதி மஹாலில் நடைபெற்று வருகின்றதை நாம் வரவேற்கிறோம். ஆனால் அது போதுமான அளவில் இல்லை. செய்ய வேண்டியது மிக மிக அதிகம் உள்ளது. நம் தமிழக அரசு இப்பொழுது நாட்டு மருத்துவத்திலும் மற்ற தமிழ் கலைகளிலும் ஊக்கம் காட்டிவருவதை மக்கள் வரவேற்கின்றனர். நல்லகாலம் பிறந்துவிட்டது. நமக்குக் குறைவில்லையென்று சித்த மருத்துவர்களும், அக்கலையில் ஈடுபாடுடையவர்களும் மகிழ்கின்றனர்.

கீழ்க் குறிப்பிட்டுள்ள கற்பமுறைகளை ஆராய்ச்சி செய்து மக்கள் நலம்பெறச் செய்வதற்கு அரசாங்கம் பொருள் உதவி செய்து ஊக்குவித்தாலொழிய தனிப்பட்டவர்கள் செய்து பயனடைய முடியாதென்பதில் ஐயமில்லை.

மனிதனுடைய உடல் எதிர்ப்பார்த்த அளவுக்கு முன்னமேயே சாக்காடு அடைகிறது. இதற்குக் காரணங்கள் இரண்டு. அவன் மூதாதைகள் செய்த தவறுதல்கள் ஒன்று. தகாத காரியங்களைச் செய்து இரத்தத்தைக் கெடுத்து மேகமென்ற பிணியை சம்பாதித்து அதைப் பார பரம்பரை சொத்தாக மக்களுக்கு ஈய்ந்து போயினர். "விரையொன்று போட சுரையொன்று முளைக்குமா" வென்பது முது மொழி. மேகத்தால் பீடிக்கப்பட்டவன் அந்த மேகத்தை நிவர்த்தி செய்துகொள்வது சாதாரணமாக முடியாத காரியம். பிறக்கும்போதே மேகத்தோடு பிறக்கிறான். லட்சத்தில் ஒருவனாவது மேகமில்லா இரத்தத்துடன் பிறப்பானாவென்பது சந்தேகம். ஆகவே இந்த மேகம் பலவித வியாதிகளை யுண்டாக்கி மரணத்தை விரைவில் உண்டு பண்ணுகிறது. "மேகத்தால் பிறந்த பிணி நாலாயிரத்து நானூறாகும்" என்று அகத்தியர் சொல்லுகிறார். சித்தர்கள் மனிதர்களைத் தாக்கும் பிணிகள் 4448 என்று வரையறுத்தனர். இவைகளில் 48 பிணிகளைத்தவிர மற்ற 4400 பிணிகளும் மேகத்தால் சம்பவிக்கிறதென்பதை குறிப்பாக ஒவ்வொரு மருத்துவனும் கவனித்தல் சிறந்தது. மேனாட்டு மருத்துவர்களுக்கு மேகமென்றால் ஆகாயத்தில் உலவுகின்ற மேகமா வென்றுதான் கேட்பர். ஆகவே எந்த மருத்துவர்களாயினும் சரி, இந்த மேகத்தின் தத்துவத்தைப் புரியாதவரையில், பிணியைக் குணப்படுத்துவதென்பது முடியாத காரியம்.

இரண்டாவது தானாகவே ஈட்டிய மேகம். இயற்கைக்கு புறம்பான நடத்தைகளால் ஈட்டும் மேகம், மூதாதைகள் விட்டுப்போன மேகத்துடன் சேர்ந்து, மனிதனுடைய உடலிலுள்ள உறுப்புக்கள் அனைத்திலும் பரவுகின்றது. இந்த மேகம் உடலில் வெண்மையாயும் பிசின்போன்றும் பரவி கபமாக மாறுகிறது. இந்தக் கபமே காலனாக மாறுகிறது. இந்தக் கபம் இரத்தக் குழாய்களில் கலந்து செல்லும்போது இருதயத் துடிப்பு, இருதய வெடிப்பு உண்டாகி மரணம் உண்டாகிறது. இந்தக் கபத்தை நீக்கும் முறையே கற்பவிதி.

ஆகவே மேகத்தை நிவாரணம் செய்வதே மருத்துவனுடைய முதற்கடமை. அதன்றி அவ்வப்பொழுது தோன்றும் சில்லறை வியாதிகளுக்குச் சில்லறை மருந்துகளைக் கொடுப்பது மேனாட்டு மருத்துவ முறை. இம்மருத்துவத்தினால் பயனடைபவன் மருத்துவனே,

இக்காரணங்கொண்டே சித்த மருத்துவத்தில் பிணியாளனுக்கு மேகத்தை அகற்றக்கூடிய மாத்திரை ஒன்றிரண்டு கொடுத்து மலத்தையும் நீரையும் பிரித்துக் கழிக்கின்றனர். அதன் பிறகே அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் உடல் தேற்றும் மருந்துகளைப் பிரயோகம் செய்வர். மலத்தைக் கழித்தால் உடலிலுள்ள வலிமை போய்விடுமென்று கருதுகின்ற மருத்துவத்தை என்னென்று சொல்வது.

இப்பொழுது மேகத்தை அகற்றி உடலைத் தேற்றும் முறைகளை ஆராய்வோம். சித்த மருத்துவத்தில் மேகத்தை நீக்கும் இயற்கை மருந்துகளில் சேங்கொட்டை (சேராங்

கொட்டை) (Bilader=Marking Nut) முக்கியம் வாய்ந்தது. ஆனால் இதனிடம் கொடிய நஞ்சு உள்ளது. இதன் கருப்பு நிறமான பால் உடலில்பட்ட சில மணிகளில் உடலெல்லாம் நமைச்சல் உண்டாக்கி வீக்கத்தையும் உண்டாக்கும். குட்டநோய்ப்பட்டவன் ரூபம் வந்துவிடும். உடலில் மேகம் பரவியுள்ளதென்பதற்கு இதைக்காட்டிலும் ஓர் எடுத்துக்காட்டு வேறென்ன இருக்க முடியும். ஆயினும் இந்த சேங்கொட்டையை சுத்தி செய்யும் முறையில் செய்து உபயோகித்தால் மேகமும் மேகத்தையொட்டிய பலவித நோய்களும் நீங்கி ஆயுள் பெருகுமென்பதில் சங்கையில்லை.

ஆகவே இந்தச் சேங்கோட்டையை எப்படிப் பிரயோகிப்பதென்பது பிரச்சினை. இதை நேரிட உள்ளுக்குக் கொடுக்காமல் மற்றொரு மூலிகைக்கு அதை உணவாகக் கொடுத்து அந்த மூலிகையை நாம் உண்ணுவதினால் ஒரு குற்றமும் வராது. நாம் எதிர்பார்க்கும் பலனும் கிட்டும். அவ்வித மூலிகைகளில் மிக்க சிறந்தவை ; வல்லாரை, கரிசாலை என்னும் கரிசலாங்கண்ணி, வெந்தயம், வெற்றிலை, நெல்லி, வாழை, வெங்காயம் முதலியன. மூலிகைக்கு உணவுகொடுக்கும் முறையைக் கருப்பேற்றும் முறையென்றும் சொல்வர். அந்த முறைகளைக் கீழே குறிப்பிடுவோம்.

1. சேங்கொட்டை கற்பகம் :

சேங்கொட்டை கிலோ இருபது வாங்கி ஓர் பெரிய உரலிலிட்டு இடிக்கவும். ஒன்றிரண்டாக இடித்து எடுத்து ஒரு மண் தொட்டியில் போடவும். பிறகு கோமூத்திரத்தை சேங்கொட்டை முங்கும்வரை ஊற்றி வைக்கவும். அன்றுடம் அதைக் கிளறி விட்டுக்கொண்டே வரவும். சேங்கொட்டை அழுகுவதற்குள் பூமியில் நான்கடி அகலம் நான்கடி நீளமுள்ள இரண்டு பாத்திகள் கொத்தி தயார் செய்து வைத்துக் கொள்ளவும். மேற்சொன்ன செங்கோட்டை கல்கத்தை, அதாவது உரத்தை எடுத்து இரண்டு பாத்திகளிலிட்டு மேலே மணல் கலந்த மண்ணைப்போட்டு மூடவும். நாற்பது நாட்கள் கழிந்த பின்னர் ஒரு பாத்தியில் வல்லாரையோ அல்லது கரிசலாங்கண்ணியோ, அல்லது பொற்றலையோ நட்டு தண்ணீர் ஊற்றிவரவும். அந்தச் செடிக் கொடிகள் வேறூன்றித் துளிர் விட்டபின் அதன் இலைகளைப் பறித்து நாள்தோறும் காலையில் வெறும் வயிற்றில் மூன்று முதல் ஐந்து இலைகள் மென்று தின்று பசும்பால் சாப்பிடவும். மேற்படி மூலிகைகள் முற்றிய பிறகு அவைகளைப் பிடுங்கி மற்றொரு பதனம் செய்துவைத்த பாத்தியில் நடவும். அது துளிர் வந்து இலைகள் முற்றியபிறகு அந்த இலைகளை முன் சொல்லியபடி சாப்பிட்டு வரவும். அதற்குள் காலியான பாத்தியில் சேங்கொட்டை கல்கம் பத்து கிலோ போட்டு மண்ணை புரட்டிக் கொடுத்துவைக்கவும். இப்பொழுது தளிர்ந்திருக்கும் செடிகளைப் பிடுங்கி மேற்படி தயாரான பாத்தியில் நடவும். அது துளிர் விட்டபின் அதன் இலைகளையும் தின்றுவரவும். இப்படி மாற்றி மாற்றிப் பாத்திகளில் மூலிகைகளை நட்டு அந்த இலைகளைச் சாப்பிட்டுவரவும். இதே போல் வெங்காயத்தையும் நட்டு முளைத்து வந்தபிறகு சிறு வெங்காயமாயிருக்கும் பொழுதே எடுத்துப் பருப்புடன் கூட்டி அல்லது வதக்கிச் சாப்பிட்டுவரவும்.

இப்படி மூன்று மாதங்கள் கொண்டால் இருநூறு வருடங்கள் இருப்பானென்றும், ஆறு மாதங்கள் கொண்டால் நரை, திரை மாறுமென்றும் சித்தர்களால் சொல்லப்பட்டுள்ளது. ஒரு வருடங் கொண்டால் தேவ சரீரம் ஆகுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. இதில் நம்பிக்கையுள்ளோர் அப்பலனைப் பெறலாம். நிச்சயமாக ஒன்று மாத்திரம் சொல்லலாம். ஆயுள் உள்ளவரையில் இந்த மூலிகைகள் சாப்பிடுபவன் பிணிகளின்றி ஆரோக்யமாக வாழலாம்.

2. ஆட்டுப் பால் கற்பம் :

கற்ப மூலிகைகளாகச் சிலவற்றை சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவைகளில், நெல்லி, வல்லாரை, பொற்சீந்தில், கரிசாலை, புளியாரை, சிவகரந்தை, நன்னாரி, பேயன் வாழை, குப்பைமேனி, நீலி, பொடுதலை, தும்பை, சிறு செருப்படை, ஈசுரமூலி, கீழா நெல்லி, காக்கட்டான், கருந்துளசி, வில்வம், வேம்பு, தூதுளை, அருகம்புல், ஆகாசகருடன், தேவதாரு, சோதிவிருட்சம். சோதிப்புல், இருப்பவல், குமரி, விஷ்ணுகரந்தை, நாயுருவி, எட்டி, பொன்னாங்காணி, கிரந்தி நாயகம் முதலியன.

நல்லச் சாதிப் பெண் ஆடுகள் இரண்டு வாங்கி மேற்சொன்ன மூலிகைகளில் கூடிய வற்றை மேற்படி ஆடுகளுக்கு உணவாகக் கொடுத்து அதன் பாலைக் கறந்து உடனுக் குடனே ஏழுமுறை துணியில் வடித்து காலை யில் வெறும் வயிற்றில் கால்படி அளவுக்குச் சாப்பிடுதல் வேண்டும். சாப்பிட்ட மூன்று மணி நேரம் வேறு உணவு எதுவும் அருந்து தல் கூடாது.

இப்படி ஒரு வருடம்வரை அருந்தினால் உடலிலுள்ள இருபத்தொரு மேகங்களும் நீங்கி உடல் வன்மை பெறும். எத்தனையோ தனவான்கள் இவ்வித கற்பங்களைக் கொள் ளலாம். ஆனால் அவர்கள் இரவு பகலாய்ப் பணம் ஈட்டுவதும், பதவியை நாடுவதுமாய்க் காலத்தைக் கழித்து மாள்கின்றனர்.

### 3. கடுக்காய் கற்பம் :

செங்கடுக்காயை உடைத்து உள்ளிருக் கும் பருப்பை நீக்கிவிட்டுத் தோலைமாத்திரம் குமரிச் சாற்றில் ஒரு வாரம் ஊறவைத் தெடுத்து உலர்த்தி, பிறகு சுத்தமான தேனில்போட்டு நாற்பது நாள் கழிந்தபிறகு மாலையில் ஒரு காயின் தோலில் பாதியளவு மென்று சாப்பிடவேண்டும். இப்படி ஆயுள் உள்ளவரையில் சாப்பிடலாம். ஒருநாள் மருந்து செலவு ஐந்து பைசாவாகும்.

துண்டுக்கல்லில் மருத்துவம் தெரியாத ஒருவர் யாரோ சாமியார் ஒருவர் சொன்னா ரென்று மேற்படி முறையில் கடுக்காயைத் தின்று கொண்டிருந்த நூற்று முப்பது வருடங்கள் திடகாத்திரமாயும், ஐம்பது வயது தோற் றத்தையும் கொண்ட ஒரு நபரை நான் பார்த்துள்ளேன், இது ஒரு சாதாரண மருந் தாகவிருப்பினும் உடலை இறுக்கும் சக்தி வாய்ந்ததென்பது கீழ்க்கண்ட சித்தர் பாட லில் தெரியும் "காலையில் இஞ்சி கடும் பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் மண்டலம் உண் டால், கோலையூன்றி குறுகி நடப்பவன் கோலைவீசிக் குலுக்கி நடப்பனே."

### 4. நெல்லிக்காய் கற்பம் :

மூலிகைகளைக் கருப்பேற்றும் முறைப் படியே நெல்லிமரத்தைச் சிறிய செடியி லிருந்தே சேங்கோட்டை உரமிட்டு வளர்த் தால் கருநிறமுள்ள காய்கள் காய்க்கும். இதுவே கரு நெல்லி.

இந்த நெல்லிக்காய் கிடைத்தால் சரி. இல்லாவிடின் எங்கும் கிடைக்கும் நெல்லிக் காய்கள் மாசி, பங்குனி மாதங்களில் வாங்கி ஒவ்வொரு காயையும் துணியால் துடைத்து சுத்தம்செய்து வைத்துக்கொள்ளவும். காய் களுக்கேற்ற மண் சாடிகள் வாங்கி வைத்துக் கொண்டு, கரும்பு வெல்லம் தூள் செய்து கொண்டு அந்தத் தூளைச் சாடியில் மூன்று அங்குல உயரத்திற்கிட்டு அதன்மேல் நெல் லிக்காய்களை ஒவ்வொன்றாகப் பரப்பி அதன் மேல் மேற்படி வெல்லத்தை மூன்று அங்குல அளவுவைத்து அதன்மேல் நெல்லிக்காய் களைப் பரப்பவும். இப்படி மாற்றி மாற்றிக் காய்களையும் வெல்லத்தையும் சாடியில் அடைத்து நான்கு அங்குலம் சாடியில் இடம் விட்டு மேல் மூடியிட்டு சீலைசெய்து மூன்று வருடங்கள் பூப்புடம் வைத்து எடுக்க நெல் லிக்காய்களும் வெல்லமும் நீராகிக் கொட் டைகள்மாத்திரம் மிதக்கும். கைபடாமல் கொட்டைகளை நீக்கிவிடவும். இந்த நீர் வெகு காரமாயும் பிராந்தியினுடைய மணமுள்ள தாயு மிருக்கும். மூன்று வருடங்கள் தாம திக்க முடியாதவர்கள் மூன்று மாதங்கள் தானிய புடம் வைத்தெடுத்தால்கூட கார மான அரிஷ்டமாகும்.

இதை காலை, மதி, மாலை ஒரு அவுன்ஸ் எடுத்து இரண்டு அவுன்ஸ் தண்ணீரைக் கலந்து சாப்பிட்டுவர பசிதீபனம், உடல் வன்மை முதலியவை உண்டாகும். பிணிகள் நீங்கி உடல் ஒளிபெறும்.

### 5. வாழைக்காய் கற்பம் :

நூறு வருட வேம்பு மரத்தின் வேர் பட்டை, பூ, காய், இலை. மரப்பட்டைகளை எடுத்து நிழலிலுலர்த்திப் பொடிசெய்து ஒரு புதிய மண் பானையில் பாதி சூரணமிட்டு அமுத்தி அதன்மேல் இரண்டு மூன்று முக் கால் அளவு பழுத்த வாழைப் பழங்களை வைத்து மேலும் சூரணத்தையிட்டு அமுத்தி மேல் மூடியிட்டு மண் சீலைசெய்து வைக்க வும். நாற்பத்தெட்டு நாட்கள் கழித்து பார்க்க பழம் காயாகும். கருப்பு நிறமாக இருக்கும். இந்த காயை வெட்டி நாள் ஒன் றுக்கு எட்டில் ஒரு பங்குவீதம் தேன், நெய் கூட்டிச் சாப்பிடவும். ஒரு காய் சாப்பிட்ட ஒரு வாரம் கழித்து மற்றொரு காயைச் சாப் பிடவேண்டும். இப்படி வாரத்துக்கொரு

காய் ஆறுமாதங்கொள்ள பழுத்த உடல் சிவந்து காயாகும். தேகம் பொன்மேனி யாகும். இருநூறு வருடங்களிருப்பான்.

6. வேம்பு சூரண கற்பம் :

மேற்சொன்ன சூரணத்தை பிரதி தினமும் கிழாயமிட்டோ அல்லது சூரண மாகவோ வெறுகடி (மூன்று விரல்களால் எடுக்கும் அளவு) பசும்பாலில் கொள்ள உடல் பழுக்காது. எந்த வயதில் சாப்பிடத் தொடங்குகிறோமோ அந்த வயது தோற்றம் மாறாமல் பல வருடங்கள்வரை வாழலாம்.

இக்கற்பம் நாற்பது வருடங்களாக பிரதி காலையிலும் பாலில் சாப்பிட்டுவரும் தொண் ணூற்றிரண்டு வயதுள்ள ஒரு சாதாரண குடிமகனைப் பார்க்க நேர்ந்தது. அவர் நான் உதவி மாவட்ட நீதிபதியாக விருந்த காலத் தில் நீதி மன்றத்துக்கு சாட்சியாக வந்தார். அவர் தன் வயது 92 என்று சொன்னவுடன் எனக்கு பிரமை உண்டாயிற்று. அவருடைய இரு தம்பிமார்களும் நீதி மன்றத்துக்கு வந் திருந்தனர். அவர்களைப் பார்த்ததும் என் வியப்பு பன்மடங்கு அதிகமாகிவிட்டது. அவர்கள் உடல் தளர்ந்து, பல்லெல்லாம் கொட்டி, சருமம் சுருங்கி கூன்விழுந்து காணப்பட்டனர். இந்த 92 வயது பெரிய வரோ அவர்களுடைய மகன்போல் தோற்ற மளித்தார். அவருடைய உடல் தசைகள், நரம்புகள் முறுக்கேறியிருந்தன. அவருடைய பழக்க வழக்கங்களை அறிய எனக்கு அவா உண்டாயிற்று. அவர் கற்பம் சாப்பிடுகிறவ ரென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. ஏனெனில் அவர் கல்வியில்லாத கிராம விவ சாயி.

அவரை விசாரித்தேன். தான் முதிர்ந்த வேம்பு மரத்தின் பட்டைத் தூளை கியாழம் செய்து காலையில் சர்க்கரை கூட்டி 40 வரு டங்களாய் சாப்பிட்டு வருவதாகவும், பகல் நேரத்தில் சாதாரண சைவ உணவு அருந்து வதாகவும், இரவில் மறுபடியும் இட்டலி, பசும்பால் சாப்பிட்டுவருவதாகவும், சொன் ஞர். இக்கற்பத்தின் பலனை அறிய வேறு சாட்சி என்ன வேண்டும்.

ஆயினும் இப்படிப்பட்ட மூலிகை கற்பங் கள் சாப்பிடுவதற்குமுன் மேற்சொன்ன சேங்கொட்டை கற்பம் 48 நாட்களாவது சாப்பிடுதல் முக்கியம்.

கற்பம் சாப்பிடும் காலத்தில் உணவு பத்தியம் :

பச்சரிசி, பயித்தம்பருப்பு, மிளகு, பசு நெய், பசும்பால், பசுந்தயிர். பசுவெண்ணை, வேக வைத்த எல்லாவித காய்கறிகள் மாத்தி ரந்தான் சாப்பிடவேண்டும். தித்திப்பு பண் டங்கள் சாப்பிடலாம்.

உப்பு, மிளகாய், புளி, புகையிலை, எண்ணை கள். தாளிப்பு முதலியவை உபயோகிக்கக் கூடாது.

பெண் சேர்க்கை அறவே நீக்க வேண்டும். மாமிச பதார்த்தங்கள் கூடாது. வேகமாகக் காற்று வீசும் இடத்தில் இருத்தல் கூடாது. கடும் வெயில் உடலில் படக்கூடாது. இந்த நிபந்தனைகளை அனுசரித்து சேங்கொட்டை கற்பம், ஆட்டுப்பால் கற்பம் ஒருவன் கொண்டானுல் நூல்களில் சொல்லிய பலன்களை அனுபவிக்கலாம்.

இவைகளைக் கடைபிடிக்க முடியாவிடி னும் குற்றமில்லை. முடிந்த வரையில் புளி, மாமிசம், எண்ணைகள் நீக்கி மேற்படி கற்பங் கள் கொண்டால் கால் பங்கு பலனாவது பெறலாமென்பது உறுதி.

# தமிழ் மருத்துவ முறையில் (சித்தா) ஆக்கினை சுரப்பியின் தொழிலும், செயலும்

(பட்டாபிராமன், ப. கல்யாணம்)

தமிழ் மருத்துவ ஏடுகளில், சிலவற்றை ஊன்றி நோக்கினால், பல புதிர்கள் தென்படுகின்றன. தற்கால மேலைநாட்டு மருத்துவ விற்பன்னர்கள், வகுத்திருக்கும், உடற்கூறு, உடல் இயக்கம், ஆகியவற்றை, ஓரிடத்தில், ஒட்டியும், பிரிதோரிடத்தில் வேறுபட்டும், கிடக்கும் கருத்துக்கள் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரியவையே.

உதாரணமாக, சித்த, மருத்துவ முறையெனும் பழந்தமிழ் மருத்துவ முறையில், உடல் இயக்கம் (Physiology)பற்றி கூறியவை மேலைநாட்டு முறைக்கு முற்றிலும் மாறுபட்டிருப்பினும், ஊன்றி நோக்கும்பொழுது சில ஒற்றுமைகளும் தோன்றுகின்றன. பிற சில இடங்களில், ஒற்றுமை மட்டுமின்றி, மேலைநாட்டாரின் தற்கால, விஞ்ஞான ரீதியான கண்டு பிடிப்புகளுக்கு அப்பாலும் கூட, கற்பனைபோல வெகுதூரம் முன்னேறிய தத்துவங்கள் காணக்கிடக்கின்றன. மேநாட்டார் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட, வளி, தீ, நீர் (வாத, பித்த, கப) தத்துவமும், வாயுக்களை பத்தாகப் பிரித்து உடற்தொழிலை நடத்தும் தத்துவமும் அன்றி, ஆறு ஆதாரங்கள் என ஓர் அத்தியாயம் காணக் கிடக்கிறது. மனித உடலில், ஆறு இடங்கள், ஆதாரம் எனப் பெயரிட்டிருத்தலிலிருந்து இவைகளின் முக்கியத்தை நாம் உணரலாம். ஆதாரம் எனில், அடிப்படையென்றும், எல்லாவற்றிற்கும், ஆதியான மூலப்பொருள் என்றும் பொருள் கொள்ளலாம்.

ஓர் வீட்டிற்கு ஆதாரம், அதன் நாற்புரமுள்ள சுவர்களும், மேல் கூரையைத் தாங்கும் இதரக் கட்டுக் கோப்புகளும்.

நமது பருவுடலுக்கு ஆதாரம் ஆறு இடங்கள் என வகுத்திருக்கிறார்கள்.

உடலின் இதர உறுப்புகளான கையும், காலும், எத்தகைய தொழில் புரியினும் ஆறு ஆதாரங்கள் இன்றி உயிர் இல்லை. எனப் பொருள் கொள்ளுமாறு, ஆதாரம் என பெயரிட்டிருக்கிறார்கள். உடற்கூற்றில் அந்த ஆறு ஆதாரங்களில் இடங்களும், மேலைநாட்டார் முறைப்படி அந்த இடங்களுக்கு அவர்கள் இட்டிருக்கும் பெயரும், ஒருவாறு ஒத்துவருவதை நோக்குங்கள்.

| எண் | மேலைமருத்துவமுறைப்பெயர்கள் | இடம் | தமிழ் பெயர்கள் |
|---|---|---|---|
| (1) | Pitutary gland | புருவநடு | ஆக்கினை |
| (2) | Thyroid etc. | கழுத்து | விசுத்தி |
| (3) | Heart | மார்பு | அனாகதம் |
| (4) | Adrenals | தொப்புள் | மனிபூரம் |
| (5) | Glomus Coccygium | அடி வயிறு | சுவாதிட்டானம் |
| (6) | Perenniumand testes etc. | மூலம் | மூலாதாரம் |

இந்த ஆறு ஆதாரங்கள் எனப்படுவனபற்றி, யாரோ ஒரு ஆசிரியர்மட்டும் சொல்லியிருக்கிறார் என என்ன வேண்டுவதில்லை. அனேகமாக, மருத்துவ முறையில் தத்துவம் பற்றி எழுதிய அத்துணை சித்தர்களும், இந்த ஆறு ஆதாரங்களைப்பற்றியும், குறுக்கி

யேனும், நீட்டியேனும் ஒருவரை கருத்துக் கொண்டிருத்தலே, அவர்கள் நூலினின்றும் அறியலாம். ஆதலின் இவ்வகைக் கொள்கை உடையோர், இதை சந்தேகமற ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவு.

மேனாட்டார் முறைப்படி, மருத்துவம் பயின்றோர், இந்த ஆறும், உடற்கூற்றில் எவ்வளவு முக்கியமான என்பதை உணர்ந்திருப்பர். ஆறில் மூன்று இடங்கள் முறையே 1, 2, 4, பிட்டுட்ரின், தைராயிடு, அட்ரினல் ஆகியவை இயற்கை சுரப்பிகள். மிக மிக, நுண்ணிய கலவை கொண்டதும், உடல், இயக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாததுமான நீரை இவை சுரந்து இரத்தத்துடன் கலக்கின்ற என மேனாட்டார் முடிவு எடுத்திருக்கிறார்கள். 3-வதாகிய இருதயம் சுரப்பி அல்லவாயினும், உடலின் முக்கிய உறுப்பு, இருதயம் இல்லையேல் அல்லது தொழில் செய்ய மறுத்தால், மனிதன் இல்லை. மனித உடல்தான் கிடைக்கும். 5-ம், 6-ம் ஆகிய இடங்கள் மேலைநாட்டார் நூல்படி முக்கியமல்ல என அவர்கள் கருத்துக்கொண்டிருந்தாலும், தினம் தினம் வளரும் ஆராய்ச்சியில், நாளை எதுவும் கிடைக்கலாம்.

ஆனல், பண்டைய சித்த, மருத்துவ மரபின்படி இந்த ஆறு இடங்களையும் உடலின் அடிப்படைத் தேவையான ஆறு ஆதாரங்களாகவே கருத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. ஐந்து பூதங்களாலான உலகையும் வெற்றி பெறும் இரகசியம் இந்த ஆதாரங்களில் இருக்கிறதாக கண்டிருக்கிறார்கள். நம் தமிழ் நாட்டு மருத்துவ விஞ்ஞானிகள். உடற்கூற்றோடு மட்டும் தங்கள் அலுவலை நிறுத்திக்கொள்ளும் மேலைநாட்டு நூலறிஞர்கள் இதை இன்றுவரை ஒப்புக்கொள்ளவில்லை. தத்துவ ரீதியில் இதை நிரூபிக்க ஒன்றிலக்கிமிட்ட பிட்யூட்ரினைமட்டும் (ஆக்கினை சுரப்பி) இக்கட்டுரையில் ஆராய்வோம்.

மேனாட்டார் முறையில், இந்த சுரப்பி, மூளைக்கு அடிப்பாகத்தில் இருக்கிறது. தமிழ் மருத்துவ ஆசிரியர்கள் கருத்துப்படியும், இதன் இருப்பிடம் "புருவநடு" என குறிக்கப்பட்டிருக்கிறது. மேனாட்டார் ஆராய்ச்சிக்காக உள்ள பல பொருள்களில் முக்கியமானதாக இதையும் கொண்டிருக்கிறார்கள். இன்றும், இந்திய நாடு மட்டுமின்றி, ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும், உடற்கூற்றிலும், உடல் இயக்கத்திலும், ஆராய்ச்சிக்கான பொருளாக இது கொள்ளப்பட்டிருக்கிறது. மேல்நாட்டு முறையில் இதைப்பற்றி முடிவு எடுத்தவை இவ்வுளவுதான்.

(1) இந்த சுரப்பி, உடலுக்கு இன்றியமையாததொன்றல்ல. ஏனெனில், இப்பகுதியினை அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்ட பிராணிகள் உயிருடனே இருக்கின்றன.

(2) இச்சுரப்பி தரும் நீர் பலவகைப்படுகின்றன. இச்சுரப்பியின் நீர்கள் :

(அ) உடலை வளரச்செய்யும் சுரப்பிநீர் (Growth hormore)

(ஆ) ஆண், பெண், இன உணர்ச்சிக்கு ஆதாரமான சுரப்பிகளை இருபாலாரின் உடலிலும் ஊக்குவிக்கும் சுரப்பி நீர். (Gonodo tropic hormore)

(இ) தைராயிடு, அட்ரினல் ஆகிய இதர சுரப்பிகளை, ஊக்குவித்து அதிகம் சுரக்க தூண்டும் ஓர் வகை நீர் (in fluening the aclivity of other glands.)

(ஈ) பெண் இனத்தவரின் பால் சுரக்கும் மார்புச் சுரப்பிகளை ஊக்குவிக்கும் ஓர் சுரப்பி நீர். (Mammotropic hormone)

(உ) ஊன் சத்து, கொழுப்பு சத்து, சர்க்கரை சத்து, ஆகியவற்றை, உடல் அமைப்பில் அதிகரிக்கச் செய்கிறது. (influening carbo-hydrates and fat metabolism)

(ஊ) இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும் ஓர் நீர். (Vaso Prassim)

(எ) கருப்பையை சுருங்கச் செய்யும் தன்மையைப் பெற்றுள்ள நீர் (Oxytocin)

(ஏ) சிறு-நீர் கழிவிலுள்ள நீர் பகுதியைக் குறைக்கும் சக்தியுடைய ஓர் நீர். (Anti dieuretic hormore.)

(ஓ) இவையன்றி இச்சுரப்பியின் நடுவிலுள்ள ஓர் பகுதியினின்றும் ஓர் நீர் கிடைக்கிறது. (Melanophorine) இது நிற மாற்றத்தை அடைய உதவுகிறது.

ஓர் பிராணி தன் கண்ணல் காணும் நிறத்தின் தன்மையால் இச்சுரப்பியின் இப் பகுதி அந்நீரை உற்பத்தி செய்து, கண்ணல் கண்ட நிறத்தையே அப்பிராணியின் உடலும் அடையச் செய்து விடுகிறது. (பச்சோந்தி)

இவை அனைத்தும் உடல் இயக்கத்தில் ஓர் சுரப்பியின் பங்கு என மேலை நாட்டு மருத்துவ விஞ்ஞானிகள் முடிவு பெற்றிருக்கிறார்கள்.

தமிழ் மருத்துவ நூலோர் இந்த பிரச்னையை அணுகிய முறையும், அவர்கள் கொள்கை களும், மேற்குறித்த மேலைநாட்டு தத்துவத்திற்கு பலபடி உயர்ந்ததாகவே இருக்கிறது. இன்றைய மருத்துவ ஆராய்ச்சிக் கூடங்களிலுள்ள வசதிகளும், பொறிகளும், உடல் கூற்றை அறிய, இறந்த உடல்களும். ஏனைய பிற சௌகரியங்களும், எந்த நாளிலும் தமிழ்- சித்த மருத்துவ ஆசிரியர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும், அந்த ஆக்கினை எனும் ஆதாரத்தின் இருப்பிடம் சந்தேகமற தெளிவாகக் காணக்கிடக்கிறது. (Anatomical marking.)

"புருவமையம் ஆக்கினையேயாகும்" என வைத்திய சதகமும்,

"உச்சிக்குக் கீழே, உண்ணுவுக்கு மேல்
நிதம் வைத்த விளக்கு............"

என சித்தர் வாலைக் கும்மியிலும்,

"கண்ணுக்கு மூக்கடியோ
காதோரம் மத்திபத்தில்
உண்ணுக்கு மெலேறி............"

என அழுகவி சித்தரும், இந்த ஆதாரத்தில் இருப்பிடத்தை (Anatomical marking) நிச்ச யித்துவிட்டனர்.

எல்லா நூற்களிலும் உள்ளவற்றை விரிவாக இங்கு எழுத இயலாது. மேற்குறித்து மூன்று தமிழ் மருத்துவ ஏடுகளின் குறிப்புகளிலிருந்து அவர்கள் குறிப்பிடுவது தற்கால விஞ்ஞான வழக்கில் உள்ள (Pitutary gland) தான் என்பது நிரூபணமாகி விடுகிறது.

இனி அதன் தொழிலும், செயலும் பற்றி பார்ப்போம்.

தற்கால ரசாயன சாத்திரத்தில் பொருளை சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் குறிப்புமொழி (பரிபாஷை) போல, பண்டைய நூலோரும் இந்த தமிழ் ரசாயன, மருத்துவ முறைகளை பரிபாஷை எனும் குறிப்புகளாலேயே ஆக்கிவிட்டனர். அவற்றில் விரிவுரை கால வெள்ளத்தில் அழித்தமையின், பொருள் விளக்கத்தில் தவறுகள் நேர்ந்துவிட்டன.

"மரணமற்ற பேருவாழ்வு" (Longerity) எனும் ஒன்றை தேடித்தான் சித்த மருத்துவ விஞ்ஞானமே வளர்ந்தது என்பதுதான் சரித்திரம்.

நரை, திரை, மூப்பு, மரணம் ஆகியவற்றை வென்று என்றும் இளமையுடன் இருத் தலை குறிக்கோளாகக் கொண்டதுதான் சித்த மருத்துவ ஆசிரியர்களின் கடைசி ஆசை !!

அதை யோக முறைகளிலும் கற்ப மருந்து உட்கொள்ளலாலும் அடைந்து உயர்ந்த வர்கள்தான் சித்தர்கள்.

"உருத்ரிரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவை
கருத்தினு விருத்தியே கபால மேற்ற வல்லீரேல் :

உடலெங்கும் பல நாடிகள் என்று குறிப்பிடுகிறார்கள். அந்த நாடிகளில் ஓடுவது குருதி மட்டுமல்ல. அதை உந்திச் செல்வது 'வாயு' எனக் கொள்கிறார்கள். அவ்வாறு ஓடும் வாயுவை 'உன் மனோசக்தியினால் இருத்தி, ஆறு ஆதாரங்களில் அடி ஆதாரமான

மூலாதாரத்திலிருந்து படிப்படியாக ஏற்றி, கடைசியாக, கபாலம் என்ற சிரசில் உள்ள மேல் ஆதாரமான ஆக்கினையை செயல்படுத்த இயன்ருல்' என்று ஓர் சாதனை முறையை சொல்கிருர் ஓர் சுத்த விஞ்ஞானி. இந்த சாதனை முறை பரிபாஷையில், சொல்லப்பட்டிருக்கிறது.

வாயு எங்கே இருக்கிறது? எப்படி அதைக்கட்டி ஆ-ளுவது? எங்ஙனம் அதை மேலேற்றுவது? எப்படி ஆக்கினை என்ற (Pituitary gland) இந்த வாயுவைக்கொண்டு செயல் படுத்தத் தூண்டுவது. இவை அனைத்தும் பொருள் புரியாவண்ணம் அமைந்திருக்கிறது.

அவர் கூறியபடி வாயுவை கபாலத்தில் ஏற்றினுல் என்ன நடக்கும் எனக் கேட்கிறீர்களா? இதோ அவர் விடை!

உலகிலுள்ள அனைத்து விஞ்ஞான ஆராய்ச்சியாலும் சிறிதும் வெற்றி பெற முடியாத ஒன்றை வெற்றி பெற்று விடலாம் என்கிருர்.

"கபாலம் ஏற்ற வல்லீரேல் விருத்தரும் பாலராவர்;

மேனியும் சிவந்திடும்."

முதுமையும், உடலிலுள்ள நரை, திரைகளும் மாறி ஓர் கிழவன் குமரனுக ஆக முடியும் என்கிருர். அவ்வாருனல் அவனுக்கு மரணமேது?

அவ்வாருயின் முதுமை, நரை, தோல் மடிப்பு, ஆகியவற்றை மாற்றி பூரண இளமையை தரவல்ல சக்தியுடைய ஓர் சுரப்பியா Pituitary body?

இதைவிட வேறு முடிவு ஏது? உடலெங்கும் பரவி அவனை இளைஞனுகவே ஆயிரம் ஆண்டுகள் வைத்திருக்க முடியுமானுல், அவனுக்கு பசியும் உணவும் வேண்டுவன அல்லவே!

அமுதம் என கூறப்படும் மருந்து மரணத்தை வெல்லும் என நம் பழம்பெரும் காப்பியங்களில் படித்திருக்கிறேம். அந்த அமுதத்தை ஊற்று நீர்போல், சுரந்து கொடுக்க ஆக்கினை என்ற Pituitary bodyயை இயங்கச் செய்தல் என்ற கலை, ஒருவர் இருவர் அல்ல பல சித்தர்களால் பலப்பலமுறை அழுத்தம் திருத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது.

"உண்ணுவுக்கு மேல், நிதம் வைத்த விளக்கு எரியுதடி!<br>
அவியாமல் எரியுது ஞானப்பெண்ணே! (வாலைக்கும்மி)

அவியாமல், அணையாமல், மரணத்தின் பிடியில் சிக்காமல் ஆக்கிணையிலிட்ட விளக்கு, ஏற்றிய தீபம் எரிகிறது என்கிருர்.

மரணத்தை வென்றுகிவிட்டது என்பதுதான் பொருள்!

"காதோரம் மத்திபத்தில் உண்ணுக்கு மேலேறி<br>
உன்புதுமை மெத்த உண்டு"

என்கிருர் மற்றெருவர். எனவே, மரணத்தை வெல்லும் அமுத நீர் மட்டுமல்ல இன்னும் ஏதோ பல சாதனைகளும் உண்டுபோல் தோன்றுகிறதல்லவா?

"அடிமூல மேலாதாரம் சென்று an onward march from Perennium to Pitutary gland)... அங்கே பூரகமும் பண்ணி பதிவான கும்பகத்தில் நின்ருயானுல்"......
எத்திசையிலுற்ற அதிசயங்களெல்லாம் ஏகாந்தமாக நீ அறிந்து சொள்வாய்." என்கிருர் "அமுத கலைஞானம் 1200" என்ற பிரிதொரு நூலில்.

மேற்குறித்த செய்யுள்படி மரணத்தை வெல்லுதல் அன்றி இன்னும் பலவும் உண்டு என பெறப்படுகிறது.

நினைக்கவே ஐம்புலனும் ஒடுங்கிப் போகும்;<br>
நோய், மூப்பு, சாவு, நரை, திரையும் போகும்......<br>
காய சித்தி (conquering death)<br>
வாத சுத்தி (Alchemy) காணும் என்கிருர் போகர். (7000 பக்கம்=12)

இவ்வாறு உடலின், ஆக்கினை மற்றும் இதர ஆதாரங்களை தட்டி எழுப்பி அதனின் றும், சுரக்கும் அமுதத்தைப் பெற, மருந்து முறைகள் பல கண்டு பிடித்தார்கள். யோக சாதனைகள் சிலவற்றை வகுத்தார்கள். இராமலிங்க சுவாமிகள் போன்றோர் மருந்து முறை களையும் யோகசாதனைகளையும் கைக்கொண்டனர். ஆக்கியோன் பெயர் தெரியாத ஓர் ஏட்டுச் சுவடியில் இல்லற கற்பம் என்று ஒன்று குறிக்கப்பட்டிருக்கிறது. இல்லறத்தி லிருந்துகொண்டே கற்பம் எனும் மரண ஒழிப்பு மருந்தை 12 மாதம் உண்ணுவோரின் உடலின் இயக்க மாறுதலை (Physiological changes step by step every month) வரிசைப்படுத்தி எழுதப்பட்டிருக்கிறது.

(ஒரு) மாதம் சென்றால் உடல்பிணி எல்லாம் தீரும்
இரண்டினில் நாடிய பசியும் தீரும்
மூன்றும் சென்றால் துர்கந்தம் அனைத்தும் தீரும்
நான்காம் மாதம் துலங்கும் மேனி
ஐந்தும் சென்றால் சோம்புதல் இல்லை
ஆறு மாதம் சென்றிடில் மதனை வெல்லும்
வளம்பெற ஏழினில் பரவிய ஒளி உண்டாகும்
விளங்கு மாதம் எட்டில் விந்துவும் மணியதாகும்
ஒன்பதாம் மாதம் மல்கிய ஒளி உண்டாகும்
பத்தும் சென்றால் தோன்றுமே மறந்ததெல்லாம்
பணிவுறு பதினொன்றில் பறந்திடும் மலையில் வாசி
பன்னிரெண்டில் அகிலமும் தோன்ற வாழ்வான்

ஆக்கினையில் வாயு தூண்டலுக்குப் பிறகு படிப்படியாக, அங்கும் உடலிலும் தோன் றும் மாறுதல் கவனத்திற்குரியது.

ஆக்கினையைத் தொட 9ம் மாதம்வரை செல்கிறது. பின் அங்கு மங்கிய ஒளி தோன்றி' சுரப்பியின் சுரப்பு ஆரம்பித்தலைக் குறிக்கிறது.

பத்தாம் மாதத்தில் முற்பிறவியின் ஞாபகங்கள் முதல், வருங்கால நிகழ்ச்சிகள் வரை அறிந்துகொள்ளும் நிலையை அடைகிறான்.

பதினொன்றில் அந்த ஆக்கினை ஆதாரத்தின் முழு ஊற்றும் உடலுக்குக் கிடைத்து

12ல் பரிபூரணத் தன்மையை அடைந்து, உலகம் உணர வாழ்வான் என அச்சுவடியில் குறிப்பிட்டிருத்தலை நோக்கின், சித்த கற்ப மருந்துகள் எங்ஙனம் உடலின் ஆதாரத்தை குறிப்பாக ஆக்கினையைத் தொட்டு, தூண்டி, சுரக்கச் செய்து மனிதனை மரணத்தினின்றும் காக்கிறது. என்பது தத்துவ ரீதியாக நிரூபிக்கப்படுகிறது.

எல்லா நூல்களினின்றும் ஆதாரங்கள் எல்லாவற்றையும் எடுத்து இங்கு காட்டுவது இயலாததொன்று.

ஆதலின் உலகம் இன்றுவரை கண்டறியாத முறையில், சென்ற பல ஆண்டுகளாக உணவு, உறக்கம், நீர், மலம், எதுவும் இன்றி யோகத்தில் இருப்பவர்கள் இந்நாட்டில் இமயம் முதல் தென்கோடிவரை பலர் உண்டு. கடைசியாகக் கிடைத்த தகவல்படி ஆந்திர தேசத்திலுள்ள பாலயோகி என்பாரும் இவ்வகையைச் சேர்ந்தவரே.

தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அப்பால்போய், உடலில் அமிர்தத்தை ஊற்று போல் சுரந்து, உடலை வளர்த்து, மரணத்தினின்றும் மீட்டு முக்காலமும் உணரச் செய்து, விண்ணில் சாடுமாறு, உடலை இலேசாக்கித் தரும் ஊற்றுக்கண்களை உடையது Pituitary gland என்ற உண்மை உலகறிய வேண்டுமானால் மேநாட்டு மருத்துவமுறை ஆராய்ச்சி யாளருடன் தமிழ் முறை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கையிலும் ஈண்டு குறிப்பிட்ட Pitutary gland ஆராய்ச்சியும், இதர சுரப்பிகளின் ஆராய்ச்சியும் ஒப்படைக்கப்பட வேண்டும் என அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும்.

# "தமிழகமும் சித்த வைத்தியமும்"

Dr. M. P. தங்கவேல், R.I.M.P.
(யாக்கோப்பு மருத்துவ நிலையம், பழநி, மதுரை மாவட்டம்.)

தமிழ்நாடு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சகல வகைகளிலும் சிறந்த நன்னாடு களில் ஒன்றாக இருந்து இருக்கிறது. அது சமயம் சித்த வைத்தியமும் சிறந்தோங்கியது. வைத்தியம் என்றும், மருத்துவம் என்றும் சொல்லப்படும் சொற்கள், மக்களின் நோயை நீக்கும் பணியைக் குறிக்கும் பெயராக வைத்து வழங்கி வந்தனர்.

மக்களின் நோயை நீக்கும் முறையை உலகில் முதலில் கண்டுபிடித்தவர்கள், தமிழர் களே. மனிதன் நோய்வாய்ப்பட்டால் அவனையும், அவனது உடலையும் பரிசீலித்து நோய் இன்னதெனக் கண்டு, அதனை நீக்குவதற்குரிய மருந்துகளைத் தயாரித்துக் கொடுத்து குண மாக்கிய மருத்துவப் பெரியார்கள், முற்றும் துறந்த முனிவர்களாகவும், முக்காலத்தையும் உணர்ந்த மேதைகளாகவும் இருந்ததால் அக்காலத்தில் அவர்களுக்குச் "சித்தர்"களெனப் பெயர் வரலாயிற்று.

அத்தன்மை பெற்ற சித்தர்கள் வைத்திய கலையிலும், வான சாஸ்திரத்திலும், வல்லு னர்களாக இருந்ததோடு மாபெரும் விஞ்ஞானிகளாகவும் திகழ்ந்து செயற்கரிய காரியங் களையும் செய்துள்ளார்கள். இச்சித்தர்கள் எண்ணிக்கையில் பதினெண்பராக இருந்து, ஒவ்வொருவரும் தாங்கள் கண்ட உண்மைகளைத் தங்களின் பெயரில் பல நூல்களை வடித்து மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். இம்மகா புருடர்களான சித்தர்களால் ஆக்கப்பட்ட சித்த வைத்திய நூல்களில் அடிப்படைத் தத்துவம் காப்பு, நீக்கம், நிறைப்பு என மூன்று முக்கிய குறிக்கோள் கொண்டதாகும். "காப்பு"யென்றால் உடலில் நோய் வராமல் காப்பது; "நீக்கம்" என்பது, மக்களிடையே வந்த நோயை நன்கு பரிசீலித்து, அதற்குரிய மருந்தைக் கொடுத்து நோயை நீக்குவது; "நிறைப்பு" என்றால் உடலில் குறைந்த சத்துக்களை நிரப்பி தேகம் வலுவடையச் செய்வதாகும்,

சித்தர்கள் ஆத்ம சக்தியைப் பெற்றிருந்தார்கள். மேலும், இப்புவியில் நெடுநாள் வாழ எண்ணி, "கல்பம்" எனச் சொல்லப்படும் மூலிகைகளையும், மருந்துகளையும் முறைப் படி உண்டு, உடல் உரம் பெற்று, மூச்சடக்கும் பயிற்சி செய்து, சித்திகள் அடைந்து, சித்தர்களாகி, தங்கள் வாழ்நாளைப் பெருக்கிக்கொண்டார்கள். என்பதை இவர்கள் நூல் வழியாக அறிகிறோம். தங்கள் தேகம் நீண்ட நாட்கள் இருக்கும்படியான நிலையைப்பெற்ற சித்தர்களில் 18 சித்தர்கள் என்று மட்டும் தனித்துச் சொல்வதற்குக் காரணம் யாதென ஆராய்ந்தால், அக்காலத்திலே அவர்களுக்குள் ஓர் சங்கத்தை ஏற்படுத்தி, அச்சங்கத்தில் செயற்குழுவினராக 18 பேர்கள் இருந்ததாக அறிய வருகிறது. அதனால்தான் 18 சித்தர்கள் என்று கூறுகின்றோம். இதற்குச் சான்றுகள் சித்தர்கள் நூல்களிலுள்ள "சித்தர் வணக் கம்" எனக் கூறியுள்ள பாடல்களேயாகும். ஒரு சித்தரின் நூலைத் தொடர்ந்து படித்தால், குறித்த ஒரு பொருளிற்கு விளக்கம் கூறிக்கொண்டே போய் வேறு சித்தர்களில் பெயரை யும், அவர் தம் நூலையும் "பார்" எனக் கூறியுள்ளார்கள். ஆகவே, சித்தர்கள் நூல்களைத் தொகுத்துப் பார்ப்போமானால், சட்ட மன்றத்தில் வாதம் - பிரதிவாதம் செய்து எவ்வாறு சட்டம் இயற்றப்படுகின்றதோ அதுபோல் சித்தர்களால் ஆக்கப்பட்ட சித்த நூல்களும் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் அறிகிறோம். சித்தர்கள் பெயர்கள்: 1. அகஸ் தியர், 2. திருமூலர், 3. காலங்கி, 4. போகர், 5. புலிப்பாணி, 6. சட்டமுனி, 7. இராமதேவர், 8. கமலமுனி, 9. மச்சமுனி, 10. உரோமரிஷி, 11. கருவூரார், 12. இடைக்காட்டார், 13. சுந்த ரானந்தர், 14. அகப்பைச் சித்தர், 15. பாம்பாட்டிச் சித்தர், 16. தேரையர், 17. யூகிமுனி,

18. யாகோப்பு. இவர்களில் பதினெட்டாவது காணப்படும் "யாகோப்பு" எனப்படும் முகம் மதிய பெயருடைய சித்தர், ஏழாவது காணப்படும் இராமதேவர் என்றும், மேற்படியார் மெக்கா நகர் சென்று. அநேக ஆண்டுகள் தங்கி, "யாகோப்பு" எனப் பெயர் பெற்று, தமிழகம் திரும்பினார் என்று தெரிகிறது.

மேலே கண்ட சித்தர்கள் அன்னியில், உரோமாபுரியில் இருந்து "பாதர் பெஸ்கி" என்ற பெரியார் தமிழகம் வந்து, பல ஆண்டுகள் தங்கித் தமிழை நன்கு கற்றறிந்து தன் பெயரை "வீரமாமுனிவர்"யென மாற்றியதோடு, நசகாண்டம், சூப்புச்சூத்திரம், வைத்திய காவியம் போன்ற பெரிய நூல்களையும் ஆக்கியுள்ளார். மேலும், திருமூலர் திருமந்திரம் 8000 என்ற அரிய நூல், அனைவருக்கும் தெரிந்திருக்கும். அதில், "வைத்தியம் எதற்காக?" கேள்வியை எழுப்பி, பதிலையும் பாடலாகத் தந்துள்ளார்கள் :

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள்கண்டேன்
உடம்புளே உத்தமன் கோவில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகிறேன்—"திருமூலர்"

நோய் என்ற பிணி அணுகாமல் உடம்பைக் காப்பதற்காகத்தான் வைத்தியம் தேவை. மேலும், கற்ப சாதனைகள் செய்தும், கற்பம் என்னும் மருந்துகளைச் சாப்பிட்டு, உடல் உரம் பெற்று எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் திடத்துடன் இருந்து இருக்கிறார்கள்.

காலமென்னும் கொடிதான கடும்பகையை
கற்பமென்னும் வாளிறை கடிந்துவிட்டோம்
சாலப் பிறபிறப்பினை நாம்கடந்தோம்
தர்பரங் கண்டோமென்று ஆடாய்பாம்பே.

"கற்பம் என்பதை அழகாக விளக்கியுள்ளார். பாம்பாட்டிச் சித்தர். மேலும் உலகப் பொது மறையைத் தந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர், திருக்குறளில் "மருந்து"யென ஒரு அதிகாரத்தைத் தொடங்கி, "மருந்து என்றால் என்ன? ஏன் மருந்து வேண்டும்? மருந்து இல்லாமல் எப்படி வாழலாம்? வியாதி வருவது எப்படி? அதைத் தடுப்பது எவ்விதம்?" என்பதைப் பத்துக் குறளில் இரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

"மிகினும் குறையினும் நோய் செயும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

வள்ளுவர் காலத்திற்கு முன்னதாகவே தமிழ்நாட்டில் சித்த வைத்தியம் தழைத்தோங்கி யதை அறிகிறோம். "ஞானவெட்டியான்" யென்ற நூலில் வைத்தியத்தை விளக்கியுள்ளார், வள்ளுவர். சித்த வைத்தியம் முத்தோட அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது வாத, பித்த, கபம் என்ற மூன்று நாடிகளின் விகர்ப்பங்களாலே நோய் தோன்றுகிறது. இதனால் தான் நாடிப் பரிச்சையை நன்கு கற்றறிந்திருக்க வேண்டும் வைத்தியர்கள்.

நோய் நாடி நோய்முதல் நாடி—அதுதணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்.

ஆண்டவன் படைப்பில் அற்புதம், விசித்திரம் நிறைந்த படைப்பு மனித உடல், இதை "அஸ்வத்மரம்", "அச்சுவத்மரம்" தலைகீழாய் வளரும் விருச்சம் என்று திட்டமாகச் சொன்னார்கள். மரமானது வேரிலிருந்து மரம், கிளை, கொம்பு, இலை முதலியவைகளாகவும் மேல் நோக்கி வளருகின்றன. மனித உடலோ மேலே காணப்படும் தலையிலுள்ள மூளையை வேராகக் கொண்டு வளர்வதால், வேரிலிருந்து கை, கால், சாகைகள், உடல் முதலிய உறுப்புக்கள் கீழ் நோக்கி வளருகின்றன. இந்த உடல் 72,000 நாடி நரம்புகளாலும், 96 தத்துவங்களாலும் அடக்கப் பெற்றது. மனித சரீரத்திற்கு எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்றபடி அதன் ஆதரவாய் இயங்குவதால் உடலுக்குத் தலைகீழான

விருச்சம் எனப் பெயர் பெற்றது. அதை நன்கு அறிந்து தெரிந்து தெளிந்தவனே "ஞானி" என்றூர்கள். கீதையில் அர்ச்சுனனுக்கு உபதேச மொழியில் கண்ணன் "அர்ச்சுனு! தலைகீழாய் உள்ள விரிச்சம் தன்னை அறிந்தவன், சம்சார சாகரத்தை அறிந்தவன் ஞானத்தை அறிந்தவன், என்னை அடைந்தவன்" என்றூர். அப்படிப்பட்ட மனித உடலை ஆராய்வது வைத்தியத்திற்கு மட்டும் அல்லாது, தத்துவஞானியாகவும், "பிர்ம"மென்னும் பொருளை அடைந்து "சொரூபமுக்தி" அடையவும் முடியும்" என்றூர். மேலும், உண்மையை அறிந்தவன் எப்படி இருப்பானென்றும் விளக்கியுள்ளார். அர்ச்சுனு, என்னுடைய பக்தன், சாஸ்திரத்திலுள்ள திரவியங்களைக் கொண்டு சரீரத்தை வளர்த்தவனுய் இருப்பான். இது சத்துவகுண ஆகாரம், இது ராச்சகுண ஆகாரம், இது தமோகுண ஆகாரம் என்பதை அறிந்து சத்துவகுண ஆகாரங்களை உட்கொண்டு சரீரத்தில் நோய் அணுகாமல் காப்பதுதான் அதன் பொருள். ஆகார பேதங்களால் குணபேதங்கள் ஏற்பட்டு அதனுல் ஏற்படும் நோய்களைத் தீர்த்துக் கொள்ளத் தான் வைத்தியம் என்றூர்கள்.

"திண்ண மிரண்டுள்ளே சிக்கவடக்காமற்
பெண்ணின் பாலொன்றைப் பெருக்காமல் உண்ணுங்கால்
நீர் சுறுக்கி மோர் பெருக்கி நெய்யுருக்கி உண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி"—தேரையர்.

பூமியின் ஆகர்ஷண மாறுபாடால் வானத்திலுள்ள கிரகங்களுக்கும், கடல், மாறுபாடுகளுக்கும் சம்பந்தம் இருப்பதாக அறிந்தனர். பூமியின் மாறுபாடுக்கும், மனித உடலுக்கும் உள்ள தொடர்பை எளிதாகக் கூறியும், எவ்வெக்காலங்களில் மனிதன் எவ்வாறு நடந்து கொண்டால் மனிதன் நோயின்றி வாழலாம் என்பதையும் கூறியுள்ளார்கள். சித்த மருந்துகள் யாவும் முன்யோசனையுடன், சித்தர்களின் அனுபவத்தில் சரியென்று நிர்ணயிக்கப்பட்டது ஆகும். சித்த மருந்துகளுக்கு அடிப்படை, "முப்பு, செயநீர்" என்ற சீவசக்தியுள்ள கடுங்காரச் சரக்குககள் ஆகும். மேலும், மூலிகைகள், பட்டைகள், வேர்கள், "சம்பச்சரக்கு" என்ற கடை சாமான்கள், உப்புக்கள், தாதுப் பொருட்கள், பானங்கள், உலோகங்கள், நவரத்தினங்கள், சீவப்பிராணிகளின் உயிர்ச்சத்துக்கள் முதலியவற்றைப் பஞ்சபூதவாரியாகப் பிரித்தும், தொகுத்தும், சுத்திகள் வகுத்தும், ஒவ்வொன்றிலும் என்னென்ன பொருள், எந்தெந்த அளவுகள் இருக்கின்றன? அதனுல் எந்தெந்த நோய்கள் தீரும்? ஒவ்வொரு பதார்த்தத்தின் குணங்களையும் அறிந்து, ஒவ்வொன்றிற்கும் பகை, நட்பு, முறிவு முதலியவற்றை நிர்ணயித்து, முத்தோசத்தால் ஏற்படும் நோய்களை நிர்ணயித்தும் ஒவ்வொரு வியாதியும், அதன் உட்பிரிவுகளையும் விரித்தும், பெயரிட்டும், எந்தெந்த வியாதிகளுக்கு, எந்த எந்த மருந்துகளைக் கொடுப்பது என்று திட்டம் செய்து இருப்பதோடு, உடலின் எடை, அளவு, எத்தனை சுவாசம், எத்தனை நரம்புகள், இரத்தத்தின் அளவு, மூளை, மாமிசம், எலும்பு இவைகளின் எடையும், எண்ணிக்கையும், உடலின் வரட்சி, குளிர்ச்சி, கொழுமை முதலியவற்றை கரு உற்பத்தியிலிருந்தே ஒவ்வொரு பருவத்திற்கும் வகுத்தும், இன்னவிதமான மருந்துகளால் தீர்க்க வேண்டுமென்றும் திட்டம் செய்துள்ளார்கள். மேஷம் சரம், வாசி, யோகம். ஆசனம், கல்பம் முதலியவற்றையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

விஞ்ஞான முறைப்படி அமைந்த சித்த மருந்துகளை நோய்பட்ட உடலில் எவ்விதம் உபயோகிப்பது என்பதைச் சித்தர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். மனித உடலையும், மருத்துவ வகைகளையும் மூன்று கூறுகளாகப் பிரித்துள்ளார்கள். அவற்றில் மனித உடலைத் துலதேகம், சூட்சம தேகம், காரணதேகம் என மூன்றுகப் பிரித்து உண்டாகும் நோயையும் மூன்றுகப் பிரித்தார்கள்:

1. தூலதேகம்: ஏழு தாதுக்களை ஆதாரமாகக் கொண்டு, பிண்ட தத்துவ நிலையில் விளங்குவது.
2. சூட்சம தேகம்: பத்து வாய்வுகளையும், பத்து சீவநாடிகளையும் ஆதாரமாகக் கொண்டு சராசர தத்துவ நிலையில் விளங்குவது.

3. காரண தேகம்: ஐந்து பூதங்களை ஆதாரமாகக் கொண்டு அண்டதத்துவ நிலையில் விளங்குவது.

உடலைப் பற்றும் மூன்று வகை நோய்கள். தூல தேகத்தில் சுகாதார பிசகால் ஏற்படும் நீர்க் கோவை, வலி, கடுப்பு, சிரங்கு, வெட்டு, குத்து காயங்கள், அடிபடல், சிதோஷ்ண பேதங்களால் உண்டாகும் குணக்கேடுகள், பசி, தாகம் முதலான பிணிகள் ஏற்படுகின்றன. இதற்கு உடற்பிணி என்று பெயர். சூட்சம தேகம் சன்னி, சயம், குட்டம், நீரிழிவு, வாதம், குன்மம் முதலியன. இதற்கு உயிர்ப்பிணியென்று பெயர். காரண தேகம் நரை, திரை, மூப்பு, பயம், சாக்காடு என்ற பிறவி நோய்களாகும். தூல தேகத்தில் உண்டாகும் உடற் பிணியைப் போக்கி மூலிகைகள், பூக்கள், பட்டைகள், வேர்கள், கடைச்சரக்குகள் முதலிய வற்றைக் கொண்டு சூரணம், லேகியம், மாத்திரை, தைலம், கசாயம், குடிநீர், கருக்கு, மணப்பாடு, (சர்பத்) முதலிய மருந்துகளைச் செய்து உடற்பிணியைப் போக்கலாம். சூட்சம தேகத்தில் அப்பூத (நீர்) துணையின் வழியாக உடலில் கலக்கச் செய்து, உடற் பிணியைப் போக்கலாம். சூட்சமதேகத்தில் தோன்றும் உயிர்ப் பிணிகளுக்கு இரசம், கெந்தகம், வீரம், பூரம், நவலோகங்களால் செய்யப்பட்ட மருந்துகள் நோயைப் போக்கும்.

கூடுமானவரை நாடி பிடித்துப் பார்த்து நோயை அறிந்துகொள்ளும் அளவுக்கு வைத்தியர்கள் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

கருப்படைந்தவனை வாழ்த்திக் கைதனில் நாடிபார்க்க
பெருவிரலங்குலத்தில் பிடித்தடி நடுவே—தொட்டால்
ஒருவிரலோடில் வாதம் யிருவிரலோடிற் பித்தம்
திருவிரல் மூன்றிலோடிற் சிலேத்தும நாடியாமே.

நாடியின் மூலம் நோயை நன்கறிய முடியும். மேலும், கையைப் பிடித்து விரல்களின் முட்டு களில் தங்கியுள்ள வாயுகளை நீக்கும்படி நெட்டை வாங்கி, உள்ளங்கைகளில் சூடுபிறக்கத் தேய்த்து பின் நாடி பார்க்க வேண்டும்.

செப்ப, ஆண் மக்களுக்குச் சேர வலக்கையாகும்
ஒப்ப அறிவையருக் கோதாவிடம் தப்பா
தறைந்தார் முனிவ ரனவுகோள் தேரற்றும்
விரைகோது மையாம் வியந்து.

என்பது போல ஆண்களுக்கு வலக்கையிலும் பெண்களுக்கு இடக்கையிலும் நாடிகளை அறிய வேண்டும்.

கொழுமதி வாதம் ஒன்றும் கொடுங்கதிற் பித்தம் முக்கால்
கழுமுனை ஐயம் காலாம் ஓடிடில் சுகமே.

வாதம் ஒரு கோதுமையின் அளவாக ஒரு மாத்திரையும், பித்தம் முக்கால் மாத்திரையும், சிலேத்துமம் கால் மாத்திரையுமான அளவு நடந்தால் இந்த உடலில் எந்த நோயுமின்றி வாழலாம்.

சித்திரை வைகாசிக்கும் செழுங்கதிர் உதயம்தன்னில்
அத்தமாய் ஆனி ஆடி ஐப்பசி கார்த்திகைக்கும் மத்தியானத்தில் பார்க்க.
மார்கழி தை மாசி வித்தகன் கதிரோன் மேற்கில் விழுகின்ற நேரம்தானே.
தானது பங்குனிக்குத் தனது நல் ஆவணிக்கும்
மானமாம் புரட்டாசிக்கும் அத்தராத்திரியில் பார்க்க
தேனென மூன்று நாடி தெளிவாக்க் காணுமென்று
காளைமாமுனிவர் சொன்ன கருத்தை நீ கண்டுபாரே
காரிகை தமக்குப் பிள்ளை கருப்பையைப் பற்றி நின்றால்
கூரியவாத நாடி குண்டலப் புழுப்போலூரும்
வீரிய மூன்றாந் திங்கள் விட்டில் போல் பதைத்து நிற்கும்
பாரிய எட்டாந்திங்கள் பையவே யுருப்போலூரும்

குணவாகடத்தின் நாடியில் சூலுற்ற மூன்று, எட்டு மாதங்களில் வாத நாடி எப்படி இருக்கும் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

மாதர் கைப் பிடித்தபோது வந்திடும் வாத நாடி
தீதுற வெடித்துப் பாய்ந்து சிதறியே கிளம்பி நின்றால்
பேதை தன் வயிற்றிலுள்ள பெருகு சுரோவிதமே தங்கி
வாதைகள் பண்ணி மாத விடைக் காலம் வருந்தச் செய்யும்

பொய் சூல் ஏற்பட்டு உதிரமானது கர்ப்பாசயத்தில் பிண்டம் போல் உருவாகி வளரும் போதும் சூதக நோயிலும், வாத நாடி தீதுற வெடித்துப் பாய்ந்து சிதறியே கிளம்பி நிற்கும் என்றார்கள்.

வைத்தியர்களுக்குரித்தான கண்கள் 3, தலைகள் 4, முகங்கள் 5, கைகள் 6, சரீரங்கள் 8, கால்கள் 10. இவை நன்குணர்ந்தவர்களே மக்களின் பிணிகளைத் தீர்க்க முடியும். 1. மருந்து, 2. சுத்தி, 3. அதன் தன்மை. இவைகள் தான் என்று உறுதி செய்தால் இம் மூன்றும் கண்களாம்; (2) வாதம், பித்தம், சிலேத்துமம், தொந்தம் இந்த வித நாடிகளின் பரிசீலிப்புபள் தலைகள், (3) உண்ணுகின்ற சுவை ஆறும், கைகள் ஆறும், (4) மெய் குறி; நிறம், தொணி, விழி, நாக்கு, மலம், சிறுநீர், கைக்குறி, (நாடி நிலை) இவைகள் எட்டும் சரீரங்களாம். (5) தசநாடி, தசவாய்வு. ஆகிய இவ்விரண்டினையும் பார்ப்பதே கால்கள் பத்தாம், (6) பிண்ட நிலையோடு கூடிய சடப்பொருள்காகியதே முகங்கள் ஐந்து என்று கூறப்படுவது

ஓதுகின்ற மலக்கட்டை யொழிய வைத்தால்
உடலிலுள்ள வாதமெல்லா மொடுங்கிப் போகும்
தாதுற்ற சிறுநீரைத் தெளிய வைத்தால்
சடத்திலுள்ள வேகமெலாந் தணிந்து போகும்
கோதுற்ற உமிழ்நீரை முறிய வைத்தால்
கூட்டிலுள்ள பகையெல்லாங் குலைந்துபோகும்
கோதடர்ந்த இவைமூன்றும் களங்கமற்றால்
கொல்ல வந்த காலனையும் வெல்லலாமே

சித்த மருத்துவத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள் :—தேவ மருத்துவம், மனித மருத்துவம், இராச்ச மருத்துவம், என்பன. இரசம், கந்தம், பாடனம், உப்பு, உலோகங்களால் சித்த வைத்தியமுறைப்படி தயாரித்து கட்டு மாத்திரை. களங்கு, செந்தூரம், பற்பம், சுண்ணம், மெழுகு முதலிய உயர்ந்த பொருளால் செய்யப்படுவது தேவமருத்துவம். முன்கூறிய முறைப்படியே தாவரங்களைக் கொண்டே செய்யப்பட்ட குடிநீர், சூரணம், இரசம், பிட்டு, வடகம், இளகம், மனப்பாடு, மாத்திரைகளைக் கொண்டு செய்யப்படுவது மனித மருத்தவம். மேற்கூறிய மருந்துகளால் தீராத வியாதிகளை அறுவை, கீறல், அட்டை விடல், சூடு போடுதல், இரத்தம் வாங்குதல், சலாகை போடுதல், கொம்பு கட்டுதல் முதலியவைகளால் நோய்களைக் குணப்படுத்தும் முறைக்கு இராச்ச மருத்துவம் என்று பெயர்.

### அகஸ்தியர் சாஸ்திராயுத விதி.

சித்தர் முறையில் அறுவை சிகிச்சை முறை இல்லை. மேல் நாட்டார் தான் அறுவை வைத்தியத்தைக் கண்டு பிடித்தார்கள் என்று பலர் நினைக்கிறார்கள். தலை உரோமத்தையும் இரண்டாய்வகுக்கும் கத்தியும் முன்பு இருந்து இருக்கிறது என்றால் அறுவை சிகிச்சை முறையில் எத்துனை உயர்ந்து விளங்கியிருக்கிறார்கள். என்பதை ஊகித்துக் கொள்ளவும்.

கத்தி சத்திரம் கவின்குறும்பி வாங்கியும்,
முக்கவா தன்னுடன் முள்ளு வாங்கியும்
ஆழிக்கோலு மடுத்த பிறையுடன்
கத்திரிக் கையுடன் பரகரை வாங்கியும்

முச்சலாகை யோடு முனிமொழியோட்டும்
மட்டக் கோலும் மாறும் ஊசியும்
செப்புக் குழைவுரு சிறிய சலாகையும்
வட்டகை தன்னுடன் வளர் பஞ்சமுகமும்
செய்புச் சிலாகையும் கொம்பும் குடோரியும்
வெங்கலக் குழலும் ஈயச் சலாகையுங்
காயக்கோலுங் கணைகத்தி தண்டும்
இவையிவை யாயுத மிருபத்தாறும்
சிவன வனருளால் திகழ் சத்திராயுதமே என்றுர்.
அறை தருங் கத்தியா நங்குல நீளம்
அகலமோ ரங்குலம் ஆம்முனை வட்டம்
மயிர்க்கத்தி போன்று வழங்கு மென்ப
சத்திரநீளஞ் சாற்றிறு றங்குலம்
வேப்பிலை போலும் விளங்கும் பல்பல்லாய்
நிறைக லைஞ்சாறு நெடியதோர் பிளவை
கட்டியிவற்றைக் கண்டமா யறுக்க
மெத்தவும் பயனும் மேதினி மிசையே
குறும்பி வாங்கியின் குறே ழங்குலம்
நிறையறைக் கழஞ்சு நெடுங்கைப் பிடியோ
ஐந்தே அங்குலம் ஆமெனப் பகர்வார்
முகவா தனஞே முந்நாங் கங்குலம்
முக்காற் கழஞ்சு நிறையென மொழிவார்
முள்வாங்கி நீளம் மூவிரண்டங் குலம்
அகலமோ ரங்குலம் அணிநிறை கழஞ்சொல்
றறுக்கவும் சிறவுங் அவிற்நகம் வாங்கவும்
பயனும் என்ப பணிந்தனர் மேலோர்
ஆழிக்கோல் பத்தே அங்குலம் நிறையோ
அரைப்பலம் ஆகமென்றைந்தன ரறிஞர்
பிறைக்கோ லென்பது பேசின் மூவங்குலம்
நிறை மூன்று கழஞ்சு நிகமெழுத் தாணிபோல்
நீண்ட பிறைப்போல் மத்தியில் நிலவுறும்
கத்திரி கைச்சீர் கழறெட்டோடரை
அங்குலம் நிறை காற்பலமே யாரும்
பரகரை வாங்கியோ பதினு கங்குலம்
நிறையறைப் பலமென நிகழ்த்து வருணர்ந்தோர்
முச்சிலா கைச்சீர் மொழியினே ழங்குலம்
நிறை நான்கு கழஞ்சே நிலவுதன் வடிவோ
ஒரு மூன்று தகட்டுவா யுள்ளது பாரே
முனி மொழி யென்பதோர் முக்கிய கருவியே
ஒட்டுக்கோ வங்குலம் ஒன்றேடு பத்தே
தலையொரு கழஞ்சரைப் பலமுடன் நிறையே

அட்டக்கோல் வீரோன் பானங் குலமே
காசிடை யெட்டெனக் கழருவ ருசியோர்
ஊசிமூ வங்குலம் உரைநிரை யரைமா
செப்பு குழைதான் திரட்சியாங் குழலே
ஒரு சாணளவின் துயர் நிரை யரைப்பலம்
தகடோ லைக் கனம் சார்புண்ணில் விடுவது
சலாகை யங்குலந் தாஞேரு நான்கே
அன்றியைத் ததன் நிறை யாறிரு கழஞ்சே
வட்டசை யென்பதோர் வகையாயு தமே
பஞ்ச முகமுமப் பரிசின தமே
செப்புச் சிலாகை சிறந்ததோர் கருவியோ
கொம்பீரைந்துங் குலமாம் வாழையின்
குறுந்தொப்பது பூவின் குலவிரன் டங்குலம்
மேனி வீக்கத்தை வீட்ட லல்லதே
கீறிக் கட்டியைக் கெட்ட செந்நீரை
வெளியிடத்தக்க மிகு பயனுயதே
குடோரியே டிமுராயங் குலம் நிறைகாற்பலம்
வெண்கலக் கழல்தான் மேவுமெட்டங்குலம்
நிறைபலம் முன்சோ டரையென நிகழ்த்துவார்
ஈயச்சலாகை யியம்பின் மூவங்குலம்
நிறையோ நான்கு கழஞ்சென நிலவிடும்
காயக்கோல் நீளம் கழறினே முங்குலம்
நிறையிரு கழஞ்சு நெடிய பருமனே
இரண்டங்குலமென விசைந்தனர் பெரியோர்
தெண்டு சலாகை கொண்ட வங்குலமோ
ஒன்பதங்குலம் நிறையோரரைக் கழஞ்சே
ஈர்க்கு போலும் எழில் கனம் வாய்ந்ததே.



4

# வள்ளுவர் வழியில் வாழ்வோம்

திரு மு. கோவிந்தராசன், எம்.ஏ., பி.எப்.,
தமிழ் உதவியாளர், சித்த மருத்துவப்பாடநூற் குழு,
மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை-31

மருத்துவக் கலை இன்று நேற்று வந்ததன்று. தமிழ் மக்கள் தங்கள் மூதாதையர்களிடமிருந்து தொன்று தொட்டே பெற்ற தொன்மைக் கலையாகும். ஒல்காப்பெரும் புகழ் பெற்ற அம் மருத்துவக் கலை ஒரு சிலரிடத்தில் மட்டும் தஞ்சமடைந்தும், அன்னாரும் பின்னவர்க்குச் சொல்லாது மூடி மறைத்த ஏதுவினாலும் எழுதி வைத்த ஏடுகளையும் கரையான்கள் சுவைத்த காரணத்தாலும் உயரிய கலை இலக்கியத்தில் அதிக இடம் பெற வழியின்றிப் போய்விட்டது. இருப்பினும் ஒரு சிலவற்றை மட்டும் ஈண்டு நோக்குவோம்.

தமிழ்ச் சான்றோர் மருத்துவக் கலைக்கு மாண்பளித்தனர் என்பதனை அவர்கள் யாத்த இலக்கியங்களே சான்று பகரும். மருத்துவத்துறையில் சிறந்து விளங்கிய காரணத்தால் அவர்கள் தங்கள் யாத்த நூலுக்கு மருந்துகளின் பெயர்களையே இட்டு மகிழ்ந்துள்ளார்கள்

நல்லாதனார் இயற்றிய 'திரிகடுகமும்', ஆசிரியர் கணிமேதாவியார் இயற்றிய 'ஏலாதி நூலும்', மருத்துவக் கலை வல்லுநர் காரியாசான் யாத்த 'சிறுபஞ்ச மூலமும்' அதற்கு எடுத்துக் காட்டுகளாம்.

சிறு பஞ்ச மூலத்தில் தலைமகனைத் தலை வணங்கச் செய்யும்படியான மருந்தொன்றினை:

மக்கள் பெறுதல் மடனுடைமை மாதுடைமை
ஒக்கவுடனுறைதல் ஊணமைவு—தொக்க
அலவலை அல்லாமை பெண்மகளிர்க்கு ஐந்தும்
தலைமகனைத் தாக்கும் மருந்து. (சிறுபஞ்சமூலம் 51)

என்று ஆசிரியர் மகளிர்க்குச் சொல்லித் தருகின்றார்.

### தலைக்குத்தலுக்கு மருந்து :

மனநோய் நீக்கும் மாசிலாத் தமிழ் மாமருந்தாம் திருக்குறளுக்குச் சிறப்பினை நல்க விழைந்த மருத்துவன் தாமோதரனார்,

சிந்தி நீர்ச் சருக்கரையையும், நன்றாகத் தட்டி நசுக்கப்பட்ட சுக்கையும் தேனோடு ஒன்றாகக் கலந்து மோந்தால் தீராதத் தலைக்குத்தல் நோய் தீரும். அது போல நாயனார் அருளிச் செய்த நன்னூலால் சாத்தனாருக்குத் தலைக்குத்தல் தீர்ந்ததென்று

"சிந்தி நீர்க்கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர் முப்பாலாற்
றலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு"

என்று திருவள்ளுவ மாலையில் கூறியுள்ளார்.

### புண்ணிற்கு மருந்து :

ஈர்ந்தூர்க்கிழான் தோயன் மாறனைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார், புகழுமுகத்தான், அவன் உடல் முழுதும் போர்ப்புண்பட்ட வடுக்கள் பரந்து காணப்படுமென்றும் அவை மருந்துக்காகக் கொள்ளப்பட்ட அத்தியின் அடிமரம் போன்று வாள் வடுக்கள் கலந்து கவின் பெறச் செய்யும் என்றும் கூறுகின்றார். படைக்கலங்கள்

சுவைகண்ட உடல் புண்ணிற்கு அத்திமரத்தின் பாலும், பட்டையும் பயன்படுத்தினர் அக்கால தமிழ் மக்கள் என்பதை

" இரும்பு சுவைக் கொண்ட விழுப்புண் நோய் தீர்ந்து
மருந்து கொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்றி வடிந்த யாக்கையன் " (புறம் 180)

என்பதன் வாயிலாய் தெற்றென உணரலாம்.

புண்ணை ஆற்றுதற்கு மருந்து ஒருபுறமிருக்க பண்ணும் பாட்டுங் கூட பயன்பட்டன வென்பதைக் கீழ்வரும் பாடலால் நன்குணரலாம்.

" தீங்கனியிரவ மொடு வேம்பு மனைச் செரீஇ
வாங்குமருப்பி யாழொடு பல்லியங் கறங்கக்
கைபயப் பெயர்த்து மையிழுதிழுகி
ஐயவிசிதறி யாம்பலூ தி
இசைமணி யெறிந்து காஞ்சிபாடி
நெடு நகர் வரைப் பிற் கடிநறைப் புகைஇக்
காக்கம் வம்மோ—காதலந்தோழி !
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கனெடுந்தகை புண்ணே !" (புறம் 281)

வேப்பிலையையும் இரவ இலையையும் மனை இறைப்பிலே செருகும் பழக்கம் நந்தமிழ் நாட்டில் இன்றும் உள்ளது. அதனுற்றான் அம்மை நோயுற்றூர் மனையிலே வேம்பு சொருகு கின்றூர்கள். அதோடமையாது வேம்பு இலைகளையும் நோயுற்றான் படுக்கையில் போட்டும் வைப்பார்கள். வேம்பு சிறந்த மருந்தாகும். இரவந்தழையும் அத்தன்மைத்தே. இவை களைப் போன்றே நச்சுப் பூச்சிகளை நசுக்குந் தன்மை வாய்ந்த நறுமண அகிற்புகையும் போடுகின்றூர்களாம். இவைகளோடு பல்லியங்களுடனும் பண்ணுடனுங் கூடிய பாட்டுக் களை மகளிர் பாடுதலால் புண்ணையும் ஆற்றுகின்றதாம் ! இதனை அரிசில் கிழார் அழகாக எடுத்துரைக்கின்றூர்.

பச்சைப் புண்ணிற்குப் பஞ்சினை வைத்துக் கட்டும் பழக்கமும் அக் காலத்திருந்த வொன்றூகும்.

திருமணங் காண வந்த, தோன்றல் ஒருவனுக்குத் தையலை மறந்து விடு எனும் அறிவுரையைக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனூர் கூறுகின்றூர். அது போழ்து, இவள் தமையன்மாரோ வாய்மடிந்து துதிலாய் வாளுடன் இன்னமும் புண்ணகத்திட்ட பஞ்சினை நீக்காதவராகக் கண்டார் அஞ்சும் தகையையுடன் விளங்குகின்றனர், அறிவாயாக என்கின்றூர். அதனை,

" கதுவாய் போகிய துதிவாய் எஃகமொடு
பஞ்சியும் களையாப் புண்ணர்
அஞ்சுகதவு உடையர் இவள் தன்னை மாரே " என்று (புறம் - 353)

கழறுவதன் வாயிலாய், புண்ணிற்குப் பஞ்சிடும் வழக்கமிருந்ததை நன்கறியலாம்.

**சூலுற்ற மகளிர் :**

சூலுற்ற மகளிர் இன்றும் புளிப்பான பொருள்களையும், சாம்பல் மண், போன்ற வற்றையும் பிறர்க்குத் தெரியாவண்ணம் உண்ணுவதை நாம் காணலாம். மசக்கையின் காரணமாகவே உண்ணுகின்றூர்கள், மசக்கையின் காரணமாக உண்ண வேண்டியது ஏன் ?

என்று ஆராயவேண்டியுள்ளது. நம்மையறியாமலே செலுத்தும் மாமருந்தோ எனக் கருத வேண்டியுளது. அதுதான் இயற்கையின் நியதிபோலும். அக் காலத்தில் கருவுற்ற மகளிர் மண்ணை உண்பர் என்பதனைக் குறுங்கோழியூர்க்கிழார் பாடலால் உணரலாம்.

"பிறர் மண் ணுண் ணும் செம்மல் ! நின் நாட்டு
வயவுறு மகளிர் வேட்டுவுணினல்லது
பகைவருண்ணு அருமண்ணினையே" (புறம் 20)

எனக் கூறுமுகத்தான் சூலுற்ற மகளிர் மண் உண்பர் என்பதனை அறியலாம். இஃது ஆராயற் பாலதாகும்.

கருச்சிதைவு :

அரசியலார் தற்காலத்தில் கருச்சிதைவினைச் சட்ட பூர்வமாக்க இருக்கின்றனர்கள். இதனைக் கொடுமையிலுங் கொடுமையாகத் தமிழ் மக்கள் பண்டு கருதினர்கள் என்பதனை,

"ஆன் முலை அறுத்த அறனிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த்தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயுமுள" (புறம் 34)

என்று ஆலத்தூர் கிழார் கூறியுள்ளதினின்றும் உணரலாம். ஆனால், கருவினைச் சிதைக்கும் முறையினையும் அதற்குரிய மருந்தினையும் கூறிப் போந்தாரில்லை.

பசிப்பிணி :

உலகிலுள்ள பிண்க்கொடுமைகளுள் பசிப்பிணி மிகப் பொல்லாததாகும். அது செய்யுங் கொடுமையினை,

"குடிப்பிறப்மழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடுஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்

என்று மணிமேகலை எடுத்தியம்புகின்றது

நாட்டிற்கிலக்கணங் கூறவந்த நாயனாரும்
"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராதியல்வது நாடு" என்றும் நாட்டிற்கழகினை வகுக்க வந்தவர்
"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

என்றும் திருக்குறளில் அழகாகக் கூறியிருக்கின்றனர்.

பசிப்பிணியை நீக்கப் பலர் முயல்கின்றனர். மாதவி மகள் மணிமேகலை பிக்குணிக் கோலம் பூண்டு ஆதிரை என்பவளது இல்லத்திற் புகுந்து அமுதசுரவியோடு வாய்பேசாது நிற்கின்றாள். அங்ஙனம் நின்ற பொழுது

"பாரக மடங்கலும் பசிப்பிணியறுகென
ஆதிரையிட்டனளாருயிர் மருந்து" (மணிமேகலை) என்பதை

உணரலாம். பசிப்பிணிக்கு மருந்து உணவென்பது ஈண்டு யாவதும் அறிந்ததொன்றும்.

உடற்பிணியைத் தீர்ப்பவனனை மருத்துவன் என்கின்றோம். அதுபோல பசிப்பிணியைத் தீர்ப்பவனையும் பசிப்பிணி மருத்துவன் என்கின்றது மன்னன் கிள்ளிவளவனின் புறப்பாட்டு: அது இதோ !

" பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ ? சேய்த்தோ ? கூறுமின் எமக்கே !" (புறம் 173)

பசிப்பிணி மருத்துவன் உயிர் கொடுத்தவனுகக் கருதி நன்கு மதிக்கப்பட்டான். அதனை

ஆற்ரு மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந் நெறி வாழ்க்கை
மண் திணி ஞாலத்துவாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே"

என்பதனுலும் உணரலாம்.

இதனையே

" அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள் வைப்புழி"

என்று கூறி, குறளும் பெருமைப்படுத்துகின்றது.

**நோயின்றி வாழ :**

நோய் நொடியின்றி வாழ்வதே வாழ்க்கையாகும். நோய் அற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்கின்றனர். நோயின்றி நெடிது வாழ வள்ளுவர் வழி கூறுகின்ருர்.

" அற்ருல் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்ருன் நெடிதுய்க்குமாறு."

முன்னர் உண்ட உணவு செரிமானமாகி விட்டதென்பதை உணர்ந்தால் மறுமுறை மீண்டும் உணவினை மேற் கொள்க. அப்படி உண்ணுவாயாளுல் நெடிது காலம் வாழ்வாய் என்று கூறுகின்ருர். சென்ற நூற்ருண்டில் வாழ்ந்த வள்ளலாரும் மருத்துவம் பற்றி அவர் தம் பாக்களில் பற்பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவரும் வள்ளலார் பெருந்தகையும், காட்டும் வழியில் நடந்து நெடிது வாழ்வோமாக !!

வாழ்க மிழ் ! வாழிய உலகம் !!

# தமிழகத்தின்
# சஞ்சீவி மூலிகைகள்

டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர், வேலூர்
(ஆசிரியர் : மூலிகைமணி)

மானிட வாழ்க்கைக்கு, இன்றியமையாத பொருட்களில் தாவர இனம் தலையாயது. இவ்வுலகில் தாவர இனங்கள் அழிக்கப்படுமேயானால், மற்றைய உயிர் இனங்களும், தாமாகவே அழிந்து போய்விடும். ஆதி மனிதன் தோன்றிய இடம் தமிழகம் தான் என்பது ஆராய்ச்சியாளர்கள் துணிபு. அவர்கள் முதன்முதலாக உணவு உட்கொண்டது கந்தமூலங்கள், காய், கனி, கிழங்கு, போன்ற தாவர இனங்கள் தானென்பது ஆதார பூர்வமானது. மாருக, கடற்கரையோரங்களிலும், காடுகளிலும் வசித்த ஆதி குடிமக்கள் எனக் கருதப்படுவோர் நீர் வாழ் உயிர்களையும், நிலமீது வாழும் உயிர்களையும் பிடித்து நெருப்பில் வாட்டியோ அன்றி, பச்சையாகவோ உண்டனர் என்பது சரித்திரம் தரும் சான்று. இவர்களின் நடைஉடைப் பழக்க வழக்கங்களில், கட்டுப்பாடற்ற, கண்ணியமற்ற வாழ்க்கையை, ஏறத்தாழ, மிருக இனத்தினையொத்த வாழ்க்கையை நடாத்தினர் என்ருல், அது ஏற்கக்கூடிய ஒன்ருகும். இன்றளவும் இவர்களைப் போன்றவர்கள் இருந்து வருகின்றனர். சான்ருக, சீன நாட்டில் வாழும், காட்டுமிராண்டிகளும், ஆப்பிரிக்காக் கண்டத்தில் வாழும், நீக்ரோக்களும், அமெரிக்க செவ்விந்தியர்களையும், கூறலாம்.

தமிழர்கள், தொன்றுதொட்டே, பசுமையானத் தாவர இனங்களைப் பற்றிய நுணுக்கங்களை நன்கு ஆய்ந்து, உலகிற்கு அளித்து உதவியுள்ளனர். தமிழகத்தில், சைவம் செழித்து வளர்ந்து வருகின்றது என்று கூறினுல், அதற்கு அடிப்படையாக விளங்குவது, தமிழன், மூலிகை இனங்களின் மீது, கொண்டிருந்த அளப்பரிய அன்பிணையே எதிரொலிக்கின்றது. பதினென் சித்தர்கள் விளையாடிய சித்து விளையாட்டெல்லாம், இந்த மூலிகைகளின் உதவியைப் பயன்படுத்தித் தான் விளையாடினர். ஆதியிலே அகத்தியனுர், பொதிகையிலே, தமிழ் மொழியையும், சித்த மருத்துவக் கலையையும் வளர்த்ததாகச் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

எனவே, உடல் வளர்க்கும் உபாயத்தோடு, உயிர்களையும் காத்து, அறிவைப் பெருக்கும் தாவர இனத்தின் தனிப்பெருங் கலையான, "சித்த மருத்துவக் கலை" தமிழர்களின் வழி வந்ததோடல்லாது, தமிழனுக்கென்றே வாய்த்த நல்லதொரு அழியாச் சொத்து என்பதனை உரிமைக் குரலோடும், உயிர்சிறப்போடும் கூறலாம்.

அன்புநெறியும், அருள்நெறியும், சங்கல்ப நெறியும், நல்வாழ்விற்கு இன்றியமையாது வேண்டற்படுவதாகும். இம் மூன்று நெறிகளையும் தரவல்லது சைவ உணவுப் பழக்கம் ஒன்றேயாகும். இந்த அடிப்படை உணவுப் பழக்கத்தினை ஏற்படுத்தி, இதன்மூலம் உடலுற்றப் பிணிகளைப் போக்கினர் நம் முன்னேர்கள்.

இவர்களே பின்னர், ஆராய்ந்து, 'சித்த மருத்துவம்' என்ற ஒரு அரிய களஞ்சியத்தைப் பின்வரும் தலைமுறையினருக்கு வழங்கிப் போந்தனர். இவர்களைத்தான் தமிழர்கள் "சித்தர்கள்" என்றழைத்தனர்.

ஒன்பது உலோகங்களையும், ஒன்பது விதமான பாடாணங்களையும் நீற்றக் கூடிய வலிமை வாய்ந்த மூலிகைகளும் (ஸ்வர்ணகரணி), உடலை விட்டுப் பிரிந்த உயிரை மீண்டும் உயிர்ப்பிக்கும் மூலிகைகளும் (சஞ்சீவி கரணி), வெட்டுண்ட அவயவங்களைச் சேர்த்து ஒட்ட, அவைகள் பழையபடியே இயங்க வைக்கும் மூலிகைகளும் (சல்லிய கரணி), உடம்பில் பட்ட கூர்மையான ஆயுதங்களால் உடம்பிற்கு அழிவு ஏற்படாமலும், மாறாக அவ்வாயுதங்களையே முறித்துவிடும் மூலிகைகளும் (விசல்ய கரணி) உயிர்களின் உற்பத்திக்கு ஆதாரமான மூலிகைகளும் (சந்தான கரணி) சாகாமல் நீண்ட காலம் வாழ காய கல்ப மூலிகைகளும் (அமிர்த சஞ்சீவி), சித்து விளையாடும் மூலிகைகளும் (சமனிய கரணி), தண்டமிழ் நாட்டில் பெரும்பாலும், கொங்கு நாடு, குடகு நாடு, சேர நாடு, ஆகிய இடங்களில் விளையும் என்று சித்தர்கள் கூறிப் போந்தனர். இந்த எட்டுவித மூலிகை வகைகளை விளைவிக்கும் நிலத்தை 'அட்ட மங்கலம்' என்று பெயரிட்டனர்.

இவ்வகையான மூலிகைகளின் அருமை பெருமைகளைப் பற்றி, முடியுடை மூவேந்தர்களாலும், புலவர்களாலும், சித்தர்களாலும் உபதேசிக்கப்பட்டது. அதியமானுக்குக் கருநெல்லி கிடைத்ததையும், எதிர்க்கும் பேரரசர்களை வெற்றிகொள்ளும், படை வெல்லும் மூலிகைகளையும், அடிபட்டு வீழ்ந்த வீரர்களுக்குற்ற காயங்களை விரைவில் போக்கி, வீறுடன் போராட வல்லமை தரும் மூலிகைகள் ஏராளமாக அறிமுகம் செய்யப்பட்டன. இதனாலன்றோ, தமிழ் மன்னர்கள், "கங்கைகொண்ட சோழன்" 'இமயவரம்பன்' என்றெல்லாம் திருப்பெயரிட்டழைக்கப்பட்டனர்.

நமது தமிழகத்தில் இத்தகைய சஞ்சீவி மூலிகைகள் இருந்தன. இருக்கத்தான் செய்கின்றன என்பதை மேற்கண்ட சான்றுகள் விளக்குகின்றன. சித்தர்கள் சஞ்சீவி மூலிகைகள் விளையுமிடத்தை 'அட்ட மங்கலம்' என்றழைத்தனர் என்று குறிப்பிடப்பட்டதல்லவா? அவைகள் நாளடைவில் வழக்கொழிந்து, கால வெள்ளத்தில் மூழ்கி, மன்னர் செல்வாக்குக் குறைந்து, கடைச் சங்க காலத்திற்குப் பிறகு, கௌமார சமயம் சிறப்புப்பெற்ற இக்காலத்தில் மறுபடியும் தோன்றியுள்ளது. இச்சமயத்தின் இறைவனும் திருமுருகப் பெருமான். [இந்த அட்ட மங்கல இடங்களில் தங்கிய சித்தர்கள் அங்கே சமாதி அடைந்துள்ளனர்.] குன்று தோறும் குமரப் பெருமானை, மக்கள், ஆறுபடை வீடுகளில் சென்று வணங்கி அவைகள், தெய்வத் திருத்தலங்களாகி விட்டன! அங்கு, சென்று வரும் பிணியாளர்களின், உடலுற்ற பிணிகள் நீங்குவதுடன், ஊழ்வினையும் நீங்கும் என்பது, கண்கண்ட பலன் என்றால் அது மிகையன்று. ஆனால், நம்பிக்கையுடன் செல்வோருக்கு உறுதியான நன்மைகள் கிடைக்கத்தான் செய்கின்றன.

இதிலிருந்து ஒன்றுமட்டும் தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது. யாதெனில் முருகன் இருக்கும் குன்றினைச் சுற்றிலும் மூலிகைகள் வளம் பெற்று வளர்கின்றன. மூலிகைகள் இருக்கு மிடமெல்லாம் முருகன் சன்னிதானம் உள்ளதென்பது உறுதியான உண்மை! ஆனால், மேலே குறிப்பிடப்பட்ட சஞ்சீவி மூலிகைகள் யார் கண்களுக்குத் தெரியப் போகிறது?

# அன்றாட வாழ்க்கையில் சித்தவைத்தியத்தின் சேவை

S. P. V. தங்கராஜ் R.I.M.P.
(மந்தித் தோப்பு மணிகட்டி சுவாமிகள் சித்தவைத்திய சாலை, மதுரை.)

அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதினும் கூன், குருடு, செவிடு, பேடு நீக்கிப் பிறத்தல் அரிது. தற்காலத்தில் நோயற்ற வாழ்வு வாழும் பாக்கியம் கிடைப்பது அதினிலும் அரிது.

பெரிய அழகான பங்களா, கப்பல் போன்ற கார், குறிப்பறிந்து பம்பரமாய்ச் சுழன்று கடமையாற்றும் பணியாளர். பாங்குக் கணக்கில் லட்சக் கணக்கில் பணம் இருப்பு. வாழ்க்கைக்கு வேண்டிய சகல வசதிகளும் நிரம்பியிருக்கிறது. ஆனால், அந்தச் செல்வச்சீமான் சாப்பிடுவதோ நான்கு அவுன்ஸ் கோதுமைக் கஞ்சி, எவ்வளவு குறைவாகச் சாப்பிட்டாலும் எளிதில் சீரணமாவதில்லை. சிறிது நேரம் காரில் போய் வந்தாலும் தாங்க முடியாத அசதி. இரவில் படுத்தால் தூக்கம் வருவதில்லை. காலிலோ கையிலோ சதா ஏதாவதொரு புண். எத்தனை ஊசிகள், மருந்துகள், களிம்புகள் போட்டாலும் ஆறுவதில்லை. கௌரவமாக 'டயபடீஸ்' வந்திருக்கிறது என்பார். காப்பியில் சர்க்கரை இல்லாமல் கொடு என்பார். சுருக்கமாகச் சொல்லப் போனால் வாழ்க்கையே அவருக்கு ஒரு நரகமாக இருக்கிறது. யாரைப் பார்த்தாலும், எதைச் செய்தாலும் அவருக்கு எரிச்சலாக இருக்கிறது. அவர் தன் உடம்பைப் பரிசோதனைக்காகக் காட்டாத பெரிய டாக்டர் இல்லை. உட் கொள்ளாத மருந்து இல்லை. அவர் சலிப்புற்று நினைக்கிறார், "இவ்வளவு செல்வம், வசதிகள் இருந்தும் என்ன பயன். என் நோயைத் தீர்த்து என்னைச் சுகவாழ்வு வாழத் தகுதியாக்குபவருக்கு எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். எனக்கு அந்த செல்வத்தைக் கொடுப்பவருக்கு என் செல்வம் அனைத்தும் கொடுக்கிறேன். இப்படி ஒரு சாரார்.

குழந்தை பிறந்து ஒரு மாதம்தான் ஆகிறது. கடுமையான ஜலதோஷம். மூச்சு விடத் திணறுகிறது. அழுவதற்குக்கூடத் திறமையற்று பரிதாபமாக முணகுகிறது. உடனே தூக்கிக்கொண்டு டாக்டரிடம் ஒடுகிறார்கள். அவர் உடனடியாக அந்த ஒரு மாதக் குழந்தைக்கு ஊசி போடுகிறார். மருந்தும் கொடுக்கிறார். தாய் தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப் போகிறாள். இரவு முழுதும் அதே உபாதை தொடருகிறது. தாய்க்கும் தூக்கமில்லை. சேய்க்கும் தூக்கமில்லை. வீட்டில் வயதான பாட்டிக் கிழவி ஒருத்தி இருக்கிறாள். அவளிடம் செய்தியைச் சொல்லுகிறார்கள். அந்த அம்மாள் ஏதோ ஒரு பட்டையை வெற்றிலையில் வைத்துக் கசக்கி அந்தச் சாறை குழந்தையின் நெற்றியிலும் மார்பிலும் தடவி விடுகிறாள். சிறிது நேரத்தில் குழந்தை நிம்மதியாக மூச்சு விட்டுக்கொண்டு தூங்குகிறது. வெளியில் சென்றிருந்த குழந்தையின் தந்தை வீடு திரும்புகிறார். தாய் அவருக்கு செய்தியைச் சொல்லுகிறாள். அவர் அலட்சியமாக சிரித்துக்கொண்டு கூறுகிறார், 'காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதை போல் இருக்கிறது. டாக்டர் கொடுத்த மருந்து இப்பொழுதான் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது. நீ பாட்டி கொடுத்த மருந்தினால்தான் குணமாகியிருக்கிறது என்று நம்பிக் கொண்டிருக்கிறாய்." இப்படி மற்றொரு சாரார்.

உடம்புக்கு இலேசாக ஏதாவது நோயின் குறிகள் தென்பட்டாலும் உடனே ஆங்கில மருத்துவம் பயின்ற டாக்டரிடம் ஓடி இரண்டு ஊசி போட்டுக்கொள்வது தற்சமயம் நாகரிகமாக (Fashion) இருக்கிறது. இதற்காக ஆங்கில மருத்துவ முறையைக் குறைத்து கூறுவதாக எண்ணிக்கொள்ள வேண்டாம். ஆனால், பல்லாயிரக் கணக்

கான வருடங்களாக நமது செந்தமிழ் நாட்டில் யோகிகளாலும் சித்தர்களாலும் பேணி வளர்க்கப்பட்ட சித்த வைத்திய முறையானது, மனிதனின் உடலில் ஏற்படும் நோய்களுக்கு அபூர்வமான மருந்துகளைத் தன்னிடத்தே வைத்திருக்கும் பொழுது, இந்த அபூர்வ வைத்திய முறையைத் தள்ளிவிட்டு அந்நிய வைததிய முறையை ஆதரிக்கும் செயலை என்னவென்று கூறி அழைப்பது.

சித்தமுறை மருந்துகள் பாமரர் முதல் பணக்காரர் வரை எல்லோரும் எளிதில் கையாளக் கூடியவை. பணச்செலவு அதிகம் ஆகாது. இந்த வைத்தியமுறை தமிழ் நாட்டுக்கே முழுக்க முழுக்க சொந்தமானது. சித்த வைத்தியம் தமிழ் நாட்டிலேயே பிறந்து தமிழ் நாட்டிலேயே வளர்ந்துவரும் சிறப்பான வைத்தியமுறை ஆகும். வடமொழி வாசனை இதில் சிறிதளவும் கிடையாது. ஆங்கிலத்தில் Originality (முதல் தன்மை) என்று சொல்வார்களே அந்த தனித் தன்மை இந்த வைத்தியமுறையில் முழுவதும் இருக்கிறது. தமிழ் நாட்டில், இயற்கை அன்னை அளித்த செல்வமான காடுகளிலும், மலைகளிலும் அபூர்வமான மூலிகைகள் ஏராளமாக மண்டிக் கிடக்கின்றன. இவற்றுள் ஒவ்வொரு மூலிகையின் குண நலன்களும் நேரடியாக (பிரத்யட்சமாக) ஆராய்ச்சி செய்யப்பட்டு சித்த மருந்துகளில் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்நாட்டு ஞானிகளும் சித்தர்களும் மனிதனின் உடற் கூற்றை முழுமையாக ஆராய்ச்சி செய்து இன்னின்ன வியாதிகளுக்கு இன்னின்ன மருந்துகள் என்று தெளிவாகக் கண்டுபிடித்து, மனிதன் நோயற்ற வாழ்வு வாழ அரிய சேவை செய்து வந்திருக்கிறார்கள்.

தற்கால வாழ்க்கை ஒரு பெரிய போராட்டமாக இருக்கிறது. பெருகிவரும் மக்கள் தொகைப் பிரச்சினை. விலைவாசி உயர்வுப் பிரச்சினை. புதிது புதிதாகத் தோன்றும் நோய்கள். வளர்ந்துவரும் அன்றாடத் தேவைகள். இத்தனை பிரச்சினைகளுடனும் மனிதன் போராடி வெற்றிகாண வேண்டியிருக்கிறது.

குழந்தை சுகமாக, ஆரோக்கியத்துடன் தான் பிறக்கிறது. ஆனால், சுற்றுப் புறங்களில் உள்ள அசுத்தம், வசதிக்குறைவான சூழ்நிலை ஆகியவற்றால் அதற்குச் சிறு சிறு நோய்கள் ஏற்படுகின்றன. இதற்கு வீட்டிலேயே கைமுறை அனுபவ ரீதியில் எளிதில் குணமாகக்கூடிய மருந்துகள் சித்த வைத்திய முறையில் இருக்கின்றன. அவற்றுள் சிலவற்றை இக்கட்டுரை வாயிலாகத் தொகுத்துத் தருகிறேன்.

1. ஜலதோஷம், சளி, இருமல், காய்ச்சல்.

| | | |
|---|---|---|
| தூதுவளை இலை | ... | 3 |
| கண்டங்கத்திரி இலை | ... | 2 |
| கருப்பு வெற்றிலை | ... | 1 |
| துளசி இலை | ... | 6 |

இதை நெருப்பு அனலில் வாட்டி கையினால் கசக்கி கால் சங்கு சாறெடுத்து காலையிலும், மாலையிலும், மறுநாள் காலையிலும் ஆக மொத்தம் 3 வேளை கொடுக்கலாம்.

அல்லது

ஒரு சட்டியில் தண்ணீர் விட்டு அந்தச் சட்டியின் மேல்பாகத்தைத் துணியால் கட்டி ஷை இலைகளைக் கசக்கி அதில் வைத்து மேலே சட்டிபோட்டு மூடி ஒரு கொதி வரும்வரை இரண்டு நிமிடம் நெருப்பில் வைத்து கொதிக்க வைத்து பிறகு இறக்கி ஷை இலைகளை எடுத்து சாறு பிழிந்து அந்தச் சாற்றை கால் சங்கு வீதம் 3 வேளை கொடுக்கக் குணமாகும். ஒவ்வொரு வேளை மருந்து கொடுக்கும் பொழுதும் மேற் கண்டவாறு தயாரித்தே கொடுக்க வேண்டும்.

2. மாந்தம், வயிற்றோட்டம்.

| | | |
|---|---|---|
| வெற்றிலை | ... | 2 |
| ஓமம் | ... | 1 பழைய பைசா எடை |

இரண்டையும் கசக்கி ஜலதோஷத்திற்குச் சொன்னமாதிரி நீராவியில் வேகவைத்து, சாறு பிழிந்து ஷை சாற்றைக் கால் சங்கு வீதம் 3 வேளை கொடுக்கவும்.

3. மலச்சிக்கல்:—வாதமடக்கி இலை கொஞ்சம் எடுத்து கசக்கி நீராவியில் வேக வைத்து ஷை சாற்றைக் கொஞ்சம் கொடுத்தால் போதும்.

4. பல் முளைக்கும் காலத்தில் ஏற்படும் வயிற்றோட்டம், அஜீரணம் முதலிய வற்றிற்கு ;—

1 பைசா எடை ஓமத்தை இளம் வறுப்பாக வறுத்து 1 அவுன்ஸ் தண்ணீரில் கொதிக்க வைத்து அரை அவுன்சாக வற்ற வைத்துக் கொடுக்க மலம் கட்டும். இப்படி மூன்று வேளை கொடுக்க நல்ல ஜீரண சக்தி ஏற்படும்

அல்லது

ஒரு சிறு துண்டு இஞ்சியைக் குடைந்து அதில் மிளகு பருமானம் பெருங்காயம் வைத்து, காலணு எடை உப்பை அம்மியில் வைத்து அதை நன்ருக அரைத்து ஓர் வெள்ளைத் துணியில் தடவி மேலேகண்ட இஞ்சியை அந்தத் துணியில் சுற்றி, கரி அடுப்பு அனலில் வைத்துத் துணி கருகவும், அதை எடுத்து, துணியை நீக்கி, மேலே கண்ட இஞ்சிக் கலவையை நன்ருகச் சுத்த ஜலம்விட்டு அரைத்து ஓர் துணியில் வைத்துப் பிழிந்து ஷை சாற்றை இரண்டு மூன்று வேளை கொடுக்க வயிற்ருேட்டம் நின்று விடும். மாந்தகுணம் குறைந்து ஜீரண சக்தியும் ஏற்படும்.

5. ஜலதோஷத்தினுல் ஏற்படும் மண்டைக் கனம் :—

அறிகுறி :—பிள்ளை சுணங்கிவிழும்.

மருந்து :—அமிர்தப்பால் $\frac{1}{4}$ சங்கு செஞ்சந்தனக் கட்டையை ஷை பிள்ளைப்பாலில் உரைத்து அதை நெற்றியில் பற்றுப்போட உடன் குணமாகும்.

நெஞ்சில் சளி கட்டி யிருந்தாலும், தொண்டையில் கபம் இருந்தாலும் இந்தப் பத்துப் போடலாம்.

6. சிறுநீர்பிரியாமலிருத்தல் :—வெள்ளரி விதை 1 பைசா எடை எடுத்து அறைத்துத் தொப்புளைச் சுற்றிப் பற்றுப் போட்டவுடன் நீர் இறங்கும்.

7. பசியின்மை, வயிற்றுவலி, சதா அழுகை : ஒரு பைசா எடை வசம்பை (பிள்ளை மருந்து) சுட்டு அதைச் சிறிதளவு வெந்நீரில் கரைத்துக் கொடுக்கவும். வயதிற்குத் தகுந்தபடி அளவைக் கூட்டிக் குறைத்துக் கொள்ளவும்.

8. சிறுநீர் சூடாயிருத்தல் :—தலை உச்சிக் குழியில் 1 பைசா எடை விளக்கெண்ணெயைத் தேய்க்கவும்.

## பெரியவர்களுக்கு ஏற்படும் நோய்கள்.

1. சாதாரணத் தலைவலி :—பசுவின் பால் $\frac{1}{8}$ படி தண்ணீர் $\frac{1}{8}$ படி. உரித்த உள்ளிப் பூண்டு 3 ரூ. எடை. இந்த மூன்றையும் கலந்து தண்ணீர் வற்றும் வரை காய்ச்சி, மத்து அல்லது கரண்டி வைத்துக் கடைந்து சர்க்கரை கலந்து சாப்பிடவும்.

2. ஒருத்தலை வலி :—தலைவலி 4 வகைப்படும். காலையில் சூரியன் தோன்றி மாலையில் சூரியன் மறையும் வரை உண்டாகும் தலைவலிக்கு சூரியா வர்த்தம் என்றும், சந்திரன் தோன்றியவுடன் உண்டாகிக் காலை நேரத்தில் விடும் தலைவலிக்கு சந்திராவர்த்தம் என்றும், சதா உறுத்தல் உண்டாகி ஒரு பக்கத்தில் கண்ணைப் பிடுங்கும் வேதனைக்கு ஒருத்தலைவலி என்றும், பனிவாடையில் ஏற்படும் தலைவலிக்கு வெறும் தலைவலி என்றும்பெயர். மேலே கண்ட வலிகளுக்கு எங்கள் பரம்பரையில் 1 அவுன்ஸ் இஞ்சிச் சாறும் (நீர் கலவாதது) அதே அளவு அமிர்தப் பாலும் ஓர் சுத்தமான கரண்டியில் குழம்பு பதமாகக் காச்சி நெற்றியில் பற்றுப் போடவும். முதல்நாள் காலையில் போட்ட பற்று மறுநாள் காலையில் குளிக்கும்வரை இருக்கவேண்டும். இவ்வாறு 3 நாட்களுக்குப் போடவேண்டும். இவ்விதம் 3 பற்றுப்போட எவ்விதத் தலை வலியும் திரும்ப வராது.

3. மலச்சிக்கல், கைகால் உளைச்சல் :—வாதரக்காய்ச்சி இலை ஒரு கைபிடி அளவு உருவி நீரில் அலசி அதை வேகவைத்து அதை வீசம்படியாக இறுத்து, மிளகு ரசத்தைக் கொதிக்க வைத்து, அதில் இந்த நீரை விட்டு இறக்கி வைத்துக் கொள்ளவும். இதில் 3 அல்லது 4 அவுன்ஸ் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட நல்ல முறையில் பேதியாகும். கைகால் உளைச்சல், முழங்கால் குலைவலி, வெட்ட வாய்வு முதலியவைகள் தீரும்.

4. ஜல தோஷம் :—ஊசியில் மிளகைக் குத்தி நெருப்பில் வாட்டி அந்தப் புகையை உள் இழுக்கவும். சிறிது முற்றிய ஜல தோஷம் :—மஞ்சளை சுட்டு உள் இழுக்கவும்.

5. தலைக்கனம் :—செங்கல்லை நெருப்பில் போட்டு அதில் 2, 3 துளி வேப்ப எண்ணெய் விட்டு ஆவி பிடிக்கவும்.

6. சாதாரணக் காய்ச்சல் :—இஞ்சியைத் தட்டி ½ வீசம்படி சாறு எடுத்து ஒரு சுத்தமான கரண்டியை அடுப்பில் வைத்து அதில் ½ அவுன்ஸ் தேன் விட்டு ஷை தேன் பொங்கும் பொழுது ஷை இஞ்சிச் சாற்றை விட்டுக் காலையில் வெறும் வயிற்றில் 3 வேளை கொடுக்கவும்.

7. வயிற்று வலி:—இரண்டு வகைப்படும். 1. குன்ம வயிற்று வலி (வாந்தி வரும்), 2. அஜீரண வயிற்று வலி.

நெல்லிக்காய் அளவு புளி எடுத்து ஓர் எலுமிச்சங்காயளவு கருப்பட்டி எடுத்து ½ படி நீரில் இரண்டையும் கரைத்து 4, 5 நாட்டு வெங்காயத்தை உரித்து பொடியாக நறுக்கி ஷை கருப்பட்டியும் புளியும் கரைக்கும்போது சேர்த்துக் கரைத்து வடிகட்டிக் கொடுக்க, வயிற்று வலி தீரும்.

8. கைகால் உளைச்சல், மதமதப்பு:— கொஞ்சம் சாம்பல், புறாவின் மலம் சிறிதளவு வேப்பெண்ணெய் 1 கரண்டிவிட்டு வறுத்துத் துணியில் வைத்து வலிக்கும் இடங்களில் ஒத்தடம் கொடுக்கவும்.

9. சிறுநீர்க்கடுப்பு:—கால் பெருவிரல் நகக்கண்களில் சிறிதளவு விளக்கெண்ணெயை வைத்து, இரண்டு உள்ளங்காலையும் சூடு உண்டாக்கும்படி தேய்க்கவும்.

10. பல்வலி – எகிறுவீக்கம் :—சம அளவு வெள்ளை எரிக்கலம்பூ சாப்பாட்டு உப்பு இரண்டையும் அரைத்து, ஓர் எருவின் நெருப்பில் வைக்க நீர் சுண்டி வெந்திருக்கும். மேலே கண்ட உப்பை எடுத்து பல் துலக்கி வர பல்வலி, எகிறு வீக்கம், சொத்தைப்பல் இவைகள் நீங்கும். ஆனால், எகிறுகளில் சீழ் வடிவதாக இருந்தால் ஆலம் விழுதை எரித்த சாம்பலும், ஆலம் விழுதை நீத்த சூரணமும் சம எடையில் கலந்து மேலேகண்ட எடையில் சாப்பாட்டு உப்பைக் கலந்து பொடி செய்து தேய்க்கவும்.

11. வாய் நாற்றம்:—மலைக்கரியை நுணுக்கி அதில் குன்றுமணி எடை எடுத்து அந்தப் பொடியைத் தேனிலாவது நெய்யிலாவது குழைத்துச் சாப்பிடவும்.

12. வயிற்றுக் கடுப்பு :—நாட்டு சர்க்கரை 1 அவுன்ஸ், தேன் 1 அவுன்ஸ், நெய் 1 அவுன்ஸ் குழைத்து 3 வேளை சாப்பிடவும்.

# சித்தர்களின் வயது!

**பண்டிட். P. முத்துக்கருப்ப பிள்ளை**
*தலைவர் :—சித்த வைத்திய சங்கம், மதுரை-1.*

தமது அரிய தளராத விடாமுயற்சியினால், நடைமுறை மக்கள் அடைய இயலாத நற்பெரும்பேறு ஆகிய - தன் உடலையும், உண்பொருட்களையும் தாம் நினைத்தபடி மாற்றிக்கொள்ளும் சக்தியைப் பெற்றும், உயிர்ப்பைப் பிடித்து மூலக் கனலை எழுப்பி மாமருந்துகளின் துணையால் மாருத மதியமுதம் உண்டு, நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு ஆகிய உலக இயல்பை வென்று, என்றென்றும் அழியாத உடலைப் பெற்றும் - சிரஞ்சீவியாக வாழ்ந்து வருபவர்களே முத்திபெற்ற சித்தர்கள் எனப்படும் மெய்ஞானிகளாவர்.

சித்து என்பது முழுமையான, பூர்த்திபெற்ற சிறிய அணுவெனப் பொருள் பெறும். இச்சிறிய பொருளை அறிவதற்கே இக்கால விஞ்ஞானியர் இடைவிடா ஆய்வில் ஆழ்ந்துள்ளனர். இதனைக் கர்ப்ப காலம் தொட்டே நமது அரும் பெரும் சித்தர் பெருமான்கள் ஆற்றல் மிக்க ஆய்வின் பயனால் வெற்றி கொண்டுள்ளனர். அணுவைப் பிரித்தறியும் இந்த ஆய்விற்கென, அவர்கள் கல்வம் - குளவி போன்ற பல நுண்ணிய கருவிகளைக் கையாண்டு வெற்றி பெற்று அணுவை அணுவிற்கணு வாகவும், பரமாணுவாகவும் பிரித்து அதன் நற்பலனை அடையும் பேறு பெற்றனர். அவர்கள் கர்ப்ப கோடிக்காலம் வெளியில் உலவியும், சமாதி நிலையிலிருந்து அழியாத உடல் பெற்றும் காட்சியளிப்பவர்களாகும்.

> **அணிமாதி யட்ட சித்திகளையும் பெற்றவர்களே,**
> **செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடித்தவர்களே,**
> **எண்வகைக் கன்மங்களையும் ஜயித்தவர்களே சித்தர்கள்.**
>
> (சிலப்பதிகாரம்.)

இங்ஙனம், சித்தி பெற்றவர்கள் நவகோடிப் பேர் எனக் கூறப் பெறினும், நூற்களின் மூலம் ஒரு சில சித்தர்களின் வரலாற்று விபரங்களே காணக் கிடக்கிறது. அவ்வாறு குறிப்பிடப் பெறுபவர்களும், பன்முறை சமாதியடைந்து, அந்நிலையிலேயே பல நூற்றாண்டுகாலம் இருந்து, பின் மீண்டும் வெளியேறி உலவி வந்திருப்பதாகவும் - நாம் எளிதில் அறிய இயலாவண்ணம், நம்முடனேயே பித்தனைப் போன்றும், பேயனைப் போன்றும் உலவி வருவதாகவும் அறியற்பால. இங்ஙனம் கடைசியாகச் சமாதியிலிருந்து வெளிவந்த சித்தர்களின், சாதி-வயது-பிறந்த மாதம், நட்சத்திரம்-அடங்கிய தலங்கள் ஆகிய விபரங்களைச் சமீபகால நூற்கள் மூலம் அறிகின்றோம். இவர்கள் தவிர கோடிக்கணக்கான சித்தர்கள் இன்னும் சமாதி நிலையிலேயே உள்ளனர் எனக் கொள்ளலாம்.

நாமனைவரும் நல்வாழ்வு பெறும் நன்நெறிகளை வரையறுத்து, அறுதியிட்டுக் கூறும், அரும்பெரும் சித்தர்களின் அரிய பல நூற்கள், நம்முன்னோர்களின் அசட்டையினாலும், இயற்கை மாறுதல்களினாலும் பலசமயம், பல்வேறு வழிகளில் அழிக்கப்

பெற்றுள்ளன. சித்தர்களின் சீரிய கருத்துக் கருவூலங்கள், முதற்சங்க காலத்தில் இலெமூரியாக் கண்டம், இந்து மகா சமுத்திரத்தில் மூழ்கியபோழ்தும் - கடைச்சங்க காலத்தில் பாண்டிய மன்னனின் தவறு கண்டு வெகுண்டெழுந்த கண்ணகி மதுரை மாநகரைத் தீக்கிரையாக்கிய போதும், அவற்றில் சிக்கி அழிவு பட்டன.

இவையன்றி, நாட்டின்கண் அவ்வப்போது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு - பாமரரின் பாதுகாப்பின்மையால் கண்ட கரையான் அரிப்பு - அவ்வகை ஏடுகளின் நலன்களைத் தமது வழியினரே அடைய வேண்டுமென்ற சுயநல மறைப்பு-அவைகள் அறிவற்ரோர் கையில் கிடைத்து அவர்கள், 'நாய்பெற்ற தெங்கம் பழம்' போல் அவற்றின் பயனைத் தானும் அனுபவிக்க இயலாமல், பிறரும் அறிய வகை செய்யா திருந்தமை, ஆகிய பல காரணங்களால் கிடைத்தற்கரிய சித்தர்களின் செல்வங்க ளனைத்தும் நமக்குப் பயன்படாமல் மக்கி, மடிந்து அழிவுற்றுப் போய்விட்டது. இதனைக் கீழ்க்காணும் செய்யுளால் அறியலாம்.

**ஏரணம், உருவம், யோகம், இசை, கணக்கு, இரதம், காலம்,**
**தாரணம், அறமே, சந்தம், தம்பம், நீர், நிலம், உலோகம்,**
**ஆரணம், பொருள் என்றின்ன ஆன நூல் யாவும் வாரி,**
**வாரணம் கொண்டந்தோ! வழி வழிப் பெயருமால்.**

இங்ஙனமே, திருக்குறளில் சிறப்புப் பெற்றதும், கடைச்சங்க காலத்தில் இயற்றப் பெற்றதுமான, பெருந்திரட்டு - குறுந்திரட்டு - விதிநூல் - உடல்நூல் - நாடி நூல் - செந்தூரம் - மணி(கட்டு) - மருத்துவக் கண்ணாடி - அகத்தியர் இரதம் - முருகர் இரதம்-முருகசாலம்-சத்திசாலம்-சிவசாலம் - இந்திரசாலம்-நீறு 200 - ஆகிய நூற்களும், இன்னபிற எண்ணற்ற ஏடுகளும் இருந்திருப்பதாகத் தெரிந்தாலும், நமக்குக் கிடைப்பவை மிகச் சிலவேயாகும். இவ்வாறு பல்வகை அழிவுகளிலிருந்தும் தப்பிப் பிழைத்து நம் கைகளுக்குக் கிடைத்த ஒரு சில நூற்களின் வாயிலாகவே, நம் முன்னோர்கள் அறிவிலும், தெளிவிலும், ஆய்விலும், ஆற்றலிலும் மிக்க தேர்ச்சி பெற்று உலகின் முதல் இனமாகந் தலை நிமிர்ந்து நிற்கும் நிலை பெற்றிருந்தார் என்பது தெளிவாகும்பொழுது, சித்தர்கள் இயற்றிய செம்மை நூற்களெல்லாம், நமக்குக் கிட்டியிருப்பின் அவற்ருல் நாம் பெறும் நற்பயன்களுக்கோர் எல்லைதான் இருந் திருக்குமோ? இப்படி நூற்கள் பாழாக்கப்படலாமெனக் கருதியே, நம் முன்னோர்கள் சித்தர்களின் கருத்துப் பாடல்களைத் தாலாட்டு, தெம்மாங்கு, விளையாட்டு, ஒப்பாரி ஆகிய பல சந்தர்ப்பங்களில் பாடிப் பழகும் வழி முறையினை வகுத்து, அவை மக்க ளிடையே மறைந்து போகாமல் தொடரும் நற்பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். அவ்வகைப் பாடல்களின் உட்கருத்தை ஆய்ந்து, தெளிந்தால் நல்வாழ்வின் வழி காட்டிகளான சித்தர் பாடல்களின் பெருமை புலப்படும். ஆகவே சென்றவைபோக, இனியாவது நம் கண்ணில் காணும் பண்டைக் கருவூலங்களனைத்தையும், நம் கண்ணிலும் மேலாகக் கருத்துடன் காத்து, அவற்றின் நற்பயன்களை நாமும், நம் வழிமுறை மக்களும் அடைந்து நலனடையும் வண்ணம் நல்வகை செய்ய வேண்டுவது நமது தலையாய கடமையாகும்.

நிற்க, சித்தர்களின் வயது முதலிய விபரங்களைப்பற்றி பல நூற்களிலும் வெவ் வேறுவிதமாகக் கூறப்படுகின்றன. மற்றும், திருமுருகக் கடவுள் அருள் பெற்று

அவர்தம் தீந்தமிழை உலகிற்கு எடுத்துரைத்த ஏந்தல் எனக் கருதப்படும், அகத்தியர் பெருமானைத் தலைவராகக் கொண்டு 'சித்தர்கள் குழு' அமைத்துச் செயல்பட்டனர் எனவும், மேலும் மேன்மை மிக்க, மெய்ஞ்ஞானச் சித்தர்களாகிய அகத்தியர், தன்வந்திரி, திருமூலர், நந்தீசர் ஆகிய சிலர் ஆதிபுராண, இதிகாச காலத்திலிருந்தே கடவுள் தன்மையுடன் விளங்கி வருபவர்களெனவும் பலவாறுகக் கூறுவதுண்டு. எனவே சித்தர்கள் பற்றிய ஆதாரப்பூர்வமாகத் தீர்க்கமான முடிவிற்கு வருதல் சற்றுக் கடினமே என்பது என் கருத்து.

சித்தர்களுள் சிறப்புடையோனர, "சப்த ரிசிகள்" - "நவநாதச் சித்தர்கள்" - "பதினெண் சித்தர்கள்" எனப் பிரிவாகக் கூறுவர். அதாவது அகத்தியர் - ஆங்கிரசர் - காசிபர் - கௌதமர் - மார்க்கண்டர் - புலத்தியர் - வசிட்டர், ஆகிய ஏழு பேர்களும் 'சப்த ரிசிகள்' எனவும்; அனுதிநாதர் - ஆதிநாதர் - கடேந்திரநாதர் - கோரக்கநாதர் - சத்திநாதர் - சதோகநாதர் - மச்சேந்திரநாதர் - மாதங்கநாதர்-வெகுளிநாதர், ஆகிய ஒன்பது பேர்களும் 'நவநாதச் சித்தர்கள்' எனவும்; அகத்தியர் - இடைக்காடர்-இராமதேவர்-கமலமுனி-கும்பமுனி-கொங்கனர்-கோரக்கர்-சட்ட முனி-சுந்தரானந்தர் - மச்சமுனி - பதஞ்சலி - பாம்பாட்டி - போகர்-போதகுரு-தன்வந்திரி-திருமூலர் - நந்தி - வால்மீகி, ஆகிய பதினெட்டுப் பேர்களும் 'பதினெண் சித்தர்கள்' எனவும் கூறப் பெறுவர். எனினும் இவர்களனைவருள் கடமுனி, கடேந்திரன், கும்பமுனி, குருமுனி என்ற பல பெயர்களால் அழைக்கப் பெறும் அகத்தியமாமுனிவரே அனைத்திலும் முதன்மைபெற்ற முதற் சித்தனுகக் கருதப்படுகின்றுர்.

நிற்க, நவகோடிச் சித்தர் பெருமான்களிலும், மிகச் சிலரது பெயர் - வயது முதலிய விபரங்களை நாம் அறியக் கிடக்கிறதெனவும், பிறர் பற்றிய தெளிவான, முழுமையான விளக்கம் எதுவும் புலப்படவில்லையெனவும் குறிப்பிட்டிருந்தேன்.

அன்பர்களே, சீர்மிகும் சித்தர்களின் சிறப்பு பற்றியும், அவர்தம் தமிழ் மருத்துவத்தின் தனிப்பெருமை பற்றியும் பல மருத்துவ வல்லுநர்கள் இங்கே வேறு இடங்களில் விரிவாக விளக்கியிருப்பதால், இக்கட்டுரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன். அதற்கு முன், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாபெரும் 'தமிழறிஞர் மாநாட்டின்'கண் வெளியிடப் பெறும் இவ்வரிய 'சிறப்பு மலரில்' எனக்குமொரு வாய்ப்பளித்து இடம் பெறச் செய்த மாநாட்டுக் குழுவினருக்கு என் அகங்கனிந்த நன்றியையும், சிரம் தாழ்ந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்!

வாழ்க தமிழ்! வளர்க கலை!! வெல்க சித்தம்!!!

வணக்கம்.

# தென்னாட்டு மூலிகைகள்

**டாக்டர். ஆர். தியாகராஜன்,** எல்.ஐ.எம்.,

லெக்ஷரர் கிரேடு 1, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

உலகத் தமிழர் மாநாட்டை முன்னிட்டு வெளியிடப் பெறுகின்ற சிறப்பிதழில் தென்னாட்டில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்ற மூலிகைகள் சிலவற்றைப் பற்றி எழுத வேண்டுமென்று, சித்தர்களினால் யோக சாதனைக்குப் பயன்படுத்தப்பட்ட கரிசலாங்கண்ணியை, மகோதர நோய்க்குச் சிறந்ததென்று தம் அரிய ஆராய்ச்சியின் மூலம் உலகத்திற்கே நிரூபித்த மேனாட்டு மருத்துவப் பேரறிஞர் டாக்டர் உயர்திரு. இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள் ஊக்கமளித்தார்கள்.

மேலும் உலகத் தமிழர் மாநாட்டு சித்த மருத்துவப் பகுதிக்குச் செயலாளரும் தமிழ்நாடு அரசாங்க சுகாதாரத் துறையின் துணைச் செயலாளருமான உயர்திரு. K. சிதம்பரம், B.Sc., அவர்கள், சித்த மருத்துவம் மறுமலர்ச்சியடையக் கொடுத்து வருகின்ற ஊக்கத்திற்கும் நன்றி தெரிவித்துக் கட்டுரையைத் தொடங்குவோம்.

### ஆதொண்டை. Cappuris Zeylanica (C. Hrrida)

இது வேலிக் கால்களில் படரும் சிறிது கனத்த கொடியினத்தைச் சேர்ந்தது. காற்றோட்டி என்ற இதனுடைய வேறு பெயரினால் இது வாத நோய்களுக்கு வழங்கும் மூலிகைகளில் ஒன்றாகும் என அறியலாம்.

இதன் காயைச் சமைத்தும் வற்றலிட்டும் தமிழ் மக்கள் அருந்துகிறார்கள். வேரை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி முடித்தைலமாகவும், பிடித்தைலமாகவும் பயன்படுத்தப் பீனசத்தாலுண்டாகும் மண்டைக் குடைச்சலும் வாதக்கடுப்பும் முறையே நீங்கும்.

### இம்பூறல். Olden Landia Umbellata Hedyotis Umbellata

இது பூண்டினத்தைச் சேர்ந்தது. இயற்கையில் தோட்டங்களிலும் மேட்டு நிலங்களிலும் தானாகவே பயிராகும். தரையில் படரக்கூடியது. இதன் வேர் ½ முதல் 1 அடி நீளம் வரை சிறிது செம்மஞ்சள் நிறத்துடன் பல வேர்களையுடைத்தாயிருக்கும். பூ, வெண்மையாக இருக்கும். சிறப்பாகத் தென்னாட்டில் இராமேஸ்வரம் முதலிய தென் தேசக் கடற்கரை யோரங்களில் இதன் வேருக்காகப் பயிரிடப்படுகிறது. இதில் துணிகளுக்குச் சிவப்புச் சாயமூட்டக்கூடிய சாயப் பொருள் இருக்கிறது. எனவே இதற்குச் சாயவேர் என்ற பெயரும் உண்டு. முழுப் பூண்டும் பயன்படினும் இதனுடைய வேரைத் தட்டி எடுக்கப்படும் வேர்ப்பட்டை சிறப்பாகப் பயன்படுத்தப் படுகிறது. இன்புரு வேரை இதமாக அருந்துபவர்களுக்குச் சுவாச உறுப்புகளைப் பற்றி வருகிற துன்பந்தரும் இருமல், சுவாசம் முதலிய நோய்கள் பறந்து போம் என்று பதார்த்த குண சிந்தாமணியில் கூறப்பட்டிருக்கிறது.

"இம்பூறலைக் காணாது இரத்தங் கக்கிச் செத்தானே" என்று சட்ட முனி வண்ணம் எனும் நூலில் கூறப்பட்டிருப்பதால், இதன் வேர்ப்பட்டையைக் கொண்டு செய்யப்படும் இலேகியம் முதலிய மருந்துகள் இரத்தத்தைக் கக்கச் செய்யும் நோய்கட்கு நன்றென்றறியலாம். இதனைக் கொண்டு செய்யப்படும் இலேகியம் வருமாறு :—

தட்டி எடுக்கப்பட்ட இம்பூறல் வேர்ப்பட்டையைப் பாலில் அரைத்துக் கரைத்து அதில் பனங்கற்கண்டு சமன் சேர்த்து அடுப்பேற்றிப் பாகுபதம் வரும் சமயத்தில் சிறிதளவு சாதிக்காய் சாதிப்பத்திரி, வால்மிளகு இவற்றின் சூரணம் சேர்த்துக்கிண்டி, பசுவின் நெய் சேர்க்கவும். தேன் சேர்க்கக் கூடாது. சுண்டைக்காயளவு இரு வேளை அருந்த உடலினின்று வெளிப்படுகின்ற குருதியை நிறுத்தும். இலேகியம் செய்ய முடியாதவர்கள் வேர்ப்பட்டையுடன் சிறிது

வால்மிளகு சேர்த்து அரைத்துச் சுண்டைக் காயளவு கற்கம் நாளுக்கு இருவேளை அருந்தத் தீரும்.

### ஓரிதழ் தாமரை, Viola Suffruticosa

"இரத்தின புருஷ" என்ற பெயருள்ள இது சதுப்பு நிலங்களில் நிலத்தை ஒட்டிப் பயிராகும் மிகச் சிறிய பூண்டு. இதைச் சுவைக்க வாயில் இனிப்புச் சுவையுடன் குழகுழப்பாயிருக்கும்.

தாதுவை உண்டாக்கித் தனி மேகத்தைத் தொலைத்து மேனிக்கு அழகுதர இப்பூண்டை முழுதும் அரைத்து உள்ளுக்கு அருந்த வேண்டும். தமிழ் நாட்டில் பால் இல்லாதவர்கள் பால் சுரக்க இதனை அரைத்துப் பசுமோரில் கலந்து அருந்திப் பயன் அடைகின்றனர். இதனை,

"ஓரிலைத் தாமரையின் உற்ற குணத்தைக்கேளாய்
மார்பில் பாலில்லாத மங்கையர்க்கு—மோரில்
குடிக்கப் பாலுண்டாகும் கோர மேகத்தைப்
படிக்குளிருக்கா தொழிக்கும் பார்"

என்ற செய்யுளால் அறியலாம்.

### கொல்லன்கோவை Bryonia Epigaeus Hook Corallo Carpus Epigaeus Hook

ஆகாசக்கருடன் என்று சொல்லப்படுகின்ற கொடியினத்தைச் சேர்ந்த கொல்லன் கோவைக் கிழங்கைக் கட்டித் தொங்க வைக்க அழியாமல் தழைத்து வளர்ந்து வருவது சிறப்பாகும். இதனாலேயே ஆகாசக் கருடன் கிழங்கென்று பெயர் பெற்றதென்பர்.

இக்கிழங்கின் மேற்றோலை நீக்கி உலர்த்திப் பொடியாக்கி ஒரு வராகனெடை வரை சர்க்கரையுடன் கலந்து, உப்பு, புளி நீக்கிப் பத்தியத்துடன் உண்டுவர பாம்புக்கடி போன்ற துட்டவிடங்கள், பெருங்குட்டம். அக்கிப்புண், கரப்பான், மெய்யரிப்பு முதலிய தோல் சம்பந்தப்பட்ட பிணிகளும் கண்டமாலை, கீல்சம்பந்தப் பிணிகள் முதலியனவும் நீங்கும்.

கிரகணி, அதிசாரம் முதலிய குடல் நோய்களுக்குக் குடிநீர் செய்தும் வாத நோய்களுக்குத் தைலங்கள் செய்தும் வழங்குவது மரபு.

### தூதுவேளை Solanum Trilobatum

இது தென்னாடெங்கும் வேலிக்கால்களில் பயிராகும் கொடியினத்தைச் சேர்ந்தது. இக்கொடியிலும் இலைகளிலும் வளைந்த சிறு முட்கள் உண்டு. இதன் பூ ஊதா நிறமாயிருக்கும். குற்றமற்ற பவழத்திற்குத் தூதுளங்கனியின் நிறம் ஒப்பிடப்பட்டிருக்கிறது.

இதன் இலை, பூ, காய், பழம், வேர் ஆகிய உறுப்புகள் பயன்படுவன. இது கைப்புச் சுவையுடையது. வெப்பத்தைக் கொடுக்கக் கூடியது.

தூ, தூ, என்று கோழையைத் துப்ப வைக்கும் இருமல், கயம், இரைப்பு, முதலிய நுரையீரலையும், அதன் உறுப்புகளையும் பற்றிய பிணிகளைப் போக்கும் தன்மையால் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

ஏகாதசி விரதமிருந்தவர்கள் மறுநாள் பாரணை செய்யும்போது குழம்பு முதலிய உணவுடன் தூதுவேளைக் கீரையைச் சேர்ப்பது பண்டைக் காலந் தொட்டு தமிழ்நாட்டில் வழக்கத்திலிருக்கிறது. இது உணவுக்குச் சுவையைக் கொடுப்பதனாலும் முத்தோடத்தைத் தன்னிலைப் படுத்துவதாலும் வெப்பத்தைக் கொடுத்து மந்தத்தை நீக்குவதாலும் பயன்படுத்தப் படுகிறதென்று அறியலாம்.

பூவை அருந்திவர புஷ்டியும் தாதுவும் திண்ணமாயுண்டாகு மென்பதைக் கீழ்க் கண்ட அழகிய செய்யுளால் அறியலாம்.

"புஷ்டியுண்டாம் தாதுவுமாம் பொங்கழகோ [டாற்றல் மிகும்
முட்ட நரைத்து முதிர்ந்தவனைக்—கட்டழகு
மாதுளத்தி னங்காது வைத்திடவும் எண்ண [முற்றால்
தூதுளத்தின் பூவுண்ணச் சொல்."

இது காயகற்ப மூலிகைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் காய், வற்றல், இலை முதலியன பயன்படும்.

தமிழ் மருத்துவர்கள் தூதுளை நெய் செய்து கரண்டி அளவாக நாற்பது நாள் எண்வகைக் கயநோய்களுக்கும் ஈழை, இருமல், காசம் முதலிய கப நோய்களுக்கும் கொடுப்பது வழக்கத்திலிருக்கிறது. இது அறிவை விருத்தி செய்யும்.

### மிளகரணை Toddalia Aculeata

இது ஓர் முள் நிறைந்த கொடியினத்தைச் சேர்ந்தது.

இதனுடைய இலை, பட்டை, வேர், பழம் முதலியன பயன்படும் உறுப்புகளாகும். கைப்புச் சுவையுடைய இதனுடைய பட்டையில் "Berberin" என்ற சத்தும் எலுமிச்சை மணமுள்ள எண்ணெய்ச் சத்தும் இருப்பதாக ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பசித்தீத்தூண்டி, உடலுரமாக்கி, முறை வெப்பகற்றிச் செய்கைகள் இதற்குச் சிறப்பாக இருப்பதனல் முறைச் சுரத்திற்கும் மற்றைய சுரங்களுக்கும் வழங்கப்படுகிறது. கொய்னவைக் காட்டிலும் முறைச் சுரத்திற்குச் சிறந்த பொருளாகக் கருதுவதன் காரணம் நீண்ட நாட்கள் வழங்கினலும் கொய்னவினுடைய துர்க்குணங்களாகிய காதில் இரைச்சல், காது கேளாமை, முதலியன விளைவிக்காமையினலென்க.

இலை, பட்டை. வேர்ப்பட்டை முதலியவற்றிலொன்றை குடிநீர் செய்து வழங்கலாம். தமிழ் மருத்துவர்கள் இதனை

"..............................................

..................................பையவரும்

ஈழை இருமல் இரைப்புப்புசங் தொலைக்கும்

நாளு மிளகரணை நன்று"

என்று கூறுவதால் அறியலாம்.

மேற்கண்ட கபப்பிணிகளை நீக்குவதற்குக் குடிநீராகக் கையாளலாம். இதன் கல்கத்தை வயிற்று வலிக்கு உபயோகிப்பதுண்டு.

### நரளை Vitis Lanata

இது சிறுநரளை, பெருநரளை என இருவகைப்படும். கொடி இனத்தைச் சேர்ந்தது, தென்னிந்தியாவி லெங்கும் மேற்குத் தொடர்ச்சி மலையிலும் காணக் கிடக்கிறது. இது காரலும் புளிப்புச் சுவையுமுடையது.

இதன் இலையும் கிழங்கும், பெண்கள் வயிற்றில் உருளுகின்ற இரத்த குன்மத்தை (Uterine Disorders)ப் போக்கும். கிழங்குப் பொடியைச் சர்க்கரையுடன் கலந்து ஒரு வராகனெடை உட்கொண்டுவர மூலமுளை, அழிபுண், தோல் பிணிகள் நீங்கும். செம்பைப் பொன்போல சுத்தி செய்யக்கூடியது. இலிங்கசுத்திக்கும் பயன்படும்.

### பொன்னுங்காணி Alternanthera Sessiles

கொடுப்பை என்ற பெயரில் வழங்கப்படுகின்ற இம்மூலிகை தென்னுட்டில் ஈரமுள்ள நிலங்களில் எதேச்சையாகப் பயிராகின்ற படர்பூண்டு. இது காயகற்பப் பூண்டென்றும் இதில் தங்கச் சத்து உண்டென்றும் இதை முறைப்படி உண்டு வருபவர்களது உடல் பொன்னிறமாம் என்றும் நூல்களில் வியந்து கூறப்பட்டிருக்கிறது.

"பொன்னுங்காணிக்குப் புளியிட்டுக் கடைந்தால்

உண்ணுக்கெல்லாங் தித்திக்கும்"

என்ற முதுமொழிக் கிணங்கத் தென்னுட்டு மக்கள் இதனைக் கீரையாகச் சமைத்துண்பது வழக்கம். எனினும் கண்நோய் நீக்கத்திற்கும், எதிரது காத்தற்கும் உப்பில்லாமல் வேக வைத்து வெண்ணெயிட்டு நாற்பது நாட்கள் உண்டுவர நன்மை பயக்கும்.

இதனைக் கொண்டு செய்யப்படுகின்ற தைலங்களைக் கண் நோய்களுக்குத் தலைக்குத் தேய்த்து மூழ்குவது வழக்கம்.

### முசுமுசுக்கை Bryonia Scabra

இது குரங்கின் கை என்று பரியாயப் பெயரிட்டு அழைக்கப்படுகின்ற முசுமுசுக்கை கொடியினத்தைச் சேர்ந்தது. இதன் இலை சுணைகளோடு சுரசுரப்பாயிருக்கும். இதன் பூ மஞ்சள் நிறமாகவும் கனி பவழ நிறமாகவும் இருக்கும்.

முசுமுசுக்கை மாமூலி இலையை உண்பவருக்கு இருமலுடன் ஈழை இரைப்புப் புகைச்சல் மருவுகின்ற நீர்த் தோடம் மாறும்.

தமிழ் மக்கள் ஊறவைத்த புழுங்கலரிசியுடன் இதன் இலையையும் சேர்த்தரைத்து அடைசுட்டு கோழைக்கட்டு இருமல் ஈழை இவற்றிற்கு நிவாரம் காண மருந்துக்கு மருந்தாகவும், உணவுக்கு உணவாக்வும் அருந்துவது வழக்கம்.

இதன் இலைச்சாறு மேற்குறித்த நோய்களுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்குச் சிறந்த துணை மருந்தாம்.

**விஷ்ணு கிராந்தி Evolvulus Alsinoides**

இது தரிசு நிலங்களில் புற்களுக்கிடையில் தரையோடு தரையாகப் படர்ந்திருக்கும் சிறு பூண்டு. இதன் இலை சிறிது சாம்பல் பூத்த நிறமாயிருக்கும். இதன் பூ நீல நிறமாயிருக்கும். இதில் வெள்ளைப்பூ உடையனவும் உண்டு.

“ விடாச் சுரத்திற்கு விஷ்ணு கிராந்தி ”

என்ற பழமொழி தமிழ் மருத்துவ உலகில் உலவி வருகின்றது. நாட்பட்ட சுரங்களுக்கும் கபசுரங்களுக்கும் இதனைக் குடிநீரிட்டு வழங்குவார்கள். இதனோடு துளசி, தும்பை, சேர்த்துக் குடிநீரிட்டுப் பருகி வரக் கபசுரம் நீங்கும். இது நிற்க. சரீரம் பல ஆண்டுகள் அழியாமல் வைத்திருக்கக்கூடிய பல மூலிகைகள் தென்னாட்டில் வழக்கிலிருந்து வருகின்றன. எடுத்துக்காட்டாக,

“ காக்கை கரந்தை கருநீலி பொற்கையான்
வாக்குக் குரிய வல்லாரை ஓரைந்தும்
பாக்களவாகிலும் அரைத்து உண்டிட
ஆக்கைக் கழிவில்லை ஆயிரத் தெட்டாண்டே ”

என்ற செய்யுளை நினைவு கூர்க.

| | | |
|---|---|---|
| குறிப்பு :— | காக்கை | — காக்கட்டான் |
| | கரந்தை | — சிவகரந்தை |
| | கருநீலி | — அவுரி |
| | பொற்கையான் | — மஞ்சட் கரிசாலை. |

இவை தவிர இரசத்தைக் கட்டக்கூடிய அழுகண்ணி, துணித்த சதையைக் கூட வைக்கும் தொழுகண்ணி வற்மத்திற்குப் பயன்படும் அற்நிலைப் பொருத்தி, ஒடுவடக்கி போன்ற அபூர்வ மூலிகைகள் அனந்தம் சித்த மருத்துவத்தில் கூறப்பட் டிருக்கின்றன. எழுதப்புகின் மிகும்.

தென்னாட்டு மூலிகைகள் பற்றிய ஆராய்ச்சி சென்னை அடையாற்றிலுள்ள இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கூட்டுறவு பார்மஸியில் கேப்டன். டாக்டர். ஜி. சீனிவாசமூர்த்தி அவர்களின் பெயரால் இயங்கும் ஆராய்ச்சி நிலையத்திலும் நடந்து வருகிறது.

சித்தத்தில் சிந்தித்தபடியே உடலும் உண்பனவும் அடைந்து அனுபவிக்கின்றவர்களே சித்தர்கள்.

இவர்கள் சிவனெறியைப் பூண்டு ஒழுகிய சித்த சமயத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள். இவர்கள் காரண காரிய வகைகளால் உடம்பைச் சோதித்து எவ்வெவ்வகைப் பொருள்களால் உடல் வளர்ந்து அழிகின்றதென்பதை ஊக்கத்தாலும் முயற்சியாலும் கண்டறிந்து உடம்பைப் பொய் என்று சொல்லுவதற்கு மாறாக மெய்யென்ற சொல்லுக்குப் பொருள் கண்டு சிலப்பதிகாரத்திற் கண்டபடி அணிமா, மகிமா, முதலிய அஷ்டமா சித்திகளை அடைந்து அனேக காலம் உயிருடனிருக்கக்கூடிய வாழ்வைப் பெற்றவர்களாவர்.

மேலும் மூச்சை அடக்கிப் பிடித்து மூலக் கனலாகிய குண்டலி சக்தியை எழுப்பி மணி மந்திர மருந்துகளின் உதவியால் மாருத மதியமுதமுண்டு, நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு ஆகிய இவைகளை அறியாது நித்திய உடம்பைப் பெற்றவர்கள். ககன குளிகை கொண்டு அனேக அண்டங்களைச் சுற்றி ஆங்காங்குள்ள அதிசயங்களைக் கண்டு ஆனந்திப்பவர்கள்.

தமிழ் வைத்தியத்திற்குக் காரண கர்த்தர்களாகி உலகத்தாருக்குப் பயன்படும்படி அநேக நூற்களைப் பாடி வைத்த மகான்கள். இவர்கள் தொகை எழுவதினாயிரம் என்று சொல்லப்படும்.

The Siddhars were of a Tamil Sect which maintained Siva for its God, and rejected everything else in the Saiva system which was inconsistent with pure Theism. They were persons holding tremendous powers in themselves and who, if they chose could retain their bodies for Ages or disintegrate them by chemical processes, powers of words or concentration of will. They had investigated and studied fully all kinds of drugs, minerals and poisons and their physical, chemical and psychological properties and therefore they knew what was beneficial and what was not to their existence.

They held that the body was the one and only instrument with which one could attain success in Spiritual evolution and growth and that if the body could only be made strong

and perfect they could get rid of birth and death eventually after the full growth and development of the soul.

They attained Spiritual awakening by rousing the Kundalini (Serpent fire or power as it is termed) lying dormant at the base of the spinal column in the region of the sacral plexus and thereby attained all Siddhis. They were the masters of their bodies and could change the very materials in them by re-arranging the molecules in such a fashion that they had no more sickness or death. They could send mental electricity without the aid of the nerve-channels and thus work all over the Universe with any one at any place.

They could fly through the aeriel regions with the aid of Ianimated mercurial pills. Many of the most wonderful medicines of the present day, owe their origin to them notably the use of metals in medicines. They are 70,000 in number.

Dawson in his Classical Dictionary of Hindu Mythology gives a brief account of these Siddhars.

# சித்த வைத்யத்தின் தேவை

சி. மெய்கண்டார், ஆணையாளர், P.V.C. திருவள்ளூர் (ஓய்வு).

1. "நீர்சுருக்கி, மோர்பெருக்கி, நெய்யுருக்கி
உண்பவர்தம் பேர்உரைக்கில் போமேபிணி"
(வைத்தியப் பழமொழி)

சரித்திரச் சான்று :

உலக வரலாற்றில் மனித இனமும், உடன் பிறந்த பிணியும், பிணி தீர்க்கும் மருந்தும், மருத்துவமும் ஒன்றோடொன்று தொடர்பு பெற்று இயங்கக்கூடியதாக இருக்கின்றன.

பூர்வ காலத்திலும், வேத காலத்திலும். சரித்திர காலத்திலும் மனிதகுல வளர்ச்சி, முன்னேற்றம் நாகரிகம் போலவே மருத்துவமும், மருந்து செய்முறையும் வளர்ச்சி யடைந்து வந்தன. சற்றேறக்குறைய 18-வது நூற்றாண்டு வரையில் இந்திய மருத்துவ முறை அதிகமாக மாறுபடவில்லை என்றே கூறலாம். மேனாட்டு முறைகளும் மருந்தும் உட்புக (அலபேத்திக்) ஆரம்பித்ததிலிருந்து நமது, சித்த வைத்யம், செய்முறை, அநுபானம் இவைகள் படிப்படியாக வீழ்ச்சியுற்று வருகின்றனவென்றே கூறலாம்.

நம் நாட்டு வைத்தியப் பிரிவுகள் :

1. சித்த வைத்யம். மருத்துவம்.
2. மணிமந்திர ஔஷத முறைகள்.
3. காயகற்ப முறைகள். (ரஸவாத முறைகள்).
4. இயற்கை வைத்தியம். (முனீஸ்வரர் கையாண்ட முறைகள்).
5. ஆயுர்வேத முறைகள்.
6. யூனானி வைத்யம்.

மேனாட்டு வைத்யம் :

7. அலபேத்திக் முறைகள். (செய்முறை, மருத்துவம், சஸ்திர சிகித்சை).

நம் நாட்டு வைத்தியமும் முறைகளும் :

பின்னோக்கி க்ஷீண நிலையை அடைந்த காரணங்கள்.

மேற்கூறிய ஒவ்வொரு முறைகளையும் பற்றிய விரிவான ஆராய்ச்சி இன்னும் நடைபெறவில்லை. விரிவான ஆராய்ச்சியும், சர்க்காரது ஆதரவும் இவைகட்குப் பெரிதும் தேவைப்படுகின்றது. வளர்ச்சியைப் பற்றிக் கூறுமுன் வீழ்ச்சியடைந்த காரணங்களை ஆய்ந்தரிவதும் அவசியமாகும்.

நமது நாட்டில் சித்த முறைகள் சென்ற நூற்றாண்டு வரை பிரசித்தி பெற்ற நிலையில் இருந்து வந்ததாக அறிகின்றோம்.

சித்தர்கள் பதினெண்மரும் கையாண்ட வைத்ய முறைகள் ஆனதினால் இம்முறைகட்கு இன்றும் சித்த வைத்திய முறைகள் என்று கூறி வருகின்றோம்.

வீழ்ச்சிக்குரிய காரணங்கள் :

1. பொதுவாக, சித்த வைத்ய முறைகளும், மற்றைய முறைகளும் ரகசியமாகவும், பரம்பரை வழிவந்தோர்கட்கு உரித்தானவையாகவும் கையாளப்பட்டு வந்தவையாகும்.

2. பரந்த அளவில் உயர்ந்த நடையில் எழுதப் பெற்றதனால் சாமான்ய மனிதன் புரிந்து செய்முறை கையாளப்படவில்லை.

3. பயிற்சியும் தேர்ச்சியும் கையாளப்படவில்லை.

4. அநுபான முறைகளில் கடினமான முறைகளும் பத்ய உணவும் நோயாளிகளை மருந்தில் வெறுப்படையச் செய்தன.

5. மருந்து உட்கொண்டு ஜீரண உறுப்புக்களினால் மாறுதல் அடைந்து ரத்தத்தில் கலந்த பின்னரே மருந்து வேலை செய்யும் முறை அநுஷ்டிக்கப்பட்டது.

6. சீக்கிரம் குணம் தெரிவதில்லை.

7. மருந்தின் வேகத்தை உடல்நிலை தாங்காத காரணம்.

8. அறுவை முறை கையாளப்படாதது.

9. ஊசியின் மூலம் நேரே ரத்தத்தில் செலுத்தக்கூடிய முறைகள் இல்லாமை.

10. மருந்து தயாரிப்பு தனிகர்கள் மூலமும் வழங்குதல். இலவசமாகவும் ஆக்கப் படாமை.

11. நோயாளியிடமிருந்து சன்மானம் வாங்குதல் மருந்து பலிதமடைதற்கு இடையூறு என்ற கருத்து வற்புறுத்தப்பட்டமை.

12. எல்லாவற்றிற்கும் மேலாக வைத்தியர் ஒருவரே கீழ்க்கண்ட முறைகளை கையாண்டு வந்தமை—

(1) உடற்கூறு அறிதல்.

(2) வியாதியின் மூலங்கள்.

(3) வியாதியின் அறிகுறிகள்.

(4) வியாதியின் இடைவெளி, வயது அறிதல்.

(5) குறிப்பிட்ட வியாதி என்று முடிவு செய்தல்.

(6) மருந்து செய்முறை—தானே தயாரித்தல்.

(7) செலுத்தும் அளவு, வயதிற்கேற்றவாறும், வியாதியின் காலஅளவும் அறிந்திருத்தல்.

(8) அனுபான முறைகள்.

(9) ஆகாரம், பத்தியம், இவைகளின் அளவும், காலவரையரையும்.

(10) குணமடைந்தபின் கையாளவேண்டிய முறைகள்.

ஒழுக்க முறைகள். தாம்பத்ய உறவு இவைகளின் விளக்கம் கூறுதல்.

(11) ஆராய்ச்சியும், பரீக்ஷார்த்தம் தானே செய்தல்.

மேற்கூறிய அனைத்தும் வைத்தியர் ஒருவரே செய்து முடிக்கவேண்டிய பொறுப்பேற்றிருந்தமை.

இம்முறைகளிலுள்ள குணங்கள் :

(12) இவற்றையெல்லாம் வைத்தியர் தானே செய்துவந்தமையால் நீடித்த நாள் ஆனாலும் குணம் நிச்சயம். உண்டாகிய வியாதி மறுபடியும் தலைதூக்காது என்ற நிச்சயமும் மக்களுக்கு இருந்து வந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

13. ஆராய்ச்சி செய்முறை பரவாத காரணங்கள்—

(1) அச்சுத்தொழில் முன்னேற்றமடையவில்லை.

(2) ஏட்டுச்சுவடிகளிலேயே பெரும்பான்மையும், கவிகளின் வடிவத்தில் வைத்ய முறைகள் எழுதப்பட்டு வந்தமை.

(3) போக்குவரத்து துரித வாகன வசதி இன்மை.

(4) செய்தி பரப்பும் (விஞ்ஞான) வானொலி முதலிய இன்மை.

(5) மருந்து விற்பதில் வியாபார முறைகளும் பொருள் திரட்டும் நோக்கமுமின்மை.

(6) விளம்பரமே இல்லாமை, தலைசிறந்த முறைகளில் சித்த வைத்தியர்கள் கையாண்டு வந்தமை.

வியாதிகள் வராவண்ணமும், வந்தாலும் பரவாவண்ணங்களையும் கையாண்டு வந்தார்கள்.

" Prevention is better than cure ! "

இதற்கு நமது சித்தவைத்தியர்கள் எடுத்துக்காட்டாக விளங்கினர்.

உதாரணமாக வெட்டை வியாதியினால் வருந்தும் ஒருவர் வைத்தியரிடம் வந்தால், உடனே அவர் அன்னாரது மனைவியையும் பரீக்ஷை செய்து வியாதியின் மூலங்களையும் அது எப்படி வந்தது என்பதையும் விளக்குவார் பின்னும் பரவாவண்ணம் வகை சொல்லி பின்னரே மருந்து தருவார். அநுபானமும் சொல்வார். இதுவே சிறந்த முறையாகும்.

இம்முறை தற்காலத்திய டாக்டர்களால் கையாளப்படாதது பெரிதும் வருந்தத்தக்கதாகுமென்பது பலரது அபிப்ராயமாகும்.

இதுகாறும் சித்த வைத்திய முறைகயுளைம் குணகுணங்களையும் ஒரு சிறிது ஆராய்ந்தோம்.

இனி மேனாட்டு வைத்ய முறைகளை ஆராய்வோம்.

### மேனாட்டு முறை (அலோபோத்திக்) :

இதன் வளர்ச்சியே மிகக் குறுகியதாகும். கடந்த 150 வருஷங்களில்தான் இதன் வளர்ச்சியும் முன்னேற்றமுமடங்கும்.

இம்முறை மூன்று பெரும் பிரிவுகளையுடையது.

(1) அறுவை சிகிச்சை.

(2) ஊசியின் மூலம் மருந்து செலுத்துதல்.

(3) மருந்து உட்கொள்ளும் முறை.

இம்முறை பெரும்பாலும் மேனாட்டு தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ற வாறு தயாரிப்பதாகும்.

இம் முறைகளை நமது நாட்டுக்கு அப்படியே பின் பற்றுவது பொருந்தாமுறையாகும் என்பது எனது தாழ்மையான அபிப்ராயமாகும்.

ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாத பல பிரிவுகளும், வியாபாரமுறை இவைகளையே அடிப்படையாகக் கொண்டதல்லால் பெரும்பாலும் மக்கள் ' ஆரோக்கிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல வென்பதை அறியக் கிடக்கவாம்.

(1) ஆராய்ச்சி ஓரிடம்.

(2) செய்முறை ஓரிடம்.

(3) விற்பனை ஓரிடம்.

(4) விளம்பரம் பரந்த அளவில்.

(5) டாக்டர் (அல்லது மருந்து விற்பனை ஏஜென்ட்) ஓரிடம்.

(6) குறிப்பிட்ட வியாதிக்காக எழுதிக் கொடுக்கும் மருந்தின் செய்முறையும் உபயோகிக்கும் சரக்கையும் பற்றி டாக்டருக்குத் தெரியாது.

(உ - ம்.) வயிற்றுவலிக்கு Belladona வும்.
கக்குவானுக்கு ஆர்யோமைசினும்
டாக்டர் எழுதித் தருவாரே அல்லது பெலடோனுவும் ஆர்யோ மைசினும் அவரால் செய்ய முடியாது.

அதுவே போகட்டும். வயிற்றுவலி எப்படி வந்தது, காரணங்கள்சொல்ல மாட்டார். அல்லது கக்குவான் வரக்காரணங்கள் சொல்லமாட்டார். அல்லது அவருக்கே தெரியாது. வியாதியின் மூலங்களையும் வியாதியின் தரமுமறியாது குணப் படுத்தும் மருந்தை மாத்திரம் எழுதிக் கொடுக்கும் முறை தற்பொழுது கையாளப் படுவதாகும். குறிபிட்ட அம்மருந்து (Patent Medicine) கிடைககவில்லை யானல் வியாதியஸ்தர்பாடு திண்டாட்டம்தான். மருந்தின் விலையையும், வியாதியஸ்தரின் வாங்கும் சக்தியைப்பற்றியும் வைத்தியருக்குக் கவலை இல்லை — மருந்து வாங்க பணம் இல்லாதவன் வியாதியின் கொடுமைக்குப் பலியாக வேண்டியவன் தான்.

உ - ம். (2) கண்பார்வை மங்கும் ஒருவர் வந்தால் டாக்டர் அப்பா ! உன் பார்வை மங்கும் காரணம், இன்ன உடற் சத்து உனக்குக் குறை. இத்தனை நாள் இன்ன உணவையே நீ சாப்பிட்டதன் விளைவுதான் உன் பார்வை மங்கிவருகிறதப்பா. கைக்குத்தல் அரிசியை இனியாவது சாப்பிடப்பா என்று சொல்வதில்லை. சொல்லவும் முடியாது. ஏன் ! அவர் தான் மருந்து விற்பனை ஏஜண்டு ஆயிற்றே ! எப்படிச் சொல்வார்கள். 'கோர்ஸ் இன்ன மருந்தை ஊசியின்மூலம் செலுத்திக்கொள். என்று பிரிஸ்கிரிப்ஷனை உடனே எழுதிக் கொடுத்து விடுவார்கள். "பணமில்லையே சார். நான் ஏழை' என்பான் வியாதியஸ்தன். சரி போய் தர்ம ஆஸ்பத்திரியில் படுத்துக் கொள் என்பார். இதுதான் மேனாட்டுமுறை. எவ்வளவு அதிகம்பேர் வியாதியஸ்தர் வருகிறார்களோ அதைப் பொருத்துத்தான் இருக்கும் டாக்டரின் புகழும் செல்வாக்கும். உண்மையான சித்த வைத்தியத்தின் நோக்கம் படிப்படியாக வியாதிகளைக் குறைத்து, ஆஸ்பத்திரிகளின் எண்ணிக்கைகளையும் குறைப்பதுதான் சிறந்த வைத்திய முறையாகும்.

குறிப்பு :—

1. சித்த வைத்திய முறையில் நம் நாட்டில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களை உபயோகப் படுத்தப் படுகின்றன.

2. அலோபதியில் உபயோகப் படுத்தும் பொருள்கள் எளிதில் கிட்டுவதில்லை.

சித்த வைத்தியம்—ஆயூர் வேதம்

(1) நேருறை—ஒப்புரை சூட்டுஞ்சூடு.

(2) எதிருறை— சூட்டுஞ் குளிர்ச்சி.

(3) கலப்புறை—லேகியம் போன்ற பொருள்களை பல குணங்களை யுடைய பொருள்களை கொடுப்பது.

அதுமாத்திரமல்ல. சிறந்த ஆரோக்கிய முறைகளைக் கையாளும்படி மக்களைத் தூண்டுவதும் டாக்டர்களின் பொருப்பாகும்.

ஆன்ற அறிவுடைய சித்த வைத்திய முறைகளில் பொருள் சேர்த்தலை புலிப்பாணி

முனிவர், போகர் முனிவர் போன்றவர் பெரிதும் கண்டித்திருக்கிறார்கள்.

இது குறித்தே கிராமப் பழமொழியும்.

"வைத்யர்களுக்கு நரகமும்
வாத்யாருக்கு மோட்சமும் எனக் கூறுவர்."

இதுகாறும் ஒரு சிறிது மேனாட்டு முறைகளை ஆராய்ந்தோம் இனி சித்த வைத்திய முறைகளில் நாட்டமுடையோர் நம் நாட்டில் இனிச் செய்யவேண்டுவ தென்னை என்று ஆராய்வோம். நிரந்தரமான ஆரோக்கியமும், சாஸ்வதமான வியாதி அற்ற தன்மையும் பெற விரும்பும் யாரும் சித்த வைத்திய மருத்துவ முறைகளைப் புறக்கணிக்க முடியாது.

நமது நாடு மிக்க ஏழ்மையிலும் வறுமையிலும் சிக்கி உழலும் நாடு. இதற்கேற்றவாறு நமது வைத்திய முறைகளும் மருந்து வகைகளும் அமையவேண்டும். பெரும் பொருள் மூலமாக நடைபெறும் வைத்திய முறைகளை ஆபத்தும் வேறு வழியில்லாத காலத்தில் உபயோகிப்பது சாலச் சிறந்ததாகும்.

1. பலம் பொருந்திய சித்த வைத்திய மருந்து ஆராய்ச்சி மத்ய குழு ஒன்றும் மத்ய ஸ்தாபனம் ஒன்றும் அமைக்க வேண்டும்.

2. சித்த வைத்திய முறைகளில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களையும் வைத்தியர்களையும் அங்கத்தினராக சேர்க்க வேண்டும்.

3. நாடெங்கிலுமுள்ள சுவடிகள், பழம் பெரும் வைத்திய கோவைகள் கொண்ட நூலகம் ஒன்று நிறுவி தமிழ் மொழி மூலம் இவ்வறிவைப் பரப்ப வேண்டும்.

4. மருந்து தயாரிப்பு விநியோகம் இவைகள் இவர்கள் மேற்பார்வையில் நடைபெற வேண்டும்.

5. பிரசாரக்குழு ஒன்று அமைத்து Social works. இடை யிடியின்றி சித்த மருத்துவ மேன்மைகளையும் உடற்கூற்றையும் பிரசாரம் செய்யவேண்டும். ஆங்கிலப் பட்டதாரிகள் இதில் இடம் பெறுதல் கூடாது. ஏழை எளியவர்களுக்காக வாழும் பெரியோரது கூட்டுறவே இம்முறைகளை வளர்க்கும் காமதேனுவாகும்.

6. சித்த வைத்திய முறைகளையும் ஆங்கில முறைகளையும் இணைத்தல் கூடாது.

7. இந்தக் கல்லூரியில் (ஆண் பெண் சேர்க்கை) Sexuolagy-யும் போதிக்கப்பட வேண்டும்.

8. கீழ்க்கண்ட பிரிவுகள் இருக்கப்பட வேண்டும்—

பிரிவுகள்—

1. உடற்கூறு தத்துவங்கள்.

2. ஆரோக்கிய வாழ்வு — (பிரிவு)— அதன் படிப்பு—

3. விபரீத சேர்க்கையின் வினைகள். வியாதி பரவும் விதம்—

4. சுத்தம் சுகாதாரம்.

5. வியாதியின் மூலங்கள்.

6. வியாதி ஏற்படும் காரணங்கள்.

7. இயற்கை வாழ்வு—

8. ஆகாரம்.

9. மருந்து செய்முறை—

10. உட்கொள்ளும் முறைகள் அளவுகள்.

11. அனுபான முறைகள்.

12. மருந்து செய்து பாதுகாக்கும் முறைகள்.

13. நாடிப் பரீக்ஷை—

14. மேனாட்டு புதிய முறை ஆராய்ச்சிகளை இணைத்து நம் நாட்டுக்கு உகந்தவாறு மாற்றி எளியவருக்கும் உயர்ந்த வைத்ய முறைகிட்டுமாறு செய்தல்.

15. ஜல சிகித்சை.

16. இயற்கை வைத்ய முறை—

17. பச்சிலைகள் சேகரித்தல் பயிர் செய்தல்.

18. மாதவார வெளியீடுகள், கைத்துண்டு, பிரசுரம் வார வெளியீடுகள்.

19. யூனானி முறைகளையும் இணைத்தல்.

20. கூடிய வரையில் சர்க்காரது தொடர்பற்ற முறையில் (Private Enterprise) ஆக இருக்கவேண்டும்.

21. இலவச வைத்திய முறைகளும் தேவைப்பட்டால் பண வசூல் முறையும் இருக்கும் வண்ணம் மருத்துவ சாலைகள் அமைத்தல்.

22. பெரும்பாலும் தடுப்பு முறைகளையே பெரிதும் பிரசாரம் செய்யும் குழு ஒன்றும் அமைத்து வேலை செய்தல்.

23. கிடைக்கும் உணவே சத்துள்ளதாக உண்ணும் முறைகளைப் பிரசாரம் செய்தல்.

24. வியாபார நோக்கத்தோடு கூடிய முறைகளை நீக்குதல்.

25. ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளை இம் முறைகளில் தேவையான பயிற்சியளித்து கிராமங்களுக்கு அனுப்புதல்.

நாட்டுப் பற்றும், அருள் நெறியும் கடவுட் தன்மையும் அற்ற ஆங்கில மேனாட்டு முறைப் பட்டதாரிகளை இந்த மாபெரும் சித்த வைத்திய ஸ்தாபனத்தில் சேர்ப்பது இந்த ஸ்தாபனத்தின் கேட்டுக்கு வித்தாகு மென்பது ஏழையினுடை அபிப்பிராயமாகும்,

வாழ்க சித்த வைத்தியமுறைகள்.

வாழ்க நம் நாட்டு மருத்துவம்,

வள்ளலார் வைத்தியமுறை வளர்ந்தோங்குக.

குறிப்பு :—மேனாட்டு முறைகளை கண்மூடிப் பின்பற்றுவது சித்த வைத்திய முறைகளை நாளடைவில் குன்றச் செய்து நாட்டுக்கே பேராபத்தை விளைவிப்பதாகும் என்பதை நாம் உணரவேண்டும்.

# திருமூலர் அருளிய மருத்துவத் திருமந்திரம் 8000

டாக்டர், ஆ. சண்முகவேலன்,
(சித்தமருத்துவ ஆராய்ச்சிப் பேராசிரியர், சரசுவதி மகால், தஞ்சாவூர்.)

உலகில் எடுத்தது சத்தி முதலா
உலகில் எடுத்தது சத்தி வடிவாய்
உலகில் எடுத்தது சத்தி குணமாய்
உலகில் எடுத்தது சதாசிவன் தானே (திருமந்திரம் 1684)

## ஆதிசக்தி :

ஆதிசக்திதன் அருளால் தோன்றியது இவ்வுலகம். "சக்திதான்யென்றும், சமைந்து உருவாகுமே" என்றார் திருமூலர், எனவே உலகம் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தனள் ஆதிபராசக்தி யென்று திருமூலர் கூறுகின்றார்.

## ஆதிமருந்து :

ஆதிமருந்தை ஆதி பராசக்தி அருளியதையும் திருமூலர் கூறுகின்றார்.

"வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள் செய்தான்
ஆதி மருந்தென்று அறிவார் அகலிடம்
சோதி மருந்து இது சொல்ல வொண்ணாதே"

சக்தியின் அருள் பெற்ற மனிதர்களே சித்தி பெற்றவர்கள் ஆவர். அவ்வாறு சித்தி பெற்றவர்களே சித்தர்கள். கி.மு. பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் உலகம் வுய்ய ஆதி மருந்தை அருளிச் செய்தார் நம் அருந்தமிழ்ச் சித்தர்.

## சித்தர்வாழ் தமிழகம் :

சித்தர்வாழ் நாடுயென்று நம்நாடு போற்றப்படுகிறது. திருவாவடுதுறை நவகோடி சித்தர்புரம். பழனிமலை சித்தன்வாழ் மலை எனப்படும். கஞ்சமலைச்சித்தர் கோயில் காலாங்கிச் சித்தரோடு தொடர்புடையது. எண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்ற சித்தர்களுடைய வரலாற்றுக் குறிப்புகள் நம் பண்டைத் தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ளன. ஆதிமருந்தை அடிப்படையாகக் கொண்டு சித்த மருத்துவம் பண்டைக்காலந் தொட்டு தமிழ்நாட்டில் பயிலப்பட்டு வருகின்றது. இத்தகைய பெருமைவாய்ந்த மருத்துவ முறை தமிழ்நாடு தோற்றுவித்த உயர்தனிக்கலைச் செல்வமாகத் திகழ்கின்றது.

## சித்த மருத்துவத்தின் தந்தை :

திருமூலர் தவம்செய்த திருவாவடுதுறை சித்த மார்க்கத்தில் முதல் நிலையம் எனப் போற்றப்படும். "மூந்தி உதிக்கின்ற மூலன்மடவரை" யென்றும் திருமந்திரத்தின் சிறப்புப் பாயிரத்தால் இது விளங்கும். திருமூலருக்கு 7 மாணுக்கர்கள் உண்டு என்றும், அவர்கள் 7 மடங்கள் நிறுவி சித்தமார்க்கத்தை நாடுமுழுவதும் பரப்பினார்கள் என்றும்

அறிகின்றோம். திருமூலரின் மாணவர்களாக இருந்து சித்த மார்க்கத்தைப் பரப்பியவர்கள் காலாங்கி, போகர், கொங்கணர், கஞ்சமலைச் சித்தர் முதலியோர் என்பது திருமந்திரத்தாலும், சித்தாதி நூல்களாலும் தெரிந்து கொள்கிறோம்.

"கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
பலவகோன் பரமானந்தர் போகதேவர்
நிலந்திகழ் மூவர் நிராமயத் தோரே"

என்பது திருமந்திரத்தின் சிறப்புப் பாயிரம். போகர் சமாதி இன்றும் பழனியில் நின்று நிலவுகின்றது. போகதேவர் சீன முதலிய இடங்களுக்கு அக்காலத்தில் சென்று சித்தமார்க்கத்தைப் பரப்பியதாக நூல்கள் கூறும். நந்தி அருள்பெற்ற நாதர்களில் திருமூலரே முதல்வராவர். எனவே உமாபதி சிவம் "கயிலாயத் தொரு சித்தர்" என்று திருமூலரைப் போற்றுகின்றார். ஆதியில் தில்லையில் திருநடனங் கண்டு களித்தவரும், திருவாவடுதுறை அரசமரத்தடியின் கீழ் பல்லாயிரம் ஆண்டுகள் தவயோகத்தில் இருந்தவரும் தமிழ் மூவாயிர மென்னும் வாழ்வியல் நூலை உலகம் வுய்ய அருள் செய்தவரும் திருமூலரே. திருமூலர் இயற்றிய இந்த நூலை திருவாவடுதுறை கோயிலில் உள்ள பலி பீடத்திலிருந்து திருஞானசம்பந்தர் முதன்முதலில் வெளிப்படுத்தினர் யென்று கூறுவர். இதில் கடவுள் நெறி, லான்சிறப்பு, அரசியல் நெறி, கருவோம்பல், உடலோம்பல், வாசிப் பழக்கம், வானியல், கோள் நெறி, அணுசக்தி, அறம், பொருள், இன்பம், வீடு, முத்திநெறி, மந்திரம், தந்திரம் முதலியவை விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்மொழிக்கு ஆதியில் அடிகோலியவர் பொதிகைமலைக் குறுமுனிவர் என்று சொல்லுவது போல், சித்த மார்க்கம் பரவுவதற்கு திருமூலர் காரணமாயிருந்தார் என்று சொல்லலாம். அதனாலேதான் அகத்திய வர்க்க சித்தர் என்று கூறாமல் மூலவர்க்க சித்தர், நந்தி வர்க்க சித்தர் யென்று சித்தாதி நூல்கள் கூறுகின்றன.

**திருமூலர் எண்ணாயிரம் :**

திருமூலர் இயற்றிய தமிழ் மூவாயிரம் தவிர, எண்ணாயிரம் என்ற மற்றொரு நூலின் பெயரையும் கேள்விப்படுகிறோம். தமிழ் மருத்துவத் துறையின் ஆதிநூல் இது. இன்னும் வெளியிடப்படாத நூல் விலைமதிப்பில்லாத திருமூலர் எண்ணாயிரம் முற்றும் நமக்குக் கிடைக்கவில்லை. திருமூலா கருக்கிடையில் இரசக்குளிகை பற்றிக் கூறும் ஓர் இடத்தில்

"தேடித்திரிந்து திகையாதே மாந்தரே
பாடினே(ன்) எண்ணாயிரத்தினிற் பார்த்திடே"

என்று கூறப்பட்டுள்ளது.

இரசகுளிகையின் பெருமையை நான் இயற்றிய எண்ணாயிரம் யென்னும் நூலில் பார்த்துக் கொள் என்று திருமூலர் இதனால் தெரிவிக்கின்றார். சந்திர மண்டலம் முதலிய வானிலுள்ள அண்டங்களுக்குப் பறந்து செல்லுவதற்கு உதவியாக உள்ள இரசமணி செய்யும் முறை எண்ணாயிரம் யென்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

வள்ளலார் இராமலிங்க அடிகளும் திருமூலர் எண்ணாயிரத்தின் பெருமையைப் பற்றிக் குறிப்பிடுவதால், அவர் அந்நூலை முற்றிலும் படித்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. ஆனால் திருமூலர் எண்ணாயிரம் இபபோது முற்றிலும் நமக்குக் கிடைக்கவில்லை யென்பது மிகவும் வருந்தத் தக்கது.

தஞ்சை சரசுவதிமகால் நூல்நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள மத்திய இந்திய வைத்திய ஆராய்ச்சித்துறை சார்பில் ஆராய்ச்சி செய்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சித்த மருத்துவச் சுவடிகள் 14. அவைகளில் சுவடி எண் 40, 40-ஏ, திருமூலர் எண்ணாயிரத்தில் துருசுகுரு என்னும் தலைப்புக் கொண்டுள்ளது.

“ எண்ணுயிரத்திலிருநூறுமந்திரம்
அண்ணுவி சொல்ல அடியே னறிந்தேன் ”

என்று முதல் பாடல் தொடங்குகிறது. எண்ணுயிரத்தில் 200 பாடல்களை மட்டும் ஆராய்ந்து வெளியிடுவது பொருத்தமாக இல்லை. அதன் தலைகால் தெரியவில்லை. எனவே மேற்கொண்டு அதன் சார்பான ஏடுகளைக் கண்டுபிடித்து ஒன்றுபடுத்தி வெளியிடுவதே தகுதியாகும். அவ்வகையில் மேற்படி ஆராய்ச்சிக் குழுவினர் திருமூலர் எண்ணுயிரம் என்னும் மருத்துவத் திருமந்திரம் நடத்திய சுவடியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

எனவே, திருமூலர் எண்ணுயிரத்திலிருந்து சில பாடல்களை மேற்கோளாகக் கூறுகின்றேன்.

திருமூல மாவது செய்ய சவுக்காரம்
திருமூல மாவது செய்ய நற்றுருசுதான்
திருமூல மாவது செயஅண்ட பிண்டந்தான்
திருமூல மூன்றினுட் செய்தவன் மூலனே.

மூன்றே பொருளாய் முடிந்தது அண்டம்
மூன்றே பொருளாய் முடிந்தது பிண்டம்
மூன்றே பொருளாய் முடிந்தது சிவன்
மூன்றே பொருளாய் முடிந்தது வாதமே.

EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE 243
LIBRARY
JAFFNA

சித்தர் முப்பூவைப்பற்றி தெரிவிக்கும் பாடல் இவை: ஆதி மருந்தின் அடிப்படையில் செய்யவேண்டுவது இது. இதனை மற்றொரு பாடலும் விளக்குகின்றது.

சந்திர னுப்பும் சதாசிவன் பெண்டிரும்
அந்த முராரி அகத்து மனைவியுங்
கெந்தகத் தோடே கிறி வெதுப்பிடில்
சுந்தரன் ஆணை சிவ நுருவாமே.

இத்தகைய குருமருந்தை முடித்தவரே சித்தர்கள். அத்தகைய மருந்தே கற்ப மருந்து: கற்ப மருந்து என்றால் என்ன? இதற்கு விடையாக அமைந்துள்ளது எண்ணுயிரத்திலுள்ள ஒரு பாடல் இது:—

மறுப்பதுடல் நோய் மருந்தென லாகும்
மறுப்பதுள நோய் மருந்தென லாகும்
மறுப்பதினி நோய் வாராதிருப்ப
மறுப்பது சாவை மருந்தெனலாகும்.

ஆசிரியர் நோயை இருவகைப் படுத்தியுள்ளார்: உடற்பிணி; உள்ளப்பிணி; உடற்பிணியைப் (Physio theraphy) போக்குவது மருந்தென்றும், உள்ளப்பிணியைப் (Psycho theraphy) போக்குவது மருந்தென்றும், இனிமேலும் நோய் வாராதிருக்கும்படி செய்வதே (Prventives, constructive) மருந்து என்றுங் கூறுகின்றார். அம்மட்டோ? சாவை ஒழிக்கும் கற்ப மருந்தே மருந்து என்று முடிவில் சித்தர் மருந்தின் பெருமையைக் கூறி முடிக்கிறார். நரை, திரை, மூப்பு, விரைவில் வாராமல் சாகாக்கலையைப் போதிப்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளது சித்த வைத்தியமுறை. சித்தர்களின் காயகற்ப மருந்துகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதனால் முதுமை பருவத்தில் ஏற்படும் புற்று முதலிய நோய்களுக்கும், இருதயக் கோளாறுகளுக்கும், வழிகாண முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

**காயகற்ப முறை :**

எனவே, திருமூலர் கூறிய மருந்து காய கற்பமுறைடைய அடிப்படையாகக் கொண்ட முப்பு சேர்ந்த மருந்தாகும். இது செய்முறை குரு அருளால் தெரிந்து கொள்ளவேண்டும். காயகற்ப முறையில் 'மணிமந்திரம் மருந்து' மூன்றுமே இடம் பெற்றுள்ளன.

தமிழ் சித்த மருத்துவத்திற்கே உரிய கற்பமூலிகைகளைப் பற்றி சித்தாதி நூல்களிலிருந்து தெரிந்து கொள்கிறோம். கால வேகத்தில் கற்பமூலிகைகள் இன்னவெனக் கண்டு பிடிக்க முடியாமலிருந்தது. நம் மதிப்பிற்குரிய திரு. பலராமய்யா அவர்களின் அருமுயற்சியால் பொதிகைமலைச் சாரலிலிருந்து பல அரிய மூலிகைகளைக் கொண்டுவந்து காட்சியில் வைத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க செய்தியாகும். சித்தாதி நூல்களில் கூறப்பட்டுள்ள கற்பமூலிகைகளின் பெயர்களைக் கீழே குறிப்பிட்டுள்ளேன் :—

| | | |
|---|---|---|
| கருநெல்லி | செங்கள்ளி | வெள்ளை விஷ்ணுக்கரந்தை |
| கருநொச்சி | செம்பல்லி | வெண்கண்டங்காரி |
| கருவிழி | செங்கற்றாழை | கசப்புப்பசலை |
| கருவாழை | செஞ்சித்திரமூலம் | சர்க்கரைவேம்பு |
| கரிய கரிசாலை | செந்நாயுருவி | கிளிமூக்கு |
| கருநீலி | கற்பிரமி | அழுகண்ணி |
| கரியவேலி | கற்செம்பு | பொன்னூமத்தை |
| கருமத்தை | கற்றாமரை | மதுரக்கோவை |
| தீபச்சோதி | குழலாகொண்டை | பொன்வண்ணச்சாலி |
| திருணசோதி | பொற்சீந்தில் | கருந்தும்பை |
| சாயாவிருட்சம் | வெண்புரசு | மதனத்தண்டு |
| எருமை கனைச்சான் | வெண்துத்தி | மூவிலைக்குருத்து |
| உரோம விருட்சம் | வெண்தூதுவளை | சிவந்தநில்லை |
| சுணங்கன் விருட்சம் | குண்டலப்பாலை | கருவேம்பு |
| செந்திராய் | வெள்ளைநீர்முள்ளி | இண்டு |

—இவை நாற்பத்தஞ்சும் ஏற்றமா மலைகளிலே மெத்தவுண்டு.

சத்தான மூலிகையில் சுருக்குச் சித்தி
சாப்பிட்டால் மண்டலந்தான் சாவோ இல்லை
மத்தான மன்மதன் போல் தேகமாகும்
மாசற்று நரை திரைகள் எல்லாம் மாறும்
எத்தான வாசியெல்லா மிறுகிப் போகும்
ஏறலாங் ககனத்தில் ஏற்றமாக
அத்தான அடுக்கெல்லாம் சென்று ஏறி
அண்டரண்ட பதமெல்லாம் அறியலாமே.

**இரசமணி :**

நோயின்றி நீண்ட காலம் உயிர்வாழ்வதற்கு சித்தர்கள் இரசமணியையும் கையாண்டனர். திருமூலர் இரசக்குளிகை 8 வகைப்படும் என்று கூறுகின்றார். அதில் மேற்படி கற்பமூலிகைகளின் சத்துக்களினாலும், காரசார சத்துக்களினாலும் சாரணை ஊட்டப்பட்ட மணி காயசித்திக்கும், வாதசித்திக்கும் பயன்படும். ஏழு அண்டங்களையும் சுற்றிவருவதற்கு உதவும்.

திருமூலர் கூறிய இரசமணி எட்டு இவை :

| | |
|---|---|
| 1. சொரூப மணி | 5. சித்திமணி |
| 2. சூக்கும மணி | 6. யோகினி |
| 3. கமலினி | 7. விண்ணேகி |
| 4. காமினி | 8. பர்சமணி |

இதில் சொரூப மணியே முதன்மை வாய்ந்தது. பலமுறை சாரணை யேற்றப்பட்டுள்ளது. நொடிக்குள் ஒரு கோடி காதம் செல்லும்: நினைத்ததைக் கொடுக்கும், நீரைக் குடிக்கும், நெருப்பை உண்ணும், வாயு நிற்கும், மனத்தை அடக்கும், விந்தைக் கட்டும். வாதம் கைகூடும், அண்டங்கள் சுற்றலாம், எண்வகைச் சித்தி கைகூடும்.

மெய்யுணர்வுபெற்ற நம் பண்டைத் தமிழ்ச் சித்தர்கள் நடைமுறையில் கையாண்ட மாபெருங் கலை இது. வெறுங் கற்பனை கதை இல்லை என்பது வள்ளளார் இராமலிங்க அடிகள் கூறியதிலிருந்தும் தெரிந்து கொள்கிறோம்.

வள்ளலார் கூறும் ஒன்பது இரசமணிகள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. பரம்பரமன் | — | அண்டத்தையும் அண்டத்திலுள்ள பொருள்களையும் காட்டுவது |
| 2. பராபரமணி | — | பிண்டத்தையும் பிண்டத்திலுள்ள பொருள்களையும். |
| 3. அரும்பெறல்மண் | — | நினைத்ததை நினைத்தபடி அருளுவது. |
| 4. ககனமணி | — | விண்ணுலகப் பொருள்களை ஆட்டி வைப்பது. |
| 5. சரவொளிமணி | — | மண்ணுலகப் பொருள்களை ஆட்டி வைப்பது. |
| 6. கலைநிறைமணி | — | எல்லா உலகத்தும் உலாவ வைப்பது. |
| 7. வித்தகமணி | — | சராசரப் பொருள்களை விளக்குவது. |
| 8. சித்துசெய்மணி | — | மகா சித்திகளை அருளவல்லது. |
| 9. வளர்ஒளி மணி | — | அழியா வாழ்வு, அளிப்பது. |

ஆதலால் திருமூலர் எண்ணுயிரத்திலிருந்து இத்தகைய இரசமணி செய்முறையும், ஆதிகாலத்தில் சித்தர்கள் பல அண்டங்களெல்லாம் சுற்றி வந்திருப்பதையும் நாம் தெரிந்து கொள்ளுகிறோம். இக்காலத்தில் விஞ்ஞான முறையில் மேல் நாட்டினர் ‘ ராக்கெட்’களின் மூலம் விண்ணிலுள்ள அண்டத்தைத் தாவிப்பிடிக்க நினைக்கும்போது, நம் சித்தர்கள் பல் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ககன குளிகையின் உதவியால் சந்திரமண்டலம் முதலிய அண்டங்களுக்குச் சென்ற செய்தி கூறப்பட்டிருப்பதால் திருமூலர் எண்ணுயிரம் முற்றிலும் கிடைத்து வெளியிடப்படும் நாள் எந்நாளோ? அந்நாளே நம் மருத்துவ வுலகிற்கு நன்னுளாம். விஞ்ஞானிகள் காணமுடியா அண்டங்களைக் கண்ட மெஞ்ஞான சித்தர்கள் வாழ்க. வாழ்க சித்தர் கலை.

# சித்த மருத்துவத்தில் பனை

டாக்டர் டி. கே. சுப்பிரமணியம், பரங்கிமலை, சென்னை-16.
(தமிழக அரசு அங்கீகாரம்பெற்ற மருத்துவர்.)

பரந்த பாரதத்தில் பஞ்சமில்லாமல் வளர்ந்திருப்பது பனைமரங்கள். கட்டாந் தரையிலும், கரடுமுரடான நிலங்களிலும் கூட அவைகள் செழித்து வளர்ந்து உய்யார மாக நிற்பதைக் காணலாம். கன்னியாகுமரி முதல் காசிமீர்வரை வியாபித்திருக்கின்றன. இந்த பனைமரங்களை யாரும் விதைவிதைத்து தண்ணீர்விட்டு போற்றி பேணி வளர்க்கப் பட்டதாகவே இல்லை. பயன் இல்லை என்று சூம்பிப் போடப்பட்ட பனங்கொட்டை களும், மரத்திலேயே பழுத்து உதிர்ந்த பனம் பழங்களும் ஆங்காங்கே பறவி முளைத்து மர மாக வளர்ந்து இருக்கின்றன. இவ்விதம் கவனிப்பாறற்று வளர்ந்து கிடக்கும் மரங் கள், எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் மக்களுக்கு பலவகையில், உணவாகவும், மருந்தாகவும் பயன்பட்டு வருகின்றன, தன் தலையினுலே இனிமையான பானத்தைக் கொடுக்கிறது. தன் அடிவேற் பாகத்தினுல் சுவைமிகுந்த பனங்கிழங்கை தருகிறது. இவ் விதம் அடியிலிருந்து நுனிவரை பனையின் வொவ்வொரு பாகமும் மனித வாழ்க்கை யில் பங்குகொண்டு இன்பத்தை கொடுக் கின்றது. வேறினுல் கூடை முடையவும், மரத்தினுல் வீடு கட்டவும், ஓலையினுல் கூறை வேயவும், கயிறு திரிக்கவும், பனை கொடுக் கும் பதநீர் மனிதனின் உணவாகவும் உதவு கிறது. இவ்விதம் பனை 80 வகையில் பயன் படுத்தப்படுகிறது என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இன்றும் பழம்பெரும் காவி யங்கள் பனைதான் "கற்பக தரு" என்றும், அது அமிர்தம் என்ற பதநீரைச் சுரந்து தந்து உணவூட்டுகிறது என்றும், மக்களுக்கு மருந்தாகவும் பயன் படுகிறது என்றும் கூறு கின்றன.

உணவாகவும் மருந்தாகவும் பயன்படக் கூடியவைகள் பதநீர், பனஞ்சாறு, பனம் பழம், பனை நொங்கு, பனங்கிழங்கு, பனங் கற்கண்டு, பனங்கள்ளு முதலியனவாகும். இவைகளை, தமிழகத்திலுள்ள இந்திய மருத் துவ ஆராய்ச்சி நிலைய டைரக்டரும் (Director of Indian council of Medical Rescarch) உணவு சத்து ஆராய்ச்சி நிலைய டைரக்டரும் (Director Nutritive Research, Laboratries) பற்பல ஆராய்ச்சிகள் செய்து பதநீரிலும், பனைவெல் லத்திலும், எல்லாவித ஊட்டசத்தும், (all kinds of Vitamin), இருப்பதினுல் மருந்தாக வும் பயன்படுத்தலாம் என்று கூறி இருக் கிருர்கள்.

## 1. பதநீர்

பதநீர் ஓர் சைவ பானம். தேசிய பானம். இயற்கைத் தாய் பரிந்தளித்த இனிய பானம் கலப்படமில்லாத கடவுள் தந்த பானம். யாவரும் விரும்பி ஆகாரமாக அருந்தும் இந்த பானம் மனிதனின் உடல் நோயை போக்க உற்ற மருந்தாகவும் பயன்படுகிறது. எட்ட வுன்ஸ் அளவுள்ள ஒருகுவளை பதநீரில் உள்ள சத்துணவுகள் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. காரத் தன்மை (PH - Value) | 7·2 | |
| 2. சர்க்கரை (Sugar) | 28·8 | கிராம் |
| 3. சுண்ணும்புச் சத்து (calcuim) | 35·4 | மி.கிராம் |
| 4. இரும்புச் சத்து (Iron) | 5·5 | மி.கிராம் |
| 5. பாஸ் பரஸ் (Phosphoras) | 32·4 | ,, |
| 6. தயாமின் (Thiamine) | 82·3 | ,, |
| 7. ரிப்போ பிளாவின் (Riboflavin) | 44·4 | ,, |
| 8. அஸ்கார்பிக் அமிலம் (Ascorbic Asid) | 12·2 | ,, |
| 9. நிகோடினிக் அமிலம் (Nicotinic Asid) | 674·1 | ,, |
| 10. புரதம் (Protein) | 49·7 | ,, |
| 12. கலோரிகள் (Calories) | 113·3 | ,, |

பதநீரிலுள்ள சீனிச்சத்து உடலுக்கு தேவையான வெப்பத்தை தருகிறது. குளு

கோஸ், மெலிந்து தேய்ந்து வாடிய வடிவுடைய குழந்தைகளின் உடலை சீராக்கி, நல்ல புஷ்டியை கொடுக்கிறது. கணைச்சூட்டை தணிக்கிறது. கருவுற்ற பெண்களுக்கும், மகப்பேறு பெற்ற மாதர்களுக்கும் ஏற்படுகின்ற மலச்சிக்கல், வயிற்றுப்புண், முதலியவைகளை குணப்படுத்துகிறது. இரத்த அழுத்தத்தை தடுக்கிறது. டைபாய்டு சுரம், நீர்க்கட்டு முதலிய வியாதியை போக்க நல்ல மருந்தாகும். இருதயம் வலுவடையச்செய்து இருதய நோய் குணமாகிறது. இதிலிருக்கும் கால்சியம் பற்களை உறுதிப் படுத்தி எயிறுகளில் இரத்தக் கசிவு ஏற்படுவதைத் தடுப்பதோடு பற்களின் பழுப்பையும் மாற்றுகிறது இதிலிருக்கும் இரும்புச் சத்து பித்தத்தை நீக்கி, சொறி, சிரங்கு முதலிய சகல சர்ம வியாதிகளையும் நீக்குவதுடன், கண்ணோய் ஜலதோசம் காசநோய்களையும் அகற்றுகிறது. இத்துடன்மட்டும் அல்ல. மனித இன்பசுகபோக வாழ்வில், புருடன் மனைவி உடல் உறவு ஊடல்களில், நல்ல வீரியத்தையும் கொடுத்து இல்லறத்தை இன்பமாக கழிக்கவும் உதவுகிறது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த பதநீர், குஷ்டம், க்ஷயரோகம், இரத்தக் கடுப்பு, அதிக உஷ்ணம், பெண்களின் சூதக வலி, பசியின்மை, வயிற்றுப்புண், ஆஸ்த்மா, சகல வாய்வு முதலியவைகளுக்கு தகுந்த மருந்தாகப் பயன்படுத்தும் விதத்தை கீழே காண்க.

**குஷ்டம் :** தினசரி ஒரே பனையின் பதநீரை காலை மாலை உண்டு வந்து, பனை ஓலைப் பாயில் படுத்து, பனை ஓலை விசிறியை பயன்படுத்தி, பனையோலைப் பட்டையில் உணவு உண்டு பனைக்காட்டில் பனை ஓலை குடிசையில் 96 நாட்கள் தங்கிவர குணம் தெரிகிறது.

**க்ஷயரோகம் :** அதிவிடயம் 1 பலம், திப்பிலி 1 பலம் இரண்டையும் இளவருவல் செய்து பொடித்து வஸ்திரகாயம் செய்து $\frac{1}{8}$ படி பதநீரை சுடவைத்து மேலே கூறிய பொடியில் மூன்று சிட்டா அளவு போட்டு கலக்கி அதிகாலையில் வெரும் வயிற்றில் 40 நாட்கள் சாப்பிட்டுவர க்ஷயம், ஈளை, இருமல், மார்பு வலி மார்படைப்பு நிச்சயமாக நீங்குகிறது.

**இரத்தக் கடுப்பு :** வெந்தயத்தை வறுத்துப் பொடித்து காலை, மாலை இருவேளை ஒரு அவுன்ஸ் சூடு பதநீரில் கலக்கி 6 வேளை அருந்திவந்தால் இரத்தக் கடுப்பு, மூலச்சூடு தணிகிறது.

**கணைச்சூடு :** அதிமதுரத்தைப் பொடித்து பதநீரில் காய்ச்சி பாகு பதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு காலையிலும் மாலையிலும் ஒரு கொட்டைப் பாக்களவு உட்கொண்டால் அதி உஷ்ணம். நீர்க்கடுப்பு, எரிவு, அதிக பித்தம் தீரும்.

**பெண்களின் சூதகம் :** பெண்களின் மாதவிடாய் தடைபட்டு இதனால் சூதகவலி, வாய்வு, சூதகக் கட்டி முதலியவைகளில் அவதிப் படுகிறவர்கள், பனங்குருத்தில் உள்பாகத்தை உட்கொண்டால் சீக்கு நல்ல குணமாகி மாதவிடாய் தடையின்றி வெளியேறுகிறது. அதிக வயதாகியும் ருதுவாகாத பெண்கள் பனங்குருத்தை விடாமல் சாப்பிட்டு வந்தால், உடனடியாக புஷ்பவதியாவார்கள் என்பது உறுதி.

**பசியின்மை :** கறியுப்பை $\frac{1}{4}$ படி பதநீரில் கரைத்து 1 பலம் கெட்டி மிளகை பொடி செய்து போட்டு 24 மணிநேரம் ஊரவைத்து தினம் தினம் சூரிய வெளிச்சத்தில் காய வைத்துவர பதநீரிலுள்ள நீர் ஆவியாக மாரி மிளகு பொடி தங்கி நிற்கும். அந்தப் பொடியை ஒரு சிட்டிகையளவு காலையிலும் மாலையிலும் உணவுடன் கலந்து அருந்திவர, தீராத பசியின்மை நீங்கி, நல்ல பசி ஏற்படுகிறது.

**வயிற்றுப் புண் :** மஞ்சளைப் பொடித்து விரகடி அளவு $\frac{1}{2}$ அவுன்ஸ் காலையில் இறக்கிய பதநீரில் கலக்கி உட்கொள்ள மூன்று வேளையில், வயிற்றுப்புண், தொண்டைப் புண், வெப்புக் கழிச்சல், சீதபேதி முதலிய சீக்கு குணமாகிறது.

**ஆஸ்த்மா :** பொடுதலையும், மிளகும் சமமாய் எடுத்து பதநீர்விட்டு அரைத்து, சுண்டக்காய் அளவு மாத்திரையாக்கி தினம் தினம் (3) மூன்று வேளை சாப்பிட்டு 10 நாட்கள், விடாது அனுஷ்டித்து வந்தால், தீராத ஆஸ்த்மா நோய் தீரும். 10 வருட ஆஸ்துமா நோயாளிகூட இதனை அருந்தி நோயிலிருந்து விடுபட்டிருக்கிறார். இது ஓர் கைகண்ட

மருந்து. நோய் திரும்ப வராது. ஆஸ்துமா நோயாளிகள் உடனடியாக செய்து சாப்பிட்டு குணம் காண்க. (மேலும் விபரங்களுக்கு இதில்கண்ட விலாசத்திலுள்ள டாக்டருக்கு எழுதுக).

சகல வாய்வு: சுக்கு 1 பலம், மிளகு ½ பலம், திப்பிலி ¼ பலம் முதலியவைகளை சூடாக்கிய பதநீர்விட்டு அரைத்து மாத்திரை செய்து நாள் ஒன்றுக்கு 3 வேளையாக இரண்டு நாட்கள் சாப்பிட்டால் நிச்சயமாக சகல வாய்வும் நீங்கிவிடும்.

## 2. பனை வெல்லம்

சித்தவைத்திய முறையில் மாதர்களுக்கு "பனை வெல்லம்" முக்கியமான பொருளாய் விளங்கி வருகிறது. மகப்பேற்றில் தாய்க்கும், சேய்க்கும் பயன்படுத்தப்படுகிறது. பெண்கள் கருவுற்ற 6 மாதங்களுக்குப் பின்னர் நீர், மலம் கழிவது சற்று சிக்கலாகவே இருக்கும். இந்த மலச்சிக்கல் கருவுற்ற மாதர்களுக்கு ஆரம்பமுதலே ஏற்படாமல் பார்த்தால்தான் மகப்பேறு சுலபமாக இருக்கும். இதற்கு பனைவெல்லத்தில் செய்த மருந்து நல்ல குணமளிக்கிறது.

4 ராத்தல் சோற்றுக் கற்றாழைச் சருகை தண்ணீரில் நன்றாகக் கழுவியபின் பனைவெல்லத்தைச் சேர்த்து தண்ணீர் கொதிக்கவிட வேண்டும். இக்குடிநீர் ¼ பாகமாக வற்றி வந்தவுடன் இறக்கிவிடுக. காலையிலும் மாலையிலும் உணவிற்குமுன் 2 அவுன்ஸ் வீதம் கொடுக்கவும். பத்தியம் இல்லை. பயம் எதுவும் இல்லாமல் அருந்தலாம். கருவுற்ற பெண்டிர் ஆரோக்கியமாக வாழலாம். வெகு சுலபமாக வீட்டிலேயே மிகக்குறைந்த செலவில் மகப்பேறை, செய்துகொள்ளலாம்.

மகப்பேறு நடந்த பின்னர், குடல் புண், வயிற்றுப் புண் குணமாவதற்கு, பெண்கள் நவ நாகரிக மருத்துவத்தில் மூழ்கி தன் வருவாய்க்கு மிஞ்சி செலவை ஏற்க நேரிடுகிறது. பனைவெல்லத்தில் செய்த "காயம் கருப்பட்டி" என்ற வீட்டு மருந்தை எளிய முறையிலும், சுலபமான வழியிலும் செய்து சாப்பிடலாம் இது மருந்திற்கு மருந்துமாகும். உணவிற்கு உணவுமாகும். இனிப்பான இந்த "காயம் கருப்பட்டி" சாப்பிடுவதற்கு சுவையாக இருக்கும். பெண்டிர் விரும்பி அருந்துவர்.

இந்த காய மருந்தில் பங்குகொள்கின்ற பனவெல்லத்தில், புரோட்டின் 1·04, கொழுப்பு 0·19ம், சிக்ரோஸ் என்ற இனிப்பு 76·86ம், குளுகோஸ் 1·66ம், கால்சியம் 0·861ம், பாஸ்பேட் 0·052ம் இருக்கின்றன. இந்த அருமருந்து செய்யும்விதம் வருமாறு:

மஞ்சள் ¼ பலம், சுக்கு ¼ பலம், திப்பிலி ¼ பலம். மிளகு ¼ பலம், சித்தரத்தை ¼ பலம், தேசாவரம் ¼ பலம், கசகசா ¼ பலம், வெள்ளைப்பூண்டு ½ பலம், சதகுப்பை ½ பலம், நல்லெண்ணை ½ பட்டணம்படி. இவைகளை உரலிலிட்டு நன்றாகத் தட்டி எண்ணைவிட்டு அடுப்பில் வைத்து கிளறி லேகியமாகச் செய்து வேண்டிய அளவு பனைவெல்லத்தை போட்டு உருண்டையாகச் செய்து, பிரசவமாகிய 3ம் நாளிலிருந்து காலை. மாலை இருவேளையும் நெல்லிக்காய் பிரமாணம் சாப்பிட்டு வந்தால் அசிரணம், அசதி உடல் வலி நீங்குவதுடன் இரத்த விருத்தியும் உண்டாகும். இம்மருந்தை சட்டி கஷாயம் என்று கூறுவர். இந்தக் கஷாயத்தை ஆண்களும் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் வீரிய விருத்தியும் ஏற்படும்.

## 3, பனங்கற்கண்டு

நீரழிவு நோயால் அவதிப்படுகிறவர்களுக்கு பனங்கற்கண்டு பயன்படுகிறது. சர்க்கரைக்குப் பதில் இதனை பயன்படுத்தலாம். பெரியம்மை, வைசூரி, சிச்சிலுப்பை மற்றும் வெப்ப வியாதியால் தொல்லைப்படும் வியாதியஸ்தர்கள் அடிக்கடி இதனை உணவாகவே சாப்பிடலாம். குளிர்ச்சி ஏற்பட்டு உடல் காந்தல் நீங்குகிறது. கர்ப்பிணிகள், கற்கண்டை வெந்நீரில் கலந்து சாப்பிட்டுவர, நீர் பிரிந்து, வயிற்றுப் பொறுமல் போகும். கற்கண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றை தண்ணீரிலோ அல்லது பாலிலோ கலந்து சாப்பிட்டால் இருமல் குணமாகும.

## 4. பனம் பூ

பனம் "பூ" பூத்த மூன்று நாட்களில் உதிர்ந்துவிடுகிறது. இந்தப் பூவை எடுத்து காய்ச்சி கஷாயமாக சாப்பிட்டால், காய்ச்சல் குணமாகிறது. இருதய வலி குணமடைந்து இருதய நோய்களை போக்குகிறது. இதனுடைய இளம்பூவை கட்டி வர மூல நோய் கரைந்து குணமாகி குடலுக்கு குளிர்ச்சியை கொடுக்கிறது.

## 5. பனை வேர்

பனைவேர் இரண்டு முறைகளில் மருந்திற்கு பயன்படுகிறது. ஆத்ம சக்தியை விருத்தி செய்து, மனோ திடத்தை அதிகப்படுத்தி இதயத் தூய்மையை உண்டாக்கும் ஒரு தத்துவ மருந்தாக பனைவேர் இயங்குகிறது. மன உற்சாகம், ஆனந்தம், பூரிப்பு முதலிய மனோயியரில் இது வேலைசெய்து நற்பயன் அளிக்கிறது. மேலும் நீர்த்துப்போன பலமின்றி வீரியம் குறைவுபட்ட விந்து வலுவடைந்து ஆண்மை மிளிரவும் பனை வேர் பயன்படுகிறது.

பனையின் வேர் ஐந்து பலம், மிளகு அரை பலம், நீர் முள்ளி விதை அரைப்பலம், லவுங்கம் அரைப்பலம், கிராம்பு, சோம்பு வகைக்குக் கால் பலம் முதலியவைகளை சேர்த்து மாவாக இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு கால்படி பசுவின் பாலில் ஒரு பலம் கோதுமை மாவும் ஐந்து பலம் பனைவெல்லமும் கலந்து பாகு செய்து மேலே கூறிய பொடித்தூளை கொட்டி போதிய அளவு நெய் சேர்த்து பிசைந்து லேகியமாக இறக்கி வைத்துக்கொள்ளவும். இதனை காலையிலும் மாலையிலும் ஒருவேளைக்கு கழற்சிக்காய் அளவு உண்டு வந்தால், ஒரே வாரத்தில் தாது பலப்பட்டு சுக்கிலம் விருத்தியாகி போக விருப்பம் அதிகரிக்கும் மனதிற்கு புது உற்சாகமும் தெம்பும் உண்டாகும். ஆத்ம திடத்தை அதிகரிக்கச் செய்யும். திட எண்ணம், திடசித்தம் முதலிய சக்தி இதயத்திற்கு உண்டாகும். குறிப்பாக பனை வேர் லேகியம் தாது விருத்திக்கும் ஆத்ம சக்தியை உண்டாக்கவும் பயன்படும். லேகியம் உண்ணும் நாற்பது நாளும் இச்சா பத்தியம் இருக்கவேண்டும். நாற்பது நாளுக்கு மேற்கொண்டும் தொடர்ந்து உட்கொண்டுவர மேனி அழகு கொடுத்து இதய திடத்துடன் வாழ்ந்து, தந்த ரோகத்தை நிவர்த்தி செய்து முகத்திற்கு பொலிவையும் முகவசீகரத்தையும் உண்டாக்கும்.

பனை வேர், சேராங்கொட்டை முதலியவைகளை சுட்டுகருக்கி துருசுடன் கலந்து வருத்து பொடியாக்கி, இந்துப்பு பொடியுடன் கலந்து பல்பொடியாக பயன்படுத்தி காலையில் பல் துலக்கி வந்தால், பல் சம்பந்தப்பட்ட பதினேழு வியாதிகளும் மாண்டொழியும் என்று அகத்திய முனிவர் கூறி இருக்கிறார். தொடர்ந்து பல் துலக்கி வந்தால் சொத்தைப் பல் குணமாகும், முக வசீகரம் உண்டாகும், பித்தம் குறைந்து கண் பிரகாசம் அடையும். என்றும் தொடர்ந்து விடாமல் பல் துலக்கி வந்தால் நூறு வயதுவரை பல் அசையாமல் இருக்கும். பல் இறுகிவிடும் கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியை உண்டாக்குவதால் மூளை சுறு சுறுப்புடனே இயங்கிக் கொண்டிருக்கும்.

## 6. பனஞ்சாறு (புளியாத கள்ளு)

சுண்ணும்பு தடவிய கலையத்தை பனையில் கட்டி அதில் இறங்கும் சாறுதான் பனஞ்சாறு. இதைப் புளிப்படையச் செய்தால், போதை கொடுக்கும் வீரியம் ஏற்பட்டு கள்ளாக மாறுகிறது. இவ்விதம் கள்ளாக மாருத நிலையில் இறக்கியவுடன் சாப்பிட்டு வந்தால், எந்தவிதமான, சிபிலிஸ் (Syphilis) அல்லது கனோரியாவோ (Gonorrhoea) குணமாகி மனிதன் திடகாத்திரனுகிறுன்.

இந்தப் பனைப்பொருளின் பயனை அனுபவரீதியில் அறிந்த நான், எனது குடும்பத்தில் நடந்த சம்பவத்தை கூறி அதில் பனையிலிருந்து கிடைத்த பொருள் எவ்விதம் ஒரு உயிரைக் காப்பாற்றியதென்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.

எனது சகோதரர் ஒரு திடகாத்திரமான மனிதர். வாட்டசாட்டமான சரீரத்தையுடைய வாலிபர். எந்த நோயையும் அவருடைய முப்பத்து ஐந்துவரை கண்டதில்லை. அவருக்கு மலையாளத்திலுள்ள ஆலப்பிழை என்ற ஊரில் ஒரு வங்கியில் உத்தியோகம் கிடைத்தது. தன் மனைவியை சொந்த ஊரில் விட்டுவிட்டு ஆலப்பிழையால் ஹோட்டலில் தங்கி வந்தார். ஏதோ சகவாசத் தோஷத்திஞல் விலைமாதர்களின் சேர்க்கை ஏற்பட்டது. தனது காமலீலைகளில் அளவு கடந்து விளையாடிவிட்டார் இதனுல் கனோரியா, முதலிய மேக வியாதிகளும், சிபிலிஸ் முதலிய வியாதிகளும் ஏற்பட்டு பற்பல மருந்துகளையும் குடித்தும் குணம் தெரியவில்லை. வியாதி முதிர்ச்சி யடைந்து படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இதனுல் வேலையை ராஜினுமா செய்துவிட்டு ஊர் திரும்ப நேர்ந்தது.



8

ஏராளமாக பணம் செலவு செய்தும் உயர்ந்த ஆங்கில மருந்து வகைகளை உண்டும் சிக்கு குணம் அடையவில்லை. நாட்கணக்கில் படுக்கையில் தன்னறிவு இல்லாமல் கிடந்தார். பெற்றோர்களும், மனைவி மக்களும், இனி இவர் பிழைப்பது அரிது என்று கை விட்டுவிட்டனர். அதிர்ஷ்டவசமாக சித்த வைத்தியத்தில் தேர்ச்சியுற்றவரான திருக்குற்றாலத்தை யடுத்த மேலகரத்திலுள்ள பொது உடையானென்ற நாமத்தையுடைய வைத்தியர் வந்து பார்வையிட்டார். இவருக்கு எந்த மருந்தும் பயன்படாது என்றும், ஒரே பனையிலிருந்து இறக்கப்பட்ட பனஞ்சாரை காலையிலும் மாலையிலும் 40 நாட்கள் (ஒரு மண்டலம்) அருந்திவருவாறேயானால் இந்த வியாதி குணமடையும் என்றுகூறினர். எங்கள் ஊர் சமீபத்திலேயே எங்களுக்குச் சொந்தமான தோட்டத்தில் பனைமரங்கள் ஏராளம் இருக்கின்றன. அவரை அங்குள்ள கட்டிடத்தில் தங்கச் செய்து, சித்த வைத்தியர் கூறியபடி, ஒரே பனையிலிருந்து இறக்கப்பட்ட பனஞ்சாற்றை அருந்திவந்தார். அருந்தி வந்த 10வது நாள் ஆள் எழுந்து நடக்க ஆரம்பித்தார். நாற்பது நாட்களுக்குள், சிக்கின் குணம் தெரிந்து ஒரு நிலைக்கு வந்துவிட்டார். பின்பு தொடர்ந்து ஆறு மாதங்கள் சாப்பிட்டுவர, எனது சகோதரர், பழைய நிலையில் வந்து நல்ல புஷ்டியுள்ள வாலிபராக மிளிரலானர்.

இவ்விதம் மனிதனை ஆபத்தான நோய்களிலிருந்தும் காப்பாற்றி உற்ற உயிரை கொடுக்கிறது பனைமரம். இதுமட்டு மல்ல. தற்காலத்தில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் “ குடும்ப கட்டுப்பாடு திட்டத்தில்” பனையின் பயனை யாரும் அறியவில்லை. கருத்தடை ஏற்படுத்துவதற்கு அறுவை சிகிச்சையோ, அல்லது லூப்பு வளையம் வைத்தலோ தேவை இல்லை. பனைப்பொருளில் இருக்கின்ற சத்து கருவை ஏற்படாதபடி செய்கிறது, இளம் பனங்குறுத்தை எடுத்து அதன் உள்பாகத்தை நன்றாக பயன்படுத்த வேண்டும். கணவன் மனைவி உடல் உறவு கொள்வதற்கு முன்பு இந்த குறுத்தை சாப்பிட வேண்டும். இவ்விதம் மூன்று நான்கு முறை சாப்பிட்டுவர கருப்பையின் சக்தி குறைந்து கரு உண்டாவதில்லை. இதனை சித்த வைத்திய ஏட்டில் பெண்களின் சூதகம் அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விதம் சித்தவைத்தியத்தில் பெரும் பங்கு கொண்டிருக்கின்ற பனையின் பயனை இனியாவது மக்கள் அறிந்து அதனை ஆதரிப்போமாக.

# சித்தர்களும் அவர்களின் பரம்பரையும்

(டாக்டர் C. P. சாமி, பழனி.)

**தமிழ் சித்த மருத்துவம் :**

சித்தர்கள் தங்கள் சித்தத்தை அதாவது மனத்தை சிவன் பால் வைத்து சித்தி பெற்றவர்கள். அதாவது வீடுபேறு அடைந்தவர்கள் என்பர். அணிமா, மகிமா, இலகுமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், வசித்துவம். ஈசத்துவம் ஆகிய அட்டமா சித்திகள் கைவரப் பெற்று தாங்கள் பெற்ற அனுபவத்திலிருந்தும், தங்களுக்கு செவி வாயிலாகக் கிடைத்த செல்வத்தையும், குருமூலமாகக் கற்றறிந்தவைகளையும், திரட்டிப் பாடல்கள் உருவமாக சித்த மருத்துவ நூல்களைப் பாடிப் போந்தனர் சித்தர்கள். சித்த மருத்துவததை வகைப் படுத்திய பதினெண் சித்தர்களுள் தலையாயவர் அகத்தியர். தமிழ்க்குறுமுனியான அகத்தியரும் சித்த மருத்துவத்தின் தந்தையுமான அகத்தியரும் ஒருவர் அல்லர்.

திருமூலர் தமது வழியினைக் கூறுமிடத்து

"நந்தியருள் பெற்ற நாதரை நாடிடல்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவ ரென்னோடு டெண் மருமாமே"
என்றும் தம் மாணாக்கரையும்

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலரங்கன்
இந்திரன் சோமன் பிரமனு குத்திரன்
கந்து ருக்காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த வெழுவரு மென் வழியாமே" என்கிறார்.

"கருணை தரு மைங்கரனே காப்பு வாணி
கலந்திந்தச் சூத்திரந்தான் கருவாய்ப்பாட
திருவுமையாள் மனோண்மணித்தாய் செப்பக் கேட்டு
தெளிந்த குருநூலாகத் திரட்டிப்பாட"

என்று அகத்தியர் வைத்தியகாண்டம் முன் அறுநூறிலும்

"வேளப்பா வெரித்த சிவன் சொன்ன மார்க்கம்
வெவ்வேறாய்ச் சித்தர் சொன்னார் வித்தைப் பாரே"

என்று சட்டைமுனி கற்ப விதி 100 லும் சொல்லுவதிலிருந்து சித்தரெல்லாம் சிவனாரும் அம்மையாரும் நந்தியும் தமிழில் கூறினவற்றின் வழியே தாம் கூறுவதாய் கூறுகின்றனர். எது எவ்வாறாயினும் சித்தர் நூல்கள் மருத்துவ உலகிற்கு கிடைத்தற்கரிய ஒரு பெரிய கருவூலமாகும்.

**மருந்தின் இயையும், வகையும் :—**

முதன் முதல் உலோகங்களையும், இரசத்தையும், பாடாணத்தையும், மருத்துவத்தில் உபயோகப் படுத்தியது சித்த மருத்துவமே. சித்தர் நோய் நீக்கற்கு மணி, மந்திரம், மருந்து என மூன்று வழிகளை ஏற்படுத்தினர். மணி என்பது இரச மணி என்பர் சிலர். மணி என்பது தினமணியான கதிரவனைக் குறிக்கும். கதிரவன் ஒளி உடம்பில் படுதலால் நோய் நீங்கும். அதுபற்றியே நம் முன்னோர் காலையில் குளித்த உடன் ஆதவன் வணக்கம் (சூரிய நமஸ்காரம்) செய்து வந்தனர் என்பர் சிலர்.

மந்திரம் என்பது அலையும் மனத்தை அகத்து அடக்க கடவுளின் திருவுருவத்தை மனக்கண் நிலை நிறுத்தி அவனை நினைத்து அவன் நாமங்களைச் சொல்லி ஜபம் செய்வது என்பர்.

மருந்தைப்பற்றிக் குறிப்பிடுமிடத்து திருமூலர் நோய் வராமற் காக்கும் மருந்துகளும் ஒழுக்கங்களும் காப்பு எனவும், வந்த நோய்களைப் போக்கும் மருந்துகள் நீக்கம் எனவும், உடலிற் குறைந்துள்ள சத்துகளுக்கு ஈடு செய்து குணஞ் செய்யும் மருந்துகள் நிறைப்பு எனவும் மூன்றுவகையாகப் பிரித்திருக்கின்றனர், நோய் நீக்கும் மருந்துகளை திருமூலர் மூலிகை வகை. உப்பு வகை, தீநீர் வகை, உபரசவகை, உடற்பொருள் வகை, பாடாண வகை, யோக வகை என பத்துவகைகளாகப் பிரித்துள்ளனர்.

"மருந்தினியைபை வருக்கி லொப்புறை
இருக்கின் மாறுய் மருந்திங் கெதிருறை
மருட்டு மொன்றிரு குணங்கள் கலப்பால்
சிறத்தல் கலப்பெனச் செப்பினன் நந்தி"

என்று மருந்தினியைபை திருமந்திரம் 8000 த்தில் கூறப்படுகிறது.

எம்மருந்து எங்நோய்க் குணத்தை உண்டாக்கும், அங்நோய்க்கு அம்மருந்து கொடுத்தலும், வாத மிகுதியால் தோன்றிய வாத குண நோய்க்கு வாத குண மருந்தும், அவ்வாறே பித்த நோய்க்குப் பித்த மருந்தும், ஐய (சிலேத்தும) நோய்க்கும் ஐய மருந்தும் வாத பித்த ஐய கலப்பு நோய்க்கு கலப்புக்குண மருந்தும் கொடுத்தல் ஒப்புறை. வாதத்துக்கு பித்த மருந்தும், பித்தத்துக்கு வாத மருந்தும், ஐயத்துக்கு பித்த மருந்தும் பித்தத்துக்கு ஐய மருந்து கொடுத்தலும், வெப்பத்துக்குத் தண்மை மருந்தும், தண்மைக்கு வெப்ப மருந்தும் மிகுந்ததைக் குறைக்கவும், குறைந்ததை நிரப்பவும் வளரவும் மருந்து கொடுத்தல் எதிருறை. வாதப்பித்தம், வாதமையம் பித்தமையம் வாத பித்தையம் கூடிய அல்லது தனித்த சரக்கு களை அவற்றுடன் சேர்ங்கும் சரக்கின் குணபலத்தால் தனித்தனி வாதபித்தைய நோய்களைத் தீர்க்கும் மருந்தும் குறித்த நோய் தீர்த்தற்குரிய ஒரு சரக்கைத் தலைமையாய் கொண்டு துணைச் சரக்குகளைச் சேர்த்து முதற் சரக்கின் பெயராற் செய்யும் குளிகை நெய் எண் ணெய், சூரணம் முதலிய மருந்துகள் கலப்புறை.

எது எந்த நோய்க்குணத்தைத் தோற்றுவிக்கும் வலியுடையதோ அது அந்த நோயைப் போக்கும் வலியுடையதாம். இவ்வாறு மருந்துகளை வகைப்படுத்தினர் சித்தர்கள்.

"தாதுப் பரீட்சைவரு காலதே சத்தோடு
..........................................
தோற்றியே அமிர்த கரனய்
ஆதிப் பெருங்கேள்வி யுடையன் ஆயுர்வேதன்"

என்கிறது சதகம்.

நாடித் தேர்வையும் காலத்தையும் இடத்தையும் உடலின் இயல்பையும் உணர்வ துடன் வரும் நோய்களின் முடிவை வெளிப்பட உணர்ந்து கை நலம் உடையவனுய் முற்காலத்திலிருந்து வழி வழியாக வரும் கேள்வியறிவையும் உடையவனே மருத்துவன். நாடிப் பரிட்சையே சித்த பருத்துவத்தின் தனிச்சிறப்பு. நாடியைப் பற்றி கூறு மிடத்து திருமூலர்

"குறியாம் வலக்கரங் குவிந்த பெருவிரல்
மாறிவாய் தன்கீழ் வைத்திடு மூவிரல்
பிறிவாய்மே லேறிப் பிலத்தது வாதமாம்
அறிவாய் நடுவிரல் அமர்ந்தது பித்தமே"

" பித்தத்தின் கீழே பிரண்டது ஐயமாம்
உற்றுற்றுப் பார்க்க ஓர் நரம்பே யோடும்
பத்தித்து மூவரும் பாய்கின்ற வேகத்தால்
மத்தித்த நாளம் போல் வழங்கும் நரம்பிதே "

என்று நாடியறியும் விதத்தை விளக்குகிறார். இத்துடன் அல்லாமல் மருத்துவன் சித்தர்கள் எழுதியுள்ள வாகடங்கள் அறிந்து மருந்துச் சரக்குகளை தூய்மை செய்யும் முறையையும் அறிந்து மருந்துகளின் இயல்புகள் அறிந்து செய் முறையையும் அறிந்திருக்க வேண்டும் மேலும் சரநூல், சோதிடம் முதலியனவும் அறிந்திருக்கவேண்டும். இவைகளை எல்லாம் பார்த்து செய்யும் மருத்துவமே இயற்கை வைத்தியம்.

**சித்த மருந்துவத்தின் எதிர்காலம் :**

இப்பழமையான சித்த மருத்துவத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள்பல. அவற்றுள் தலையாயது சித்தர் நூல்களைத் திரட்டி வெளியிடுவது. சித்தர் நூல்களில் பரிபாஷைச் சொற்கள் ஏராளம். ஆகவே வல்லவர்களைக் கொண்டு சித்த மருத்துவ நூல்களை எளிய உரை நடையில் தொகுத்து வெளியிட வேண்டும். மருந்துகள் செய்ய உதவும் மூலிகைகள் அரிதாகிவிட்டன. ஆதலின் மருந்துச் செடி மூலிகைத் தோட்டங்களை பல விடங்களில் அமைக்க வேண்டும். தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் சித்த மருத்துவத்துறை அமைத்து ஆராய்ச்சி வசதி செய்து தரப்படல் வேண்டும். மருந்து செய் முறைப் பட்டியல் தொகுத்து வெளியிடுவதுடன், மருந்துகளைச் சோதனை செய்ய ஆராய்ச்சி சாலைகள் ஏற்படுத்த வேண்டும், குறிப்பாக மேல்நாட்டுத்துறை மருத்துவத்துடன் சித்த மருத்துவத்தை இணைக்காமல் இதற்கென்றே அரசாங்கத்தில் தனித்துறை ஏற்படுத்த வேண்டும். சித்த மருத்துவம் கற்க விரும்பிவரும் மாணவர்களுக்கு மானிய உதவி செய்ய வேண்டும். இது போன்ற நடவடிக்கைகள் செய்வதால் சித்த மருத்துவத்தின் எதிர்காலம் பிரகாசமா யிருக்கும்.

# "அருட்பாவில் சித்தமருத்துவம்"

தில்லை இ. ரா. விஜயன்,
(சித்தவைத்தியர், சென்னை.)

தமிழ் நாட்டின் சிறப்பு மிக்க வைகளில் சித்த (தமிழ்) மருத்துவமும் ஒன்று என்பது பெரும்பான்மையான மக்களறிந்ததே எனினும் சுமார் 100 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவர் திரு அருட்பிரகாச வள்ளலாராகிய திரு இராமலிங்க சுவாமிகள். இவர் பக்திமார்க்கத்தில் சிறந்தவராகவும் ஆன்மநேய சக்தியால் சகல சித்துகளும் பெற்றூர் என்பதே தமிழ் நாட்டு மக்களில் பெரும்பான்மை யோரறிந்ததே தவிற இவறியற்றிய மருத்துவங்களையும் அதின் நுட்ப திட்பங்களையும் அறிந்தவர்கள் சிலரேயாகும். இவறியற்றிய அருட்பாவில் ஆருவது திருமுறையில் அம் மருத்துவ நுட்பங்களும் பதார்த்த குண விளக்கங்களும், சுகாதாரவழிகளும் தத்துவ விளக்கங்களும் அறிந்தோரறிவர்,

இவர் சிதம்பரத்தை யடுத்தத் திருமருதூர் என்னும் கிராமத்தில் பிறந்து, சென்னையிலும், வடலூரிலும், அதை யடுத்துள்ள சித்தி விளாகமென்னும் மேட்டுக்குப்பத்திலும் வாழ்ந்தவர். பொதுவாகத் தமிழ்நாட்டில் இவரைப்பற்றித் தெரிந்து கொள்ளாதவர்கள் அதிகமில்லை எனச் சொல்லலாம், இவர் சிறுவயது முதல் பள்ளிப்படிப்பின்றி தெய்வத் திருவருளால் தமிழ்புலமை மிகுந்தவராயும், சக ஞானமுமறிந்தவராயும், சகல சித்துகளும் வல்ல சித்தராகவும் விளங்கினர்.

சுவாமிகளியற்றிய அருட்பாவில் நம் நாட்டுத்தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவம் இன்றியமையாததாகும், மேலும், இவர் எழுதிய குணபாடத்தில், சித்தர்களின், அகராதி, நிகண்டுகள், குணபாடங்கள் முதலியவற்றில் காணப்படாவைகள் கூடக் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். இவர் தமது மெய்ஞான அறிவால் தெரிந்து தெளிந்து எழுதியுள்ளார்கள். இவை யனைத்தும் அருப்பாவை முற்றுமறிந்தோரனைவரும் அரிந்ததே யாதலின் சுவாமிகளைப்பற்றியும், அவறியற்றிய அனைத்து மருத்துவங்களையும் இங்கு குறிப்பிடாமல் சில முக்கியமானவற்றையே இங்கு குறிப்பிடுகிறேன்.

## நீர்

சாதாரணமாகக் குளிர்ந்த நீர்கொள்ளுவது கெடுதி, ஏனெனில் மேற்படி நீரில் மூன்று குணங்களுண்டு அவையாதெனில், விடம் (நஞ்சு) பூதம், அமுதம், என்பனவாம். இம் மூன்றும் ஒன்ருகவே இருக்கும் அதாவது மேல்பாகததிலுள்ள சிலிர்பாகியது நஞ்சாகவும், அதனடியில் ஏகதேசம் சுடுகையுள்ளது பூதமாகவும், அதனடியில் விசேட சூடுள்ளது அமுதமாகவும் கூடி ஒன்ருயிருக்கும், மேற்படி நீரின் குணங்களாவன. நஞ்சு நீர் தத்துவ விளக்கத்தைப் போக்கும். ஆபாச நீர்களாகப் பற்றும், பூத நீர் – தத்துவவிருத்தி செய்யும், அமுத நீர் - பிராவாயுவை விருத்தி செய்யும், உயிர் சக்தியை விருத்தி செய்யும்.

## வெந்நீர்

ஆதலின் மேற்படி சுத்த அமுதம் கிடையாத பட்சத்தில் இதர நீரை பச்சையாகக் கொள்ளக்கூடாது வெந்நீராகக் கொள்ளுதல் சிறந்தது. அந்நீரும் 5-3 மாகவோ, 5-2 மாகவோ காய்ச்சி சர்க்கரை, வெல்லம், அல்லது கற்கண்டு, இவைகளிலே தேனுமொன்றை சேர்த்துக் கொள்ளல் வேண்டும், நேராதபட்சத்தில் தென்னை, நாயுருவி, வாழை, முதலிய வற்றிலே தேனு மொன்றை சம்மந்தப்படுதியாவது சூரிய கிரணத்தில் வைத்தாவது, சூரிய

சரத்தில் பார்த்தாவது, சி. காரத்தை உண்ணியாவது கொள்ளல் வேண்டுமேயல்லாது பச்சையாகக் கொள்ளக் கூடாது சுத்த சன்மார்க்கத்தில் தேக விருத்தி செய்தல் வெந்நீரா தலால் எக்காலத்தும் குளிர்ந்தநீர் சேர்த்தல் கூடாது பச்சை நீரினிடத்தில் முன் சொன்ன மூன்று குணங்களுண்டு என்பதை மனதில் கொள்ளவேண்டும். தவிற காலங்கடந்து குளிர்ந்த நீரில் குளித்து ஈர உடையுடைனிருப்பது உடலுக்குக் கெடுதி குளிக்க வேண்டுமாயின் வெந்நீரில் குளிப்பதுதான் சிறந்தது. சனிநீராடு என்பதற்கு சனி போன்ற கருமையான கருகிய நீராலாடு என்று சொன்னது யாதெனில் வெந்நீரில் ஒரு வாறு ஊற்று நீர் ஈதன்றி மற்றபடி சொல்வது தேரியாமையாகும்.

## சர்க்கரையும் உப்பும்

சுத்த சன்மார்க்க சாதகர்கள் எக்காலத்தும் புழுக்காதிருக்கிற வஸ்துவையே கொள்ளல் வேண்டும், புழுக்காத வஸ்த்துக்கள் யாதெனில் சர்க்கரை, தேன், கற்கண்டு, வெல்லம், அயச் செந்தூரம் முதலிய செந்தூரங்களும், தாமிர முதலிய பற்பங்களும், ஆதலின் ஆகாரத்திற்கு முக்கியவைகள் மேற்குறித்தவைகளாகும். பரியாயத்தில் சர்க்கரை என்று உப்பைச் சொல்வது முண்டு மேற்படி உப்பை துருசுபோக்கி ஜெய உப்பாகக் கட்டி ஆகாரத்தில் கொண்டால் தேகம் நீடிக்கும் ஈதன்றி சத்துவ பதார்த்தத்தில் லவணம் சிறிது சேர்த்துக் கொள்ளவும் கூடும்.

## " கரிசாலேயும் தூதுவளேயும் "

இந்த இரண்டு மூலிகையைப்பற்றி சித்த நூற்கலில் அனேகம் கூறப்பட்டிருப்பினும், சுவாமிகள் எழுதியிருப்பதைக் கண்ணுரும்போது மிகத் தெளிவாக இருக்கிறது. அதாவது :—கரிசாலேயை தினசரி பச்சையாகவேனும், சமைத்தேனும், சாப்பிட்டு வரவேண்டும். பிரதான உள்ளுடம்பாகியதை அது நீடிக்கச் செய்யும் மேற்குறித்த மூலிகையை அலட்சியம் செய்யாது ஆசிரியர் திருவடியின் கண்ணே இலட்சியம் வைத்து எவ்விதத்திலாவது தினசரி உட்கொண்டு வந்தால் தேகக் கெடுதியாகிய அசக்தம் நீங்கி தேகம் வலுவுள்ளதாய் நீண்டநாளிருக்கும் முக்தியடைவதற்குத் துணேயாயுமிருக்கும் மகான்களிடத்தில் அனந்தகாலங் காத்தலும் மேற்குறித்த மூலிகையை உபயோகத்தையும், உண்மையையும், அனுபவத்தையும் வெளியிடார்கள், நம் தலேவனுல் கிடைத்ததே இதுவாகும். அசட்டையின்றி கொள்ளவேண்டும். மேற்குறித்த மூலிகையை தண்ணீரில்லாத இடத்திலிருக்கிறதே விசேடமாகும், நீருள்ள இடத்தில் காரமிருக்காது. தினசரி பல் தேய்த்த உடன் அண்ணுக்கில் தர்சணி விரலால் தேய்க்க மேற் குறித்த மூலிகையால் பித்தநீர், கபநீர் வெளியாகி, கண்ணொளி விசேடிக்கும் நேராத பட்சத்தில் பொற்றலேக் கையாந்தரைக்கூடும். மேற்குறித்த மூலிகை செந்தூரம் செய்வதற்குச் சிறந்தது. உலர்த்திக்குழித் தைலம்வாங்கியும் செந்துரம் செய்யலாம். அதுபோலவே அறிவை விளக்குவதற்கும், கவன சக்தியை உண்டு பண்ணுவதற்கும், கரணம் ஒய்வதற்கும், கபத்தை அறுப்பதற்கும், யோக்கியதையுள்ள மூலிகை தூதுவேளே அதை மேற்குறித்தபடி செய்து வந்தால் விசேட நன்மை செய்யும். கரிசாலே தந்தசுத்தியால் வசீகரமும் நேரிடும். இது உண்மை. இவ்வாரரன பற்பல அதியற்புதமான மருத்துவ உண்மைகளேயும் சுவாமிகள் தமது திரு அருட்பாவில் ஆருவது திருமுறையில் குறிப்பிட்டுள்ளார்கள்

# சித்தர் திறங்கள்

எஸ். கே. எஸ். காளிமுத்துப் பிள்ளை, R.I.M.P.,
(ஒட்டன் சத்திரம்.)

எனக்கு 7 வயதிலிருந்தே இறை நோக்கம் உண்டாகி அதிலிருந்து நூல் அறிவை அறிவதற்கு உரிய கல்வி கற்றும் கற்பகோடி காலம் இறவாமல் இளமையோடு வாழ வேண்டும் என்ற எண்ணம் என் இதயத்தைத் துண்டியதிலிருந்து முதல் முதல் சித்தர் நூல் ஞானக் கோர்வையை வாங்கிப் படித்தேன். அதிலிருந்துப் பல சித்தர்கள் நூல்கள் ஆராய்ச்சியும் குருமார்களின் உபதேசமும் கிடைக்கப்பெற்று, சுமார் 30 ஆண்டுகளில் ஆராய்ச்சியின் முடிவையும் அனுபவத்தையும் என் சிற்றறிவினுல் அறிந்து தெரிந்தவரை கூறிக்கொள்வதற்கு விரும்புகிறேன், பெரியோர்கள் உரை திருத்தி குணங்களை எடுத்துக்கொள்ளுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் மருத்துவத்துறையின் சிறப்பு என்னவென்ருல் தமிழ் மருத்துவர் மருத்துவ தத்துவம், மருந்து தத்துவம், சோதிடம், யோகம், ஞானம். முதலியவைகளை அடிப்படையாகக் கொண்ட கலைகளை அறிந்தவர்தான் தமிழ் மருத்துவர். அம்மாதிரி தமிழ் மருத்துவர் நினைத்ததை நினைத்தபடியும், பார்த்ததை பார்த்த மாத்திரத்தில் செயலாற்றக் கூடியவராயிருப்பார். அவர்தான் சித்தர். அவர் செய்யும் மருத்துவம்தான் சித்த மருத்துவமாகும்.

அம்மாதிரி உள்ள சித்தர்களுக்கு இம்மாதி மாநாடு தேவையில்லை. நாம் எல்லோரும் மேல்கண்ட பூரண கலைகளில் தேற்சியில்லாமல் இருப்பதால் இம்மாதிரி மாநாடு கூட்டி ஒவ்வொருவரும் அவரவர் அனுபவங்களையும் பரிமாரிக்கொள்வதற்காகவே இங்கு மாநாடு கூடியிருக்கிறோம்.

அகில உலகத் தமிழ் 2-வது மாநாட்டின் சித்த மருத்துவ சிறப்பு ஆளவக் கூட்டமானது, மக்கள், மக்களாய் வாழ வேண்டும், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கு இணங்க மக்கள் நோயற்ற வாழ்வோடு வாழ வேண்டும். நோயற்ற வாழ்வோடு வாழ்வதற்கு வழி வகுத்துக் கொடுத்திருக்கும் மருத்துவ முறையை ஆன்றோர்களால் ஆண்டு அனுபவித்து வந்த மருத்து முறையாகிய சித்த மருத்துவமான தமிழ் மருத்துவம் உலகந் தோன்றிய காலந்தொட்டு தொன்று தொட்டு நடை முறையில் இருந்து வந்து கொண்டிருக்கிறது.

உலகத்தில் எவ்வளவு காலமாய் மக்களும் மற்றும் ஜீவராசிகளும் அண்ட சராசரங்களும் இருந்திருக்க வேண்டும் என்பதை திட்டவட்டமாய் சொல்ல முடியாது, என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள். ஆனுல், சித்தர்கள் நூல்களின் ஆராய்ச்சிப் படியும் என்னுடைய ஆராய்ச்சியின் முடிவும் ஆராய்ச்சி மூலமாகக்கிடைத்த அனுபவமும் அனுபவத்தின் அபிப்பிராயப்படியும், கற்ப பிரளய சூன்ய காலம் தவிர, மற்ற காலங்களில் மக்கள், தேவர்கள், சித்தர்கள், ஞானிகள், இவர்களும் அண்ட சராசரங்களும் இருந்து கொண்டிருக்க வேண்டும். அதாவது சென்ற காலம். நிகழ் காலம், எதிர் காலம், என்ற முக்காலங்களினும் இருந்துகொண்டிருக்க வேண்டும்.

அண்டங்கள் மற்றும் ஜீவ ராசிகள் பற்றி பின்பு ஆராய்வோம். மக்கள், மக்கள் வாழும் நாடு; மக்களுக்கு இயற்கையானது, தமிழ் மொழி, தமிழ் வைத்தியமாகிய சித்த மருத்துவம் என்னும் இவை உலகம் முழுமையும் இருந்திருக்க வேண்டும் என்பதை ஆராய்ச்சியால் அறியவேண்டியது. அதற்குச் சான்று தமிழ் இயற்கையில் ஒலிக்கும் மொழி என்பது, விலங்கினத்தில் உயர்வானது பசு. மேற்படி பசு ஈன்ற கன்ருது இப்பொழுதுள்ள தமிழ் நாட்டின் பரப்பளவில் உள்ள பசுவும் மற்ற வெளிநாட்டிலுள்ள பசுவும் ஈன்ற கன்றுகள்

அம்மா என்றுதான் தன் தாயை நினைந்து கத்துகிறது. வெளி நாட்டிலுள்ள மொழியாகிய ஆங்கிலத்தில் மதர் என்றோ அல்லது இப்பொழுது மொழிப் போராட்டம் செய்து கொண்டிருக்கும் வடநாட்டு மொழியில் ஒன்ருகிய ஹிந்தியில் மாதா என்றோ கத்துவதில்லை. ஆனல் இயற்கையோடு ஒலிக்கும் தாய்மொழி தமிழ் என்பது நான் எடுத்துக் கூருமலே எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியது.

அதனல் இயற்கையாய் ஒலிக்கும் அகரத்தை அடிப்படையாகக் கொண்டது தமிழ் மொழி. உலகம் உண்டான காலத்தில் உலகம் முழுதும் மக்கள் முதல் முதல் இயற்கையில் ஒலிக்கும் மொழி தமிழ்தான் என்பதை தாய்மொழியாகக் கொண்டிருக்க வேண்டும். அதன் பின் கால வசத்தால் மாறுபட்டு ஷி தமிழ் மொழியின் ஒலியை ஆதாரமாகக் கொண்டு வேறு மொழிகள் உண்டாயிருக்க வேண்டும் என்பது எனது ஆராய்ச்சியின் முடிவு என்று அறுதியிட்டு உறுதி கூறுகின்றேன்.

மேல்கூறிய தமிழ் மொழியில் தமிழ் சித்தர்களால் அறிந்து தெரிந்து புரிந்து, செய லாற்றிவந்த தமிழ் மருத்துவமானது சித்த மருத்துவம். சித்த மருத்துவம் என்ருல் தமிழ் மருத்துவம். தமிழ் மருத்துவம் என்ருல் சித்த மருத்துவம் என்பது நான் எடுத்துக் கூருமலே தாங்கள் எல்லோரும் அறிவீர்கள். ஒரு பொருளுக்கு அந்தப் பொருளினுடைய இயற்கையை அனுசரித்துத்தான் பெயர்ச் சொல் ஏற்பட்டிருக்கிறது. ஒரு புத்தகத்தின் உள் அடக்கம் அந்தப் புத்தகத்தின் பெயரில் அடங்கியிருக்கிறது. உதாரணமாக தேவாரம், திருவாசகம், அருட்பா இவைகளைப்போல் வைத்திய, வாத, யோக, ஞானங்களை சித்தர்கள் இயற்றிய சுப்பிரமணியர் ஞானம், அகஸ்தியர் ஞானம், மற்றும் பிரவற்ருலும் காணலாம்.

சித்த மருத்துவம் என்பது சித்தர்கள் மரபில் தோன்றியது என்பது வெளிப்படை யாக இருக்கிறது. சித்தர்கள் என்ருல் சித்தத்தில் சிந்தித்த மாத்திரத்தில் சிந்தித்தபடி அனுபவிக்கக் கூடியவர்கள் என்பது நாம் எல்லோரும் தெரிந்துகொண்டிருக்கிரோம்.

மேல்கண்ட சித்தர்களுடைய நூல்களின் வாயிலாக ஆராய்ச்சி செய்தால், "அகர முதல் எழுத்தெல்லாம்" ஆதி பகவன் முதற்றே உலகு," என்பதிலிருந்து உலகம் உண்டாவ தற்கு ஆதி பகவன் என்றும், ஆதிப் பகவன் என்னும் குறிப்புப் பெயர் கொண்ட, பிர்ம சொரூபத்திலிருந்து உண்டாகியிருக்கிறது. மொழிகளிலுள்ள எழுத்துக்கள் எல்லாம் அக ரத்தை முதன்மையாக உடையது என்பதும் இது மேல்கூறிய இயற்கையில் ஒலிக்கக்கூடிய விபரங்களிலிருந்து வெளியாகிறது, என்பதும் அறிஞர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியது.

சூன்ய பிரதேசமாகிய பிர்ம சொரூபத்திலிருந்து உலகம் தோன்றியும் செயல்பட்டும், மறைந்தும், தோன்றியும், செயல்படுவதானது பிர்ம சொரூபமாகிய சூன்ய பிரதேசத்தில் நம் கண்ணுக்கும் அறிவுக்கும் தோன்றும் உருவம், அருவம் உலக சராசரங்கள் அண்டங் கள் அத்தனையும் மேல்படி பிர்ம சொரூபத்தில், ஆலம் வித்தில் பிரம்மாண்டமான ஆல மரம் அடங்கி இருப்பதுபோல் இருக்கிறது, என்பதை அறிஞர்கள் எல்லோரும் அறியக்கூடியது.

மேல்கண்ட விவரங்களை அறியவேண்டுமானல் "சுவை. ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு," என்பதை அறிந்தவர்க்கல்லாது அரை குறையாகத் தெரிந்துகொண்ட மற்றவர்கள் உலகத்தை அறிந்ததாக கூறுவது, குருடர்கள் கண்ட யானையை ஒக்கும் என்பது நான் எடுத்துக் கூருமலே தாங்கள் எல்லோரும் அறிய வேண்டியதே.

மேற்படி பஞ்சபூதியக் கூருகிய மண், தண்ணீர், நெருப்பு, காற்று, வெளி, ஒளி இவை களோடு கூடிய உலகில் பிறந்த ஜீவ ராசிகளில் மனிதப் பிறவியே மேலானதாகும். மனிதர் அண்ட சராசரங்களையும் அறிந்து, புரிந்து, தெரிந்து, ஆட்டிப் படைக்கும் பல அதிசயங் களை செயல்படுத்துகிருர்கள். மற்ற ஜீவராசிகள் தங்கள் வாழ்நாள்களை நீடித்துக்கொள்வ தற்கோ பல அதிசயங்களை செயல்படுத்துவதற்கோ, உரிய அறிவும் ஆற்றலும் கிடையாது.

ஆனல், மக்கள் பிறவியொ கோலரும் பாலராகலாம் என்றும், கோடி கோடி காலமும் குறைவிலாதிருக்கலாம் என்றும் சர்வ சித்தி பெற்ற சில வாக்கியரும் மற்றும் பல சித்தர் களும் அனுபவித்துக் கூறியிருக்கிருர்கள்.

மேல்கண்டவாறு மனிதப் பிறவிகளில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை ஆன்றோர் கூறியுள்ளபடி நோயற்று வாழ்வதற்கு முயல்வது மக்கள் முதல் கடமையாகும். அது சித்த மருத்துவமாகிய தமிழ் மருத்துவத்திற்குள் அடங்கியிருக்கிறது.

எப்படி அகரத்தை முதலாகக் கொண்ட தமிழ் மொழியை ஆதாரமாகக் கொண்டு மற்ற மொழிகள் இயங்குகின்றதோ, அதுபோல சித்த மருத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுதான் மற்ற மருத்துவங்கள், மருத்துவத் துறைகள் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. என்பதை உறுதி செய்வதற்கு மனிதன் இறவாமல் கற்ப கோடி காலம் இளமையோடு இருப்பதற்கும் தங்கம் முதலாகிய உயர்வான பொருள்களைச் செய்வதற்கும், மற்ற மருத்துவத் துறைகளில் இல்லை என்பதே சான்றாகும். மற்றும் தேவதை உபாசனைகளினால் சில பொருள்களை வரவழைக்கக்கூடிய முறைகள் சித்தர்களால் இயற்றிய நூல்களிலிருந்துதான் காணலாம். மற்ற வெளிநாடுகளில் உள்ள முறைகளில் இவைகள் காணப்படவில்லை என்பது மற்றொரு சான்றாகும்.

மேலும், சித்த மருத்துவம் என்பது மணி, மந்திரம், மருந்து இவைகளோடு கூடிச் செயல்படுகிறது. மணி, மந்திரம், மருந்து என்ற விதிகள் மற்ற மருத்துவத் துறைகளில் இல்லை என்பதும் மேலும் ஒரு சான்றாகும். மேல்கண்டவைகள் எல்லாம் சித்த மருத்துவத்தின் சிறப்பேயாகும்.

சித்த மருத்துவன் கூடுமானவரை சித்தர் நூல் ஆராய்ச்சி பெற்று அனுபவத்திலும் பயிர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான் மேல் கூறிய சித்த மருத்துவத்தின் பெறுமை குறையாமல் தலை நிமிர்ந்து நிற்கும்.

முன் காலத்தில் வடநாட்டுச் சித்தர்கள் தென் நாட்டுச் சித்தர்கள் என்ற இரண்டு சபைகள் இருந்திருக்கிறது. இருந்துகொண்டும் இருக்கிறது. ஆனால் கலியுகத்தில் நான்கு லட்ச சித்தர்கள் தேர்ந்து வருவார்கள் என்று சித்தர் நூல்கள் கூறுகிறது. அதன் அடிப்படையில்தான் சித்த வைத்திய சங்கங்கள் ஆங்காங்கு ஏற்பட்டிருக்கிறது. சங்கங்கள் மூலமாக மாநாடுகள் நடக்கும்பொழுது விளக்கங்களை பரிமாறிக் கொள்வதிலிருந்து ஒருவர்க்கொருவர் புதிய கருத்துக்கள் தோன்றும்.

அந்தக் கருத்துக்களின் மூலமாக நரை, திரை, நுப்பு, சாக்காடு, நம்மை அணுகாது வாழ, ஞானிகள் என்றால் நிலையைக் கேள், யோகிகள் என்றால் வாசியைக் கேள், வாதி என்றால் வழலையைக் கேள், வைத்தியன் என்றால் கட்டைக் கேள், என்பதற்கு இணங்க வைத்திய வாத யோக ஞானம் என்பதில் வைத்தியத்திற்கு, இயற்கை - செயற்கை, பாஷாணங்கள், உப்புக்கள், உபரசங்கள், உலோகங்கள் முதலியவைகளின் குணங்களை நன்கு தெரிந்து சத்துக்கள், மணிகள், சாரணைகள், கட்டு வகைகள், நீற்று வகைகளும் செய்து முடித்து குருவருளால் பத்திய பாகப்படி உண்டு சுத்தம், பிரணவம், அருள், என்ற உருவம் அருவம், உருவருவம் என்னும் மூவகையான உடற் சித்திகளும் பெற்று தான் நினைத்தவாறு உடலை வெளியாக்கிக் கொள்வதே சித்தசமயத்தின் உண்மையின் கற்ப்பம் இதுவேயாகும்.

மேல்படி விவரங்களுக்கு கற்ப்ப கோடி காலம் அதிசயங்களை நடத்திக் கொண்டிருக்கலாம் என்பதற்கு ஆதாரம் தமிழ்ச் சித்தன் முருகன் தன் மாணக்கன் அகத்தியனுருக்குக் கூறிய சோதிடத்தில் கூறியது :—

உறுந்திரத்தில் யாவரும் வந்தும்
சுதனுங்கிசமும் உச்சமுமாய்
பெரும்பொழுது தெய்வகயத்தாங்குசமுமாகிற்
பெற்ற யுகம் எண்ணிலதாம் பீடை முதன் மூன்றும்
செறிந்திட மான் நேரிருக்கிற் சிலைமீன் சேயசிதன் சேர
இவர்க்கிடையில் மற்றோர் சேரினும்
தேவுருவாய் அறிந்து அறியாற்போலும் உலகெங்கும் அதிசயப்பர்
அவரிலும் மென்மேல் உளர்-உண்டு அகத்திய மாமுனியே. (ஜோதிடம்)

உருத்தரித்தநாடியில் ஓடுகின்ற வாயுவை
கருத்திலைிருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவார் மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த அம்மையாணை அப்பனாணை உண்மையே. (யோகம்)

அஞ்சுமடக்கி அறிவோடிருந்தபின் துஞ்சுவதில்லை உடம்பு. (ஞானம்)

## நோய் இலக்கணம்

1. பூரணமாய் மூலமுதல் ஆராதாரம், புரியஸ்டம், தசவாய்வு நாடி மூன்றும்
காரணமாய் இடை பின்னுய் சுழி முனையுமாகி கலந்து நின்ற வாதபித்த சிலேத்துமுமாகி
மாரணமாய் சடத்தினுள்ளே தத்துவங்கள் மனம் புத்தி ஆங்காரம் சித்தத்தாலே
வாரணமாய் நடத்துவித்த கர்மத்தாலே வந்துதடா நோய்களெல்லாம் மனிதர்க்காமே.

2. தேகமென்ற மூலமதில் சூடு கொண்டால் சிவசிவா அப்புகைதான் மேலேசென்று
ஆகமுடன் சிரசதிலேயனல்தான் மீறி அப்புவெனும் நீர் பணைத்து வலியுண்டாச்சு
பாகமுடன் அன்னீர்தான் தசையில் சேர்ந்து பக்குவமாய் சூடு கொண்டு சுரங்களாச்சு
தாகமுடன் சுரமீறி வாத பித்தம் தணிந்ததினுல் சிலேத்துமத்துக்கு உயிர்தானுச்சு.

3. ஆச்சப்பா சேத்துமந்தான் மீறிற்றுனல் அப்பனே தோசத்துக்கு உறுதியாச்சு
நீச்சப்பா தோசத்துக்கு அடிதானென்ன நிலையான வாதமதில் பித்தமீறி
போச்சப்பா பாதாதி கேசந்தொட்டு பொங்கி அந்த பித்தநீர் பரந்து மீறி
காச்சப்பா தேய்வுடனே, வாய்வும்கூடி கடினமுடன் ஆகாசம்புக்கும் பாரே.

4. பாரப்பா மூன்றும் ஒன்றுய் கூடிப்போச்சு பகையான பிரிதிவியும் அப்பும்நின்று
சீரப்பா கரைந்து தண்ணிர் மண்ணுய்ப் போச்சு சிவ சிவாபஞ்சகர்த்தர் கூத்திதாச்சு
யாரப்பா அறிவார்கள் சடல வாழ்க்கை யாரறிவார் நீர்க்குமிளி மாய்கை மாய்கை
கூரப்பா இகல்கணுப்போல சடல வாழ்க்கை இதை அறிந்து இனமறிந்து குருவைக்காரே

## நாடியின் இலக்கணம்

வழங்கிய வாதம் மாத்திரை ஒன்றுகில்
தழும்கிய பித்தம் தன்னிலரைவாசி
அழங்கிய கபந்தான் அடங்கியே காலோடில்
பிழங்கிய சீவற்கு பிசகொன்று மில்லையே.

பித்தமடங்கிஞல் பேசாதே போய்விடு
எத்திய வையம் எழும்பிடிற் கிட்டாதே
எத்திய வாதம் எழும்பிடில் மருந்து செய்
எத்தி இம்மூன்றின் இயல்புக்கறிந்திடே.

பதைக்கின்ற மூவரிற் பக்குவம் தப்பியே
பிளைக்கின்ற வாதமும் பித்தமும் நீங்கிடில்
சுதைக்கொண்டிருந்தாலும் தோற்றும் உயிர்விடும்
பிதைக்கொண்ட வாத பித்தம் பெலனுமே.

## நோய் கண்ட நட்சத்திரத்தைக்கொண்டு நோயாளியின் நன்மை தீமை அறிவது

அடியொன்று தலை மூன்றதுவுஞ் சாவாம் அடுத்தவரை யோர்நான்கில்லதுவுஞ் சாவாம்
படிபுகழும் உடலின்வரை எட்டில்நிற்கில் பையவே நோய் தீரும் பயமோ இல்லை
கடிக்கமலக் கைக்காதன் வரையில் நிற்கில் கனகம்போற் றேகமுமாய் கண்டுகொள்வாய்
அடிமுதலாய் இரவி நின்ற நாளினை தொட்டபிசித்து தோடிருபத்தெட்டாய்ந்து கொள்ளே.

### வாதத்திற்கு மருந்து

சுக்கொன்று முக்கா வேளை இரண்டும் சுகமாய்க் காய்ச்சிக் குடித்திடவே
பக்கவாயு வாத குன்மமெல்லாம் பரக்குமென்றே அடியுங்கடி. (கும்மி)

### பித்தத்திற்கு மருந்து

பஞ்சதாரை நாற்களஞ்சு பருத்த மதுர முக்களஞ்சு
சிஞ்சி திப்பிலி இருகளஞ் சோம் சீரகம் ஒரு களஞ்சு
அஞ்சுங் கூட்டிப் பொடிபண்ணி ஆவின்பாலிற் கொள்ளீரேல்
மிஞ்சும் பித்தம் தலை நோயும் வெள்ளோக்காளம் உள்ளதெல்லாம்
அஞ்சி பயந்து நடுநடுங்கி அடவிக்கோடிப் போய்விடுமே.

### சிலேத்துமத்திற்கு மருந்து

தனதுநெல் இஞ்ஜிச் சாறு தருதிரிகடுகோடேலம்
மனமுறுதேக்குசிங்கி வாலுழு அரிசியிந்து
கனசிறுநாகங் கண்டங்கத்திரி அரத்தையோடு
நினைவுறு சிலேஸ்த்மம் போகும் நெய்யெறித்துள்ளிற்கொள்ளே.

### கற்பம்

பாரினிற் பிரிதிவியும் அப்புங்கூடி பதியான தேயுவிலே சமாதிகொண்டு
வாரின்ற வாயுவுங் ஆகாசங்கூடி மகிழ்ந்து நின்ற அமிர்த சஞ்சீவிதன்னை
ஆரின்று யாரறிவார் அமுதப்போக்கு அரஹரா அமிர்த சஞ்சீவிதன்னில்
நேரின்று குன்றிடை கொண்டால் மைந்தாய் நிச்சயமாய் யாக்கையது சித்தியாமே.

முப்புகுரு, ஜெயநீர் முதலியவைகளைக்கொண்டு சத்தி சிவம்கூட்டி முடிக்கப்பெற்ற பூரணச் சந்திரோதயம், தங்கச் சுன்னம் முதலியவைகளை நேம நிஷ்டையுடன் பக்குவ பாகப்படி உண்டுவர நீடுழி காலம்வரை நித்தியமாய் வாழலாம் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட விவரங்கள் முழுமையும் தமிழ் மொழியில் உள்ளது. பிணி தீர்ப்பது மருந்து. மருந்திலிருந்து மருத்துவம் உண்டாகி அது சித்தர்கள் மூலமாக செயலாற்றி வந்து இப்பொழுது சித்தர்கள் நூல் வாயிலாக இருந்து செயலாற்றி வருகிறது. கால வசத்தால் மாறுபட்டுத் தோன்றிய பிற மொழிகளும் பிற சமய மதங்களும் மறைந்து உண்மையான இயற்கை மொழி தமிழ் என்றும் இயற்கையில் மக்களெல்லாம் ஒரு இனத்தவர்களென்றும் மக்கள் உலகமுழுதும் அறியவேண்டியது பேரறிஞர்களுடைய கடமையாகும் என்று மிகவும் பணிவுடன் கூறுகின்றேன்.

மேலே கண்ட விவரங்களிலிருந்து பிற சமயம், மதம் மொழிகளிலில்லாத அபூர்வ சித்திகளும் முத்திகளும் இயற்கை மொழியாகிய தமிழிலும் தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்தில் இருப்பதாலும் இதுவே தமிழுக்கும் தமிழ் மருத்துவத்திற்கும் மாபெரும் சிறப்பாக விளங்குகிறது என்ற விவரத்தை மிகப் பணிவோடும் துணிவோடும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகையால் இயற்கையாக மக்கள் தோன்றிய காலத்தில் எல்லோரும் ஓர் இனத்தவர்கள் என்றும் எல்லோருடைய தாய் மொழி இயற்கையாக அகரத்தை முதலாகக் கொண்ட தமிழ் மொழி என்றும் இயற்கை மக்களை பிணிநீக்கி பாதுகாக்கும் மருத்துவம் தமிழ் மருத்துவம் என்று பேரறிஞர்கள் அறிந்து உலகமெலாம் ஓரினம். உலகமெலாம் ஓர் மொழி. அது தமிழ் மொழி என்றும், அரசாட்சியாக ஏற்று மக்கள் சமுதாயம் மலர எல்லோரும் இன்பமாய் வாழ எல்லாம் வல்ல இறைவனை அடிபணிந்து இடையறாது என் இதயபூர்வமாக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# சித்த மருத்துவத்தின் மாண்பு

**பேராசிரியர் வ. பெருமாள்,** எம்.ஏ. பி.டி. எம்.ஆர்., ஏ.எஸ்.,
தமிழ்ப் பேராசிரியர் : முதல் நிலைக் கல்லூரி, உரிகம், கோலார் தங்கவயல், மைசூர் மாநிலம்

**சித்த மருத்துவம் :**—பண்டைக் காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் வகுத்த மருத்துவம் சித்த மருத்துவம் எனப்படும். சித்தர்கள் தமிழகத்தில் வாழ்ந்தவர்கள். அவர்கள் இயற்றிய நூல்கள் தமிழில் மட்டுமே காணப்படுகின்றன. சித்தர்கள் தமிழ்ப் புலவர்களாகவும் திகழ்ந்தார்கள். சித்த மருத்துவம் அன்று முதல் இன்றுவரை தமிழகத்திலேயே பயிலப்பட்டு வருகின்றது. சித்த மருத்துவமும் தமிழ் இலக்கியமும் மலரும் மணமும் போல ஒன்று கலந்து விட்டன. இக்காரணங்களால் சித்த மருத்துவத்தைத் தமிழ் மருத்துவம் என்றும் குறிப்பதுண்டு. சித்த மருத்துவம் தமிழ் உலகம் முழுவதும் பரவியிருப்பதால் நாட்டு வைத்தியம் என்றும் ஒவ்வொரு சிற்றூரிலும் சிறந்து விளங்குவதால் கிராம வைத்தியம் என்றும் ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்களும் இதைக் கடைப்பிடிப்பதால் வீட்டு வைத்தியம் என்றும் பலவாறாகக் குறிக்கப்படுகின்றது. சித்த மருத்துவ முறையை வகுத்தவர்களுள் தலையாயவர் அகத்தியர். எனவே, இம்முறைக்கு அகத்திய மருத்துவ முறை என்றும் பெயர்.

**சித்தர்கள் :**—சித்தி பெற்றவர்கள் சித்தர்கள். சித்தி என்னும் சொல் பெறுதற்கரிய பேறு, வீட்டின்பம் ஆகியவற்றைக் குறிக்கும். இறைவனைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள். கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள். எனவே, ஆன்மீகத் துறையில் பக்தர்களைவிடச் சித்தர்கள் உயர்ந்தவர்கள் என்பது சொல்லாமலே விளங்கும். 'சித்து' என்னும் அடிச்சொல்லிலிருந்து தான் 'சித்தர்' என்னும் சொல் வந்தது என்று கொண்டாலும் முற்றிலும் பொருந்தும். சித்து என்பது பேரறிவைக் குறிக்கும். கடவுள் சத்தாகவும் (உண்மை) சித்தாகவும் (பேரறிவு) ஆனந்தமாகவும் (இன்பம்) இருந்து சச்சிதானந்தமாகத் திகழ்கின்றான் என்பது ஈண்டு சிந்திக்கத் தக்கது. இறையுணர்வோடு பொருந்திய பேரறிவு படைத்தவர்களே சித்தர்கள். அவர்கள் சமயங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் சமரச உணர்ச்சியுடன் வாழ்ந்தனர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

**சித்திகள் :**—சித்திகள் எட்டு வகைப்படும். அவை அட்டமாசித்தி எனப்படும். அவையாவன : அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம். அணுவைவிட மிகச் சிறிய உருவில் உலவும் ஆற்றலுக்கு அணிமா என்று பெயர். மலையை விடப் பெரிய உருவம் பெறும் ஆற்றலுக்கு மகிமா என்று பெயர். உடம்பை எவ்வளவு பளுவாக வேண்டுமானாலும் ஆக்கிக்கொள்ளும் ஆற்றல் கரிமா எனப்படும். உடம்பைச் சுமையில்லாமல் தக்கைபோல் வைத்துக்கொண்டு நீரில் மூழ்காமலும் சேற்றில் அழுந்தாமலும் காற்றைப்போல் விரைந்து இயங்கும் ஆற்றலுக்கு லகிமா என்று பெயர். எங்கும் தடையின்றி உலவி எல்லாவற்றையும் ஆளும் ஆற்றலுக்கு பிராப்தி எனப் பெயர். பிறர் உடம்பில் நுழைந்து நினைத்தவரிடம் அக்கணமே தோன்றல் கூடு விட்டுக் கூடு பாய்தல் பிராகாமியம் எனப்படும். எல்லோரும் தன்னை வணங்குமாறு இறைத் தன்மை பெறுவது ஈசத்துவம். உலகம் முழுவதையும் தன் வயப்படுத்துவது வசித்துவம். இவற்றைத் திருவிளையாடற் புராண பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன. சித்தர்கள் தம் மனத்திட்பத்தாலும் ஆன்மீக வலிமையாலும் அட்டமாசித்திகளைப் பெற்று வாழ்ந்தனர்.

**யோக நெறிச்** சித்தர்கள் மருத்துவத் துறையுடன் நின்றுவிடாமல் ஆன்மீகத் துறையிலும் தலைசிறந்து விளங்கினார்கள். மனிதப்பிறவியின் நோக்கம் வீடுபேற்றை அடைவது. அப்பேரின்பத்தை அடைய முறையாக வகுக்கப்பட்ட ஆன்மீக நெறி யோகம் எனப்படும்.

இது எட்டு படிகளைக் கொண்டது. இதை வடமொழியில் அஷ்டாங்க யோகம் என்று குறிப்பிடுவர். யோகத்தின் எட்டு படிகளாவன : இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி இவ்வெட்டையும் மனிதனின் ஆன்மீக வளர்ச்சிப்படிகள் என்று இயம்பலாம். கொல்லாமை, உண்மை, கள்ளாமை, பிறர் பொருள் நயவாமை, புலனடக்கடக்கம் ஆகியவை இயமம் எனப்படும். தவம், தூய்மை, மெய்ப் பொருள் நூல் அறிந்துணர்தல், மன அமைதி, இறைவழிபாடு ஆகியவை நியமம் எனப்படும். கடவுளைச் சிந்திப்பதற்கு அமர்கின்ற ஒழுங்கான முறை ஆசனம் எனப்படும். மூச்சை உள்ளடக்கி வெளியிடுகின்ற பயிற்சிக்குப் பிராணுயாமம் என்று பெயர். ஆசனமும் பிராணு யாமமும் நோயைப் போக்குவதுடன், இளமை, உடல்நலம், நீண்ட ஆயுள், ஆகியவற்றைத் தரும் ஆற்றல் வாய்ந்தவை. சிந்தனையை இங்கும் அங்கும் சிதற விடாமல் இருப்பது பிரத்தியாகாரம். மனத்தை ஒரே நிலையில் நிறுத்துவது தாரணை (single-minded attention) இறைவன் ஒருவனையே சிந்திப்பது தியானம். நனவு நிலையைக் கடந்த அமைதி நிலை சமாதி எனப்படும். இவ்வெட்டுப் படிகளும் முறையாகவும் ஒழுங்காகவும் அமைந்திருக்கும் பெற்றி ஈண்டு நோக்கி மகிழத் தக்கது. தமிழ்ச் சித்தர்கள் யோக நெறியை நன்கு கடைப் பிடித்துச் சிறந்த யோகிகளாகவும் திகழ்ந்தனர்.

**பதினெண் சித்தர்கள் :—** அகத்தியர். போகர், கோரக்கர், கைலாச நாதர், சட்டை முனி, திருமூலர், நந்தி, கூன் கண்ணர், கொங்கணர், மச்சமுனி, வாசமுனி, கூர்மமுனி, கமல முனி, இடைக்காடர், புண்ணுக்கீசர், சுந்தரானந்தர், உரோம முனி, பிரம முனி ஆகிய பதினெட்டு அறிஞர்களும் அட்டசித்திகளைப் பெற்றவர்கள். இவர்கள் தவிர கோஹர், கருவூரர், மூலர், காகசுண்டர், ராமதேவர், வான்மீகி, மார்கண்டர், ஜகதீசர், சுப்பிரமணியம் சிவவாக்கியார், திருவள்ளுவர், தேரையர், யூகி முனி, தரும சௌமியர், பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், அழுகணிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், குதம்பைச் சித்தர், கடுவெளிச் சித்தர், தன் வந்திரி, புலத்தியர், புசுண்டர், கபிலர், காலங்க நாதர், யோகா னந்தர், மச்சேந்திரர், புலிப்பாணி முதலிய சித்தர்கள் பண்டைக் காலத்தில் வாழ்ந்திருந் தனர். சனகாதி நால்வர், ஆழ்வார்கள், குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர், மெய் கண்டார், சிவப் பிரகாசர், தாயுமானவர், இராமலிங்கர் முதலியோரையும் சித்தர்களாகக் கருதுவது மரபு. மனமான பேயை அகப் பேய் என்று குறிப்பிட்டுப் பாடியதால் ஒருவர் அகப் பேய்ச் சித்தர் என பெயர் பெற்றார். ஆடு பாம்பே' என்னும் தொடரை அடிக்கடிப் பயன் படுத்தி பாடல்கள் பாடிய சித்தர் பாம்பாட்டிச் சித்தர் எனப் பெயர் பெற்றார். குதம்பை என்பது ஒரு வகையான காதணி. அச்சொல் குதம்பை அணிந்த பெண்ணையும் குறிக்கும். மனமாகிய பெண்ணை விளித்துக் குதம்பாய் குதம்பாய்' என்று ஒருவர் பாடிய தால் அவர் குதம்பைச் சித்தர் என்று பெயர் பெற்றார்.

‘மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி — குதம்பாய்
தேங்காய் பால் ஏதுக்கடி

என்னும் பாட்டு தமிழ் மக்கள் நன்கு அறிந்த புகழ்வாய்ந்த பாட்டாகும். வட நாட்டில் 84 சித்தர்கள் இருந்ததாகச் சொல்லப் படுகின்றது. அவர்கள் பின் பற்றிய யோக மார்க்கத்தை நாத மார்க்கம் என்று கூறுவதுண்டு.

**சித்த மருத்துவத்தின் அடிப்படை :—** ‘அண்டத்தில் உள்ளது பிண்டத்திற்கும்’ என்னும் கோட்பாடே சித்த மருத்துவத்தின் அடிப்படை. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், ஆகிய ஐந்து பூதங்களால் ஆகியது அண்டம். அதுபோலவே உடம்பும் ஐந்து பூதங்களால் ஆகியது. ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆகிய உலகத்தை முரஞ்சியூர் முடிநாகனார் பாடியுள்ளார்.

“மண்டிணிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும் வளித்தலை இய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு ஐம்பெரும் பூதத் தியற்கை போல”
(புறநானூறு - 2)

உடம்பிற்கும், இயற்கைக்குமுள்ள அடிப்படை ஒற்றுமையைப் பண்டைச் சித்தர்கள் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தனர். எனவே சித்த மருத்துவம் இயற்கை அடிப்படையில் அமைந்துள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. காய கல்பமும், முப்பூவும் சித்தர்களின் கண்டு பிடிப்புக்களாகும்.

சித்த மருத்துவ முறைகள் :—மூலிகை முறை, உலோகவர்க்க முறை, பாஷாண முறை, உயிர்ச்சத்து முறை, அறுவை முறை என்று சித்த மருத்துவத்தை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் மூலிகை முறை மிகவும் குறிப்பிடத் தக்கது. மூலிகை முறையை உலக வழக்கில் பச்சிலை வைத்தியம் என்று சொல்வதுண்டு. வேர், செடி, கொடி, மரம் ஆகியவை மூலிகை எனப்படும். தமிழ்ச் சித்தர்கள் ஒவ்வொரு தாவரத்தையும் நுட்பமாக ஆராய்ந்து அதிலுள்ள தாதுச்சத்துக்களைத் தெளிவாக அறிந்திருந்தனர். துளசி, கொன்றை, மஞ்சள் ஆகியவற்றின் நற்பயனை அறிந்த நம் முன்னோர்கள் அவற்றிற்கு தெய்வீக மதிப்பளித்து இறைவனோடு தொடர்புபடுத்தினர்.

"பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக் கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே"

என்று தேவாரம் பாடுகின்றது.

தன்னுயிரைக் கொடுத்தாவது பிற உயிரைக் காக்கும் பெருந்தகையானுக்கு மருந்து மரத்தை உவமையாகக் குறிப்பிடுகின்றார் திருவள்ளுவர். மருந்து மரம் தன் காற்று, நிழல், கொழுந்து, தளிர், இலை, அரும்பு, போது, மலர், பிஞ்சு, காய், கனி, குருத்து, சருகு, கொட்டை, நரம்பு, காம்பு, பட்டை, பால், விழுது, வேர், விதை, ஆகியவற்றை மக்கட்கு வழங்கி அவர்களின் நோயைப் போக்குகின்றது. மருந்து மரம் காலம், இடம், மதம், இனம், மொழி ஆகிய வேற்றுமையின்றி எல்லோர்க்கும் தப்பாமல் பயன்படும்.

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்" —திருக்குறள்

திருவள்ளுவர் 'மருந்து' என்னும் அதிகாரத்தில் பல மருத்துவ உண்மைகளைக் கூறியிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

"காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் ஒரு மண்டலம் உண்ணில்
கோலை ஊன்றிக் குனிந்து நடப்பவன்
குமரனாகிக் குலாவத் துடிப்பனே"

என்னும் பாடல் இஞ்சி, சுக்கு, கடுக்காய் ஆகியவற்றின் ஆற்றலையும் பயனையும் உணர்த்துகின்றது. தமிழ் இலக்கியத்தின் சிறப்பையும் பயனையும் மக்களுக்கு நன்கு உணர்த்த எல்லோரும் அறிந்த மூலிகைகளையும் மருந்துகளையுமே எடுத்துக்காட்டாகவும் பெயராகவும் பண்டைத் தமிழ்ப்புலவர்கள் வழங்கினர். திருக்குறள், நாலடியார், ஆகியவற்றின் சிறப்பை உணர்த்த 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்று நம் முன்னோர் குறிப்பிட்டனர். கடு, நெல்லி, தான்றி ஆகியவை திரிபலை எனப்படும். அவ்வாறே சுக்கு. மிளகு, திப்பிலி, ஆகிய மூன்றும் திரிகடுகம் எனப்படும். இம்மூன்றும் வாத, பித்த சிலேத்துமமாகிய மூவகை நோயைக் குணப்படுத்துவதில் பேராற்றல் வாய்ந்தவை. அதைப்போலவே ஒவ்வொரு பாட்டிலும் மூன்று அறவுரைகளைக் கூறி அறியாமை நோயை அகற்றும் நீதி நூலை இயற்றியவர் நல்லாதனார் அந்நூலுக்கும் திரிகடுகம் என்று பெயர். கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்களும் (மூலம்) உடற்பிணியைப் போக்கும். அதுபோல. அக நோயைப் போக்கும் ஆற்றல் வாய்ந்த நூலை இயற்றிய காரியாசான் தம் நூலுக்கு சிறுபஞ்ச மூலம் என்று பெயரிட்டார். இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துக்கள் காணப்படுகின்றன.

ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறு மருந்துச் சரக்குகளினால் ஆகிய பொடி உடல் நோயை நீக்கி நலம் தருவதுபோல் அறியாமையாகிய பிணியைப் போக்கும் வகையில் அமைந்து ஒவ்வொரு செய்யுளிலும் ஆறு கருத்துரைகளைக் கொண்ட அற நூலுக்கு ஏலாதி என்று பெயர். இந்நூலை இயற்றியவர் கணிமேதாவியார். மூலிகை முறை மருத்துவம் தமிழகத்தில் ஆழமாக வேரூன்றி விட்டது என்பது சொல்லாமலே விளங்கும்.

மூலிகை முதலிய முறைகளால் குணப்படுத்த முடியாத நோயை அறுவை முறையால் (surgery) குணப்படுத்துவது இயல்பு. 'அறுவை மருத்துவர் நோயாளியைக் குணப்படுத்த அவன் உடலை வாளால் அறுத்தாலும் அந்நோயாளி மருத்துவன்பால் அன்புடன் இருக்கின்றான். அதுபோல, இறைவனே ! நீ எனக்கு நீங்காத துயர் தந்தாலும் நான் உன்னையே நம்பியிருக்கின்றேன்' என்னும் பொருள்பட குலசேகராழ்வார் பாடுகின்றார்.

"வாளால்அ றுத்துச்சு டினும்ம ருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத்து யர்தரினும் வித்துவக் கோட் டம்மாநீ
ஆளாஉ னதருளே பார்ப்பன்அ டியனே" —பெருமாள் திருமொழி.

தெரியாதவற்றை விளக்கத் தெரிந்ததை உவமையாகச் சொல்லுவது மரபு. அறுவை சிகிச்சை முறை தமிழ் நாடு முழுவதும் நன்கு பரவி இருந்தது என்பதையும் அறுவை சிகிச்சையை உவமையாகச் சொன்னால் மக்கள் எல்லோர்க்கும் நன்கு புரியும் என்பதையும் ஆழ்வார் பாடல் வாயிலாக அறிகிறோம்.

செய்யுளுக்கு வரையறை வகுத்த பவணந்தி முனிவர் எழுவகைத் தாதுக்களினால் உடம்பு ஆகியது போல், பொருள் பொதித்த சொல்லால் அணியுடன் ஆகியது செய்யுள் என்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றார்.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" (நன்னூல்)

பண்டைத் தமிழ் மக்கள் உடலிலுள்ள இரதம், உதிரம், எலும்பு, தோல், தசை, மூளை, சுக்கிலம் முதலிய எழுவகைத் தாதுக்களையும் நன்கு அறிந்திருந்தனர் என்பதை இந்நூற்பாவிலுள்ள உவமையின் வாயிலாக நன்கு அறியலாம்.

திருவள்ளுவர் முதல் இக்காலப் புலவர் வரை மருத்துவ உண்மைகளைத் தம் பாக்களில் விளக்கியும் உவமைகளாக வழங்கியும் வந்திருக்கின்றனர். அந்த அளவிற்குச் சித்த மருத்துவம் தமிழுடன் ஒன்றியிருக்கின்றது.

**இன்றைய நிலையும் நம் கடமையும்** :—மேல் நாட்டார் தொடர்பால் நேற்று வந்த நவீன மருத்துவம் (allopathy) தலைதூக்கி நிற்கின்றது. ஆனால், தமிழகத்திலேயே தோன்றி வளர்ந்து சிறப்புடன் வாழ்ந்த சித்த மருத்துவம் இன்று தாழ்ந்த நிலை அடைந்து விட்டது. இவ்விழி நிலையைப் போக்கி மீண்டும் பழைய உயர்நிலைக்குச் சித்த மருத்துவத்தைக் கொண்டு வருவது ஒவ்வொரு சித்த மருத்துவரின்—ஏன் ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். சித்த மருத்துவம் மீண்டும் தலைதூக்கி நல்வாழ்வு வாழ நாம் செய்ய வேண்டிய கடமைகள் பல. அவையாவன :—

1. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சித்த மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டும். தரத்தாலும் சிறப்பாலும் எம்.பி.பி.எஸ். போன்ற பட்டங்களுக்குப் பயிற்சியளிக்கும் கல்லூரியைப் போல சித்த மருத்துவக் கல்லூரியும் அமைதல் வேண்டும்.

2. சித்த மருத்துவக் கல்லூரியில் பயின்று பட்டம் பெறுபவர்களுக்கு அரசாங்க மருத்துவ மனையில் உத்தியோகம் அளிக்க வேண்டும். அத்துடன் எல்லா வகையிலும் சித்த மருத்துவர்களை எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்களுக்கு நிகராகக் கருத வேண்டும்.

3. இதுவரை அச்சில் வராத சித்த மருத்துவ நூல்கள் உடனே வெளியிடப்பட வேண்டும். தமிழக அரசு, மத்திய அரசு, யுனெஸ்கோ (Unesco) போன்ற நிறுவனங்கள் இத்துறையில் பொருள் உதவி புரிய வேண்டும்.

4. சாகித்ய அகாடமி, தமிழ் வளர்ச்சிக்கழகம் ஆகியவைபோல அரசாங்கத்தின் முழு ஆதரவில் சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம் ஏற்பட வேண்டும்.

5. சித்த மருத்துவத்தைப் பற்றி வெளியாகும் சிறந்த ஆராய்ச்சி நூலுக்கு ஆண்டு தோறும் தக்க பரிசு வழங்கிச் சித்த மருத்துவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

6. தமிழில் கலைக்களஞ்சியம் தொகுக்கப்பட்டதைப் போல பல தொகுதிகளாகச் 'சித்த மருத்துவக் களஞ்சியம்' தொகுக்கப்படவேண்டும். இப்பெருமுயற்சி நிறைவேற மத்திய அரசு முதல் தனிப்பட்ட செல்வர்வரை எல்லோரும் மனமுவந்து ஒத்துழைத்து ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும்.

7. சித்த மருத்துவ நூல்களின் பழஞ் சிறப்பை நமக்குள்ளே சொல்லிக் கொண்டிருப்பதால் பயன் இல்லை. பிற நாட்டாரும் வணக்கம் செய்யும் வகையில் நாம் அவற்றைப் பிற மொழிகளிலும் குறிப்பாக ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்க வேண்டும்.

மேற் குறிப்பிட்ட கடமைகளை நாம் முறையாகச் செய்தால் சித்த மருத்துவம் மீண்டும் செழித்தோங்கும் என்பது ஒருதலை.

வாழ்க சித்தர்கள். வளர்க சித்த மருத்துவம்.

# குன்மம்

**ஆர். எஸ். மணி**, *சித்த வைத்தியர், கோளிஞ்சியப்பார் சித்த வைத்தியசாலை, மணவாளநல்லூர், விருத்தாஜலம், தென்னாற்காடு மாவட்டம்*

குன்மம் என்பது இறைப்பையைப் பற்றியது. இறைப்பைக்கு அதிக நோய்கள் ஏற்படுவதில்லை. இறைப்பையைப் பிடிக்கும் நோய் ஒன்றே. அது குன்மம். சாதாரணமாக பசியின்மை, குமட்டல், புளித்த ஏப்பம், வலி முதலானவை அதன் பொதுக் குறிகள்:

இறைப்பை :—குழந்தைகளுக்கு தாயைப் போல நமது உடலுக்கு இறைப்பை. உடலின் உள்ளிருக்கும் கருவிகளுக்கோ, வெளி உருப்புகளுக்கோ, நோய் கண்டாலும், மருந்துகளை வாங்கிக்கொள்ளுவது இறைப்பையே. தனக்கு நோய் இல்லாவிடினும் சிரசு முதல் பாதம் வரை ஏற்படும் நோய்களுக்கெல்லாம், மருந்தை ஏற்றுக்கொள்ளுவது இறைப்பையே. விஷமோ, அமிர்தமோ வாய் வழியாக அனுப்பப்படுவதை எல்லாம் ஏற்றுக்கொண்டு தீரவேண்டிய நிலையில் உள்ளது இறைப்பை.

இறைப்பை நத்தையின் சதையைப் போன்ற மிக மிருதுவான நீர்ப்பதமுள்ள தசைகளால் ஆன ஓர் பை. அதன் வெளிப்புறம் தசை, ஜவ்வு, முதலியவற்றால் போர்த்தப்பட்டும் உட்புறம் லேசான கொழுப்பு கசிவுள்ள தசைகளால் ஆன ஊசிமுனையைப் போன்ற மெல்லிய வளர்ச்சியைக் கொண்டதாகவும் உணர்ச்சி நரம்புகளால் பின்னப்பட்டு சாக்குப்பை போன்ற சொரசொரப்பாக அமைந்துள்ளது.

அதன் வேலை :—(ஜீரணம்) செரித்தல் செயல்படும்போது உட்புறம் கடலலையைப் போல தானே இயங்கி மிஷினைப்போல் வேலை செய்து, உணவைக் கரைத்து, குழம்பு போல் ஆன பிறகு கீழே அனுப்புகிறது. இந்த செரிமான வேலை மட்டும் அல்லாது, (காஸ்டிரிக் ஜ்யூஸ்) கணைய நீரையும் உண்டு பண்ணிக் கொள்ளுகிறது. ஆரோக்கிய நிலையில் ஒருவருக்கு செரிக்க நான்கு மணி நேரமாகும். உணவு கடினமானதாகவோ, இறப்பை பலஹீன நிலையிலோ இருந்தால் ஆறு மணி நேரம் வரை ஆகிறது.

குன்ம வகை :—இறைப்பைக்கு நோய் கண்டால், சிறு குடல், கல்லீரல் (பெரிடோனியம்) வபை (டயாபர்ம்) விதானம் போன்ற கருவிகள் பாதிக்கப்படுகின்றன.

சித்த முறைப்படி, குன்மம் எட்டு வகைப்படும். இந்த எட்டு வகைகளை சிகிச்சை செய்வதற்கு, சக்தி குன்மம், எரிகுன்மம், வலிகுன்மம், சூலைகுன்மம், என நான்கு வகைகளாக பிரித்துக்கொண்டால் சுலபம்.

காரணம் :—நாம் உணவை மென்று விழுங்குவதுடன், உமிழ் நீரும் கலந்து செல்கிறது. இறைப்பையிலிருந்து கணைய நீரும், கல்லீரலிலிருந்து பித்த நீரும் கலந்து செரிமானம் செயல்படும்போது, ஓர் புளிப்புக் குழம்பாகி குடலுக்கு அனுப்பப்படுகிறது. இப்புளிப்புக் கூடினால் "ஹைப்பர் ஆசிடிடி" என்றும், குறைந்தால், "ஹைப்போ ஆசிடிடி" என்றும் இரண்டு பிரிவுகளாக பிரித்துக்கொண்டு நவீன முறையில் சிகிச்சை செய்கிறார்கள். இந்நோய் ஏற்பட பல காரணங்கள் இருக்கின்றன. மிகினும் குறைகினும் நோய் செய்யும். இப்புளிப்பு, வாத பித்த கோபங்களால் கூடியும் குறைந்தும் செயல்படுகிறது. இதன் ஏற்றத்தாழ்வுகளால் எல்லோருக்கும் நோய் உண்டாவதில்லை. இளைஞர்களுக்கு ஏற்படுவதில்லை. வாலிப பருவத்திலிருந்து வயோதிகப் பருவம் வரை ஆட்கொள்ளும். பெண்களைவிட ஆண்களை அதிகம் பாதிக்கும். இதற்கு காரணம் மனக்கவலை உள்ளவர்களையே பெரிதும் தாக்கும். கவலையில்லாத நிலையில் குன்மம் தாக்குவதில்லை. மற்றும், ரச ஔஷதங்கள், தாதுவர்க்க விஷங்கள், தாவர விஷங்கள் முதலியவற்றாலும், பல் இடுக்கிலிருந்து வெளிப்படும் சீழ்

உள் செல்வதாலும், கடினமான உணவு களையும், அதிக புளி, மிளகாய், எண்ணை, ஊறுகாய்கள், மதுபானம், காபி, டீ, ஆகிய வைகளை அளவுமீறி உண்பதாலும், நீடித்த ரத்த சோகையாலும், உணவை மென்று விழுங்காமல் அவசரமாக விழுங்குவதாலும், பசியறிந்து சாப்பிடாமல், பசியில்லாத போது உணவு கொள்வதாலும், புகை யிலையை வாயில் அடக்கி உமிழ் நீரை வீணுக் குவதாலும், வரையற்ற போகம் போன் றவைகளாலும் இந்நோய் ஏற்படுகின்றது.

குறிகளும் நோய் கணித்தலும்:—மனக்கவலை யால் மூளை நரம்புகளும், இறைப்பை உணர்ச்சி நரம்பு மண்டலங்களும் தாக்கப் படும்போது கல்லீரல் வேலை மந்தித்து, பித்தம் குறைந்து, கணைய நீரால் புளிப்பு அதிகமாகி, உமிழ் நீர் அதிகப்பட்டு, இறைப் பையில் கோழை சேர்ந்து, பித்தக்குறைவின் காரணமாக எண்ணைப் பண்டங்கள் செரிக்க முடியாமல் ஓர்வித (கேஸ்) நீர் வாயு உண்டாகி அவ்வாயுவை வெளியேற்ற ஏப்பம் அடுத் தடுத்து உண்டாகிறது. இந்த நிலையை பித்த வாயு என அழைக்கிறோம். மேற்கண்ட நிலை மாதக்கணக்கில் நீடித்தால் அழற்சி (காஸ்ட்ரைட்டீஸ்) உண்டாகி, மேல் வயிறு வலி, பசியின்மை, வயிறு உப்புசம், உமிழ் நீர் சுரப்பு, நாக்கு வெடிப்பு, சொர சொரப்பு, மாவு படிதல், உணவு உட்கொண்டவுடன் அதிக வலி, சதா எரிச்சல், உள்ளங்கையை மார்பு கூட்டுக்குக்கீழே வைத்து அழுத்திக் கொண்டோ, அல்லது தடவிக்கொண்டோ இருத்தல். இந்நிலையை எரி குன்மம் என அழைக்கிறோம்.

இதே நிலை இன்னும் சில மாதங்கள் நீடித்து வாத நாடி தீவிரமடைந்து, வாந்தி, தாகம், களைப்பு, மலச்சிக்கல் அதிகரித்து, வலியும் எரிச்சலும் அதிகமடைந்த நேரத்தில் ஏதாகிலும் உணவு உட்கொண்டால், சிறிது வலி சாந்தியாகி, பிறகு முன்னிலும் அதிக மாக வலி கண்டு, தானுகவோ அல்லது விரல் விட்டோ, வாந்தி மூலம் உண்ட உணவை வெளிப்படுத்தி விடுவது. இதற்குக் காரணம், இறைப்பையில் உள்ள அழற்சி நாளடைவில் புண் ஆகிவிடுகிறது. அந்தப் புண்ணில் கணைய நீரின் புளிப்பு படுவதால் வலி அதி கரிக்கின்றது. ஆகாரமோ, தண்ணீரோ உட்கொண்டால், ஷெ புளிப்பின் தீவிரம் குறைந்து செரிக்க உதவுகிறது. புண்ணில் தாக்குவதில்லை. ஆனால், இறைப்பை வேலை செய்ய ஆரம்பித்தவுடன் புண்ணில் கடுமை யான வலி ஏற்படுகிறது. அதனுல் உடனே உள்ளிருக்கும் உணவை வெளிப்படுத்த வேண்டியதாகி விடுகிறது. இந்த நிலையை சத்தி குன்மம் என அழைக்கிறோம்.

பித்த நாடியின் தீவிரத்தால், ஈரல் கொதிப்படைந்து கணைய நீர் பாதிக்கப்பட்டு செரிமானத்துக்கு வேண்டிய புளிப்பு குறைந்து, இதன் காரணமாக இறைப்பை உஷ்ணப்பட்டு வாய்வு சேர்ந்து விடுகிறது. அவ்வாயுவை வெளியேற்ற (கேஸ்) நீர் வாயு உண்டாகாததால் ஏப்பம் உண்டாவதில்லை. இறைப்பை வாயு இறப்பையின் உள்ளேயே தங்கி, சிறு குடலுக்குள் சென்று, கொதிப் படைந்து, பெருங்குடலில் வியாபித்து அபான வாயுவை இறுக்கி, மலத்தை தீய்த்து, முதுகு, நெஞ்சு, வயிறு, ஆகிய இடங்களில் ஷெ வாய்வு பரவி கடுமையான வலி, குத்து தல் போன்ற உணர்ச்சி, இருந்தாற்போ லிருந்து தீவிரமடைந்துவிடுவது. இந்நிலை, கிரந்தி நோய் ஏற்பட்டு, உள்ளடங்கி உள்ள வர்களுக்கும், முறைப்படி சுத்தி செய்யாத நாக, வங்க, தாமிர, தாளக, ரச பாஷான மருந்துகளை உட்கொண்டவர்களுக்கும் அன் னத்துவேஷம் ஏற்பட்டு ஜீரணக் கருவிகள் பாதிக்கப்பட்டு உண்டாகின்றது. இந் நிலையை சூலை குன்மம் என அழைக்கிறோம்.

சிகிச்சை:—குன்ம நோய் நான்கு பிரிவு களுக்கும் வெளியில் தெரியும் குறிகள் ஒன்று போலத்தோன்றும். இம்மாதிரியான குறி கள் குன்மத்தைத் தவிர மற்றும் பல (கிட்னி) நீர்ப்பிரித்தி (ப்ளாடர்) நீர்ப்பை, கர்ப்பப்பை' கல்லீரல், சிறு குடல், (அப்பெண்டிக்ஸ்) பெருங்குடல் முதலான கருவிகள் சம்மந்தப் பட்ட பல நோய்களுக்கும் தோன்றும். ஆத லால், குறிகளை மட்டும் கொண்டு நோயை கணிப்பதை விட நோயாளியின் வாய் மொழி, குணம், குறி, போக்கு, இவற்றை ஆராய்ந்தும், நாடி, நாக்கு, பல், முதலான பரிசைஷகளுடன் இறைப்பைக்குமேல் நமது உள்ளங்கையை வைத்து அழுத்திப் பார்க் கும்போது தெரியும் வலி (டென்ஷன்) விறைப்பு, மிருதுத்துத்தன்மை, உஷ்ணம் முதலானவற்றைபும் கண்டு, கேட்டு முடி வுக்கு வருவது அவசியம்.

குன்மத்திற்கு முதற்படியான பித்த வாயு நிலையில், கல்லுப்பு பற்பம், அஷ்ட சூர்ணம், அஸ்வ கெந்தி சூர்ணம், ஆகியவற்றைக் கொடுத்து நோயின் தீவிரத்துக்கு தக்கவாறு ஆகாரத்தை மாற்றி அமைத்து கொடுக்க குணம் தெரியும்.

எரி குன்மமான அழற்சி நிலையில், விக்கலுக்குச் சமமான மிகக் கடுமையான ஏப்பமுள்ள நிலையில், அத்திப்பட்டை, அரு நெல்லிக்காய், சீரகம், வகைக்கு பலம் ½. பூவன் வாழைப்பழம் இரண்டு, பசு மோர் விட்டு இடித்த சாற்றில் வேளைக்கு இரண்டு அவுன்ஸ் வீதம் மூன்று வேளை கொடுக்க ஏப்பம் நிற்கும். அழற்சியை மாற்ற இந்துப்பு 1, ஓமம் 2, சீரகம் 3, திப்பிலி 4, சுக்கு 5, மஞ்சள் 6, இதன் மொத்த எடைக்குச் சமன் கடுக்காய் சேர்த்து சூரணம் செய்து, சூரணத்துடன் பூர பஸ்பம், துருசு பஸ்பம், கந்தக பஸ்பம் முதலிய வற்றில் ஏதாவதொன்றை சேர்த்துக் கொடுக்க குணம். மேலுக்கு சூடு கடுமையாக இருந்து, வலியும் கடுமையாக இருந்தால், விளக்கெண்ணை தடவி, வெண்ணீர் ஒத்தடம் கொடுக்கவும். வயிற்றின் தசை விறைப்பு (டென்ஷன்) கடுமையாக இருந்தால் களிமண் பத்து போடுவது மிக்க பயன் தரும். மோர் கலந்த நெல் பொறிக் கஞ்சியை ஆகாரமாகக் கொடுக்கலாம்.

சத்திக்குன்மமான புண் கண்ட நிலைக்கு யுக்தி அனுபவத்திற்கு ஒத்த முறையில், மேற் குறிப்பிட்ட சூரண பஸ்பங்களைக் கொடுத்து குணம் காணலாம், தவிற, எலுமிச்சம்பழம் நூறு குறுக அறிந்து, அதில் குன்மக்கோடாலிச்சார் படி கால், இஞ்சிச் சார் படி கால், பச்சை மஞ்சள் சார் படி அரை, ஊற்றிய விளக்கெண்ணை படி கால், வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, கரியுப்பு, கந்தக உப்பு, பூநீர், அப்பளாக்காரம், நவச்சாரம், கல்லுப்பு, வகைக்கு பலம் ஒன்று இட்டுக்கலந்து ஏழு நாள் சூரிய புடமிட்டு எட்டாம் நாள் அடுப்பேற்றி சிறு தீயில் லேகியபதமாகக் கிண்டி., பாக்களவு காலை மாலை ஒரு மண்டலம் கொடுத்து, மோர், நெல் பொறி, கஞ்சி ஆகாரம் கொடுத்து, குணம் கண்டதுண்டு.

இறைப்பைபுண் (பெப்டிக்) அல்சர், சிறு குடல் கழுத்துப்புண் (டியோடிணம் அல்சர்) ஆகிய வற்றிற்கு நவீன முறையில் மருந்துகள் இல்லை. இப்புண்கள் ஆறுவதில்லை என்பது அவர்கள் முடிவு. நவீன முறையில் ஆப்ரேஷன் செய்து புண் உள்ள பாகத்தை புண் உள்ளவரை கத்தரித்து எடுத்துவிட்டு, தையல் போட்டு ஆற்றி விடுகிறார்கள். ஆனால், தையல் போட்ட இடம் சுருக்கம் கண்டு, அதன் காரணமாக, இறைப்பை செயல்படும்போது வலியிருந்தே வருவதால், ஆப்ரேஷன் செய்து கொண்டவர்கள் ஆயுள் வரை ஆகாரத்தில் மிக எச்சரிக்கையாக இருந்துவர வேண்டியதாகிறது. இம்மாதிரியான ஆப்ரேஷனைத்தவிற வேறு நிவர்த்தி கிடையாதென பல எக்ஸ்ரே எடுத்து முடிவு கட்டிய கேசுகளை எங்கள் குடும்ப அனுபவ முறையில் வந்துள்ள காடிக்கார மெழுகினால் சவுக்கியப் படுத்தியுள்ளோம். அம்முறையானது, வெள்ளிக்காடிக்காரம், பன்றிப் பிச்சு, கிடைக்காவிடில் வெள்ளாட்டுப் பிச்சு 4, ஒரு கோப்பையில் போட்டு, விளக்கெண்ணை விளக்கால் எரிக்க மெழுகு பதமாகும். ரஸ்தாளிப் பழத்தில் இரண்டு குன்றி அளவு காலை மாலை மூன்று நாள் கொடுத்து உப்பில்லாமல் கஞ்சி கொடுக்க புண் ஆறி விடும். பிறகு, மேலே குறிப்பிட்டுள்ள சூரணங்கள், வில்வாதி லேகியம், பூண்டு லேகியம், ஏதேனுமொன்றை ஒரு மண்டலம் தக்க பத்தியத்துடன் கொடுக்க பூரண குணம்.

சூலை குன்மத்திற்கு என் அனுபவத்தில் வந்துள்ள மூன்று நாள் சித்தாதி எண்ணை, பிறகு சித்திரக்காதி வடி 15 நாள், பிறகு, பூண்டு லேகியம் அல்லது இஞ்சி லேகியம் ஒரு மாதம் கொடுக்க குணம்.

வலி குன்மத்திற்கு அஷ்ட சூர்ணத்தில் பூர பஸ்பம் ஒரு வாரம். மோர், கஞ்சி ஆகாரம். பிறகு கடுக்காய் சூரணம் இருபது நாள், புளிப்பில்லாப் பத்தியம். பிறகு வில்வாதி லேகியம் ஒரு மண்டலம். நல்ல குணம். தவிற, வலி குன்மத்திற்கு, வில்வாதி லேகியம் நோயைத் தீர்ப்பதுடன், இறைப்பைக்கு பலத்தை அளித்து, ஜீரணசக்தியை விருத்தி செய்கிறது. குன்ம நோய்க்கு, வில்வம் ஓர் சிறந்த மூலிகை. கோவிலில் கூட்டி எறியப் பட்டு வகுக்கப்படும் வில்வத் தழைகளைக் கொண்டுவந்து நிழலில் உலர்த்தி இடித்து சூரணித்து தினமும் வேண்டுமளவு எடுத்து தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி

புட்டிகளில் வைத்து இறைப்பை சம்மந்தப் பட்ட வியாதிகளுக்கு அனுபானமாக கொடுத்து வருகிறேன். நல்ல பலன்.

முடிவு:—பொதுவாக, நவீன முறையில் குன்ம சிகிச்சைக்கு ஆசிடை மாற்ற ஆல்கலி கொடுத்து நியூட்டரலைஸ் செய்து சிகிச்சை செய்யப்படுகிறது. சித்த முறையில், கணைய நீரின் புளிப்பை மாற்ற க்ஷாரங்கள், உப்பு களை பிரயோகித்து சிகிச்சை செய்கிறோம். தவிற, பெப்டிக் அல்சர், டியோடினல் அல்சர் இரண்டுக்கும் குறிகளிலோ சிகிச்சை களிலோ அதிக வேறுபாடோ, வித்தியாசமோ நவீன முறையில் இல்லை. சித்த முறையில் இரண்டு புண்களையும் சக்தி குன்மம் என்ற பிரிவிலேயே சிகிச்சை செய்யப்படுகிறது. தவிற, இறைப்பை நோய்களுக்கு சித்தாதி எண்ணை, சித்திரக்காதி வடி, வில்வாதி லேகியம், பூண்டு லேகியம், இஞ்சி லேகியம், பழ லேகியம், பூர பஸ்பம், துருசு பஸ்பம், கந்தக பற்பம், கல்லுப்பு பஸ்பம், பஞ்ச லவண பஸ்பம் போன்ற சித்த மருந்துகள் குன்ம நோயை போக்குவதுடன், நவீனமுறையைப் போல தற்காலீக குணம் செய்யாது, நிரந்தர குணம் கொடுக்க வல்லது நமது சித்த மருந்துகளே.

# சித்த வைத்தியத்தின் சிறப்பும் அதன் தேவையும்

(டாக்டர் சிற்சபை, காஞ்சிபுரம்.)

**சித்த மருத்துவம் : முன்பு—**

ஆரியர்களும், மங்கோலியர்களும், மற்றும் பிற நாட்டினர்களும் வைத்தியத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுவதற்கு முன்பே தமிழரின் சித்த மருத்துவக் கலையானது வானசாத்திரம் போன்ற கலைகளைப்போல் முழு வளர்ச்சி பெற்றிருந்திருக்கிறது. இக்கலை தமிழகத்திலே ஓர் தனிச் சிறப்பைத்தருகிறது.

தமிழகத்தின் பெரும்பாகம் செழிப்பான குன்றுகள் நிறைந்தவை. செடி, கொடி மூலிகைகள் அதிகம் உண்டு. கொல்லி மலை நிகண்டு, சுருளிமலை நிகண்டு, வெள்ளிமலை அகராதி போன்ற நூல்கள் ஒவ்வொன்றும் அவ்வம்மலை தோறும் வளர்ந்துள்ள செடி கொடிகளைப் பற்றியனவாகும்.

தமிழர்கள் இயல்பாகவே சுறுசுறுப்பு நிறைந்த ஆராய்ச்சியாளர்கள். உயர்ந்த சிந்தனையாளர்கள். அவர்களுடைய யூகமும், ஆற்றலும், அறிவும் வியக்கத்தக்கவை. இவர்களை உலகத்தின் மூளை எனவும் கூறலாம். வெள்ளையர் ஆட்சியின்போது நமது மாநிலத்திற் கவர்னராயிருந்த லார்டு ஆம்தில் (Lord Ampthil) என்பவர் சென்னை King Institute திறப்பு விழா சொற்பொழிவு நிகழ்த்தியபோது "ஐரோப்பாக் கண்டமானது வைத்திய அறிவு அற்றிருந்த காலத்தில் வியாதிகளுக்குச் சிகிச்சை முறைகளையும் வியாதி வராது தடுக்கும் முறைகளையும் இந்திய நாட்டில் தமிழகத்தினர் நன்ருக அறிந்திருந்தனர்" என்று நமது நாட்டு வைத்தியத்திற்குச் சிறப்புக் கூறியுள்ளார். மற்ற வைத்தியக் கலைகளைப் பார்க்கிலும் சித்த வைத்தியக் கலையில் நம் நாட்டுத்தட்ப வெப்ப நிலைக்குத் தக்கவாறு ஏற்படக்கூடிய எல்லாப் பிணிகளையும் அறவே நீக்க எளிய சிகிச்சைகள் கூறப்பட்டிருக்கின்றன. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் இக்கலையை வளர்க்கத் தங்கள் தலை நகரங்களில் சங்கங்கள் ஏற்படுத்தி நடத்தி வந்திருக்கின்றனர். சோழ மண்டலத்திலேயே தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சரபோஜி மன்னன் தம் காலத்திலிருந்த சித்த வைத்தியர்கள் அனைவரையும் ஒருங்குகூட்டிப் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் பல சித்த நூல்களை வெளியிடச் செய்திருக்கின்ருர். அது போன்றே இராமநாதபுரம் அரச பரம்பரையைச் சேர்ந்த பொன்னுசாமி தேவர் சித்த வல்லுனர்களைக் கூட்டிப் பல அநுபவ வைத்திய நூல்களை ஆக்கியிருக்கின்ருர். மதுரையில் பாண்டியர்கள் அரசாண்ட கடைச்சங்க காலத்தில் வைத்திய நிபுணராகிய மருத்துவன் தாமோதரனர் அரச அவையில் அங்கம் வகித்திருந்திருக்கின்ருர்.

மேலும் சித்த வைத்திய முறையே உலகத்திலுள்ள எல்லா முறைகளிலும் பழைமையானது என்பதற்கு ஆதாரமாக உடல் நூலிலிருந்து எடுத்துக்கூறப்படும் அடியிற்கண்ட ஒன்றிரண்டு செய்யுள்கள் புலப்படுத்துவதுடன், சித்தர்களின் ஆராய்ச்சி மருத்துவக் கலையில் எவ்வளவு நுண்மையானது என்பதையும் புலப் படுத்துகின்றது.

1. "நாடியும், நாளமும் நவிலிள வெலும்பும்
வெள்ளை நீறும் வெள்ளிய பற்களும்
தலைமயிர் நகமும் தந்தையின் கூறும்"

தலைமயிர், நகம், பல், ரத்தக் குழாய்கள், நாளங்கள் இள எலும்புகள், நாடிகள், இந்திரியம் இவைகள் தந்தையின் கூறுக அமைக்கப்பட்டிருக்கின்றன.

2. "சிறிய குடலும் சிவப்பு நீரும்
மருவிய கொழுப்பும் மன்னும் ஈரலும்
நுவல் நுரையீரலும் நோக்கு மிதயமும்
தசையும் நிணமும் தாயின் கூறும்"

குடலும், இரத்தமும், கொழுப்பும், ஈரலும், நுரையீரலும், இருதயமும், தசையும், நிறமும் தாயின் கூறு.

3. "அறிவும் ஆக்கமும் ஆழ்ந்த நோக்கமும்
இன்பமும் துன்பமும் இனிய வாழ்க்கையும்
உயிரின் குணமென உரைப்பர் நூல்வலோர்"

அறிவும், முயற்சியும், நோக்கமும், இன்பதுன்பமும், வாழ்க்கையும் உயிரினுடைய குணம்.

4. "உடலின் அமைப்பும் ஒள்ளிய நிறமும்
ஆடலும் ஆண்மையும் அமைந்த நிலமையும்
நாணமும் மடமும் நான்ற கொள்கையும்
உணவின் சாரமென்று உரைத்தனர் நூலோர்"

உடல் அமைப்பும், நிறமும் நிலையும், ஆண்மையும், நாணமும், மடமும் ஆகாரத்தின் கூறு.

இதிலிருந்து சித்த வைத்தியமுறை இயற்கையாகவே ஏற்பட்டதென்றும், பிற முறைகளிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டதல்ல வென்றும் புலப்படுகின்றன.

சித்த மருத்துவம் : இப்போது—

அந்நியர் ஆட்சி நாட்டிலே ஏற்பட்ட பின்னர் நவீன மருத்துவத்திற்கு அதிக ஆதரவு தரப்பட்டுப் பெருத்த அளவில் வளர்ச்சியடைந்திருப்பது உண்மை. புதிய புதிய தடுப்பு முறைகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆயினும், வியாதிகள் குறைவில்லாமல் வளர்ந்தவண்ணமே இருக்கின்றன. வியாதிகள் குணமடைவதும் தற்காலீகம். அதிக பணச்செலவு; சிகிச்சைகுப் பின்பு உடல் மெலிவு. புதிய வியாதிகள் தோற்றம். அதிக வெறுப்பும், அலுப்பும் ஏற்பட்ட பின்னர்ப் பழமை

யான சித்த மருத்துவத்திஞல் வியாதி அறவே தீர்த்துக்கொள்ள நாட்டங்கொண்டு தக்க சித்த மருத்துவரை நாடுதல். இதுவே இப்போதைய சித்த மருத்துவத்தின் நிலைமை.

**சித்த மருத்துவத்திற்கு : இனித் தேவைப்படுவன—**

மக்களிடையே ஏற்படும் சாதாரண வியாதிகள் குறைந்த செலவில், உடலையும் பாதிக்காமல் சித்த முறையில் சிகிச்சை பெற அரசாங்கம் வசதிகள் செய்து தரவேண்டும். நவீன மருத்துவத்திற்கு கணக்கற்ற கல்லூரிகள் இயங்கி வருகின்றன. சித்த மருத்துவத்திற்குப் பாளையங்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள ஒரு கல்லூரி மட்டும் போதாது. குறுகியகால பாட திட்டத்தில் மேலும் இரண்டு மூன்று சித்த மருத்துவப்பள்ளி ஏற்படுத்த வேண்டும். சிறப்புவாய்ந்த சித்தமுறை மருந்துகளை நவீன முறைப்படி தயாரிக்கவும், நோயாளர்கள் விரும்பி அருந்துகின்ற அளவில் பக்குவங்கள் செய்யவும் சித்த மருத்துவர்களும் முற்படவேண்டும். தமிழகத்திலே சித்த மருந்து ஆராய்ச்சி நிலையம் ஒன்று விரிவான முறையில் இயங்கவேண்டும்.

சித்த மருத்துவம் வளர்க்கப்பட்டால் தமிழகத்திற்குப் பெருமை. தமிழ் மக்கள் இனிது வாழ்வர்.

# SIDE-LIGHTS ON SIDDHARS

BY

**D. NATARAJAN,** M.A., Dip. Anthrop.,
Ford Found. Res.Trg. Cert. (Madras),
[Compiler, District Gazetteers, Madras-8.]

" *Worship thou the Light of the Universe; who is One;*
*Who made the world in a moment, and placed good men in it;*
*Who afterwards himself dawned upon the earth as a* **guru**;
*Who, without wife or family, as a hermit performea austerities;*
*Who appointing loving sages* **(siddhars)** *to succeed him,*
*Departed again into heaven:—worship Him*".

—(*Agattiyar, Gnanam Nuru*[1]).

TAMILNAD has been a land which has witnessed a continual and continued succession of mystics. It could count with pride a number of glorious *Siddhars*, whose thoughts had greatly influenced its people. Therefore, Tamil literature is abundantly rich in its material on *Siddhars*. This article attempts to focus attention on the term *Siddhar* (சித்தர்) and its use in early Tamil literature. As the exhaustive delineation of details and illustrations is not possible within the short compass of an article, attention is focussed only on broad trends.

The term *Siddhar* (or *Siddhan* – சித்தன்) denotes one who has achieved *Siddhi* (சித்தி). The word *Siddhi* in its ordinary sense means success, realization or attainment.[2] It also means *motsham* (final liberation).[3] But with particular reference to the term *Siddhar*, as it is popularly understood now, it means the supernatural powers—more specifically the eight supernatural powers known as *attamasiddhi* (அட்டமாசித்தி).[4] Therefore, *Siddhars* in the generally accepted sense of the term, are 'the Perfected Ones' or the mystics who have acquired the eight supernatural powers. The *Thiruvilayadarpuranam* records interesting accounts of the exploits of Lord Siva in the role of a *Siddhar*.[5] More traditionally, the word *Siddhar* refers to the Supernals who inhabit the intermediate region between the earth and the Sun and who are one of the *Patinen Kanam*[6] (பதினெண் கணம்) of the Lord Siva.

---

[1] The translation of the quoted verse into English is by Dr. Caldwell, the reputed Tamil scholar.

[2] See *Kambaramayanam*, (12th or 13th century A.D.), *Adhikayen Vathaippadalam*, verse 206; "வெங் திறல் சித்தி கண்ட விடணன்...": ("the Vibhishanan who witnessed the *success* in the grim war").

[3] See *Thirunuttrandhadhi* (திருநூற்றந்தாதி) by Avirodhiyalwar (அவிரோதியாழ்வார்) of the 14th century A.D.; "நற்றவர்க்குச் சித்தி நல்க வல்லாற்கு...": ("to him that can grant final liberation to those who perform good penance").

[4] See *Thiruvilayadarpuranam* (திருவிளையாடற்புராணம்) by Paranjothi Munivar (about the 16th century A.D.), *Attamasiddhi arulia padalam*, 21.

It is also held according to a school of thought that the *siddhis* are of eighty-nine kinds. See Buddhamitran's (புத்தமித்திரன்) *Viracholiyam* (வீரசோழியம்—11th century A.D.), *Yappu* (யாப்பு), 11, *Udharanam* (உதாரணம்).

"எண்பத் தொன் பதுசித்தி யியல்பினு ளவென்று,
பண்பொத்த நுண்பொருளைப் பாரதியப் பகர்ந்தனையே."

[5] *Ibid.*, *Ellam valla...padalam*, 1; "ஏறுயர்த்தோர் சித்தராய் விளையாடிய செயல்..."

[6] The eighteen groups of attendant angels. See *Kambaramayanam*, *Ninthanai*, 10.

The term *Siddhan* (or *Siddhar*) has been in use in Tamil literature from very early times. We find the word *Siddhan* (சித்தன்) occuring in the great Tamil epic *Silappadhikaram*, written as early as the 2nd century A.D. Ilango Adigal, the royal-ascetic poet of this unsurpassed gem of early Tamil literature, uses the word *Siddhan*[1] in a particular context, to mean the one who has achieved all his desired goals or one who has completed all that he has to do[2] or one who has cleansed himself of all past deeds.[3] In another context, Ilango makes use of the word *Siddhan* to denote the one who had originated the eight types of *siddhis*.[4] The term *Siddhan* referred to above has been utilised to describe Vardhamana Mahavira, the great sage who established *Jainism* as a separate religion. In the epic, the words are uttered by the Jaina *siddhar* known as *Saranar*[5] (சாரணர்) to the Jaina lady monk, Kavunthiadigal (கவுந்தி யடிகள்).

Among the Buddhists and the Jains, the sages who had achieved supernatural powers were referred to by the term *Saranar*. There are references to *Saranar* in *Silappadhikaram*,[6] as already seen. The epic reveals that the *Saranars* are capable of raising themselves up from the ground and standing in thin air and that they are capable of flying fast in the high skies.[7]

There are also referrences to *Saranar* in the Tamil classical work, *Manimekalai*, a Buddhist poem, which also dates back to the 2nd century A.D. This work which narrates the life story of *Manimekalai*, a Buddhist *Bhiksuni* (nun) reveals that *Saranar* had supernatural powers like flying in the high skies above as if to catch the Sun and the Moon, delving into the land below as if it is just a sheet of water and walking on water with the same ease as walking on the land.[8] According to the Buddhist tradition, the *Saranar* visited many sacred places flying in the high skies, gave enlightenment to appropriate individuals and granted to others their genuine requests.

The Jaina lexicon *Chudamani Nigandu* (சூடாமணி நிகண்டு) of Mandala Purudan (மண்டல புருடன்) of the tenth century A.D., records[9] that the Jaina *Saranar* were of eight divisions[10].

---

1 See Silappadhikaram, X, 177; "செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்..."

2 கிருதகிருத்தியன் = செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடித்தவன்.

3 கன்மங்களைக் கழுவினவன்.

4 *Silappadhikaram*, X, 183; "சித்தன் பெரியவன் செம்ம றிகழொளி..."; (சித்தன் = எண்வகைச் சித்திகளையு முண்டாக்கினவன்).

5 The term *Saranar* is explained in the succeeding paragraph.

6 *Silappadikaram*, X, 163; "தருமஞ் சாற்றுஞ் சாரணர் தோன்ற......"

7 Ibid., X, 209-212;

"........... மாதவ ருயர்மிசை யோங்கி
நிவந்தாங் கொருமுழ நீணில நீங்கிப்
பவந்தரு பாசங் கவுந்தி கெடுகென்
றந்தர மாருப் படர்வோர்த் தொழுது..."

8 *Manimekalai*, 10 : 24; "மீ விசும்பு திரிவோன்."
See also *ibid.*, 28 : 110; "கருமுகிற் படலத்துக் ககனத் தியங்குவோர்."
See also *ibid.*, 24 : 46-47; "நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச்
சலத்திற் றிரியுமோர் சாரணன் றோன்ற..."

9 *Chudamani nigandu*, 2 : 4;
"நீரினிற் பூவில் வானி னிழைத்துழி யொதுங்கு கின்ற
சாரண ரெண்ம ராவர் சமணரி விருத்தி பெற்றோர்."

10 The eight divisions were: 1. *Thala Saranar* (தல சாரணர்), 2. *Sala Saranar* (சல சாரணர்), 3. *Pala Saranar* (பல சாரணர்), 4. *Putpa Saranar* (புட்ப சாரணர்), 5. *Thanthu Saranar* (தந்து சாரணர்), 6. *Sathurangula Saranar* (சதுரங்குல சாரணர்), 7. *Sanga Saranar* (சங்க சாரணர்) and 8. *Akasa Saranar* (ஆகாச சாரணர்).

Further in the Jaina philosophy, the term *Siddhacharanam* (சித்தசரணம்) occurs, which means seeking refuge with the *Siddhars* or 'the Perfected Ones'. Again there is also the term *Siddhaparamestikal* (சித்தபரமேஷ்டிகள்), which means the Supernals or 'the Perfected Ones'. There are references to them in the commentary on the *Chintamani*[1] (the *Jivaka Chintamani*) (சீவக சிந்தாமணி) of Thiruttakadevar (early 10th century A.D.), the Jaina ascetic-poet.

Though the word *Siddhar* does not occur as such in *Kurunthogai* (a collection of short-poems) included in the celebrated *Sangam*[2] collection called *Ettuthogai* (எட்டுத்தொகை), there are references in a verse[3] about those who possessed supernatural powers. The gist of the *Kurunthogai* verse (attributed to the poetess *Vellividhiyar*—வெள்ளிவீதியார்), which makes interesting reading, is given below. The verse is in the form of confident words of consolation uttered by a girl-friend to a lady in love, who had been temporarily separated from her lover.

"Our lord (though separated from you) is not one who can delve into the earth and disappear. Neither is he one that can fly in the high skies, nor is he one who can walk over the sea that crosses his path, with his feet. Therefore, is he one that cannot be found if he is looked for in country after country, in village after village and in settlement after settlement?" (He is sure to be found; therefore, thou despair not of thy lover.)

In the *Thevaram*[4] hymns, which are melodious outbursts of highly spiritual souls in moments of supreme rapture, there are indeed many references to *Siddhars*. For instance in one of his hymns, Sundaramurthi Nayanar[5] addresses the Lord Siva Himself as a *Siddha* and the Siva who exhibits His glorious *siddhis*.[6] There are also other references.[7] The *Thevaram* hymns differentiate those who are trying to realize God as *Bhakthars* (பக்தர் கள்) and those who have realized God as *Siddhars* (சித்தர்கள்).

There are also indeed usages of the term *Siddhar* in the compositions of the *Vaishnava Acharyas* and saints who go by the name *Alwars* and who are the famous authors of the great and well-known collection, the *Nalayirappirabandam* or the *Divyappirabandam*[8].

The references to *Siddhars* in the Saiva-lyrics of Thayumanavar of the early eighteenth century are well-known. The collection of his lyrics (*Thayumana Swamigal Thiruppadartiratu*—தாயுமான சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு) carries a full canto in praise of the glorious assemblage of *Siddhars* (*Siddhar Kanam*—சித்தர் கணம்).

---

[1] See *Chintamani*, 1, commentary; சித்தரை அடைக்கலம் புகுகை.
See also *ibid.*, 962, com.; சித்த பரமேஷ்டிகள்.

[2] The *Sangam* age may roughly be taken to be between the 5th century B.C., and the 3rd century A.D.

[3] *Kurunthogai* (குறுந்தொகை), 130;

"நிலந்தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரும் உளரோநம் காத லோரே."

[4] The age of the *Thevaram* and the *Prabandham* may roughly be taken to be the 6th to 9th century A.D.

[5] Sundarar is one of the 'Four Great Saiva Saints' of Tamilnad.

[6] *Thevaram*, Sundarar, 7th *Thirumurai*, 52: 1, line 2;
"சித்தா சித்தித் திறங்காட்டுஞ்சிவனே......"

[7] See for instance, *Thirunavukarasar Thevaram*, 5th *Thirumarai*, 87, 9, line 1, and *ibid.*, 51, 5, line 1.

[8] See for instance, *Nachiyar Thirumoli*, 11, 10.

## SIDDHIYERS: THE LADY SIDDHARS:

The feminine form of the term *Siddhar* is *Siddhiyer* (சித்தியர்). The *Siddhiyers* are considered to be a class of celestial women[1]. There is a reference to Siddhiyer in *Kambaramayanam*[2].

## THE TERM *SIDDHAR* IN OTHER SENSES:

The word *Siddhar* has been used in early Tamil literature in other senses also. For instance in the celebrated commentator Nachinarkkiniyar's gloss on *Thirumurugattruppadai* (திருமுருகாற்றுப்படை) of poet Nakkirar, the word *Siddhan* refers to Lord Muruga, the traditional Tamil God of the hills.

From the commentary of Nachinarkkiniyar it is seen that the place now known as Palani (Madurai District) was in early times known as *Siddhanvazhvu* (சித்தன்வாழ்வு) and that it is this *Siddhanvazhvu* that is referred to as *Avinankudi* (ஆவினன்குடி) in *Thirumurugattruppadai*[3]. The word *Siddhanvazhvu* also occurs in one of the poems[4] of Avvaiyar (1st or 2nd century A.D.), the popular poetess of Tamilnad.

The ancient Tamil *nigandu* (lexicon) known as *Pingalanigandu*[5] or *Pingalam* (பிங்கலநிகண்டு அல்லது பிங்கலம்) after the name of its author Pingala Munivar (பிங்கல முனிவர்) records that the term *Siddhan* refers to Bhairava (வைரவன்), *Arhat* (அருகன்) and Jupiter (வியாழன்). The term was also commonly used to refer to Lord Sivan (சிவன்)[6].

According to the *Vaidhiya Malaiyagarathi* (வைத்திய மலையகராதி) of *Pathinen Siddhar* (பதினெண் சித்தர்), the word *Siddhan* also refers to a type of tree-the red-flowered silk cotton tree—(இலவு). The word *Siddhan* also connotes loadstone (காந்தக்கல்)[7].

A few (selected) terms of interest which are allied to the term *Siddhar* (or its other forms) are given in the *Appendix* with their meanings, and references to them in literature, wherever necessary.

> "*But now where'er I sit,*
> *Or stand or walk,*
> *Thou* **(God)** *art forever near.*"
> —**(Sivavakkyam**[8]**).**

> "*There is a land of pure delight*
> *Where* **saints immortal** *reign.*"
> —**(WATTS**, *Hymns, Hymn* **66).**

---

[1] தெய்வ மங்கையர்.

[2] *Kambaramayanam, Urthedu padalam*, 184;

"தென் நகுகுடம், உள்-பாடல், சித்தியர் இசைப்ப, நிம்சொல்
பன்னக மகளிர் வள் வார்த் தண்ணுமைப் பாணி பேண......"

[3] See Nachinarkkiniyar's commentary on *Thirumurugattruppadai*, 175, 176.

[4] "நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந் தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
னாட்டுடைத்து நல்ல தமிழ்."

[5] 12th or 13th century A.D.

[6] *Sangattagarathi* (சங்கத்தகராதி) of the Tamil scholar, Kadirver Pillai.

[7] *Sangattagarathi, op. cit.*

[8] The translation of the quotation into English is by Dr. L. D. Barnett; (see his *Heart of India*, 1908, p. 92).

| | |
|---|---|
| *Siddhakkal* (சித்தக்கல்) ... | ... A red stone ; குறுஞ்சிலைக்கல். |
| *Siddhaneri* (சித்தநெறி) ... | ... Established path ; (முடிவான மார்க்கம்).[1] |
| *Siddhapurushan* (சித்தபுருஷன்) | ... *Siddhan.* |
| *Siddhar kulikai* (சித்தர் குளிகை) | ... Magical pill which enables one to fly ; கமன குளிகை. |
| *Siddhar nul* (சித்தர் நூல்) ... | ... Mystic treatises on *yoga*, medicine and astrology composed by the *Siddhars.* |
| *Siddhar murai* (சித்தர் முறை) ... | .... An indigenous method in preparing medicines. |
| *Siddhar vilaiyadal* (சித்தர் விளையாடல்] | ... Miracle ; அற்புதச் செயல். |
| *Siddhararudam* (சித்தராரூடம்) | ... A treatise describing poisonous snakes, the effects of their bites and the remedies for them ; (விஷ வைத்திய நூல்).[2] |
| *Siddha vaidyam* (சித்த வைத்தியம்) | ... A kind of healing art attributed to the *Siddhars.* |
| *Siddhachiramam* (சித்தாச்சிரமம்) | ... A hermitage where Lord Vishnu performed penance during His dwarf-incarnation. |
| *Siddhasanam* (சித்தாசனம்) ... | ... *Yogic* posture which consists in placing the left heel under the body and the right heel in front of it and fixing the sight between the eye-brows in meditation. |
| *Siddhathikal* (சித்தாதிகள்) ... | ... A sect of *yogis* who are believed to possess supernatural or magical powers, such as transmuting iron into gold. |
| *Sittai* (சித்தை) ... ... | ... Goddess Parvathi (பார்வதி).[3] |

[1] See *Periya Puranam* of Sekkilar Nayanar, *Thirunavukarasu*, 40.

[2] See *Jivaka Chinthamani* (சீவக சிந்தாமணி), 1287, commentary.

[3] See *Sivarakasiam* (சிவரகசியம்) by Oppilamani Desikar (ஒப்பிலாமணி தேசிகர்), *Tharuka* (தாருக), 30.

# சித்த வைத்தியமும் மகளிர் மருத்துவமும்

டாக்டர். V. S. பார்வதி, H.P.I.M.

நம் தமிழ் நாடு எவ்வளவு பழமை வாய்ந்ததோ அவ்வளவு பழமையானது நம் தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம். இச் சித்த மருத்துவ முறையை பண்டை முனிவர்களும் பதினெண்சித்தரும், நம் முன்னோரும், ஆராய்ச்சியாலும், அனுபவத்தாலும் சிறந்ததென அறிந்து உலகுக்கு உணர்த்தினர்.

பல நவீன வைத்திய முறைகளால் நீங்காத நோய்களும் பல்லாண்டுகள் உடலில் உறிய நோய்களும் இச்சித்த மருத்துவத்தால் நீங்குவதை நாம் அனுபவத்தால் அறிகிறோம்.

இயற்கைதரும் சாறமுள்ள மூலிகைகளைக் கொண்டும் முறையான உணவின் மூலமும் நோயைக் குணப்படுத்துவதே சித்த வைத்தியம்: இதன் மூலம் நரை, திரை, மூப்பு ஆகிய மூன்றையும் தடுக்கலாம். இவற்றைத் தடுப்பதன் மூலம் சாக்காட்டைத் தடுக்கலாம் என்பது—

"மறுப்பது உடல் நோய் மருந்தெனலாகும்,
மறுப்பது உள்நோய் மருந்தென
மறுப்பது இனிநோய் வாராதிருக்க
மறுப்பது சாவை மருந்தெனலாமே",

என்ற திருமூலர் திருமந்திரத்தால் புலபடுகிறது.

இம் மருத்துவத்தில் மருத்துவ உலகுக்கும், நோயாளிக்கும் தன்னம்பிக்கை தேவை. இதையே "மருந்து ...... பாதி மனம் பாதி" என்பர்.

பொருந்தாத உணவு, முறையற்ற செயல்கள், மரபு நிலை, சூழ் நிலை, ஆகியவையே பெரும்பாலும் நோய்களுக்குக் காரணம். உண்ணும் முறையை விளக்க வந்த வள்ளுவரும்,

"மருந்தென வேண்டாவாம் யாக்கை கருந்திய
தற்றது போற்றி யுணின்"—

எனக் குறிப்பிட்டுள்ளார்.

உண்ணும் உணவில் உவர்ப்பு, புளிப்பு, கார்ப்பு ஆகியவற்றைக் குறைத்து துவர்ப்பு, கைப்பு, இனிப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் ஓரளவு நோயைத் தடுக்கலாம். வாழைத்தண்டு, கீரைத்தண்டு, அகத்திக்கீரை, பாகற்காய், பூசுணைக்காய் முதலியவற்றை அடிக்கடி உணவுடன் கலந்துண்ணல் அவசியம். மேலும் தினமும் பகலில் ஏதேனும் ஒரு கீரையைச் சேர்த்துக் கொள்ளுதல் சாலச் சிறப்புடைத்து.

ஒரே மருந்து, பயன் படுத்தும் அளவு, முறை ஆகியவற்றிற்கேற்ப பல நோய்களைப் போக்கும். இதுவே சித்தமருத்துவத்தின் சிறப்பாகும். அவற்றுள் சில—

சாந்த சந்திரோதய வில்லை (Pills) — செய்முறை: பொறித்த வெங்காரம், சுத்தித்த பூரம், பூசு மஞ்சற்றாள் ஆகியவற்றை முறையே 1 : 2 : 3 : என்ற விகிதத்தில் எலுமிச்சம் பழச்சாற்றிலிட்டு ஒரு நாளைக்கு இரண்டு சாமமாக அரைத்து பயறு அளவு கொண்ட வில்லைகளாகச் செய்து பயன் படுத்த வேண்டும். இவ்வில்லைகளை குழந்தைகள் முதல் முதியோர்வரை பயன் படுத்தலாம்.

நோயின் குறிகளைக் கொண்டு இன்ன நோய் என்று கண்டறிய இயலாத நிலையில் இதை வெற்றிலையில் வைத்துக் கொடுத்து, குடிநீராக சோம்பு நீரைத்தர நோய் நீங்கும். கருவுற்ற பெண்களுக்கு மலம், சிறுநீர் ஆகியவை தடைபட்ட காலத்தில் ஒரு வில்லையை வெற்றிலையில் வைத்துக் கொடுத்து குடிநீராகச் சோம்பு நீரைத்தர தடை நீங்கும். மலச்சிக்கலுற்றவர்க்கு ஒரு வில்லையைக் கொடுத்து சோம்பு, சதகுப்பை, சுக்கு ஆகியவை கலந்த நீரைக் குடிநீராகத் தர சிக்கல் நீங்கும்.

பித்தத்தடிப்புக்கு, வெற்றிலையுடன் இரு வில்லைகளை இரு மிளகுகளுடன் மென்று தின்னச் செய்து ஏலம், சோம்பு கலந்த

நீரைக் குடிநீராகத் தந்து மூன்று நாட்கள் உப்பில்லாத பத்தியமிருக்கத் தடிப்பு நீங்கும்.

பிறந்த குழந்தைகள் மலங்கழிய, தாய்ப் பாலுடன் கால் (¼) வில்லையை உரைத்துக் கொடுக்க மலம் கழியும், கருவாப்பு, செவ் வாப்புள்ள குழந்தைகளுக்குத் தாய்ப்பா லுடன் கால் (¼) வில்லையை உரைத்துக் கொடுத்து நீலிவேர்ப்பட்டை கலந்த நீரைக் குடிநீராகத் தர நோய் நீங்கும்.

சொரி, சிறங்கு, கரப்பானுக்குத் தாய்ப் பாலில் உரைத்துக் கொடுத்து சோம்பு, ஏலங்கலந்த நீரைக் குடிநீராகத் தர வேண்டும்.

உடலில் கிருமிகளை நீக்க வில்லையைத் தேனில் உரைத்துக் கொடுத்து சோம்பு ஏலங்கலந்த நீரைக் குடிநீராகக் தர வேண்டும்.

**கரிசிலாங்கண்ணி** :—காமாலை, ஈரல் நோய் ஆகியவற்றிற்கு சூரணம், குடிநீர் முறையும்; கபப்பிணிகள், கண்நோய் ஆகியவற்றிற்கும் தலை முடிவளரவும் தைல முறையில் தலை முழுகி வரவேண்டும்.

செய்முறை :—கரிசிலாங்கண்ணிச் சாற் றையும் நல்லெண்ணெயையும் சம அளவில் கூட்டி முறைப்படிக் காய்ச்ச இத் தைலம் கிடைக்கும்.

தொண்டையின் உட்புறத் தசை வளர்ச் சிக்கு கரிசிலாங்கண்ணி மடக்குத் தைலத் தைத் தொண்டையின் உட்புரம் தடவ வளர்ச்சி கரையும்.

**கடுக்காய்** :—

**" கடுக்காயுந் தாயுங் கருதிலொன்றென்றாலுங்**
**கடுக்காயுந் தாய்க்கதிகங்காண்நீ—கடுக்காய்**
**பிணி ஓட்டி உடற்றேற்றும் உற்ற அன்னையோ**
**ஊட்டி உடற்றேற்று முவந்து "—**

என்னும் வெண்பாவே இதன் சிறப்பை விளக்குகிறது. மருந்துகளுள் மிகச் சிறந்த திது. இதனைத் தனியாகவும் பிற மருந்துக ளுடனும் கலந்து பயன் படுத்தலாம்.

கடுக்காயைக் காய முறையில் பயன் படுத் தும் முறையும், பயனும் :—

இதனை உணவிற்குப் பின் உண்ண-அன்னதுவேசமும், உப்போடு சேர்த் துண்ண - கபமும், சர்க்கரையுடன் சேர்த் துண்ண-பித்தமும், நெய்யுடன் கலந்துண்ண -வாதமும், வெல்லத்துடன் கலந்துண்ண-திரி தோடமும் நீங்கும்.

கடுக்காயை இரசாயன முறையில் பயன் படுத்தும் முறை :—

இதனைக் கார் காலத்தில் - இந்துப்புட னும், குளிர்காலத்தில் - சர்க்கரையுடனும், முன் பனிக்காலத்தில் - சுக்குடனும், பின் பனிக்காலத்தில் - திப்பிலியுடனும் இளவே னிற் காலத்தில்–தேனுடனும், முதுவேனிற் காலத்தில் - வெல்லத்துடனும் கலந்து தர வேண்டும்.

**பாவன கடுக்காய்** :—காயகல்பமாக உப யோகமாகும் முறைகளில் இதுவும் ஒன்று. நூறு பச்சைக் கடுக்காய் அல்லது காபூல் கடுக்காய்களை அரிசி கழுவிய நீரில் மூன்று நாட்கள் ஊற வைத்து, நான்காம் நாள் கழு நீரை நீக்கி வேறு கழுநீர் விட்டு மீண்டும் ஊற வைக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து மூன்றுமுறை செய்தபின் காய்களை வெட்டி கொட்டைகளை நீக்கி உலர்த்தி இதனுடன் கால்பங்கு சோற்றுப்புச்* சேர்த்து ஒரு பானையிலிட்டு அதில் கடைந்த மோரினை வேண்டிய அளவுவிட்டு அடுப்பில் வைத்து நீரினை வற்றச் செய்து பின் சுக்கு, அட்டுப்பு, இந்துப்பு, ஓமம், செவ்வியம், சித்திரமூல வேர்ப்பட்டை, திப்பிலி ஆகியவற்றை வகைக்கு பதினெட்டு கிராம் இடித்து சலித்து கடுக்காயில் தூவி எலுமிச்சம் பழச் சாறு விட்டுக் குலுக்கி வெய்யிலில் வைத்து அதில் இஞ்சிச் சாறு ஊற்றி பக்குவமாக உலர்த்திவைக்க வேண்டும்.

இதை உணவிற்கு முன்னும், பின்னும் உண்ண குன்மம் இருமல், மந்தம், அசீரணம் வாந்தி வயிற்று நோய் ஆகியவை நீங்கும். மாதவிடாயின்போது ஏற்படும் வயிற்றுவலி, குமட்டல், வாந்தி போன்றவைகளுக்கு உண விற்கு முன்னும் பின்னும் காயாக உண்டால் அரைக்காயளவும், தூளாக உண்டால் அரைத் தேக்கரண்டியளவும் உண்ண நோய் கள் நீங்கும்.

**நெல்லிக்காய்** :—இதைத் தனியாகவும் பிற மருந்துகளுடன் கலந்தும், இளகம், தேனூ றல் ஆகிய முறைகளில் உண்ணலாம். திரிபலை என்ற மருந்துடன் கலந்து கூட்டு மருந்தாகப் பயன்படுத்தலாம். உடல் இளைத்தல், " C "

வைட்டமின் குறைவு போன்றவைகளுக்கு மிகச் சிறந்தது. இது எவ்வகைப்பட்ட உடல் நோயையும் தீர்க்கும் தன்மை வாய்ந்தது.

வல்லாரை :—இதை உணவுடன் சேர்த் துண்ண சளி, நரம்பு நோய்கள், மூளைக் கோளாறு போன்றவை நீங்கும். இது காய கல்பமாகத் தரச் சிறந்தது. இதை நெய் தயாரித்தும் குடிநீர் தயாரித்தும் சூரண மாகவும் உண்ணலாம்.

சுக்கு :—இது எல்லா மருந்துகளுடனும் சேரும். இரசாயன முறையிலும், இளக மாகவும் உண்ணலாம். உஷ்ண(சூட்டு) பேதி, அசீரணம் ஆகியவற்றை நீக்கும். மருந்து களைத்தினும் இது சிறந்தது. என்பதை திரி கடுகத்தில் "சுக்கு முதல் முப்பால"யென வரும் அடியாலும் "சுக்குக்கு மிஞ்சிய மருந் தில்லை" என்னும் முதுமொழியாலும் அறிய லாம்.

பிலீக சூரணம் :—சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம் ஆகிய ஆறை யும் சம அளவு வறுத்து சூரணம் செய்து பொரித்த பெருங்காயத்தூள் செய்து இரண் டையும் இந்துப்புடன் கலந்து அரை அல்லது ஒரு தேக்கரண்டியினளவு மோரில் கரைத் துக் கொடுக்க அசீரணம், பேதி, உளைச்சல், ஆகியவை நீங்கும். சீரணத்தைத் துரிதப் படுத்தும். உணவுடன் கலந்துண்ண கல் லீரல் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களும் நீங்கும்.

## மகளிர் மருத்துவம்

மருந்து மட்டும் உடல் நோயைப் போக்கு வதில்லை. அதனுடன் நாம் கடைப்பிடிக்கும் ஒழுங்கு நெறிகளே நோயைப் போக்கவும், இனி நோய் வராமல் தடுக்கவும் பேருதவி புரிகின்றன. வீட்டுவிலக்கான திருமணமான பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு நெறிகளும் இன்றியமையாமையும்—

1. பகல் உறக்கம் கூடாது : உறங்கின் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் உறக்க முடையதாகவும், முகப்பொலிவு கெட்ட தாகவும் இருக்கும்.

2. கண்ணுக்கு மையிடலாகாது : கண் ணுக்கு மைஇடின் பிறக்கும் குழந்தை மந்தப் பார்வையுள்ளதாகவோ அன்றி குருடா கவோ இருக்கும்.

3. மணப்பூச்சுகள் கூடாது : இதனால் குழந்தை வறுமை நிலையடையும்.

4. தைலமிடல் கூடாது : உடலில் தைலமிடின் குழந்தை வறட்சியைப் பெற் றிருக்கும்.

5. நகத்தை கிள்ளுதல் அல்லது அறுத் தல் கூடாது : அவ்வாறு செய்தால் குழந்தை மற்றவர்களால் இகழத்தக்க செயல்களைக் கொண்டிருக்கும்.

6. அளவு கடந்து பேசுதல் கூடாது : பேசினால் குழந்தை பருத்து விகாரமடையும்.

7. அதிகம் சிரிக்கலாகாது : சிரித்தால் குழந்தையின் நாவும், உதடும் கருத்திருக்கும்.

8. அழுதல் புலம்பல் அதிக கவலை கொள்ளுதல் கூடாது. அவ்வாறு செய்தால் குழந்தை பயந்த இயல்புடையதாகவும், அதிகமாக வெட்கப்படும் இயல்புடையதாக வும், எளிய செயல்களால் நடுக்கம்கொள்ளும் தன்மையுடையதாகவும் இருக்கும்.

9. புணர்ச்சி கூடாது : நேரிடின் இரத் தப் பெருக்கு அதிகரித்து ஆபத்து நேரிடும். கணவனுக்கு சன்னி தோன்றி மரணம் நேரிடும்.

10. குளிர்ந்த காற்று படும்படி இருத் தல், குளிர்ந்த நீரால் கைகால், முகம் கழுவு தல், தலை முழுகுதல், மழையில் நனைதல், பனிக்கட்டி, தயிர், மோர், புளிப்பு வகைகளை அருந்துதல் கூடாது. இவ்வாறு செய்யின் வெளிப்படும் இரத்தப் பெருக்கு கடினமுள்ள தாகவும், கனமுள்ளதாகவும் இருக்கும். இது பிணிச் சூதகம் எனப்படும்.

11. மலச்சிக்கல் இருக்கும்படி இருத்தல் கூடாது : இதனால் வயிறு முழுவதும் வலி, குதத்தால் வாளால் அறுப்பது போன்று இருத்தல் கையும், காலும், நாவும் தடித்தல், உணவு உண்டவுடன் உடலெல்லாம் மினு மினுத்துக் காணல், கிடந்த இடத்திலேயே கிடத்தல் ஆகிய குணங்கள் காணும்.

12. உடலைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும் : அழுக்கு ஆடை, கந்தை, முரட் டுத்துணி, ஆகியவைகளை உடுத்தலாகாது. உடுத்தால் பின்வரும் சந்ததியினர் வறுமை யடைவதற்கு ஏதுவாகும். சுத்தமானதும், வெண்மை நிறமுடையதும், மிருதுவானது மான உடையை உடுத்த வேண்டும்.

13. குதித்தல், தாண்டல், ஓடல் முதலிய செயல்களைச் செய்தலாகாது. உடற்கேட்டை விளைவிக்கும்.

14. காற்றில் அதிகமாய் நடமாடலாகாது: நடமாடின் பிறக்கும் குழந்தை ஒருகால் பைத்தியமுற ஏதுவாகும்.

## அதிதூல நோய்

பெண்களுக்கு மாதவிடாய் சரியாய் ஆகாமலும், உடல் வயிறு, தொடை, புட்டம், மார்பு ஆகிய பாகங்கள் அளவு கடந்து பருத்து பார்வைக்கு விகாரமாகக் காணப்படுதல், மூச்சு முட்டுதல், மலட்டு நோய் ஆகியவை நீங்க கீழ் குறிப்பிட்டுள்ள முறையினைக் கைக்கொள்ள வேண்டும்.

கொள்ளுகாந்த காய்ச்சு நீர் (கஷாயம்):— அரை லிட்டர் கொள்ளினை வேகவைத்த இரண்டு லிட்டர் நீரில் 50 கிராம் சுத்தித்த காந்தம், 50 கிராம் ஊகாமுள் கருக்கு, 50 கிராம் சோம்பு, 50 கிராம் சித்திர மூல வேர்ப் பட்டை, 10 கிராம் ஏலம், 10 கிராம் கருஞ்சீரகம், 60 கிராம் திரிபாலை ஆகியவற்றைத் தூளாக்கி நீரில் கலந்து அந்நீரை நான்கில் ஒரு பங்காக வற்றச் செய்து அதனை ஒன்று அல்லது இரண்டு மேசைக் கரண்டி அளவில் காலை, மாலை உணவுக்கு முன் மூன்று அல்லது ஐந்து நாட்கள் கொடுக்கலாம். (அல்லது) கொம்பரக்குச் சூரணத்தைக் குடிநீராகத் தரலாம். இம் மருந்தினைச் சாப்பிடும்போது கொம்பரக்கின் துவர்ப்பால் மலச்சிக்கல் ஏற்படலாம். அதைப்போக்க கேழ்வரகுக் கஞ்சி அல்லது பழச்சாறு தர வேண்டும்.

மருந்துண்ணுங்காலத்தில் இனிப்பு, நெய், கொழுப்பு பொருள்கள், முட்டை, இரைச்சி. ஆகியவற்றை நீக்கி மோர் காய் கறிகள் ஆகியவை சேர்ந்த உணவைக் குறைந்த அளவில் உண்ண வேண்டும். காய் கறிகளில் நீர் நிறைந்த காய்கறிளான பீர்க்கு, புடல், சாம்பல் பூசணை முதலியவற்றைச் சேர்த்துக் கொள்ளுவதால் சிறுநீரும், மலமும் கழிய ஏதுவாகும். காலையும் மாலையும் வெற்று வயிற்றுடன் கைகால்களை அசைத்து நடக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட மருந்துகளைத் தவிர பச்சைக் கற்பூரம், பனங் கற்கண்டு. புனுகு, விடப்பாலை, வெப்பாலை, வாலுழுவை, நெல்லி, தான்றி, கொன்றைப் பட்டை, கொடிவேலி, வேப்பன் ஈர்க்கு, சீந்தில் தண்டு, முத்தக்காசு, நாறுங்கள்ளி வேர், வாட்பூலா கிழங்கு, மஞ்சிட்டி, கீழா நெல்லி, திரிநாம பாலை வேர், தேட்கொடுக்கு வேர், நீர் வள்ளிக்கிழங்கு, பேய்க்குமிடிககாய், சிற்றுமணக்கு, ஈருள்ளி, ஆடாதொடை, அவுரி, திருகு கள்ளி. கரிசாலை, முடக்கற்றான், நவாச்சாரம், கண்டங்கத்திரி, கரியுப்பு, படிகாரம், கோரைக் கிழங்கு, பிரண்டை, துளசி, ஆகாயத்தாமரை போன்ற எண்ணிறைந்த இயற்கை மூலிகைகள் தனித்தனியாகவும் பிற மருந்துகளுடன் சேர்த்தும் உண்ண மகளிர்க்கு தோன்றும் நோய்களான கருப்பை வலி, சூதகக் கட்டு, மாதவிடாய் இன்மை கருக்கோள், மலடு, பெரும்பாடு, இரத்த சூலை பேறு நோய், ரத்த குன்மம், வெட்டை, வெள்ளை, கருஅழிவு, கருவுற்றிருக்கையில் வாந்தி, சன்னி, கால்வீக்கம் போன்றவைகள் நீங்கும்.

இவ்வாறு பல்லாயிரம் ஆண்டுகளாக வழி வழி வளர்ந்துவந்த, ஈடு இணையற்ற ஏற்ற மிக்க எளிய சித்த வைத்தியமுறையை பயன்படுத்த மறந்து, குறைந்த செலவில் மிகுந்த பொருளைச் செலவிடல் அறிவுடைமையாகாது. தமிழகத்தில் தமிழராய்ப் பிறந்த நாம் இச்சித்த வைத்திய முறையைப் பின்பற்றுவதன் மூலம், நம்மையும் நம்மைச் சார்ந்த நல்வழியினரையும் நோயற்ற வாழ்வுடையவர்களாகச் செய்வது நம் கடமையாகும்.

சித்தர்கள் சிறப்பு.

# முக்கா வேளை

(ரஸபதி)

மார்கழி மாதம்; வைகறை நேரம்; பக்தர்கள் பாடுவர்; கோதையர் திரள்வர்; குமரனை நினைவர், கும்மி யடிப்பர்; குதூகலம் அடைவர்; முப்பது நாளும் இது முறை தெரிந்தோ தெரியாமலோ பல மாதங்களில் செய்த பாவங்கள், அரிய இவ் வழிபாட்டில் அழிந்துவிடும் என்பது அவர்கள் எண்ணம்.

ஒரு சமயம், நலம் சிறந்த கார்த்திகை நகர்ந்தது. மார்கழி பிறந்தது. எங்கும் பஜனைகள் எழுந்தன.

கும்மியடி பெண்கள் கும்மியடி—கொள்கை
உள்ளம் குழையவே கும்மியடி
நம்மை யளித்தருள் நம்பன் அடிஉளம்
நம்பியே கும்மிய டியுங்கடி !

தையலருக்கருள் செய்திட வேஅவன்
தாவும் மயிலினில் தான்வருவான்
மெய்யருள் செய்ஞான வேலனடி—அவன்
மேன்மையைப் பாடிய டியுங்கடி !

என்று, குதித்து மாதர்கள் கும்மி யடித்தனர். அவ்வமயம் அகத்தியர், எதிர்பாராது அவ்வழியே வந்தார். அரிவையரும் ஆடவரும், பரனைப் பாடி ஆடும் பக்திப் பெருக்கத்தைப் பார்த்தார். உள்ளம் பாகாய் உருகியது. ஒருவரும் அறியாதபடி, ஒதுங்கி யிருந்து சிரவணித்தார். அவரை, அங்கிருந்த எவரும் அறிந்திலர்.

மீனாட்சி! இடுப்பு நோகிறது. முன்னேறி ஆட இனி முடியாது என்று, ஏங்கி பின் வாங்கினள் ஒரு ஏந்திழை.

பங்கஜம்! என்க்கும் முழங்காலில் வீக்கம். அதிகம் வலிக்கிறது என்று, நகர்ந்து ஒதுங்கினள் ஒரு நங்கை.

அவர்கள் நிலையை அகத்தியர் அறிந்தார். பொல்லாப் பனியையும் பொருட்படுத்தாமல், ஆடிப் பாடி ஆண்டவனை ஆராதிக்கும் இவர்கட்கு, வாய்வு நோயா வருவது? சிச்சி! தளர வைக்கும் இதனைத் தவிர்க்க வேண்டும் என்று, எண்ணியது அவர் திருவுள்ளம்.

அப்போது விடியற் காலம் ஐந்துமணி. குமரியிருள் எங்கும் குமுறுகின்ற நேரம். முக்காடு இட்டார். தம் முகத்தை மறைத்தார். மாதர் கூட்டத்துள் மாதவர் புகுந்தார்.

சுக்குடன் முக்கா வேளை யிரண்டையும்
சுகமாய்க் காய்ச்சிய ருந்திடவே
பக்கவலி வாங்கும்; வாய்வுகள் போமென்று
பகர்ந்து கும்மிய டியுங்கடி !

என்று, குனிந்து நிமிர்ந்து கும்மி யடித்தார்.

திடீரென்று எழுந்த புதுக்குரல் கேட்டு, தெரிவையர் பலரும் திடுக்கிட்டனர். பாடியது யார்? என்று, ஒருவரை யொருவர் மருண்டு நோக்கினர். மாதர் கண்கட்கு அகப் படாமல், மாதவர் அப்போதே மறைந்தார்.

என்ன அதிசயம்! அறிவித்தவரை அறிய இயலவில்லையே என்று, வனிதையர் அனைவரும் வருந்தினர். முக்கா வேளை, கிராமங்களில் எங்கும் முளைத்திருக்கின்றன. அதற்கு இவ்வளவு சிறந்த குணமா இருக்கிறது? அதை இன்றே சோதிப்போம் என்று நினைத்தனர்.

பயனுன அம் மூலிகையைப் பறித்தனர்; இடித்தனர்; சாறு எடுத்தனர்; சுக்கைப் பொடித்தனர்; சாற்றில் இட்டனர்; சுண்டக் காய்ச்சினர்; கஷாயம் ஆக்கினர்; இறக்கி ஆற வைத்தனர்; இரவில் அருந்தினர்: படுத்தனர்; அயர்ந்து கண் வளர்ந்தனர்; வைகறையில் விழித்தனர்.

என்ன அதிசியம்! கால்பிடிப்பு, கால்வீக்கம், இடுப்புவலி யாவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. உடல் இலேசாயிருந்தது. முக்கால் வேளையின் மகிமையா இது? அதன் அருமையை, இதுவரை அறியாது இருந்தோமே என்று வருந்தினர். தம்மைக் காட்டாது அறிவித்தாரை, போற்றி நெஞ்சாரப் புகழ்ந்தனர். அதன்பின், அமலன் அருளைப் பாடி பாடிப் பராவினர்.

## மதிப்பிற்குரிய மணி

சித்தர்கள் உலகில் ஒரு சிறு செய்தி. ஒரு புதுப்பானை - அதில் எட்டுப் பங்கு நீர்; ஒரு பங்கு உப்பு. அடுப்பில் ஏற்றிக் காய்ச்சுவர். எரித்த சிறு தீயில் நீர் கொதிக்கும். உடனே இறக்குவர். முழுவதும் ஆறியபின், மறுபடியும் காய்ச்சுவர். இறக்கி வைப்பர். இப்படியே ஏற்றி இறக்கி, முப்பத்திரண்டு தரம் முயல்வர். வெம்பிப் பானை வெடித்து விடாதபடி, கா அம்பா! கா என்று, ஒருமை உணர்வால், திரிபுர சக்தியை தியானிப்பர்.

சுண்டக் காய்ச்சி எடுத்த நீரில், முக்காவேளைச் சாற்றைக் கலப்பர். அதன்பின், அது, முப்பு என்ற பெயர் பெறும்.

[முப்புக் காணும் முறைகள் பல; அவைகளுள் இது, பயனுன சித்தர்கள் கூறும் பாலர் பாடச் செய்தி.[

உப்பை யறிந்தவன் வாதி; உணவில் உப்பை ஒழித்தவன் யோகி. பண்புடைய இது, இந்நாட்டு பழமொழி.

தட்டையான வெள்ளித் தகட்டை, தேங்காய் போலத் திரட்டுவர். அதனுள் மேற் சொன்ன முப்புவை இடுவர். ஒன்றரை பலம் பாதரசத்தை உறவாட விடுவர். கஜபுடம் செய்வர். அதன்பின் எடுப்பர்.

[கஜபுடம் என்பது, எடுப்பான ஒரே பெரிய புடம் இட்டு எடுப்பது.]

தேங்காயைப் பிளப்பர். வெள்ளித் தகட்டின் ஆவியும், முப்புவும், பாதரசமும் ஒருங்கு கலந்து ரஸமணி ஆகும். அதை அரை ஞாணில், அல்லது கரத்தில் கங்கணமாகக் கட்டுவர். தூய இம்மணியின் துணையால், காட்டில் சித்தர்கள் கலங்குவது இல்லை. குகைகளில் அஞ்சாது குடியிருக்கின்றனர்.

**தேடையிலே புலிகாடி ஏனம் பாம்பு**
**சிவமணியைக் கண்டவுடன், தண்டம் பண்ணும்;**
**வாடையிலே சித்தரெல்லாம் வாவா என்பார்.**

[ஏலம் - காட்டுப்பன்றி - சிவமணி - ரஸமணி - தண்டம் - வணக்கம், வாடை (ரஸமணியின்) வாசனை.]

போகர் இந்த ரஸமணி விஷயமாக இப்படி விரிவாகப் பல செய்திகளை விவரிக்கிறார். இது சித்தர்களின் இரண்டாவது பாலர் பாடச் செய்தி. இப்படியே அவர்கள் வரிசைக் கிரமப்படி, தங்கள் அநுட்டானங்களை விளக்கியிருக்கின்றனர்.

இதை மீறி, பில்லி, சூன்யம், வைப்பு, ஏவல் முதலிய அராஜகச் செயல்களை, இரக்க மற்ற அரக்கமனத்தர் பலர் எழுப்பியுளர். அவர்கள், கருங்கோழி ரஸமணி, நரமேதை ரஸமணிகளைச் செய்துகொண்டு, பாதக காரியம் பல பண்ணியுளர். இந்த அநியாய முறை களை அன்பர்கள் அறியவே வேண்டா என்ற எண்ணத்தால் அவைகளை உருவாக்கும் முறை களை, அமிர்தவசனி அறிவிக்கவில்லை.

முன்னும் பின்னும் உணர்ந்து வேதிக்கும் செயல்கட்கு, பெரியோர்கள் வேதை என்று பெயரிட்டுளர். இவைகளால், உருவங்களையே மாற்றி விடுவது சித்தர்கள் மரபு.

நாளென்ற தங்கமது நீருறுக்கால்
சகத்திற்கு ராயனென்று சாற்றல் ஆமே!

[நீருக்கல் - பொடியாம்படிப் பஸ்மித்தல், ராயன் - ராஜா.]

செத்தமணி, ஜீவமணி என்று, ரஸமணிகளில் இருவகை.

செத்தமணி - ஆரவாரம் எழுப்பி அழிவு செய்யும்; இறுதியில் தானும் அழியும். தன்னைத் தோற்றுவித்தாரையும் சாகடிக்கும்.

ஜீவமணி - எந்த உலோகத்தில் கூட்டினாலும் கலக்காது. உருகாது. மேலெழுந்து மிதக்கும். அதுபோல்வதுதான் ஜீவசமாதி. ஜீவமணியைக் கண்டு பிடித்து ஜீவ சமாதியில் இருக்கும் சித்தர்கள் பலர், இன்றும் பல தலங்களில் கரந்து இருக்கின்றனர்.

அவர்களைச் சிலர் அணுகுவர். ஆன்மார்த்த வழியை அறிவியுங்கள் என்று, வாய் கேட்கும்; தங்கம் செய்யும் முறைகளை, தயவுசெய்து சொல்லுங்கள் என்று இதயம் கனிந்து இறைஞ்சும். அதுகேட்டு அவர்கள் குறுநகை புரிவர்.

அதற்கு இச்சா பத்தியம இருக்க வேண்டும்; அதற்குச் சம்மதமா? என்று அவர்கள் அறிவிப்பர்.

இச்சா பத்தியம் என்பதற்கு, வறுத்தபுளி. சுட்ட உப்பு என்பது என்று இன்றைய வைத்தியர்களின் அறிவிப்பு. சித்தர்கள் தீர்ப்பில், எதனில் இச்சை யெழுமோ அதனில் அதனில் பத்தியம் வேண்டும்; அஃதாவது, விரும்பற்கு உரியவைகளில் இருந்து விலகி யிருக்க வேண்டும் என்பதுதான். அவர்கள் உரைக்கும் குறிப்பை, நம்மால் உணர முடிவது இல்லை. அநியாய மரணத்தை நினைக்கும்போது, அஞ்சுகிறது எவர் மனமும்.

ஸ்வாமி! இருந்தார்போல் இருந்து சாவது ஏன்? என்று கேள்வியை எழுப்புவர்.

ஈஸ்வர ஆண்டு பிறப்பது ஏன்? என்று, சிரித்தபடி ஒரு வினவை எழுப்புவர் சித்தர் கள். அவர்கள் முன்னின்று பதில் சொல்ல, எவராலும் முடிவது இல்லை. அதனால் அவர் களே, தாது கெட்டு என்று விடை தருவர். தாது வருஷம் தீர்ந்தால், ஈஸ்வர ஆண்டு பிறக்கும்; அதுபோல், தாது விரையமானால் எவரும் மரணம் எய்துவர் என்பதை அழகாக அவர்கள் அறிவிக்கும் அருமையே அருமை.

இந்த உலகில் இருக்கிறோம். உடம்புகளொடு உறவாடுகிறோம். இருக்கும் சூழ்நிலை, எவர்க்கும் இச்சையை எழுப்புகிறது. என் செய்வது யாம் எனில். கூழுக்கும் ஆசை; மீசை யிலும் மோகம். இவர்களை வாழ்விக்க எவராலும் ஆகாது—என்று எண்ணுவர். கேளுங் கள்—என்று மேலும் கூறுவர்.

எருக்கிலை பழுப்பது ஏன்? எருமைக்கன்று சாவது ஏன்? பாலற்றுப் போன பரிபவந்தான். தெரிகிறதா! உடலில் அமுத சத்துவத்தை, கருத்தோடு என்றும் காப்பாற்ற வேண்டும். விரையம் செய்தால், விரைவில் உடலம் வீழ்ந்துவிடும்.

பெண்மையில், தெய்விக சக்தி பெருகியுள்ளது. அதை அறிந்து, அவர்களைப் பரையின் அமிசர் என்று இதயம் கனிந்து இறைஞ்சுபவர், என்றும் உலகில் இன்பம் எய்துவர். திரு மூலர் கூறும் பர்யங்கி யோக தத்துவம் இது.

பிருங்கி என்பவர், ஒரு பெருஞ் சித்தர். அவர், கூடுவிட்டுக் கூடுபாயும் குணதிலகர். அதன் மூலம், பல சமயம் பூவையர் உடலுள் புகுந்தார். ஆடவரை மணந்தார். மகப்பேறு அடைந்தார். வயோதிகையானார். பிறிதொரு சமயம் புருஷ உடலில் புகுந்தார். ஒவ்வொரு பருவ சூழ்நிலையையும் உணர்ந்தார். தநயர் பலர்க்குத் தந்தை ஆயினார். தேர்ந்த அனுபவத்தில் தெளிந்தார்.

உடம்பால் ஆடவர். உள்ளத்தால் பலவீனர். மாதர்கள்முன், மந்ததரம் ஆகும் அவர்களது பரிபவத்தை எண்ணி நெஞ்சம் பதைத்தார். வீணான ஏமாற்றம் உலகம் என்று வெறுத்தார். ஆண்களைக் காப்பாற்ற, ஏராளமான நூற்களை எழுதினார். அவர்முன் ஒரு நாள், அம்பிகை தரிசனம் ஆயினள். முனிவர், இருகரங் கூப்பித் தேவியை இறைஞ்சினர்.

பிருங்கி ! ஆண்பிள்ளைகளின் தவறுகள் ஆயிரம் ஆயிரம். அவைகளை முதலில் அறிந்து கொள் ! வீணாகப் பெண்களை வெறுக்காதே !

தாயே ! தங்கட்கு அடியேன் தலை வணங்குகிறேன் ; கோணைத் தனமான கோலம் கொண்டு. ஆண்களின் அறிவுக் கண்ணைக் குருடாக்கும் மாதர்கள் உலகம் மறையட்டும் என்பது தான் என் எண்ணம்.

பிருங்கி ! அன்னை ஒருத்தி உன்னை அருளினள். கோலம் செய்து கொள்வது கோதையர் கொள்கை. மாதர் எனும் சொல்லிற்கே அது மரபு. தாயை, தமக்கையை, தங்கையை, மகளை அறிவதுபோல், எந்த மாதரையும் எண்ணுவது இயல்பு. மாறி நினைப்பதும், மயக்கினர் என்பதும் மடத்தனம். ஆணும் பெண்ணும் இயற்கையின் அமைப்பு. அதை அறிந்திலை. ஆண் உலகம் மட்டும் வாழ நினைத்தாய். அது குறித்த மாபெரும் உன் நூற்கள் பல மறைந்துவிடும்

மண்டைக் கொதிப்பு மாறவேண்டும், அறிவில் குளிர்ச்சி அமைய வேண்டும். நெல்லிக்காய் தைலம் தேய்த்து நீராடு ! மற்றவரும் அறியுமாறு செய் ! முதலில் முக்கா வேளையில் உறவுகொள் ! முறையா சித்தர்கள் நூற்படி முன்னேறு ! என்று அருளி, உருவம் கரந்தார் உமாதேவியார். அதன்பின், பிருங்கி முனிவர் கண்ட ஆமலக தைலம். பிருங்காமலகம் என்னும் பெயரைப் பெற்றது.

அதன்பின், எதிலும் அவசரமாக இறங்காமல், அமைதியான முறையில், பெருஞ் சித்தர் நூற்களைப் பின்பற்றி, ஜீவ ரசமணியை உருவாக்கி, சாதனை செய்து,

**‘ தூங்காமல், துயராமல், சுக்கிலமே மேலேற**
**போங்காலம் பொய்யாக, புனிதச் சமாதியினில்**
**நீங்காமல் தாமிருந்து, நீளும் உலகனைத்தும்**
**ஆங்காங்கே சென்றருளால் ஆநந்தம் எய்தினரே ’**

என்றபடி, பாரத பீஷ்மர்போல் பயனெய்திய பிருங்கி முனிவர், சமாதியில் இருந்தபடியே எங்கும் சஞ்சாரம் செய்கின்றார். வாழ நினைவார்க்கு, அவர் முக்கா வேளையின் வழிமுறையைக் காட்டுகின்றார் என்று அறிவிக்கின்றார்கள் ஆன்றோர்கள்.

வாழ்க சித்தர்கள் வழிமுறை !

# திருப்புகழின் திருமருந்து

(கருவை—இயதா.)

"மருந்து" என்ற சொல்லுக்கு மருத்துவப் பேரறிஞர்களான "சித்தர்கள்" தனிப் பொருளை தந்து உதவினர். நோய்கண்டார் அஃதினை போக்கக் கொள்ளும் அவிழ்தம் மருந் தெனல் வெளிப்படை ஆனுல்;

"மறப்பதுடல்நோய் மருந்தெனலாகும்
மறப்பதுள நோய் மருந்தெனற்சாலும்
மறுப்பதினிநோய் வாராதிருக்க
மறுப்பது சாவை மருந்தெனலாமே"

எனும் செய்யுள்; உடல்நோய்; உளநோய். உயிர்நோய்; எனப் பிரித்தல் ஓர்க. ஆக, உடல்நோய் 4448, உளநோய் கொடிக்கு நூறு; உயிர்நோய் பிறப்பும், இறப்பும் என்க. உடல்பெறும் நோய்களைத் தவிர்ப்பதும்—தீர்பபதும்; உளம்பெறும் நோய்களைத் தோற்ரு திருக்கத் துணிவதும்—துணிப்பதும்; உயிர் நோய் வாராதிருக்க வகுப்பதும் வழியிடுவதும் மருந்து.

மருந்தின் வகைகள் நாட்டிற்கு நாடு—இனத்திற்கு இனம் மாறுபட்டு வந்துள்ளன. உருது மொழியாளர் உரைத்துப் போந்தது யுனனி; வடமொழியாளர் வகுத்து உரைத்தது ஆயுர்வேதம்; மேலைநாட்டார் மொழியத் தொகுத்தது அலோபதி. தமிழரான சித்தர்கள் தரணிக்கே தந்தது சித்தம்.

தமிழ் மருந்துகள் காலத்தால் முந்தியும், திறமையால் மிகுந்தும், விலையால் குறைந் தும், கையாள்வதில் சிறந்தும் இலங்குவன இயற்கையோடியற்கையாக இணைந்து, வதிந்து, வாயுரைத்த சித்தர் பெருமக்கள்; இயற்கை வகுக்கும் வளி, தீ, நீர் (வாத—பித்த—சிலேத் துமம்) என்பவைகளின் இயற்கையளவீடு மிகினும்; குறையினும் நோய் காணும் என்றனர், ஓங்காரமேவான்; அஃது உயிர்க்க வளிபிறக்கும்; வளியின் வேகத்தால் தீ தோற்றும்; தீ தன்னிலை பெறுங்கால் நீர் பிறக்கும். நோய்பிறக்க வழியிடும் மூன்றனுள் தலையாகி நிற்பது வளி என்பதாலேயே,

"வாசலீரைந்து மயங்கிய வாயுவை
ஈசன்றன் வாசலிலேற்று" என்றும்

"மூலத்திற் றேன்றி முடிவிலிரு நான்காகிக்
கால் வெளியிற் பன்னிரண்டாங் காண்" என்றும்

"நரம்பெனும் நாடியிடை மினுக் கெல்லாம்
உரம்பெறும் நாடியொன் றுண்டு" என்றும்

"நாபியகத்தே நலனுற நோக்கிடில்
சாவதுமில்லை யுடம்பு" என்றும் ஔவை குறள் ஓதுகின்றது,

ஓதியன பலவாய் இருப்பினும்; ஓதியோர் பலராய் இருப்பினும்; நல்லவைகள் நாடு வதே நம்மின்கடன்.

"நாய் குரைக்கின்ற போழ்தெல்லாம் தாமதித்தீர்களானால், நீங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு, செல்ல வேண்டிய நேரத்தில் செல்லவே முடியாது." அராபியம் நல்கிய அறிவுரை இஃது. நம்மின் நெடுவழி நேரற்று இருக்கலாம். இடரெனும் தடைகள் எங்கனும் தோற்றலாம். முடிவு நெருங்குவதற்கு முன்பே மூச்சற்று விடலாம். ஒருவன் ஆயிரம் கற்கள் (மைல்கள்) நடந்தாலும் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்துத்தான் அத்தனை கற்களையும் அவனால் நடக்க—கடக்க முடிந்ததென்பதை மறத்தல் கூடாது. தடைகளை உன்னி தாமதத்தை தலைதூக்க விட்டோமானால்; எதிரிட்டிருக்கும் மரணத்திற்குள், கொடுங் காலனின் ஏவலாளிகளான நோய்கள் வாயிலைத் திறந்து வழிவிட்டுவிடும். நல்லவைகள் எவை என்பதற்கு முன், நாம் யார்? "உலகத்தை எந்த சக்தி நடத்துகிறதோ, அதிலிருந்து பிறந்த ஒரு பொறிநீ. அது அணைந்து விடுவதற்குள் உன் அறியாமையைப் போக்கிக் கொள்."—உரோமானிய மாமன்னன் மார்க்-அரேலியர் என்பாரின் வண்ணமலர் இது. அவர் மீட்டும் குறிக்கையில் "நல்லதையே உன் எண்ணத்திலும், செயலிலும் கொண்டுவா" என்றனர். தமிழ்மறை "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" எனக் குறிக்கிறது. நல்லது என்பதை, நாடுபுரிய சிந்தனை கோமான் சாக்ரடீஸ் செப்புவதைப் பாருங்கள்" எல்லோரும் நல்லது செய்வதை நாடுகிறார்கள். ஆனால், எது நல்லது என்பதில்தான் கருத்து வேறுபாடு இருக்கிறது" என்றார். கிரேக்கம் ஈன்ற கிள்ளைமொழியான் நாடகப் படைப்பாளன்—சோபாக்ளிசு" எந்தப் பொய்யும் வயோதிகம் அடையும்வரை வாழ்வதில்லை." என்கிறார்.

இத்துணை காலமும், இனிவருங் காலத்திலும் எத்துணை முறைகள் இவ்வையத்தே பிறப்பினும், தலையெனத் திகழ்வதும் நிலையென ஒளிர்வதும்; அலையென ஒலிப்பதும் சித்த மருந்துகளே. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பல்லாயிரக் கணக்கில் பாக்களாக்கி பலப்பலப் பெயரால் பகுப்புகள்கொண்டு முறைகள் பலப்பல மொழிந்தனர். சித்தர்கள்.

ஈண்டு—,

எல்லாம் வல்லானாய்—எங்கும் நிறைந்தானாய்—தொல்லை தவிர்க்கும் தூயோனாய்—அல்லல் சாரா ஆறைப் பெற்றோனாய்—நினைப்பார் தன்னெஞ்சில் நிலையாய் இருப்போனாய்—அணைப்பில் அன்னையாய்—ஆறுதலில் தந்தையாய்—பிணைப்பில் தோழனாய்—பேசுமொழி அமைச்சனாய்; இலங்கும் முருகெனும் அழகினில் முகிழ்த்த அருணகிரி; வழிபாட்டுப் பாடலாய்—வழுத்தும் பாவினமாய்—ஏத்தும் எழுத்துக்கள் எழுதும் ஓவியமாய் படைத்த திருப்புகழில் பதிந்துள்ள மருந்து ஒன்றினை உரைக்கப்புகுவாம.

நரை—திரை வந்துற்ற நேரம்—உடலை

உருக்கும் திறனுடைய நோய் வாதம். இது எண்பது வகையினை உடையது. சித்த மருந்துகள் தவிர்த்து எம்மருந்துகளும் எடுக்கவொண்ணு இக்கொடிய நோயிற்கு வானர் அமிர்தமென திருப்புகழ் வழங்கும் முறை காண்போம். திருவகுப்பு இருபத்தைந்தில், பதினாறும் வகுப்பாய் இலங்கும் சித்து வகுப்பில் ;

" அடல்புனைந்த வேலுமயிலு மென்றும் வாழி
யரியதொன்று கூறவருகிருந்து கேண்மின் " எனத் துவங்கி

ஆதியு முடிவுமி லானந் தந்தரு
மாறிரு கரதல நாதன் நந்தவை

அவுஷத முளசில கிலு கிலுய்பைக
ளரசிலை நறுவிலி கரிய கக்கரி

அத்தி செம்பி ராகை முட்காவலை
துத்தி சங்க மோரிதழ்த் தாமரை

அவுரி கற்றாழை யொடுவை குறிஞ்சிலி
சிவிறி கத்தாரி பொடுதலை சண்பகம்

ஆரை கொடு வேலிவேல் காஞ்சிரம்
விரை யிருவேலி பேரீந்தில்
அமுக்கிணை யெருக்கிலை முருக்கிதழ் செருப்படை
யகத்தித மரத்தைமத மத்தமொடு பித்திகை
ஆல மாத்திகடுக்கை கொடிக் கழல்
கோலி தேட்கடை நெய்க்கொடை வக்கனை
அகில் பரம்பை காரை துடரி தும்பை சூரை
யலரி சம்பு நாவன் மருது சிந்துவாரம்
அறுகு தழுதாழை மாபாலை புன்கு
புரசு பழுபாகல் பூலா வழிஞ்சில்
ஆயிலாவிரை யிறலி யிரும்பிலி
யாடி யாவணி புடமிட வென்றழை
அவனி பாடல மனல மகீருக
மிவை சமூலமு மெழுபது சாலடை
அதிமதுரந்தகரஞ் சிறு பாலடை
பதிமுக வெந்திய மின்கய மோதகம்
ஆறிடை யபினரி தாரங் கந்தக
நூறிடை திரிபலை யோரோன் றெண்பலம்
அதிவிடய முமொழி கிருமி சத்ருவு
மனன் முறுகலுமற முறுகு துத்தமும்
அற்ப மொன்று கிரை வித்தேழிடை
யத்தி லொன்று பாதி தக்கோலமும்
அடவி கச்சோல நிமிளை நறும்பிசி
னரிதம் வெட்பாலை யரிசி கருங்கணி
ஆமலக மேல நான் மூன்றிடை
சேமசிலை கூடலோ காஞ்சனம்
அரப்பொடி கடிப்பகை விடத்திரணமப்பிர
கசத்தை சதகுப்பிவிதை கொத்திமலி திப்பிலி
ஆலிகோட்ட மெலிப்பகை சச்சிலை
நீலி காய்ச்சு நிலப்பனை கற்பிசின்
மடல் சிவந்த தாழை மணவசம்பு நீலம்
வருகுரும்பை கோடறுருசு சம்பிராணி
மரிசி வசவாசி காசீச மஞ்சன்
மகிழ விதை மேதை மாமேதை குன்றி
வாரி வாய்நுரை சயில சலம்புரி
பூரி வாதுமை சணவு பெருங்குமிழ்
வடுவில் சீரக பலமயிரோசனை
கடுகு ரோகணி சிவிதை மனோசிலை
வகைவகை கொண்டரு மண்டல மோரொடு
குகையினி லெண்பது செம்பினி லூறவை
வாத நல்வழிகளனேகம் பண்டையில்
வாகட மலகுரு நாதன் றந்தது."

..........................................................................

எனப் பாடியுள்ளார். இப்பெரும் பாட்டினில் பல பொருட்கள் சொல்லப்பட்டிருப்பதால் அத்துணை பொருட்களின் பெயர்களையும் எடுத்து எழுதிடின் இடம் விரியும் என்பதால்; அரிதான சிலவற்றிற்கான பொருளினைக் கூறுவம். கரிய கக்கரி—சுக்காரி; சிவிறி—சாதிக் காய்; கத்தாரி—ஆடுதின்னாப்பாலை; மதமத்தம்—ஊமத்தை; கொடி—கட்டுக்கொடி; கழல் கோலி—கழற்சிக்காய்; சிந்துவாரம்—செந்தூரமரம்; யிறலி—கொன்றை; கயமோ தகம்—ஆனைத்தந்தம்; கிருமிசத்ருவு—நிலவாகை; அடவிகச்சோலம்—கோரோசனை; கடிப்பகை-கருடன் கிழங்கு; எலிப்பகை—பூனைக்காலிவித்து; குரும்பை—தென்னம்பால்; பூரி—இலவம் விதை; வாரிவாய்நுரை—கடல்நுரை; சலம்புரி—வெண்சங்கு.

இதன்கண் வந்துற்ற பாடாணங்களை சுத்தி செய்துகொண்டு, சமூலங்களைச் சூரி ணித்து; சாறுகளின் வகைகளால் பாடாணங்களைச் சுருக்கிட்டுக்கட்டி, புடமேற்றி; நீற்று சூரணத்துடன் மத்தித்து செம்புச் சிமிளில் எண்பது நாள் பூமிப் புடமிட்டு யெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்வழி முடிவுற்ற மருந்து,

"மயிர்க்கால் வழியெல்லாம் மாய்கின்ற வாயு
உயிர்ப்பின்றி யுள்ளே பதி"

"வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுட் பெருக்க முண்டாம்"

எனும் மொழிகளை மெய்ப்பிக்கும் வளி வழியாகத் தோற்றும் நோய்கள் அனைத்திற் கும் இம்மருந்து ஒன்றே போதுமானது. சித்து வகுப்பில் இன்னுஞ்சில உரைத்துள்ளார் அவைகளை, அவரவர் கண்டு, ஆய்ந்து முடித்துப் பயன்பெறுக.

மருத்துவம் என்னும் மாண்புறு கலையில் சித்த முறைகளை மறந்து, செகம் ஓடிக் கொண்டிருக்குமானால், அழிவிற்கு அடித்தளம் போடுகிறது. என்பதே பொருள். இருளின் இறப்பிலே இன்னொலி பிறக்கிறது. இன்றைய வாழ்க்கை நாளைய சரிதமாகின்றது. உலகம் ஓர் முன்னோடும் பிள்ளையாய் ஓய்வின்றி ஓடிக்கொண்டே யிருக்கிறது.

மாசி முடிவே மனிதமறை!
வசையொழி வாழ்வே வரலாற்றுப் பெருவீடு!!

# "சித்த மருந்தும் இன்றைய உலகும்"

இலா. கிருட்டிணமூர்த்தி, காட்டுபுத்தூர்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

இற்றைய உலகினில் உடற்பிணி தீர்க்க பற்பல மருத்துவ முறைகள், பற்பல தேயத்தவரால் கையாளப்பட்டு வருகின்றன, அவைகளுள் பெருஞ்செல்வாக்குப் (influence) பெற்று பெரும்பான்மையோரால் பயன்பட்டுத்தப்பட்டு வருவது ஆங்கிலேயரின் மருத்துவமும் (Allopathy) செர்மானியரின் (Homeopathy) மருத்துவமுமே யாகும். இம் மருந்துகள் உடலில் தோன்றும் எல்லாப் பிணிகளையும் வேரறக் களைந்து மனிதனின் துன்பம் நீக்கி, இன்ப ஆக்கம் தருகின்றதா? என ஓர்ந்தால் அவையில்லையாதல் புலனாகிறது. இன்றைய நாள் வரை, நீரிழிவு என்னும் மதுமேகம் (Diabetes), என்புருக்கி என்னும் க்ஷயரோகம் (T. B.), ஒற்றைத் தலைவலி, இளம்பிள்ளை வாதம் (Polomalities), கக்குவான் (Whooping Cough) போன்ற பல நோய்களுக்கு மேற்கூறிய முறைகளில் முழுமையான மருந்துகள் இல்லாது நாளொரு ஆராய்வும் பொழுதொரு மருந்து முடிப்புகளும் நடைபெற்று வருவது வெள்ளிடைமலை. ஆயினும், இவைகள் மனிதனின் உடல் அமைப்பு பற்றிய இயற்கைப் பகுப்புகள், அமைப்பின் விபரங்கள், பகுப்புக்களின் இயற்கை மூலங்கள் ஆகிய அடிப்படை மருத்துவ தேவைகளை கண்டுணர்ந்துள்ளனவா என நோக்கின் அவைகளும் சரிவர காண்கிறோம் இல்லை. தெய்வத் திருவள்ளுவர் கூற்றின்படி, "நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்ப செயல்" படுவதே அறிவுடைமை. நோய்த்தன்மை நோய் வந்த காரணம், அதைக் களையவேண்டிய மருந்துகள், மருந்துகளை வீரியப்படுத்தும் அநுபானங்கள், கொடுக்கும் காலம், முறை ஆகியவைகளைப் பகுத்து, உணர்ந்து, தெளிந்து, செயல்படா மருத்துவ முறைகள், முழுமையுற்ற மருத்துவ முறையாகா. எனவே மேற்கூறிய இருதேய முறைகளும் ஆயுர்வேதம், யுனானி போன்ற முறைகளும் தேவையான தெளிவு, திண்மை ஆகியன காணப் பெறாதனவாய் இலங்குகின்றன. அதாவது உடலில் தோன்றும் நோய்கள் யாவற்றையும் வேரற களையும் ஆற்றல் அவைகளுக்கு இல்லையாதல் தெள்ளிதிற் புலனாகிறது. எனவே. முழுமையுற்ற, எல்லா பிணிகளையும் நீக்கும் ஓர் மருத்துவம் இல்லையா? என்று ஐயுற்று கலங்குவார்க்கு, அத்தகையதோர் மருத்துவம் நந்தமிழ் நாட்டில் இருந்து வருகிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவே "சித்த மருத்துவம்" எனும் தமிழ் மருத்துவமாகும். அதனை சிறிது விளக்குவோம்.

சித்த மருத்துவம் :— சித்தர்களால் ஆய்ந்து, அறிந்து, அறிவுறுத்தப்பட்ட மருத்துவம் சித்த மருத்துவம் எனப் பெயர் பெற்றது, இதன் தொன்மை, சற்றேறக் குறைய கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதையும், ஆயுர்வேதம், யூனானி போன்ற மருத்துவ முறைகளுக்கு தாயானது என்பதையும் ஆராய்ச்சியாளர்களின் தேற்றத்திற்கு விட்டு, சித்தர்கள் என்போர் யாரென நோக்குவாம்.

சித்தர்கள் என்போர், தங்களின் ஆன்மாவை அறிந்தவர் என ஞான நூல்களும், எண் சித்திகளாகிய அணிமா, மகிமா. இலகிமா, கரிமா, பிராப்த்தி, பிரகாம்யம், ஈசத்துவம், வசித்தும் எனும் செயற்கரிய செயல்களைச் செய்வோர் என பொது மக்களும், "கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள்; கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் எனவும் தேவாரம் கூறுப. அதாவது தமது இயற்கை அறிவையும் உணர்வையும் உலகின் பற்பல அநுபவங்களால் பகுத்துணர்ந்து நுண்மையாக்கி, அறியாமை, சினம். அச்சம், மரணம் போன்ற பிறவிக் குற்றங்களை தம் முயற்சியால் நீக்கி, தெளிவுற்று அறிவின்

முழுமையாம் இறைமையை அடைந்தவர்களே சித்தர்கள் எனல் சாலும். அவர்கள் இயற்கையின் இயல்பை பகுத்து, உணர்ந்து அதன் முழுமை கண்டு அதனை அடக்கி வெற்றி கண்டவர்கள் ஆவர். அவர்களைப் பற்றி மேலும் விரிக்க பெருகுமாதலின், அவர்களால் சொல்லப்பட்ட மருத்துவமே முழுமையடைந்த மருத்துவம் என அறுதியிட்டு பகரலாம். என்னை ?

சித்தர்கள் உடலுக்கு மட்டுமன்றி, உள்ளம், உயிர் ஆகிய வற்றின் நோய்கட்கும் மருந்துகள் கூறி அவைகளின் குற்றங்களை — பிணிகளை முறையே நீக்கி இப்பிறவிப் பயனும் "இறைமையோடு கலத்தல்" எனும் அருஞ் செயலுக்கு வழிகாட்டிப் போந்தனர். என்பதை ஓர்ந்து பார்க்கப் பார்க்க வியப்புண்டாதல் திண்ணம்! அவர்கள் முதலாவதாக நமது உடல், வெளி, வளி, தீ, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களின் வெவ்வேறு விகிதங்களால் (Ratio) யாக்கப்பட்டது என்றும், யாக்கை, குறுதி, என்பு, ஊண், நிணம், நரம்பு. உமிழ் நீர், விந்து (சுக்கிலம்) ஆகிய ஏழுத் தாதுக்களைத் தன்னகத்தே கொண்டதென்றும், அவ் வேழில் முன்னைய ஆறு முறையே துவர்ப்பு, உப்பு, இனிப்பு, புளிப்பு, கசப்பு, காரம் ஆகிய ஆறு சுவைகளிலுள்ள உணவின் ஊட்டத்தால் உண்டாவன என்றும், கடையாள சுக்கிலம் இவ்வாறின் சாறமென்றும் கூறியுள்ளனர். இவ்வாறு சுவைகளின் இருப்பு, மிகை, குறை ஆகியவைகளை வல இடக்கைகளில் ஓடும் ஆறு நாடிகளின் ஓட்டம், திண்மை முதலியவைகளால் அறிந்து கொள்ளலாம் என்றும்; அங்ஙனம் அறிந்து அடிக்கடி எந்தெந்த தாதுக்கள் மிகுதியாகவும் எந்த எந்தத் தாதுக்கள் குறைவாகவும் உள்ளன எனக்கண்டு சரிசெய்துவரின் நோய் நம்மை என்றும் அணுகா என்றும்; நெடுநாட்கள் வாழலாம் என்றும் நவின்றுள்ளனர். எந்தெந்த தாதுக்களின் குறைவினுல் அல்லது மிகுதியினுல் நோய் வந்தது என்பதை நாடிகள் மூலம் அறிந்து அவைகளைத் தன்னகத்தே கொண்ட மூலிகைகளைக் கொண்டும், அவ்வத்தாது மூலகங்களை நீற்று, பட்பம், செந்தூரம். சுண்ணம் ஆகிய முறைகளில் மாற்றி நோயின் நிலையறிந்து உடலில் செலுத்த நோய் இரிந்தோடும் எனவும் கூறியுள்ளனர். இவைகளின் விரிவு அவர்கள் அருளிய வைத்திய சாத்திரம், நாடி சாத்திரம், நிகண்டு, ஞான நூல்களைக்கொண்டும், ஆங்காங்கே வதிந்துவரும் சித்தர்களைக் கண்டும் அறிக.

மற்றும் உள்ளம் என்பது யாது? என்பதையும் அதனின் தோற்றத்தையும் இயற்கை, பண்பு ஆகியவைகளையும் அவற்றின் இயற்கைக் குற்றங்களான சினம், மறதி, பயம், நாணம் உன்மத்தம், பைத்தியம் ஆகிய நோய்களைத் தீர்க்க மருந்துகளையும் அருளி நின்றனர். அவைகளுள் ஒன்று கூறி மேலே செல்வோம்.

சிவதை, மேதை, மாமேதை, குன்றி ஆகிய மூலிகைகளின் சமூல சூரணங்களை சமபாகமாக கலந்து துணிவடிப்பு செய்து தக்க அளவில் தேனில் குழைத்துக் கொடுக்க உன்மத்தம் பைத்தியம் ஆகியவை நீங்கும்.

மற்றும் உயிர்நோயாவதென்னை? என ஓர்வோமாயின் அஃது பிறப்பு, இறப்பு என்பனவேயாகுதல் தெளிவு. இப்பிறப்பிறப்பு ஆகிய நோயையும் வென்று ஒழிக்க மருந்து கண்ட சித்தர்களின் பெற்றியை எழுத்தால் எழுத இயலுங்கொல்? பிறப்பைத் தவிர்த்து, இறப்பை வென்ற சித்தர்கள் உளரோ என ஐயுருவார்க்கு, உளர்! உளர்!! எனக்கூறி அவர்களைப் பெருமுயற்சியால் காண்டல் இயலும் எனக்கூறி மேலே செல்லுகிருேம்.

இந்தச் சாகாக்கலை பற்றியே திருவள்ளுவர்,

**"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணிய துடைத்து."**—எனவும்

**"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி.**

**எனவும் கூறி இருத்தலை ஓர்ந்து தெளிவு பெறுக.**

ஆக, உடற்குறும் பிணிகளைத் தீர்க்கவே வழியறியாது கலங்கி நிற்கும் இற்றை மேலை மருத்துவ வல்லுனர்கள், உளத்துக்கும் உயிர்க்கும் மருத்துவம் காணும் நாள் எந்நாளோ? அம்மருத்துவர்கள் காணு பல நோய்கட்கு, சித்தர்கள் கண்ட மருந்துகளில் ஓரிரண்டு கூறி உரையை முடிப்போம்.

**நீரிழிவு :—(Diabetes)** இந்நோய் உடலில் இனிப்புச்சத்து மிகுதிப்படுதலான் வரும் நோயாம். இதனைத் தீர்ப்பதற்கு அப்பிரகம் என்னும் உலோகத்தை நீற்று முறையாக சுண்ணமாக்கியோ, செந்தூரமாக்கியோ அதனை சிறு குறிஞ்சான் என்னும் மூலிகையின் சூரணத்துடன் (அனுபானம்) தக்க அளவு கொடுக்க நீரிழிவு நோய் அறவே நீங்குதல் திண்ணம். இஃது அனுபவத்தால் கண்ட உண்மையாகும். பயன்பெற விழைவோர் சிறந்த சித்த மருத்துவர் பாற்சென்று பயன்பெறுக.

**என்புருக்கி :—** இந்நோயின் விளைவு எழுத்தால் எழுதவொண்ணு அளவுக்குக் கடுமையாதலின், விடுத்து, அதனை நீக்க, தாளகத்தை சுண்ணமாக்கியோ அல்லது பட்டமாக்கியோ பவள சுண்ணத்துடன் தொந்தித்து, கரிசாலை, மிளகு, திப்பிலி, அறத்தை ஆகியவைகளின் சம எடைச் சூரணத்தை அனுபானமாக்கி 14 நாட்கள் கொடுக்க, ஈளை என்னும் இளைப்பிருமல் (Asthma) காசம் எனும் க்ஷயம் **(T. B.)** நோய்கள் அறவே இல்லாதொழியும்.

மற்றும் முதற்பத்தியில் கூறிய நோய்கள் யாவற்றையும் நீக்கும் மருந்துகள் சித்த மருத்துவததில் உண்டு. அவைகளை ஈண்டு விரிக்கிற் பெருகுமாதலின் தக்கோரை அணுகி பயன் பெறுக.

இதுகாறும் சித்த மருத்துவம் பற்றி சிறிது பார்த்தோம். அவைகளின் விரிவுகளைப் பார்க்குந்தோறும், — பார்க்குந்தோறும் அதன்படி செயற்படுத்துந்தோறும் — படுத்துந்தொறும் உண்டாகும் அதனின் பின்விளைவுகள் நோக்க — நோக்க அளவிலா வியப்பினை நல்குகிறது ! அதாவது மனிதருக்கு வரும் நோய்கள் 4448-க்குள் அடங்கும் எனவும், அவனின் உடல் 72000 நாடிகளால் பிணிக்கப்பட்டு 10 நாடிகளின் ஆளுகைக்குள் செயல்படுத்தப்படுகின்றன, என்பன போன்ற ஆழ்ந்த உண்மைகள் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே காணப்பெற்றதனை நோக்க-நோக்க தற்காலத்தவர்களாகிய நாம் இம்மருத்துவத்தைப் புறக்கணித்து துன்புறுவது எத்தனை அறியாமை? இத்துணைச் சிறந்த உயர்ந்த முறைகள், நம்மிடையே வதிந்து நந்தமிழ்பேசி, நந்தமிழிலேயே சித்தர்கள் அருளிச் செய்தனர் ! இஃது நம் தமிழ் மொழியிலன்றி வேறு மொழியில் நவிலப்பட்டிருக்குமாயின் அவை பல்லாண்டுகளுக்கு முன்னரே உலகின் தலைமைத் தகுதியில் முன்னின்று, ஒளிவீசி, திகழ்ந்திருத்தல் திண்ணம். நாம் இதனை சிர்தூக்கின் எத்துணைப் பொறுப்புணர்வுடனும், பற்றுடனும் வாழ்ந்து வந்திருக்கிறோம் ! எனவும் வாழ்நாட்கள் எங்ஙனம் வீணுட்களாக கழிந்தன என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி.

சென்றது செல்ல, இனியாவது நிகழ்ந்தன நினைந்து மேற்கூறிய குறிப்புகளில் கவனம் செலுத்தி அவைபற்றி கூர்ந்தும், ஓர்ந்தும், தெளிந்தும், தெளிவித்ததும், அதன்படி உடல் நலம் விழைவோர் உடல்நலமும், உளநலம் விழைவோர் உள நலமும், உயிர் நலம் விழைவோர் உயிர்நலமும் பெற்று தாமும் தம்மின் வழி இந்நிலவுலகமும் பயனுற்று உய்ய வேண்டுமென பணிந்து இதனை முடிக்குவன்.

"எல்லோரும் இன்புற்றிருப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன்—பராபரமே."

243
INSTITUTE
JAFFNA
INSTITUTE OF HUM
UTE



THE UNITED PRINTERS, BROADWAY, MADRAS-1.

மேலே
ளோ?
டு கூறி

வரும்
றயாக
கயின்
திண்
றந்த

டுமை
கியோ
ளின்
ப்பிரு

சித்த
ணுகி

களைப்
த்துந்
பிணை
அவ
படுத்
முன்
துவத்
ர்ந்த
செய்த
வை
கழ்ச்
ற்று
கழிந்

னம்
டல்
ழை
டய்ய